# கல்வராயன் மலை மக்கள்

21605
15551



# கல்வராயன் மலை மக்கள்

(வரலாறு)

தமிழ் வளர்ச்சித்துறையின்
முதற் பரிசு பெற்ற சிறந்த நூல்

அனந்தபுரம்
கோ. கிருட்டினமூர்த்தி

சேகர் பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்
66/1, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை—600 078.

முதற்பதிப்பு : ஜூலை, 1992
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 1992
மூன்றாம் பதிப்பு : ஜூலை, 1994
உரிமை : பதிப்பகத்திற்கு

விலை ரூ. 80.00

அச்சிட்டோர் :
அமுதன் அச்சகம், போன் : 48 34 325
66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர், சென்னை-600 078

# உள்ளடக்கம்


நினைவுவெள்ளம் VI
அணிந்துரை IX
வாழ்த்துரை XI
சிறப்புரை XIII
ஊருக்குழைப்பது யோகம் 1
கல்வராயன் மலைப் பகுதி - படம்
கோயிலும் தெய்வங்களும் - படங்கள் 9

1 வரலாறு 17

ஊரும் பேரும் 19
இயற்கைநிலை அமைப்புக்கொண்ட பொதுக் கூறுகள் 22
நீர் நிலை அமைப்புக்கொண்ட பொதுக் கூறுகள் 25
குடியிருப்புப் பகுதிகளைச் சுட்டும் பொதுக் கூறுகள் ,,
சிறப்புக் கூறுகள் 35
வரலாற்று நோக்கில் கல்வராயன் மலை 41
முற்காலப் பின்னணி 42
மலையமான் நாடு 48
சேதிநாடு 50
வாணகோவரையர் 51
மகதை நாடு 54
விஜய நகரப் பேரரசின் ஆட்சி 56
செழியதம்ரையர் 58
கல்வராயன்மலையும் காடும் 62
கல்வராயன்மலை 'மலையாளிகள்' யார்? 67
கவுண்டர் எனும் பெயர் 69
பல பெயர்கள் 76

கல்வராயன் மலைமக்கள் பழங்குடிகளா? 82
கல்வராயன் மலையாளிகளும்
ஏனைய மலையாளிகளும் 89
பச்சைமலை மலையாளிகள் 92
வட ஆர்க்காடு மலையாளிகள் 99
சவ்வாது மலையின்
இருப்பிடமும் சிறப்பும் 102
ஏலகிரிமலை மலையாளிகள் 113
கோயம்புத்தூர், தருமபுரிமலையாளிகள் 117
சேலம் கொல்லிமலை மலையாளிகள் 119
சேர்வராயன்மலை மலையாளிகள் 131
கல்வராயன் மலை ஊர்கள் — படம்
கல்வராயன் மலை ஜாகிரும் மக்களும் 145
சடையக்கவுண்டன் ஜாகிர் 150
விடுதலைக்குப் பின் 161
கல்வராயன்மலை மக்கள் தலைவர்கள் 164
வழக்குகளும் பஞ்சாயத்து முறைகளும் 170

## 2 வாழ்வியல் 175

மக்களின் தோற்றம் 177
வீடும் வீட்டுச் சாமான்களும் 183
மக்களின் உணவு 190
,, ஆடைகள் 193
ஆயுதங்கள் 197
மக்களின் திறமை 199
தொழில்கள் 202
மக்களின் பண்புகள் 206
மக்களும் கலைகளும் 210
கோலங்கள் — படம் 217 - 19
சுவர்ச்சித்திரங்கள் ,, 220 - 21
புகைப் படங்கள் —16 225 - 40
மொழியும் கல்வியும் 241
மலைமக்களும் விலங்குகளும் 245

| | |
|---|---|
| பிள்ளைப்பேறு நம்பிக்கைகள் | 253 |
| ஆவியும் நம்பிக்கையும் | 258 |
| பச்சை குத்தும் பழக்கம் | 260 |
| தெய்வமும் பலியும் | 267 |
| சகுனங்களில் நம்பிக்கை | 270 |
| தெய்வமும் திருவிழாக்களும் | 274 |
| சின்ன திருப்பதித் திருவிழா | 279 |
| மலையில் பிற கோயில்கள் | 289 |
| பொங்கல் திருவிழா | 295 |
| திருமணமும் வாழ்க்கையும் | 303 |
| பெண்களும் தாலியும் | 310 |
| திருமண வாழ்க்கை | 314 |
| பெண்பார்த்தல் | 317 |
| நாடு அழைத்தல், நாடு உட்காருமிடம் | 323 |
| திருமணப் பந்தல் அமைத்தல் | 327 |
| திருமணச் சடங்குகள் | 335 |
| வேறுசில சடங்குகள் | 344 |
| திருமண மேளக்காரர்கள் | 351 |
| தாய்மைப் பேறு | 356 |
| திருமணமும் வழக்கும் | 363 |
| குழந்தைச் சடங்குகள் | 367 |
| குழந்தைப் பருவச் சடங்கு | 371 |
| பெண்கள் பருவச் சடங்கு | 373 |
| சாவும் சடங்குகளும் | 379 |
| கல்வராயன்மலையில் அரசு வளர்ச்சிப் பணிகள் | 391 |
| பழமையான ஓர் அரசு ஆணை | 401 |
| இவர்களுக்கு நன்றி! | 405 |
| பயன்பட்ட நூல்கள் | 409 |
| ஊர்கள் | 413 |
| சொல்லடைவு | 417 |

★

*பதிப்புரை*

# நினைவு வெள்ளம்!

கடந்த காலத்தை நினைவுக்குத் தருவதே வரலாறு.

நமக்கு நினைவுக் கண்ணாடியாக விளங்குவது வரலாறு!

நமது தமிழகம், பலப் பல வரலாறுகளைப் புதையல்களாக வைத்துள்ளது.

ஊர்கள் தோறும், வட்டங்களிலும், மாவட்டங்களிலும் சிறுகச் சிறுகவும் தொகுப்பாகவும் வரலாறுகள் எத்தனையோ உள்ளன.

இங்கே குறிப்பாகத், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வரலாற்றுப் புதையல்கள் பல உள்ளன. இவைபற்றிக் கற்றோர் கவலைப்படுவதில்லை; கல்வித்துறை கருத்தினைச் செலுத்துவதில்லை. சமயவாதிகளுங்கூட அவர்கள் துறை சார்ந்தும் செயல்படுவதில்லை. அரசும் அரசியல்வாதிகளும் அக்கறை காட்டுவர் என எதிர்ப்பார்த்தல் இயலுமா?

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையி னர், தங்கள் பொருள் வசதிக் கேற்ப முடிந்த வரை செயல்பட்டு வருவது ஆறுதல் தருகிறது.

நமது அரசின் சுற்றுலாத் துறை சுறுசுறுப் படைந்துள்ளது பாராட்டுக்குரியது. நலம் பெருகும்.

பழம் பெருமை மிக்க பல்லவர்கால வரலாற்றுச் சின்னங்கள், *பனைமலை மலைக்கோயில், சமணச் சின்னங்கள்* சார்பான அரிய வரலாறுகள், தமிழகத் திலேயே பெருமளவு முழுமையாகக் காட்சி தரும் *செஞ்சிக்கோட்டை*, அதன் வரலாறு, மற்றும் நாட் டுப்புறக் கலைகள் போன்றவற்றை நாம் தக்கவாறு வெளிப்படுத்திப் பரப்ப முனைய வேண்டும். சுற் றுலா மையங்களாகச் செஞ்சி, பனைமலை, திருக் கோயிலூர், திருவெண்ணெய் நல்லூர், விழுப்புரம்-திருவாமூர், பாறை ஓவியங்கள் உள்ள கீழ்வாலை முதலான ஊர்களை அரசு விளம்பரப்படுத்தி, நம்ம வர்க்கும் வெளிநாட்டவர்க்கும் அறிமுகப் படுத்துதல் வேண்டும்.

மேலும், ஏரிகள், காடுகள், விளை நிலமாகத் திருத்த வேண்டிய நிலப் பகுதிகள் பற்றிய விவரங் கள் பலவும் திரட்டி வெளிப்படுத்துதல் வேண்டும்.

இவ் வகையில், கல்வராயன்மலை மக்களின் வரலாறு வெளி வந்திருப்பது நல்ல தொடக்கம் எனலாம். தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலை வர் உயர்திரு *ஜி. இராமகிருஷ்ணன்* அவர்கள், நிர் வாகப்பணிகளின் வேகத்தில், இடையிடையே கலை,

வரலாறுகள் பற்றியும் கருத்துச் செலுத்தி வருவது குறிப்பிடத் தக்க சிறப்பாகும்.

செய்ய வேண்டியதை நினைவு படுத்தினால், அதன் தகுதி, தேவை முதலானவற்றைக் கருத்தில் கொண்டு, தக்க நேரத்தில் செயலாக்கிடும் நல்ல இயல்பும் கலையுணர்வும் உடையவராக விளங்கு கிறார் உயர்திரு ஜி. *இராமகிருஷ்ணன்* அவர்கள். *சீரிய* இப் பண்பாளரது ஆட்சிக் காலம் இம் மாவட் டத்திற்குச் சிறந்த பொற்காலம் எனலாம்.

அவர்களால் கல்வராயன் மலையில் வெளியிடப் பெற்ற இந்நூலை மாற்றம் ஏதுமின்றி இரண்டாம் பதிப்பாகவெளியிடுகிறோம். வெளியிட ஒத்துழைத்த ஆசிரியர் திரு அனந்தபுரம் கோ. கிருட்டின மூர்த்தி அவர்களுக்கு அன்பான நன்றி.

வேறு சில மலை வாசிகள் பற்றிய செய்திகள், ஒப்பீடு செய்து ஆய்வோர்க்குப் பயன்படும். அம் மக் களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், கலை பண்பாடுகள் பற்றி இங்கு நாம் படிக்கையில், நம் வாழ்க்கை முறைகளையும் ஒப்பிட்டு உணரலாம். ஆசிரியர் தம் கருத்தாய் எதையும் கூறாமல், கேட்டதை, அறிந்ததை, உள்ளதை அப்படியே தந்திருப்பது நல்ல முறையாகும்.

வரலாற்றுணர்வை வளர்க்கும் இந் நூலையும் மகிழ்வுடன் வெளியிடுகின்றோம். பயன் வளர்க.

***வெள்ளையாம்பட்டு சுந்தரம்***

# அணிந்துரை

**மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**செ. அரங்கநாயகம்** அவர்கள்

கல்வராயன் மலைவாழ் மக்களுக்காக அரசு பல வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகின்றது. அங்குள்ள மக்கள் வெளி உலகம்பற்றி நன்கு அறியவும், மற்ற மக்களுடன் பழகவும், மற்றும் கல்வி, கலை, பண்பாடுகளில் ஈடுபட்டு மகிழ்ச்சி பெறவும் ஒரு வாய்ப்பாக, நமது அரசு இம்மலையில் கோடை விழா நடத்திவருகிறது. தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. இராமகிருஷ்ணன் இ. ஆ. ப. அவர்கள் இம் மலைமக்களிடம் தனிக் கவனம் செலுத்தி நற்பணியாற்றுவதை அறிந்து மகிழ்ந்தேன்.

அம் மக்களின் வரலாறு, வாழ்க்கைப் பண்பாடுகளை விளக்கும் நூலொன்றையும் வெளியிடுவது சிறந்த கல்வித் தொண்டாகும். பயன் வளர்க்கும் பணி செய்யும் தெ. ஆ. மாவட்ட ஆட்சித் தலைவரைப் பாராட்டுகிறேன்.

'கல்வராயன் மலைமக்கள்' எனும் இந் நூலைப் படித்தபோது, அம் மலைவாசிகள் அங்குக் குடியேறியதும், ஜாகீர்தாரர்களிடம் அடிமைப்பட்டு அல்லல்பட்டதும், எந்த ஒரு சுகமும் காணாமல் வாயில்லாப் பூச்சிகளாய்ப் பிழைத்திருந்ததும், பின்னர் 1976 இல் அடிமைத்தளை அறுக்கப்பட்டதும், அது முதல் நமது அரசு பலதுறை வளர்ச்சிக்கான உதவிகளைத் தந்து, அவர்களது மனத்தையும் வாழ்வையும் உயர்த்தும் பணியைச் செய்து வருவதும் நிரல்படக் கூறப்பட்டுள்ளதைப் பார்த்தேன்.

இந் நூலை எழுதியுள்ள அனந்தபுரம் திரு. கோ. கிருஷ்ண மூர்த்தியின் உணர்வும் ஊக்கமும் உழைப்பும் பாராட்டத்தக்கன. ஆசிரியர்க்கு நல் வாழ்த்துக்கள். இந் நூல் எளிமையாகவும் இயல்பான நடையிலும் எழுதப்பட்டுள்ளது. அம் மக்களுடன் நேரில் பழகுதல் போன்ற உணர்வை நூல் தருவது குறிப்பிடத்தக்கதாகும். படிப்போர் வரலாற்றுப் பயன் பெறுவர். தகுந்தவாறு படங்களை அமைத்திருப்பது புத்தகத்திற்குச் சிறப்பைத் தருகின்றது.

எளிய மக்களின் வாழ்வில் ஏமாற்றம் நீங்கி, இன்பமும் வளமும் ஓங்கச் செய்யும் நமது அரசின் செயல்பாட்டுக்கு ஏற்ப, நன்கு திட்டமிட்டு நிர்வாகத்தை நடத்தித் தொண்டாற்றும் தெ. ஆ. மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. இராமகிருஷ்ணன் அவர்களின் முயற்சிக்கு என் மனமார்ந்த பாராட்டுதலையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

★

# வாழ்த்துரை

**மாண்புமிகு எம். ஆனந்தன் அவர்கள்**
**ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு**

'தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்வ ராயன் மலையில் வாழும் மக்களின் வரலாறும் வாழ்க்கை முறைகளும் வெளி உலகத்துக்குத் தெரி யாமல் இருந்தன.

அம் மலைவாழ் மக்களைத் தேடிச் சென்று நேரில் பார்த்துப் பேசி அறிந்த செய்திகளைத் தொகுத்து நூலாக்கியுள்ள ஆசிரியரின் நன் முயற்சி பாராட்டத் தக்கது.

காலமெல்லாம் பாடுபட்டும் அடிமைகளாக வாழ்ந்து வந்த கல்வராயன் மலை மக்கள், 1976 ஆம் ஆண்டு முதல் ஜாகீர்தார்களின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டதை அறிந்து, படிப்போர் மனம் ஆறுதல் பெறுகின்றது. விடுதலையடைந்த அம் மக்கள் தலைநிமிர்ந்து வாழவும், உழைப்பின் பயனை முழுமையாகப் பெறவும் நமது அரசு

செய்து வரும் முயற்சிகளை இந் நூலில் குறிப்பிட்டிருப்பதும் பயன் விளைவிக்கும் பணியாகும்.

கல்வராயன் மலை வாழ் மக்கள் முன்னேற்றத்திற்காக நடத்திவரும் கோடைவிழாவின் சிறப்பு வெளியீடாக இந்த மானிட இயல் சார்ந்த வரலாற்று ஆய்வுநூலை உருவாக்கி வெளியிடும் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன் இ. ஆ. ப. அவர்களின் முயற்சி பாராட்டத் தக்கதாகும்.

வெளி உலகம் மலை வாழ் மக்களை நன்கு அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் துணை புரியும். அவர்கள் புதிய மனிதர்களாகத் தங்களை உணர்ந்து, புதிய மாற்றங்களில் ஈடுபாட்டுடன் கலந்து முன்னேற வேண்டும்; அதற்கு எல்லாரும் இயன்ற அளவு துணை புரிய வேண்டும். மலை வாழ் மக்களின் உயர்வுக்குப் பாடுபட்டுவரும் *மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி* அவர்களின் நல்லாசியோடு இம் மலை வாழ் மக்கள் நலம் பெருக எனது நல்வாழ்த்துக்கள்.

# சிறப்புரை

அறிஞர் டாக்டர் ஒளவை நடராசன் அவர்கள்
செயலாளர், தமிழ்வளர்ச்சி - பண்பாட்டுத்துறை

காலம் என்பது இன்றும் மாந்தர் கணிப்புக்கு அகப்படாமலேயே நிற்கின்றது. காலம் என்பதொன்றுண்டா என்று தத்துவ வாதிகளும் தடுமாறுகின்றனர். ஆயினும் காலம் செய்யும் கோலங்கள் எத்துணை எத்துணை அளவாக அமைகின்றன! கற்காலம் கடந்து பொற்காலம் புகுந்தவர்கள் இன்று கணிப்பியற் காலத்துக்கு வந்துள்ளனர்.

இவ்வாறு உலகம் மாறினாலும் இன்னும் மாறாத பழங் குடியினரும் ஆங்காங்கே வாழ்கின்றனர். பழங்குடியினரிடமே நில பண்பாட்டுக் கூறுகள் நிலை பெற்றுள்ளனவோ என்றுகூடக் கருத வேண்டியுள்ளது. அவ்வாறு பழைமை பிழையாது வாழும் மரபினருள் கல்வராயன் மலை மக்களும் ஓரினப்பட்டவராக வாழ்கின்றனர்.

கல்வராயன் என்ற சொல்லே நாம் தெளியாத சொல்லாகிவிட்டது. கல்வம் என்பது குவளைப் பூவிற்குரிய பெயர்களுள் ஒன்று. தாமரை, அல்லி, குவளை என்பன ஒரு வகைப்பட்டவை. நாளும் ஒரு செங்குவளை மலர்ந்ததால் திருத்தணிகை, செங்கலுவ வரை என்று குறிக்கப் பெற்றது. எனவே தணிகைத் தலைவன் செங்கலுவ வரையான் (செங்கல்வ ராயன்) என்று போற்றப்படலாயினன்.

கலுவ மலரோடு தொடர்புடைய ஊர்கள் பல உள்ளன. கலுவப்பட்டு (கல்பட்டு), செங்கலுவப்பட்டு (செங்கல்பட்டு), கலுவப்பாக்கம் (கல்பாக்கம்) என்பன ஆராயத்தக்கன.

கலுவவரையான் என்ற பெயரே கல்வராயன் என்று திரிந்தது போலும். கல்வராயன் மலை என்று பெயர் பெறக் காரணமாக இருந்த கல்வராயன் ஒரு குறிஞ்சித் தலைவனோ என்று எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது (நிலவைக் **கலவராயடு** என்று அழைக்கும் மரபு தெலுங்கில் உண்டு என்பர்.)

தென்னார்க் காட்டுப் பகுதியில் உள்ள கல்வராயன் மலைவாழ் பழங்குடிகள் பற்றிய வரலாற்றை ஆராய்ந்து வழங்கும் அனந்தபுரம் கோ. கிருட்டின மூர்த்தி அரிய வரலாற்றுப் புது விருந்தை இந் நூல் வாயிலாக அளித்துள்ளார்கள். பழங்குடி பற்றியதாயினும் பல்வேறு நிலைகளில் அவர் பாங்கினை ஆராயும் இந் நூல் ஒரு புது விருந்தாகவே அமைகிறது.

கல்வராயன் மலைவாழ் இனத்தவர்பற்றிய அரிய தகவல்களைத் தொகுத்தளிக்கும் பணியில் ஆசிரியரின் ஆய்வுத்திறனும் அயராத உழைப்பும் நன்கு புலனாகின்றன.

சவ்வாதுமலை மக்கள், ஏலகிரியினர் முதலிய மலைவாழ் பழங்குடியினரது இயல்புகளையும் ஆசிரியர் ஒப்பாய்வாக வழங்கிய திறம் பாராட்டுக் குரியது.

மலைவாழ் மக்களின் திருமண முறைபற்றிக் குறிக்கும் செய்திகள் வியப்பூட்டுவன.

பக்கந்தோறும் ஆய்வுத்திறம் இழையோட ஆசிரியர் படைத்துள்ள இந்நூல் பாராட்டுக்குரியதாகும்.

புதுமையில் மூழ்கும் நமக்கும் பழமையை நினைவூட்டுவது ஒரு நற்பணிதானே! சென்ற காலத்தில் பழுதிலாத் திறம் கண்டு எதிர்காலச் சிறப்புக்கு வழி வகுப்பதாகவும் இந் நூல் அமையுமென்றே கருதுகிறேன்.

சொற் பிறப்பு வரலாறு, வாழ்வியல் நிலைகள் என்ற பல்துறைகளில் களஞ்சியமாக விளங்கும் இவ்வரிய பனுவலைப் படைத்த ஆசிரியர் அனந்தபுரம் திரு. கிருட்டினமூர்த்தி அவர்களின் புலமைத் திறத்தைப் பாராட்டுவதோடு, இத்தகைய அரிய நூற் கொடையைத் தமிழுலகுக்கு வழங்கும் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன் இ. ஆ. ப. அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அரிய இவ்வரலாற்று நூல் வெளியிடுவதில் காட்டிய ஆர்வத்தை அறிந்து நான் பெரிதும் மகிழ்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தத்தம் மாவட்டங்களின் ஊர்ப் பெயர்களையும் மக்களின் ஒழுகலாறுகளையும் தேர்ந்து தெளியும் நூல்களை உருவாக ஊக்குவிப்பதையும் ஒரு கடமையாகக் கருதவேண்டும் என்பது என் துணிபு.

மாவட்டக் களஞ்சியங்களை வெளியிடுவது போலவே ஊர்களின் வரலாறுகளையும் திருக்கோயில் நுணுக்கங்களையும், இலக்கியப்புலவர்களின் வரலாறுகளையும் தனித் தனி நூல்களாக வெளியிட வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் உரையாற்றியிருப்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நூலைப் படங்களுடன் அழகுற அச்சிட்டுச் சிறப்பாக உருவாக்கியுள்ள பதிப்பாசிரியர் நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் முயற்சியை நினைந்து பாராட்டுகிறேன்.

புத்தகம் வெளியிடுவோருக்குப் பயன் விளையும் வகையில் தமிழ் மக்கள் தம் இருகை நீட்டி இந் நூலை வாங்குவார்கள் என்று நம்புகிறேன்.

O

தென்னார்க்காடு
மாவட்டத்தில்
கள்ளக்குறிச்சி வட்டமும்
கல்வராயன் மலைப் பகுதியும்


தென்னார்க்காடு மாவட்டம்
வ
மே
கி
தெ
செங்கை எம்ஜிஆர் மாவட்டம்
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்
செஞ்சி
திண்டிவனம்
வானூர்
திருக்கோவிலூர்
விழுப்புரம்
பண்ருட்டி
கடலூர்
உளுந்தூர்பேட்டை
கள்ளக்குறிச்சி
ஆத்தூர்
விருத்தாசலம்
திட்டக்குடி
சிதம்பரம்
காட்டுமன்னார் கோயில்
வங்கக் கடல்
திருச்சி மாவட்டம்
தஞ்சை மாவட்டம்



# ஊருக்குழைப்பது யோகம்!

ஜி. இராமகிருஷ்ணன் அவர்கள்,
தென்னார்க்காடு மாவட்ட
ஆட்சித்தலைவர் கடலூர்
(முதற்பதிப்பில் உள்ளபடி)

'கல்வராயன் மலை மக்கள்' என்ற இந்த நூலினைப் பதிப்பித்து வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். வழக்கமாகக் கோடை விழாக்களில் வெளியிடப் பட்டுவரும் 'சிறப்பு மலரைப் போல் வெளியிடாமல்' இக் கோடைவிழாவில் எக்காலத்திற்கும் பயன்படும் வகையில் மலைவாழ் மக்கள் வரலாற்றுத் தொகுப்பினை வெளியிடுவது தக்கதாகும்.

கல்வராயன் மலைப் பாமரமக்கள், பல்லாண்டு காலம் அடிமைப்பட்டுக் கிடந்து, கல்வி மற்றும் நாகரிகத்தின் வளர்ச்சியை உணராமல் வாழ்ந்தவர்கள். எனவேதான், இன்று தமிழக அரசு கல்வி, சுகாதாரம் மற்றும் பல்வேறு நலத் திட்டங்களை மலைவாழ் மக்களுக்காகத் தீவிரமாகச் செயல் படுத்துகின்றது, அதனால் குறிப்பிடத்தக்க அளவிற்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த மக்களுடைய வாழ்க்கை முறையைப் புத்தகமாக வெளியிட, நூலாசிரியர் திரு கிருட்டினமூர்த்தி அவர்கள் பல நாட்கள் மலைவாழ் மக்களுடன் தங்கிப் பழகி, அறிந்து எழுதியிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

நமது அரசு இம் மலை மக்களுக்குத் தொடர்ந்து பல துறைகளிலும் உதவி, ஊக்கமூட்டி, அவர்களை முழு நம்பிக்கையுடைய மனிதர்களாக உருவாக்கி வருகிற வகையில்,

நடைபெற்று வருகின்ற திட்ட வளர்ச்சிப் பற்றிய விவரங்களும் நூலின் முடிவில் தரப்பட்டுள்ளன.

மேலும் இம் மலை மக்களின் வாழ்க்கை முறைகள் வரலாறு, வாழ்வியல் எனும் இரு பகுதிகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

'கல்வராயன் மலை மக்கள்' நூலுக்கு அணிந்துரை வழங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் **செ. அரங்கநாயகம்** அவர்கட்கும், இந் நூலினை வெளியிடும் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு **கே. ஏ. செங்கோட்டையன்** அவர்கட்கும், நூலுக்கு வாழ்த்துரை வழங்கியதோடு, வெளியீட்டுவிழாவில் நூலைப் பெற்றுக் கொள்ளும் ஆதிதிராவிடர் நல அமைச்சர் மாண்புமிகு **எம், ஆனந்தன்** அவர்கட்கும், மூன்று நாள் (ஜூலை 4,5,6ல்) நடைபெறும் இக் கோட்டை விழாவில் கலந்து கொண்டு, சிறப்புச் செய்யும் வீட்டு வசதித்துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு **டி. எம் செல்வகணபதி** அவர்கட்கும், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு **அழகு திருநாவுக்கரசு** அவர்கட்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நூலாசிரியர் திரு. அனந்தபுரம் கோ. கிருட்டின மூர்த்திக்குப் பாராட்டினையும், நூலை நல்ல முறையில் அச்சிட்டு அளித்த திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் திட்டங்களைச் செயல்படுத்தும் அரசு அலுவலர்கள், தங்கள் மூலமாகத் தம்மைச் சார்ந்த மக்களுக்கு நன்மைகள், உதவிகள் செய்யும் பெரும்பேறு கிடைத்திருப் பதற்காகப் பெருமைப்பட்டுப் பூரிப்படையலாம். நம் கடமைகளால் நம் நாட்டு மக்களுக்குப் பயன் விளைகிறது என்பதை மனத்தில் எண்ணினாலே மகத்தான பேரின்பம் ஏற்படும். அதை இத்தகைய பணிகளின்போது கண்ணாரக் கண்டு களிபேருவகை கொள்வோம். ஊருக்குழைப்பது யோகம் அன்றோ!

★

# முன்னுரை

தமிழகத்து மலைவாழ் மக்களைப் பற்றிய ஆய்வுகளில் இந் நூல் முழுமையான தென்பதில் ஐயமில்லை. கல்வராயன்மலை எனது சொந்த மாவட்டத்திலுள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மலை மக்கள் என் நெஞ்சை ஈர்த்தது இயல்பானதே.

பசுமை தவழும் பரந்த மலைகளின் மடிகளில் அம்மக்கள் தூய்மையான சூழலில் வாழ்வது எனக்குப் பொறாமையாகவுள்ளது. பொய்களும் வஞ்சகமும் அவர்களிடம் காண வில்லை. மலைகளைச் சுற்றியுள்ள நம் மக்களின் பழக்கம் அவர்களை மிரட்சி கொள்ளச் செய்து, மாற்றி வருவது ஒரு துயர வரலாறாகும்.

கல்வராயன் மலை மக்களிடம் சென்று சென்று பழகிப் பழகிக் கேட்டுக் கேட்டு நான் அறிந்த செய்திகளை விட, அவற்றால் நான் அடைந்த அவலமே நெஞ்சில் கனத்துக் கிடக்கிறது. இரக்கத்துக்குரிய அவர்களுக்காக என் நெஞ்சம் உருகுவதை எப்படி வெளிப்படுத்துவேன்!

மிக முயன்று உருவாக்கிய இப் பெரிய வரலாற்றைச் சேகர் பதிப்பகத்தாரிடம் ஒப்படைத்தேன்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்' (517) எனும் குறட்பாவுக் கேற்ப, மதிப்பிற்குரிய தெ ஆ மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு. ஜி. இராமகிருஷ்ணன் இ. ஆ. ப.** அவர்களிடம் அறி முகப்படுத்தினார். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் பரி வோடு கேட்டார்; பார்த்தார்; முடிவெடுத்தார். கோடை விழா நேரமானதால் உடனடியாக நூலாக்க முனைந்தார். அப் பொறுப்பினைச் சேகர் பதிப்பகத்தாரிடமே ஒப் படைத்தார். அவரால் அரிய பதிப்பாக அழகிய நூல் வடிவம் பெற்றது. படங்களும் வரை படங்களும் முறை யாகச் சேர்த்து முழு நிறைவு பெற்றது; நூல் உருவாகி விட்டது. பதிப்பக அண்ணன் கவிஞர் வெள்ளையாம் பட்டு சுந்தரம் அவர்களுக்கு நன்றியுடையேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அருள் கூர்ந்து என் எழுத்துப் பணியை, அதன் பயன் கருதி, தெ. ஆ. மாவட்ட வரலாற்றுக்குத் துணை சேர்க்கும் என்பதை உணர்ந்து, மலை வாழ் மக்களிடம் அவர் தாயன்பு காட்டி வருதல் போன்றே என்னையும் தண்ணளி கொண்டு தடுத்தாட் கொண்ட பெருந்தகைமையை என்னென்பேன்! எப்படிப் போற்றுவேன்! ஓ! எல்லார்க்கும் இனியனவே செய்யும் பண்பாளரான அவர்தம் பேராற்றலை, பெருங் குணச் சான்றாண்மையை நன்றியுடன் தொழுது போற்றக் கடமைப்பட்டுள்ளேன்.

பொது மக்கள் துறைதோறும் புதிய நலங்களை, வளங் களைப், பயன்களைப் பெற்றிட வேண்டும்; அதற்காகப் பொழுதெல்லாம் ஓய்வின்றிப் பணி செய்து முடித்திட வேண்டும் என்று முனைப்பாகத் தொண்டாற்றி வரும் பெருமைக்குரிய இப் பெருமகனார், இம் மாவட்ட மக்களின் வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரிய அருள்மிகு தாய்த் தெய்வமாக விளங்கி வருகிறார்கள்.

கடலூர் கடற்கரையில் மக்கள் வந்து தூய காற்றைப் பெற்று மனமகிழ்ச்சி பெறவேண்டும் என்ற பேருள்ளங்

கொண்டு திங்கள்தோறும் முழு நிலவு நாளில், அங்கு வித விதமான கலை நிகழ்ச்சிகள் நடைபெறச் செய்துள்ள இவர்களது சாதனையை இங்குக் குறிப்பிடுவது பொருத்த மாகும்.

**கல்வராயன் மலை மக்கள்** புத்துணர்ச்சி பெற்று மறு மலர்ச்சி காண வேண்டும் என்பதற்காகக் **கோடை விழா** எனும் கலை விழாவை, அம் மலைமக்கள் மத்தியில், **கரியா லூர்** எனும் ஊர்ப்பகுதியில் 1992ஜூலை4, 5. 6 தேதிகளில் நடைபெறச் செய்வதும் பெரும் பயன் தருவதாகும். அவ் விழாவிலேயே எனது நூலான 'கல்வராயன் மலை மக்கள்' வரலாறும் வெளியிடச் செய்துள்ளது பொருத்தமான தாகும். தமிழகத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்க ளால் வெளியிடப்படும் அந்த நிகழ்ச்சியே ஒரு புதிய வரலாறாகிறது மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் தெ. ஆ. மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி இராமகிருஷ்ணன் அவர்களுக்கும், கோடை விழாவில் பங்கேற்றுப் பணி யாற்றும் அரசு அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி **ஜெ. ஜெயலலிதா** அவர்களது மேலான தலைமை யில் சிறப்புத் தொண்டாற்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் **செ. அரங்கநாயகம்** அவர்களும், ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் மாண்புமிகு **எம். ஆனந்தன்** அவர் களும் அணிந்துரை, வாழ்த்துரை தந்துள்ளார்கள். அவர் களை வணங்கிப் போற்றுகிறேன். சிந்தனைச் செம்மல் டாக்டர் **ஔவை நடராசன்** அவர்கள் நூலுக்குத் தக்க சிறப்புரை வழங்கி என்னைப் பெருமைப் படுத்தியுள்ளார். அவர்களுக்கு உள்ளம் நிறைந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகும். ஓவியர்கள் உபால்டு, ஆர். சதானந்தம், அமுதன் அச்சகத்தார் ஆகியோர்க்கும் நன்றியுடையேன்.

அன்பன்,

**கோ. கிருட்டின மூர்த்தி**

# என்னைக் கல்வராயன் மக்களுக்கும் அவர்களை நம் மக்களுக்கும்

- தமிழ்நாடு மிகத் தொன்மையானது. அதன் தோற்றமும் வரலாறும் இன்னும் புரியாதவை. அது இன்று வரை தனக்கென ஒரு பண்பை வைத்திருக்கிறது, மறைவாய்.

- 'பண்பாடு, வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கை' என்பது மானிடவியல் பேரறிஞர் மாலினோவ்ஸ்கியின் கருத்து. தமிழரின் பண்பாடு ஒரு கூட்டுச் சேர்க்கையே.

- இந்த நூல் கல்வராயன் மக்களுக்காக எழுதப்பட்டதல்ல; அவர்களை மற்றவர்கள் உணர்ந்து கொள்ளவே. இந்த நூல். என்னை அவர்களுக்கும் அவர்களை என் மக்களுக்கும் உணர்த்துவதே நோக்கமானது. இது வரலாறு! சமூகத் தேவைகளில் ஒன்று என்னும் உணர்வின் உந்துதலே காரணம். இது, என் காலமக்களுக்கும் பின்னரும் பயன்படுமேயானால் எனக்கு மகிழ்வு. இது போன்று செய்தித்தொகுப்புகள் பல வெளிவருதல் வேண்டும்.

- காலங்கள் தோறும் மக்கள் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தை ஏற்றுக்கொண்டு வந்துள்ளனர். இம்

மாற்றம், பல வகைகளில் மக்கள் சமூகத்திற்குச் சென்று ஒன்றானதை அறிகிறோம். மாற்றம் செல்லாத இடம். அல்லது அதை விரும்பாத மக்கள் தள்ளப்படுவது உறுதி.

- இந்திய நாட்டில் முந்நூறுக்கும் மேற்பட்ட பழங்குடி இனங்கள் வாழ்கின்றன. தமிழ் நாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட பழங்குடி இனங்கள் இருக்கின்றன. அவர்களின் வாழ்க்கையில் எத்தனையோ மிகப் பழமையான பண்பாட்டுக் கூறுகள் மறைந்து கிடக்கின்றன. அவற்றை ஆராய்ச்சியாளர் எத்தனையோ இழப்புகளையும் ஏற்றுக்கொண்டு அறிந்து ஆய்ந்து தெரிவித்துள்ளனர் இப் பணி இன்னமும் தோடர்கிறது.

- தமிழ் நாட்டில் இருளர், வேடர், தோடர், கோத்தர், குறும்பர். பணியர். கவசர், காட்டு நாயக்கர், பழியர், புலையர், காடர், காணிக்காரர், ம்லையாளி, முதுவர், மல மலசர் போன்று இன்னும் பழங்குடிகள் பலரும் வாழ்கின்றனர்.

  இவர்கள் எல்லோரும் தமிழர்களே. தமிழர் மிகத் தொன்மையான பாண்பாட்டு வழியினர்.

  தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், திருச்சி, தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 'மலையாளி' என்ற பழங்குடித் தமிழர் மலைகளில் வாழ்கின்றனர். இவர்களைப்பற்றி இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் ஓரளவு அறிவர். இவர்கள்பற்றி 1980 ஆம் ஆண்டு வாக்கில் நான் அறிந்தேன், மேலும் அறிந்து கொள்ளக் கல்வராயன் மலைக்குச் சென்றேன். பல நாள்கள் அவர்களோடு வாழ்ந்தேன். அந்த வாழ்க்கை மிகவும் சோகமானது. கண்ணீர் மிகுந்தது.

- கல்வராயன் மலையில் என் தேடலுக்கு எத்தனையோ உள்ளங்கள் உதவி புரிந்தன; அவை என் நெஞ்சம் மறவா நினைவுகளாகி விட்டன.

என் நினைவில் புதுவை திரு. சிரில் அந்தோணி, விழுப்புரம் கல்லூரிப் பேராசிரியர் திரு. இராசன், விழுப்புரம் திரு. ஆர். வி குப்புசாமி, சங்கராபுரம் திருமதி வேல்விழி ஆகியோர் நீங்காதவர்கள். மலையில் என்னோடு பசியோடும் நடந்தவர்கள்.

மற்றும், விழுப்புரம் தமிழ்ப் பேராசிரியர் திரு. த பழமலய், எழுத்துக்களைப் படித்துப் பாராட்டியதோடு ஊக்கமும் தந்தார். என்றும் மறவேன்.

○ கல்வெட்டாய்வாளர் வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன் அவர்களும் சென்னை சேகர் பதிப்பகம் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களும் எழுத்துப் படிகளைத் திருத்தம் செய்து தந்தனர். இருவர்க்கும் நன்றியுடையேன்.

மேலும். விழுப்புரம் நண்பர்கள் திரு. ம. சொக்கலிங்கம் திரு அண்ணாதுரய், திரு அன்புசிவம், திரு. இராமமூர்த்தி முதலியோர் என் எழுத்துக்கள் மீது அக்கறை கொண்டு உதவினர்.

○ கல்வராயன் மலைப் பயணத்திற்கான கருத்தையும் பொருளையும் தந்து உதவிய புதுவை வரலாற்றுச் சங்கத்தார்க்குப் பெரிதும் நன்றியுடையேன்.

○ அனைத்துக்கும் மேலாகக் கல்வராயன் மலை மக்கள் கருத்துக்களை உதவினார்கள்; அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையேன்.

# சின்ன திருப்பதி
## கோயிலும்
## தெய்வங்களும்

விஷ்ணு கோயில்





மகாவிஷ்ணு



மகாவிஷ்ணு



தாயார்
அலர்மேலுமங்கை

சிவலிங்கம்





செப்புத் திருமேனிகள்



இயற்கையின் இன்ப எழில்!

கல்வராயன்மலை மக்கள்

# வரலாறு

அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி



# ஊரும் பேரும்

மனித வரலாறு மிக நீண்டது. தொடக்ககால மனிதன் நிலையாகத் தங்கி வாழாதவன். குடும்ப வாழ்வும் கூட்டு வாழ்வும் தோன்றிய பிறகே, மனிதன் ஓரிடத்தே வாழத்தொடங்கியிருக்க வேண்டும். உழுது பயிரிட்டு வாழப் பழகிய பின்னர் நிலையாகத் தங்கி வாழும் நிலை உருவாகியிருக்கலாம்.

## ஊர்ப் பெயர்த் தோற்றம்

ஒரு சிலர் கூடி வாழ்ந்த நிலையில் சிறுசிறு வாழ்விடங்கள் சேர்ந்தன. ஊர்கள் தோன்றின; பிறகு நிலையான வளர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.

மனிதன் தான் வாழ்கின்ற ஊர்களுக்குப் பலவாறான பெயர்களை வைத்திருக்கிறான். அத்தகைய பெயர்கள் பெரும்பாலும் இடுகுறிப் பெயர்களாகவே இருக்கும்.

மனிதன் காலப் போக்கில் அனுபவம், சிந்தனை, மொழி ஆகியவற்றில் வளர்ச்சி அடைந்தபோது ஊர்ப் பெயர்களும் மாற்றம் அடைந்தன. அத்தகைய ஊர்ப் பெயர்களை ஆராய்ந்து பொதுக்கூறுகள் என்றும் சிறப்புக் கூறுகள் என்றும் இப்பொழுது ஆய்வாளர் கூறுகின்றனர்.

இவற்றில் பொதுக் கூறுகளில் அமைந்த ஊர்ப் பெயர்கள் நிலையானவை. அவற்றிற்கான பெயர்கள், (காரணங்களை) விளக்கும் வண்ணம் அமைந்திருக்கும்.

பழங்காலத்தில் மக்கள் வாழ்க்கை, இயற்கையோடு தொடர்புடையதாக அமைந்திருந்தது. அதனால் அக்கால மக்கள் தங்கள் ஊர்களுக்குப் பெயரை இயற்கைத்தொடர்புடையதாக அமைத்தனர்.

இவற்றில் மலை, காடு, மரம், நீர், மிருகம், பறவை ஆகிய தொடர்புடையவைகளை விளக்கும் பொதுக் கூறுகளை ஊர்ப் பெயர்கள் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

இப் பொதுக் கூறுகளை, இயற்கை அமைப்பு, நீர் நிலை அமைப்பு, செயற்கை அமைப்பு, தொடர்புண்மைகளைச் சுட்டும் அமைப்பு, குடியிருப்பு அமைப்பு எனக் கூறுவர்; இவை முக்கியமான கூறுகளாகும்.

கல்வராயன் மலையில் 103 ஊர்கள் இருப்பதை அறிய முடிகிறது. இவற்றில் 81 ஊர்ப்பெயர்கள் பொதுக்கூறுத் தன்மைகளை உடையன. மீதமுள்ள 22 ஊர்கள் சிறப்புக் கூறு தன்மைகளை உடையன.

பொதுக்கூறு தன்மை கொண்ட 81 ஊர்களின் விகுதிப் பெயர்கள் கீழ் வருமாறு கூறலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஊர் | 25 | நத்தம் | 2 |
| பட்டு | 14 | வதி | 1 |
| பாடி | 10 | மதி | 1 |
| காடு | 5 | பதி | 1 |
| பூண்டி | 3 | நாடு | 1 |
| சேரி | 3 | கல் | 1 |
| குழி | 3 | கோடு | 1 |
| பாளையம் | 2 | மேடு | 1 |
| பாறை | 2 | நெல்லி | 1 |
| மலை | 2 | கரை | 1 |
| துறை | 1 | | |

சிறப்புக் கூறு தன்மை கொண்ட 22 ஊர்களின் விகுதிப் பெயர்கள் கீழ்வருமாறு உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| வளைவு | 2 | வெள்ளார் | 1 |
| துக்ளி | 2 | பொறுப்பம் | 1 |
| பட்டி | 2 | தும்பை | 1 |
| கூடாரம் | 1 | பாக்கணம் | 1 |
| வாரம் | 1 | நல்லி | 1 |
| மடுவு | 1 | காவியம் | 1 |
| கொம்பு | 1 | படை | 1 |
| புலி | 1 | ஆலத்தி | 1 |
| தொரங்கர் | 1 | முருவம் | 1 |
| | | கிடார் | 1 |

# இயற்கைநிலை அமைப்புக் கொண்ட பொதுக் கூறுகள்

இவ்வகை அமைப்பில் கல்வராயன் மலையில் உள்ள ஊர்கள் காடு, குழி, பாறை, மலை, மேடு என்னும் விகுதிப் பெயர்களைக் கொண்ட ஊர்களைக் கூறலாம்.

## காடு

காடு என்ற தமிழ்ச் சொல், இலக்கியங்களில் காணப்படுகிறது. 'மாயோன் மேய காடுறை உலக மும்' என்று தொல்காப்பியம் (அகத்திணை இயல் நூற்பா—6), காடு முல்லை நிலத்துப் பகுதியாகக் கூறுகிறது. பொதுவாகக் காடு விலங்குகள் வாழும் இடமாகவே எண்ணப்பட்டு வருகிறது.

1· அரவங்காடு — அரி — சிங்கம் மிருகம் தொடர்பாக — (அரி. ஜாகீர்)
2. ஈச்சங்காடு — ஈச்சமரம் 'மரம்தொடர்பாக ,,
3. கிளக்காடு — கிளா-செடு, தாவரம் தொடர்பாக,,
4. வெள்ளரிக்காடு—வெள்ளரிக்கொடி,, ,,(குறும்.ஜாகீர்)
5. முலக்காடு — முள் — பதர் ,, ,, (சடை.ஜாகீர்)

## குழி

குழி என்பது நில அளவை உடையதாகவும், பள்ளம் என்ற பெயரிலும், அழகு என்ற பொருளிலும் குறிப்பிடப் பட்டு வருகிறது. இங்குத் தாவரங்களின் தொடர்புடைய பொருள் பெற்று உள்ளன.

---

குறிப்பு :

**அரி ஜாகீ : — அரியக்கவுண்டன் ஜாகீர் ஊர்**
**குறும். ஜாகீ : — குறும்பக் கவுண்டன் ஜாகீர் ஊர்**
**சடை. ஜாகீ : — சடையக் கவுண்டன் ஜாகீர் ஊர்**

1. வாழக்குழி — வாழைமரம் தாவரம் தொடர்பாக (குறும். ஜாகி.)

2. அத்திக்குழி — அத்திமரம்

3. வஞ்சிக்குழி — வஞ்சிமரம்

**பாறை**

இப்பெயர் மலையின் தொடர்பாக அமைந்துள்ளது. தரைக்குக் கொஞ்சம் உயரத்தில் பரந்து உள்ள கல் பரப்புக்குப் பாறை என்று வழங்கப் படுகிறது.

1. **கள்ளிப் பாறை** — கள்ளிச்செடி தாவரம் தொடர்பாக (அரி. ஜாகி.)

2. **மட்டப் பாறை** — சரியான அளவு தொடர்பாக (அரி. ஜாகி.)

**மலை**

பரந்தும் உயர்ந்தும் உள்ள கல் தொடர்கள் மலை என்று கூறப்படும்.

1. **பாப்பாத்தி மலை** சாதி, இனம் தொடர்பாக (குறும். ஜாகி.)

2. **வெள்ளிமலை** — வெள்ளை உலோகம், விண்மீன். நிறம் தொடர்பாக(குறும்.ஜாகி)

**கோடு**

கோடு என்பது உச்சி என்ற பொருளில் ஊர்ப் பெயராகப் பெரும்பாலும் வழங்கி வருகிறது. கோடு என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. [எடு:அறை, கொம்பு, கூட்டம், கோடென்னேவல், சங்கு, சுழி, திரள், தத்தை, பக்கம், மரக் கொம்பு, வரம்பு, வரி, வளைவு எனத் தமிழ் மொழியகராதி கூறுகிறது.]

**1. வெங்கோடு:** (குறும்.ஜாகி)

வெங் கண் — சூரியன், வெம்மை
என்னும் பொருளையும் தருகிறது.

சூரியனைத் தொடும் உயரமான உச்சி என்னும் பொருள்பட வழங்குகிறது எனலாம். அதாவது உயரமான மலை உச்சியைக் கொண்ட பகுதியில் இவ்வூர் உள்ளது என்னும் கருத்தில் வழங்கப்பட்டது போலும்.

**மேடு:**

மேடு என்பதற்கு உயர்ச்சி, ஊர், திடர், வயிறு என்னும் பொருள்கள் வழங்கப் படுகின்றன.

**1. நொச்சிமேடு —** நொச்சி மரம். தாவரம் தொடர்பானது (குறும்.ஜாகி.)

நொச்சி மரங்கள் நிறைந்த பகுதியில் அமைந்த ஊர் என்னும் பொருளில் அமைந்துள்ளது எனலாம்.



## நீர்நிலை அமைப்புக் கொண்ட பொதுக் கூறுகள்

நீர் நிலைகளின் பெயர்களை விகுதியாகக் கொண்ட ஊர்ப் பெயர்கள் தமிழ்நாட்டில் பலஉள்ளன. கல்வராயன் மலையில் நீர் நிலைத் தொடர்பான ஊர்கள் இருந்தாலும் விகுதியில் வேறு பெயர் பெற்றுள்ளன.

இங்குக் கரை என்ற விகுதிப் பெயர் கொண்டபொதுக் கூறு தன்மையுடையதாக ஓர் ஊர் உள்ளது.

**கரை**

கரை என்பதற்கு எல்லை அருகு, கானல், முடிவு, வார்த்தை எனப் பல பொருள்கள் உள்ளன.

1. **ஏரிக்கரை** - எல்லை என்று பொருள். நீர்நிலைத் தொடர்பாக அமைந்துள்ளது. (குறும் ஜாகீ.)

கல்வராயன் மலையில் ஏரி எதுவும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஆயினும் ஏரிஎன்ற நீர்நிலைத்தொடர்புக்காகப் பெயர் அமைந்துள்ளது எண்ணத் தக்கதாகும்.

## குடியிருப்புப் பகுதிகளைச் சுட்டும் பொதுக் கூறுகள்

இங்கே, இப்பொதுக் கூறு அமைப்பில் சுமார் 20 வகை விகுதிகளைக் கொண்ட பெயர்க் கூறுகளை யுடைய ஊர்களைக் கூறுகின்றனர். கல்வராயன் மலையில் ஊர்ப் பெயர்களின் விகுதிகளை நோக்கும்போதுஇப்பொதுக்கூறுகளில் 9 வகைக் கூறுகளைக் காணமுடிகிறது. அவை ஊர், பட்டு, பாடி, பூண்டி, சேரி, பாளையம்,நத்தம், பதி, நாடு என்பன.

ஊர்: மக்கள் கூடி வாழும் பகுதியை உணர்த்துவதாக 'ஊர்' என்னும் பெயர் பழங்காலந்தொட்டே வழங்கி வந்துள்ளது.

பொதுவாக ஊர் என்பது மருத நிலத்திற்குரியதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இது இயற்கை அமைப்பை ஒட்டி, நிலம், தாவரம், விலங்கினம், சாதி, இனம் ஆகிய வற்றால் பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1. மேலநிலவூர் | — மேல் | நிலம் சார்ந்தது (அரி. ஜாக.) |
| 2. கீழ் நிலவூர் | — கீழ் | நிலம் சார்ந்தது |
| 3. கண்ணூர் | — கண், குழி, மூங்கில் என்னும் பொருளும் உண்டு. தாவரம் சார்ந்தது எனலாம் | ,, |
| 4. பெருமா நல்லூர் | — பெருமா-யானை; விலங்கினம் சார்ந்தது | ,, |
| 5. வெங்களூர் | — வெங்களம் — போர்க்களம் நிலம் சார்ந்தது | ,, |
| 6. புதூர் | — புதிய ஊர் — நிலம் சார்ந்தது | |
| 7. வெதூர் | — வெதிர்; மூங்கில் — தாவரம் சார்ந்தது (குறும்.ஜாக.) | |
| 8. பெரும்பூர் | — பெரும்பதி — தலைக்கிராமம் நிலம் சார்ந்தது | ,, |
| 9 கூடலூர் | — கூடும் இடம்; | நிலம் சார்ந்தது |
| 10. சிறுக்கலூர் | — குறுகிய இடம்; | நிலம் சார்ந்தது |

11. ஆலானூர்—ஆலமரம். தாவரம் சார்ந்தது [குறு. ஜா]
12. ஆவாலூர்—ஆவாசம். வசிக்குமிடம். நிலம்சார்ந்தது.*
13. குரும்பலூர்—குறும்பலூர் என இருந்திருக்கலாம்.

குறும்பர் — ஒருவகை இனத்தவர்
குரும்பா — பேய்ச்சுரையைக் குறிக்கும்
எனவே, இனம் சார்ந்தது. ,,

14 எழுத்தூர் —எடுத்தூர் என்பதன் திரிபாக இருக்கலாம்
எழுத்து. பொதிமாடு. விலங்கினம் சார்ந்தது
(சடை.ஜாகீ.)

15. வேலம்பட்டிப்புதூர் — வேலம்; ஒருவகை மரம்
தாவரம் சார்ந்தது ,,

16. கிணத்தூர் — கிணறு. நீர்நிலை சார்ந்தது ,,

17. உப்பூர் — உப்பூரணி. உவர் நிலம்
உப்பரவர். குளம் முதலியன அகழ்வோர்
(ஓர் இனத்தவர்)
நிலம் சார்ந்ததாகக் கொள்ளலாம் ,,

18. வன்னியூர் — வன்னியர் ஓர் இனத்தவர்
இனம் சார்ந்தது; ,,

19. மாதூர்: மாத்தூர் — புதிய ஊர்
மா — மரங்கள் எனவும் கொள்ளலாம்
- புதிய ஊர் என்பது சரியாயிருக்கும்
நிலம் சார்ந்தது ,,

20. தேவனூர்: தேவர் — கடவுள்
ஒருவகை இனத்தவர்
தேவாத்தூவா — அரச மரம்
தாவரம் சார்ந்தது ,,

21. சாத்தனூர்: சாத்தன் — தெய்வம் சார்ந்தது. (ச. ஜா.)

22. கரியாலூர்: கறுப்பன் - நிறம் சார்ந்தது ,,

23. முண்டி — முண்டிரம் } - ஒருவகைக் கீரை
முண்டீரம் } தாவரம் சார்ந்தது

24. மொட்டையனூர் } இவைகளுக்குச் (குறும்.ஜா)
25. துரூர் } சரியான பொருள் தெரியவில்லை.

மொட்டையன் என்பதாக ஏற்பட்டிருக்கலாம்.

**பட்டு**

பட்டு என்ற சொல் குக்கிராமம் என்ற பொருளுடன் சிறு நகரம் அல்லது சிறிய கிராமம் என்ற பொருளைத் தருகிறது என்பர்.

'சிற்றூர்ப் பெயரும் துகிலும் பட்டே'
என்று பிங்கல நிகண்டு கூறுவதைக் காணலாம்.

கல்வராயன்மலையில் பட்டு என்னும் பொதுக் கூறுகளை உடைய 14 ஊர்களைக் காண முடிகிறது. அவை தாவரங்களின் பெயர்களாலும், நில அமைப்புகளைக் கொண்டும், இயங்கை நிலையின் (மலை) பெயராலும் வழங்கப் படுகின்றன.

1. கர்ணாம்பட்டு —பொருள் விளங்கவில்லை (அரி.ஜாகீ)
2. மலை அர்சம்பட்டு — அரசமரம். தாவரம் சார்ந்தது குறும்,ஜாகீ.
3. கள்ளிப்பட்டு — கள்ளிச்செடி. ,, ,,
4. பழைய பாலப்பட்டு — பாலைநிலம். நிலம்சார்ந்தது,
5. எருக்கம்பட்டு — எருக்கஞ்செடி. தாவரம் சார்ந்தது.
6. எருக்கம்பட்டு — ,, ,, (சடை. ஜாகீ.)
7. புதுப் பாலப்பட்டு — பாலைநிலம். நிலம் சார்ந்தது (குறு. ஜாகீ.)
8. எடப்பட்டு — இடைப்பட்ட பகுதி. ,,

9. தேக்கம்பட்டு—தேக்கம்; நீர்நிலை. நீர்நிலைசார்ந்தது;
தேக்கம் — ஒருவகைமரம். (கு.ஜா)
தாவரம் சார்ந்தது
10. பொரச்சம்பட்டு — பொருள் விளங்கவில்லை.
11. தும்பராம்பட்டு — தும்பரம்; அத்திமரம்
தாவரம் சார்ந்தது;,
12. சேராப்பட்டு — சேர் சதுப்பு நிலம் சார்ந்தது ,,
13. மொழிப்பட்டு — பொருள் விளங்கவில்லை.
(சடை. ஜாகி.)
14. மாவடிப்பட்டு — மாவகம் — இலுப்பை மரம்
மாவிடை— மரங்களின் செறிவு
தாவரம் சார்ந்தது (சடை. ஜா.)

பாடி

பாடி என்னும் பொதுக் கூறுகளைக் கொண்ட பத்து ஊர்கள் இம்மலையில் உள்ளன

'முல்லை நிலச் சிற்றூராகவும், மன்னன், குறு நிலத் தலைவன் ஆகியோரின் படை வீடு கொண்ட இடமாகவும், பெருநகரமாகவும், பொருள் கொண்டு பாடி என்ற பெயர்க்கு விளக்கம் தரப்படுகிறது. பெரும்பாலும் பாடி என்பது முல்லை நிலச் சிற்றூர் களாகவே கூறப்பட்டுள்ளன. இம் மலையில் பாடி என்பது மரப்பெயர்களையே முன் ஒட்டுகளாகப் பெயர் பெற்றுள்ளன.

1. அத்திப் பாடி — அத்திமரம்; தாவரம் சார்ந்தது
(குறும். ஜா.)
2. வாழைப்பாடி — வாழை மரம் ,, (சடை. ஜா.)
3. கருவேலம்பாடி — வேலமரம் வகை ,, ,,
4. சுண்ட பாடி — சுண்டகம்; மூங்கிலம் ,, ,,
5. வைலம் பாடி — வைலவம்; வில்வமரம் ,, ,,
6. மல்லிய பாடி — மல்லிகம்; பிரப்பஞ் செடி,, ,,

7. கெங்கம் பாடி — கங்கம் பெருமரம் நிறைந்த பகுதி (ச. ஜா.)

8. பணப் பாடி — பனம் பனைமரம், ,, ,,

9. வண்டக்கபாடி— பொருள் விளங்கவில்லை ,,

10. மாயம் பாடி — (மாலயம் — சந்தனமரம்) தாவரம் சார்ந்ததாக இருக்கலாம்(சடை.ஜா.)

**பூண்டி**

பூண்டி என்பது, பூண்டு வகைகள் மிகுதியாக விளையும் தோட்டங்களை அடுத்து அமைந்த ஊர்கள். பூண்டி என்னும் பெயர் பொதுக் கூறாக அமைந்துள்ளது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாக உள்ளது.

கல்வராயன் மலையில் உள்ள பூண்டி என்னும் விகுதி பெற்ற பெயர்கள், மரப் பெயர்களையே முன்ஒட்டுகளாகப் பெற்றுள்ளன.

1. கொட்டப் பூண்டி — கொட்டை, ஒருவகைமரம் தாவரம் சார்ந்தது (அரி.ஜா.)

2. பெலாப் பூண்டி — பால-பெலா; மரம்,,(குறும்.ஜா)

3. ஆரம் பூண்டி — ஆரம்; சந்தனமரம் ,, ,,

**சேரி**

சேரி என்பது மக்கள் சேர்ந்து வாழும் இடங்கள் என்னும் பொருளில் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளன.

'புலாலஞ் சேரி புல்வேய் குரம்பை' என்னும் அகநானூற்று (100. 2) வரியால் அறிய முடிகிறது.

பல இன மக்கள், [தனித் தனியாகவும்] சேர்ந்து வாழும் இடமும் சேரி என்று பெயர் பெற்றுள்ளன.

இடையன் — இடைச்சேரி
பள்ளர் — பள்ளர்சேரி
பார்ப்பனர் — பார்ப்பனச்சேரி

கல்வராயன் மலையில் உள்ள சேரி என்ற பொதுக் கூறு கொண்ட மூன்று ஊர்களும் இயற்கைப் பொருள்களான நீர் நிலை, மரப்பெயர்களையே முன் ஒட்டுகளாகப் பெற்றிருப்பதைக் காணலாம்.

1. பாச்சேரி — பொருள் விளங்கவில்லை
பாய்ச்சல் என்னும் நீர்த்தொழில் சார்ந்ததாக இருக்கலாம். (குறு. ஜா.)

2. பாச்சேரி ,, சடை. ஜா )
3. பெருக்கஞ்சேரி— பெருக்கம்—புளியமரம் ; தாவரம் சார்ந்தது (குறு. ஜா.)

**பாளையம்**

பாளையம் என்னும் பொதுக் கூறுடைய இரண்டு ஊர்கள் இம் மலையில் உள்ளன.

'படைவீரருக்குரிய ஊர் பாளையம்' என்பர். படைவீரர்களுக்குத் தொடர்பில்லாத ஊர்களும் பாளையம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

விஜய நகர அரசர்கள் சிற்றரசர்களை நியமித்து ஆண்டு வந்தனர். அச் சிற்றரசர்கள் பாளையக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். விஜயநகர அரசர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட ஊர்கள், அரசர்களின் பெயரால் பாளையம் என வழங்கப்பட்டுள்ளதை அறியலாம்.

சின்னப்ப நாயக்கன் பாளையம்

திம்மப்ப நாயக்கன் பாளையம்

பெருமாய் (ள்) நாயக்கன் பாளையம்

வன்னியர் பாளையம்

பக்கிரிப் பாளையம்.

கல்வராயன் மலையில் உள்ள இரண்டு பாளையங்களும் இக் கருத்தமைந்த பெயர்களாக உள்ளன.

1. மணியார் பாளையம் (அரி. ஜா.)

. தடுத்தாபாளையம் (குறும். ஜா.)
2

**நத்தம்**

நத்தம் என்பது ஊருக்குப் பொதுவான ஓர் இடம் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இவ்விடம் சில சமயம் மக்கள் வாழும் இடமாகவும் மாறிவிடுவது உண்டு.

1. பரங்கி நந்தம் —பரங்கி; இலவங்கமரம்
தாவரம் சார்ந்தது. (சடை. ஜா.)

2. கொண்டியநத்தம் — கொண்டிமாடு; பட்டிமாடு
விலங்கினம் சார்ந்தது ,,

**பதி :** பதி என்னும் சொல் **ஊரைக்** குறிப்பதாகவே இலக்கியத்தில் காணப்படுகிறது.

> 'யாறும் குளனும் காவும் ஆடிப்
> பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப' என்னும்

தொல்காப்பிய (கற்பியல், நூற்பா. 50) வரியால் இந்தச் சொல் ஊர் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

> பதி என்பது வேடர், இருளர் ஆகிய
> இனத்தவருக்குத் தொடர்புடையதாகக்
> கருதப்படுகிறது.

பதி என்னும் பொதிக் கூறு பெயர்பெற்ற ஊர்ஒன்றை மட்டும் இம் மலையில் காணமுடிகிறது.

*1. சின்ன திருப்பதி — குடியிருப்புப் பகுதியைச் சார்ந்தது. (சடை. ஜாகீ.)*

மேலும் வதி, மாதி என்னும் விகுதிகளைக் கொண்ட இரண்டு ஊர்களையும் காணலாம். வதி, மாதி என்பது பதி என்பதன் திரிபாக இருக்க வேண்டும்.

1. வில்வதி — பொருள் விளங்கவில்லை.
வேடர்களோடு தொடர்புடைய
வில்லைக் குறிப்பதாகலாம்.
(அரி. ஜாகீ.)

2. கொடமாதி* — பொருள் விளங்கவில்லை.
மதி என்பது மாதிஎன்பதன் திரிபாக இருக்கலாம்.
மாதி — மா எனப் பொருள் உள்ளது.
மாதிபோதி — நெருஞ்சில் ஆகும். (சடை. ஜாகீ.)
தாவரம் சார்ந்ததாகலாம்.

**நாடு**

நாடு என்பது செயற்கை நில அமைப்பைச் சேர்ந்த பொதுக்கூறு. குடியிருப்பு நிலையில் நாடு என்ற சொல் அமைந்துள்ளதை உணர முடிகிறது.

---

* கொடலாகம் — வெந் தோன்றி மரம்.
மாதி — மா — மாதிரம் — மலை — நிகை. மணி.

1. இன்னாடு — இன்னாலை — இலைக்கள்ளிமரம்.
தாவரம் சார்ந்தது. (கு. ஜா.)

**நெல்லி**

நெல்லி என்ற பொதுக் கூறு உடைய ஊர்ப் பெயர்கள் குறைவாக வழங்கப்படுகின்றன நெல்லி (நெல்லிமரம் என்பது ஒருவகை மரத்தின் காரணமாக அமைந்தது என லாம். நெல்லி மரங்கள் நிறைந்த பகுதியில் ஊர் அமைந்த தால் இப் பெயர் பெற்றது போலும்.

1. கருநெல்லி — தாவரம் சார்ந்தது [சடை. ஜா.]

**கல்**

கல்லின் தன்மை, அமைப்பு ஆகிய இயற்கை அமைப்பு முறையில் பெயர்கள் அமைவதும் உண்டு.

மைலம் — மயில் போன்ற மலை.

**கொண்டிக்கல்**

கொண்டி — மாடு
மாடு போன்ற அமைப்பை உடைய கல்
அமைந்த பகுதி
விலங்கினம் சார்ந்தது எனலாம். (ச. ஜா.)

**துறை** : துறை என்ற சொல்லுக்கு
ஆறு, இடம், இறங்கு துறை, எல்லை, காரியம், நீர்த்துறை, தங்குமிடம், நூல், வழி
எனப் பல பொருள்களுண்டு.

**கொடுத்துறை** : கொடுமையான வழி எனப் பொருள் கொள்ளலாம், கரடுமுரடான வழி எனவும் கூறலாம். இதனை ஆற்றின் ஓட்டம் எனவும் கொள்ளலாம். இயற்கை அமைப்பைச் சார்ந்தது எனவும், நீர் நிலையைச் சார்ந்தது எனவும் கொள்ளலாம். (சடை. ஜா கீ.)

## சிறப்புக் கூறுகள்

ஊர்ப்பெயர்கள் சில சிறப்புக் கூறுகளை உடையனவா கவும் உள்ளன. இவை இயற்கை அமைப்புக்கள் [தாவரம், விலங்கு, நீர்நிலை, நில அமைப்பு] செயற்கை அமைப் புக்கள் ஆகியன கொண்டு அமைந்திருக்கும். இவை தவிர நாட்டின் பெயர், நாட்டின் உட்பெயர், ஆட்கள் பெயர், சாதி ஆகியவை கொண்டும் ஊர்ப்பெயர்கள் அமைந் திருக்கும்.

கல்வராயன்மலையில் சுமார் 23 ஊர்கள் சிறப்புப் பெயர்களைக்கொண்டு அமைந்துள்ளன. அவற்றைக் காண்போம்.

**வளவு**

வளவு என்பதற்குக் கொல்லை, வீடு எனும் பொருள் கள் உள்ளன. வளைவு என்பதன் திரிபாகக் கொண்டால் வட்டம், வணக்கம், வணங்கல், வளர்ந்தது என்னும் பொருள்களைக் கொள்ளலாம்.

நக்கவளவு [அரி. ஜாகீ.]
உண்டக்கல் வளவு ,,

இவ்வூர்ப் பெயர்களில் பின் ஒட்டில் உள்ள வளவு என்ற பொருளில் உள்ளதா, வளைவு என்ற பொருளில் உள்ளதா, அளவு என்ற பொருளில் உள்ளதா என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லை. நக்க, உண்டக்கல் என்பதற்கான பொருளும் விளங்கவில்லை.

**துக்ளி**

துக்ளி என்னும் விகுதிப் பெயர்கொண்டு பொருள் அறிய முடியவில்லை.

1. கீழ்த் துக்ளி — [அரியக். ஜாகீ.]
2. மேல் துக்ளி — ,,

இப் பெயர்களின் பொருள்களையும் தெளிவாக உணர முடியவில்லை. ஆனால் கீழ், மேல் என்ற ஒப்புமைக் கூறு கள் இருப்பதை அறிய முடிகிறது.

## பட்டி

பட்டி என்னும் அடைப்பெயர்கள் செயற்கையாக அமைக்கப்பட்ட நிலஅமைப்பை உணர்த்துகின்றன பட்டி என்னும் பெயரை ஆராயும்போது இப்பெயர் கி.பி 15ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தோன்றியதாயிருக்கலாம்.

பட்டி என்பதற்கு ஆட்டுக்கிடை, இடம், ஒரு செடி, களவு, கள்வன், சிற்றூர், சீலை, தெப்பம் நெகிழ்ச்சி படல், பலகறை, பிள்ளை, மந்தை என்னும் பல பொருள்கள் உள்ளன.

## மோட்டாம் பட்டி

மோட்டு - முரட்டு; முரட்டுத் தனமான மாடுகளை அடைத்து வைக்கப்பட்டுள்ள இடம் எனக் கொள்ளலாம். எனவே விலங்கினம் சார்ந்தது எனலாம்.

(குறும்பக்கவு. ஜாகீ.)

## நாரணம் பட்டி

நாராயணம் என்பதன் திரிபாக இருக்கலாம். நாராயணம், அரசமரம் எனப் பொருள். எனவே தாவரம் சார்ந்தது எனலாம் (சடை. ஜாகீ.)

## கூடாரம்

கூடாகாரம் என்பதன் மருவு எனக் கொள்ளலாம். கூடாகாரம் = மேல்வீடு என்பது பொருள். வயல்பகுதிக்கோ ஆற்றுப் பகுதிக்கோ, மேலாகக் குடியிருப்பு அமைத்துக் கொண்டதை விளக்குவதாக இப்பெயர் உள்ளதுஎனலாம்.

(அரி. ஜாகீ.)

**வாரம்**

வாரம் என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றில் மலைச் சரிவு என்னும் பொருளும் உள்ளது. மலைச்சரிவில் அமைக்கப்பட்ட ஊர் எனலாம். இயற்கை அமைப்பைச் சார்ந்தது. [சடை. ஜாகீ.]

**ஆனை மடுவு**

மடுவு — பள்ளம் என்று பொருள் கொள்ளலாம். யானை விழுந்து விடுமாறு அமைந்துள்ள பள்ளமானபகுதி எனும் பொருளில் இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். இயற்கை அமைப்பைச் சார்ந்தது. (குறும். ஜாகீ.)

**மான் கொம்பு**

மானின் உறுப்பான கொம்பு. இவ்வூர் மான்கள் நிறைந்த பகுதியில் அமைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இம் மலையில் மான் வேட்டை முக்கியமான தொழில் விலங்கினம் சார்ந்தது. [குறும். ஜாகீ.]

**கீரிப்புலி**

இப் பெயர், காட்டு விலங்குகளின் பெயரைக் கொண்டுள்ளது. கீரி, புலி நிறைந்த மலைகள் பகுதியில் இவ்வூர் அமைந்ததை உணர்த்துவதாக உள்ளது. விலங்கினம் சார்ந்தது. [குறும். ஜாகீ.]

**தொரங்கர்**

இப் பெயரின் பொருள் விளங்கவில்லை. [சடை. ஜாகீ.]

**வெள்ளார்**

வெள்ளாளர் என்பதன் திரிபாக இருக்கலாம். உழவுத் தொழில் செய்பவரைக் குறிக்கும் சொல் வெள்ளாளர் என்பது. உழவுத் தொழில் செய்பவர் சேர்ந்து வாழும் பகுதி அல்லது உழவுத் தொழிலுக்கு ஏற்ற நிலத்தில் அமைந்தஊர் எனலாம்; இயற்கைஅமைப்பைச்சார்ந்தது. [சடை. ஜாகீ.]

### கிடார்

கிழார் என்பதன் திரிபாகக் கிடார் என வழங்கிற்று எனலாம். உழவுத் தொழில் செய்பவரைக் கிழார்என்பர். கிடாரை என்பதற்கு அகராதி ஒருவகை மரம் என்று கூறு கிறது. எனவே, கிடார் என்ற பெயர் தாவரம் சார்ந்தது.

[சடை. ஜாகீ.]

விழுப்புரம்—திருவண்ணாமலை சாலையில் கிடார் [அ] கெடார் என்னும் ஊர் உள்ளதும் கருதத்தகும்.

### பொறுப்பம் [குறும். ஜாகீ.)

இதற்குச் சரியான விளக்கம் தெரியவில்லை.

### தும்பை [குறும். ஜாகீ.]

தும்பை, ஒருவகைச் செடி; பூண்டு வகையைச் சேர்ந்த தும்பை வளரும் பகுதியில் அமைந்த குடியிருப்புக்கு இப் பெயர் வழங்கி இருக்கிறது. தாவரம் சார்ந்தது

### பாக்கணம் [குறும். ஜாகீ.]

பாக்கம் + அணம் எனப் பிரித்தால் பாக்கம் என்னும் ஊர், கடல் சார்ந்த ஊர்ப் பகுதிக்குக் கடல் போன்ற நீர் நிலையைக் குறிப்பனவாகக் கொள்ளுதல் சரியானதாகும். நீர் நிறைந்த ஆறு அல்லது ஓடைக்குக் கீழ் வாய்ப்புற மாகவோ மேல் வாய்ப்புறமாகவோ அமைந்த இடம் என்பது பொருள். நீர் நிலைக்கு அடுத்து அமைந்த ஊர் என்றும் கூறலாம். எனவே, பாக்கணம் என்பது நீர் நிலை அமைப்பைச் சார்ந்தது.

### வெளாநல்லி [குறும். ஜாகீ.]

நல்லி—நல்லவள் என்று பொருள். வெளா—வெள்ளை என்பதன் திரிபாகவும் இருக்கலாம். சரியான விளக்கம் இல்லை.

[சடையக். ஜாகீ.]

## மேல் முருவம்

முருகு—முருக்ன்—முருவன் என்பதாக அமைந்துள்ளது போலும். முருகு — அகில், அழகு, எலுமிச்சம் என்னும் பொருள்களில் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு மேல் என்னும் முன் ஒட்டு எல்லை அடிப்படையாக ஒப்புமைக் கூறுகளால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் சார்ந்தது.

## கவியம்

[சடை. ஜாகீ.]

கவியம் என்பதற்குச் சரியானவிளக்கம் தெரியவில்லை. கவியம் என்பது கவிகம் என்பதன் மருவுப் பெயராகவும் இருக்கலாம். கவிகம் என்பதற்குக் கடிவாளம் என்பது பொருள்.

## கல் படை
## (வரிசை)

சிறப்புக் கூறுகள் முன் ஒட்டாக அமைவதும் உண்டு. கற்கள் வரியாக அமைந்த பகுதியில் உண்டான ஊர் பற்றி இப்பெயர் வழங்கியுள்ளது எனலாம். இயற்கை அமைப்பைச் சார்ந்தது.

[சடை.ஜாகீ.]

## ஆலத்தி

ஆலம் + அத்தி = ஆலத்தி. ஆலமரமும் அரசமரமும் நிறைந்த பகுதியில் ஊர் தோன்றியதால் அம் மரங்களின் பெயரைப் பெற்றது.

தாவரம் சார்ந்தது. [சடைய. ஜாகிர்.]

ரூ 40

# கல்வராயன் மலை மக்கள்

அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி

# வரலாற்று நோக்கில் கல்வராயன் மலை

## மலையில் குடியேற்றம்

நாகரிக மக்கள் எப்படிப் பழங்குடிகளாகவும், ஆதிவாசிகளாகவும், மலைவாசிகளாகவும் ஆனார்கள் என்பது பற்றிக் கூறும்போது மானிட இயல் அறிஞர் பிலோ இருதயநாத் அவர்கள்,

'பழங்குடிகள், ஒரு அரசன் வேறு அரசனின் ஊர்களைப் பிடித்துக் கொண்டதும் தங்களுடைய ஊர்களை விட்டு விட்டு, அன்னிய அரசனுக்குப் பயந்து நாடோடிப் பிச்சைக்காரர்களாகவும், சிலர் மலைவாசிகளாகவும், ஆதிவாசிகளாகவும், ஆடிமாதம் பிச்சைக்காரர்களாகவும் பூமாடுகளைப் பழக்கிக் கொண்டும், பலர் தெருவித்தைகள் ஆடுபவர்களாகவும் ஆனார்கள்'

என்று கூறுகிறார்.* இதனை வரலாற்று அறிஞர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கல்வராயன் மலை மக்கள் வரலாற்றை ஆராய்கையில் பலநூற்றாண்டுகளுக்கு முன்பு இம் மக்களின் முன்னோடிகள் அரசர்களாகவும், அரசு இனத்தவர்களாகவும்,

---

* பிலோ இருதயநாத் கட்டுரைகள் — பக். 48

அரசனின் போர் வீரர்களாகவும், எல்லைக் காவல்காரர் களாகவும் இருந்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது.

இம் மலை சேர சோழ பாண்டியர்களின் வரலாற்றில் சிறப்படைந்துள்ளது. இவர்களின் அரசுக்கு உட்பட்டிருந்தது. பின்னர் பல்லவர் ஆட்சிக்கும் அடங்கியிருந்தது. அடுத்து விஜயநகரமன்னர்களிடமும், நாயக்கர்களிடமும், முகமதியர்களிடமும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழும் இருந்துள்ளதைச் சான்றுகளால் அறியமுடிகிறது.

## முற்காலப் பின்னணி

பத்தாம் நூற்றாண்டு முதல் சில வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. மேலும் விரிவாக ஆராய்ந்தால் தெளிவான வரலாற்றை அறிய முடியும்.

கடைச்சங்க காலத்து அரசர்களுக்கு மலைகள் சிறந்த இருப்பிடங்களாக இருந்திருக்கின்றன.

கொல்லிமலையை* ஆண்டவன் ஓரி. இவனைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன. கொல்லிமலைப் பகுதியை வளப்பூர் நாடு எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன,

கொல்லிமலையில் உள்ள சிவன் (அறப்பளீச்சுரர்) கோயில் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் சிறப்புப் பெற்றிருந்ததை இக்கோயில் கல்வெட்டு மூலம் அறியலாம். சுந்தர சோழன் இக்கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கியதை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

இம்மலைப் பகுதி கொங்கு நாட்டில் அடங்கியதாகவும், இந் நாட்டை வேட்டுவர்கள் ஆண்டு வந்தார்கள்

---

* கொல்லிமலை; சேலம்மாவட்டம். இங்கு வாழும் பழங்குடிகளை 'மலையாளிகள்' என்று கூறுகிறார்கள்.

என்றும், பின்னர் வேளாளர் குடியேறியபோது இருவருக்கும் இனப் போராட்டம் நடைபெற்றது என்றும் தெரிகின்றது. இதனைப் புகழ் மங்கலம் நடுகல்[1] மூலம் அறியலாம்.

வேளாளர்கள் தொண்டை நாட்டினர். வேட்டுவர் கொங்கு நாட்டைச் சூழ்ந்த பழங்குடிகள். தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தைச்[2] சார்ந்த வேளாளர்கள், ஆட்சிகள் மாறும்போது தெற்குநோக்கிச் சோழநாட்டில் குடியேறினர். இப்படிக் குடியேறிய வேளாளர் சோழ நாட்டுக் காவிரிவரை வந்து பின், அமராவதி, நொய்யல், பாவனிக் கரை வழியாகக் கொங்கு நாட்டில் குடியேறினர். இக் குடியேற்றத்தின் போது அப் பகுதியில் வாழ்ந்த வேட்டுவர்களோடு போராடி இருக்கிறார்கள்.

இப் போராட்டத்தின்போது வந்த வேட்டுவர் படையைக் 'கொங்கர் படை' என்றே குன்றுடையான் கதை கூறுகிறது.

---

1 கல்வெட்டு :

> 'வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெரித்த மாற்றலரைச்
> சாய்த்த மகன் வென்ற சயம் பெருக - சீர்த்த புகழ்
> நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரைய குலச்
> சொக்கனேந்தலே வுலகில் தான்'
>
> இக் கற்பொறி இரட்சிப்பான் பாதம் என் தலைமேலே
> —'கொங்கு' இதழ் : 15. 2. 75

2 காஞ்சிபுரம் கி.பி. 6-9 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களுக்கும், கி. பி. 9-12 வரை சோழருக்கும் பின்னர் விசயநகர ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது.

'சர்க்கரைக் கவுண்டர் வம்சாவளி' எனும்நூல் வேட்டுவர் படைத் தலைவனைக் 'கொங்குராயன்' என்று கூறுகிறது.[1]

'சோழன் பூர்வ பட்டயம்', 'தொண்டை மண்டலம் சோழ மண்டலத்துட்பட்ட வேளாளர் பாடியில்' வேளாளர் இருந்ததாகக் கூறுகிறது.

'கொங்குதேச இராசாக்கள்' என்னும் நூலும் 'சோழர்கள் கொங்கு தேசத்துக்கு வந்து கொங்கு தேசத்து இராசா வேடர்களைச் செயம் பண்ணி' அரசு புரிந்ததாகக் கூறுகிறது.[2]

எனவே, சோழநாட்டு வேளாளர் தங்களது வாழ்விடங்களை விரிவுபடுத்த முயன்றிருக்கிறார்கள். அப்படி விரிவு படுத்தும் நோக்கத்தோடு கொங்கு நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். அங்கு கொங்க அரசர்களான வேட்டுவர்கள் இருந்திருக்கிறார்கள்; அவர்களோடு போரிட்டு இருக்கிறார்கள். முடிவில் வேளாளர்கள் (காஞ்சிபுரத்தினர்) வென்றிருக்கிறார்கள். கொங்க அரசர்கள் 'ராயர்கள்' என்ற பெயருடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்றும் அறிய முடிகிறது.

கொங்கு நாட்டு வேளாளர்கள் தங்களைக் **கொங்கு வேளாளர்கள்** என்று கூறிக் கொள்கிறார்கள். இவர்கள் வேளாளக் கவுண்டர் என்றும் கூறிக் கொள்வது குறிப்பிடத் தக்கதாகும்.

வேளாளர் என்னும் சொல் 'வெள்ள' என்ற சொல்லடியாகப் பிறந்தது. வழிதுறையில்லாமல் ஓடும் வெள்ளத்தைத் தடுத்து வாய்க்கால்களின் வழியே செலுத்தி அதை

---

1 தென்னிந்தியக்கோயில் சாசனங்கள் 3-1-1223

2 கொங்கு தேச ராசாக்கள் — பக். 10

ஆளுபவர் என்பது (வெள்ளாளர்) 'வேளாளர்' என்னும் சொல்லுக்குப் பொருள் ஆகும்.[1]

கொங்கு வேளாளர் சுமார் 1000 ஆண்டுகட்கு முன்பே காணியாளர் களாகவும் ஆட்சித்தலைவர்களாகவும் இருந்துள்ளனர்.[2]

## சேர நாட்டு மக்கள்

சேரரும் தங்கள் குடியை மேற்குத் திசையில் குடியேற்றி நாட்டை விரிவு படுத்த முடியாமல் இருந்தனர் எனவே வட, தென் பகுதிகளை வென்று அங்குக் குடியேறினர் என்பர்.[3]

சேரர்களுக்திப் பல பட்டப் பெயர்கள் உள்ளன. அவற்றில் கொல்லி வெற்பன் மலையான் என்னும் பெயர்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவை.[4] இப் பெயர் களால், கொல்லி மலையை வென்றவர், 'கொல்லி வெற்பன்' என்றும், ஏனைய மலைப் பகுதிகளை வென்றவர் 'மலையமான்' என்றும் பெயர் பேற்றனர் போலும்.

இதற்குச் சங்க நூல்கள் ஆதாரமாக உள்ளன. அதியமான, திருடிக்காரியின் மீது போர் தொடுத்து தோற்கடித்

1 சங்க காலச் சிறப்புப் பெயர்கள் — டாக்டர். மொ. அ. துரை அரங்கசாமி, முதல்பதிப்பு, 1960. பாரிநிலையம் சென்னை. பக். 202

2 'கொங்கு': 15 - 3 - 73

3 சங்க காலச் சிறப்புப் பெயர்கள் - பக். 249

4 சூடாமணி நிகண்டு—மக்கட் பெயர்த்தொகுதி, பாட்டு18

தான்.[1] பின்னர், காரி, சேரமான் பெருஞ்சேரல் இரும் பொறையன் துணையால் கொல்லிமலையை ஆண்ட ஓரியைக் கொன்று சேரனிடம் சென்றான்.[2] பின்னர் இரும் பொறை என்பான் அதியமானைத் தகடூரில் (தருமபுரி) தோற்கடித்தான்[3] என்பதை அறியமுடிகிறது

எனவே, சேரர்கள் காலத்தில் கொல்லிமலை, தர்மபுரி வரையில் தங்கள் ஆட்சியை விரிவாக்கி யிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

காரி என்பான் முதலில் கொங்கு நாட்டில் வாழ்ந்ததாகவும், பின்னர் திருக்கோயிலூர் வந்து அதனைத் தலைநகராக அமைத்துக் கொண்டான்[4] என்பதையும் உணரலாம்.

## மலையமான்கள்

திருமுடிக்காரி என்பான் மலையமான்[5] இனத்தைச் சேர்ந்தவன். திருமுடிக்காரி என்பவன் இனப் பெயரைச் சேர்த்துத் திருமுடிக்காரி மலையமான் என்றே குறிக்கப் படுகிறான் என்பது குறிக்கத் தக்கதாகும்

சோழப் பேரரசு உருவாகியபோது, தென்னார்க்காடு மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதி, குறிப்பாகக் கள்ளக் குறிச்சி வட்டம் (கல்வராயன் மலை உட்பட) மலையமான்

---

[1] புறம். - 99
[2] நற்றிணை - 320, அகம். 209
[3] பதிற்று. 78; எட்டாம் பாத்தின் பதிகம்.
[4] கொங்கு.

[5] சங்ககாலத்து மலையமான்கள், மலையமான் திருமுடிக்காரி, மலையமான் சோழிய வேணாதித் திருக்கண்ணன் என்னும் மன்னர்களை அறியமுடிறது.

மன்னர்களின் நாடாக இருந்துள்ளது. எனவே சோழருக்கு முன்பாகச் சேரர் இப் பகுதியில் ஆண்டுள்ளதை அறிய முடிகிறது.

சேரர் எவ்வாறு, ஏன் இப் பகுதியில் குடியேறினர் என்பதையும் அவர்கள் யார் என்பதையும், கல்வெட்டு ஆய்வாளர் பாகூர் புலவர் சு. குப்புசாமி அவர்கள் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது.

> 'சோழ பாண்டிய மன்னர்கள் தம் நாட்டு எல்லையைப் பெருக்கி விரிவுபடுத்த, நில அமைப்பு வாய்ப்புத் தந்தது. அவ் வாய்ப்பு சேர நாட்டுக்குக் குறைவு.
>
> சேர நாட்டின் மேற்குப் பகுதி கடற்கரைப் பகுதி ஆதலின், சேர மன்னர்கள் தமது நாட்டின் எல்லையை மேற்குநோக்கி விரிவாக்க இயலவில்லை. எனவே, சேரர்குடியினரில் ஒரு பிரிவினர் கிழக்கு நோக்கிச் சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் குடியேறினர்.
>
> இவர்கள் வந்து தங்கிய இடங்களும் சேர நாட்டைப் போன்று மலைப் பகுதிகள் நிறைந்தஇடங்களாகவே இருந்தன. மெல்ல மெல்ல இங்குச் சிற்றரசுகளை நிறுவினர்.
>
> சேரர் குடியின் ஒழுகலாற்றின்படி இவர்கள் மலையர் என்று அழைக்கப் பெற்றனர்; பிற்காலத்தில் இவர்களே மலையமான்கள் ஆயினர்.[1]

மலையர், மலையமான் என்பதே 'மலையாளிகள்' என்று மாறியிருக்க வேண்டும். மலையில் முன்னமேயே மக்கள் இருந்திருக்கக் கூடும் என்ற எண்ணம் உண்டாகிறது.

---

1 மலையமான்கள்—பக்,20. சேகர் பதிப்பகம், சென்னை

## மலையமான் நாடு

மலையமான் நாடு என்பது, தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தின் மேற்குப் பகுதியும், கள்ளக்குறிச்சி வட்டமும், சேலம் மாவட்டத்தின் ஆத்தூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், வட ஆர்க்காடுமாவட்டம் திருவண்ணாமலை வட்டத்தின் ஒரு பகுதியும் இணைந்த நிலப் பரப்பே ஆகும்.

இங்குக்கல்வராயன் மலையின் எல்லையைநோக்க, அது மலையமான் நாட்டின் உட்பட்டபகுதியாகஇருந்துள்ளதை அறிய முடிகிறது.

மலையமான் நாட்டின் நிலப்பரப்பு பெரும்பகுதிகள் மலைகளும் சிறு சிறு குன்றுகளும், குறுங்காடுகளும் நிறைந்தவை. நன்செய் நிலங்கள் குறைவு. புன்செய் நிலங்கள் மிகுதியுடையவை யாகும்.

மலையமான் ஆண்டபகுதியை 'மலாடு'என்றுகூறுவர்.

பண்டைத்தமிழ்நாடு பன்னிரண்டு நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்ததை ஒரு பழம்பாடல் மூலம் அறியமுடிகிறது.

'தென் பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு—நன்றாய
சீத மலாடு புனல் நாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்.'

இதில் கொள்ளிடத்திற்கு வடக்கே உள்ள தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதியே **அருவா நாடு** எனப்படும்.[1]

---

1 நன்னூல்-பாட்டல் 272. மயிரை நாதர் உரை.
தமிழ்ப் பேரகராதி—பக்.135

மலாடு என்னும் நாடும் இப் பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது நோக்கத் தக்கதே.

மழவரை மலாடர் என்று கூறுவர்.

ஓரி என்பவன் மழவர் இனத்தைச் சார்ந்தவன் என்பதைச் சங்க நூல்களின் மூலம் அறியலாம்.

**மழவர் பெருமகன் மாவள் ளோரி — (நற். 52)** அவன் குதிரையைக் கூறும்போது,

**உருவக் குதிரை மழவர் — (அகம். 1)** என்றும் கூறப் பட்டுள்ளதை அறியலாம்.

மலாடு நாட்டினரை மலவர் (மலையர்) என்றும் கூறு கின்றனர்.* இவர்கள் எட்டாம் நூற்றாண்டில் சிற்றரசர் களாக இருந்தனர். சிம்ம விஷ்ணுவோடு போர் செய்த தமிழ் அரசர்களுள் மலாடரும் சேர்ந்தனர்.‡

மலையமான் நாட்டுக்கு 'ஜனநாத வளநாடு' என்ற பெயரும் உண்டு என்பதைக் கல்வெட்டு[1] மூலம் அறியலாம்.

ஜனநாதன் என்பது முதலாம் இராசராச சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும்.

சேலம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஆறகளூர் என்னும் ஊரை,

மலாடான ஜனநாத வளநாட்டு மகத மண்டலத்து
ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர்'

என்று அங்குள்ள கர்மேசுவரர் என்னும் சிவன் கோயில் கல்வெட்டு[2] ஒன்று தெரிவிக்கிறது.

---

* பல்லவர் வரலாறு — பக். 83 (அடிக்குறிப்பு)
‡ பல்லவர் வரலாறு — பக். 85
1 ARE 1913 of 461
2 ARE 19 13 of 404

எனவே, 'மலாடு' என்னும் நாடு சேலம் மாவட்டம் ஆத்தூர் வரை பரவியிருந்த ஒரு நிலப்பரப்பு என்பது தெளிவாகிறது. இவ் வெல்லை சோழர்களின் ஆட்சிக் காலம் வரை இருந்துள்ளது.

## சேதி நாடு

சோழர் காலத்தில் மலாடு நாடு 'சேதி நாடு' என்று கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இதனைப் பெரிய புராணம்,* விக்கிரம சோழன் உலா †மூலம் அறியலாம்.

'சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரில் மன்னி' என மலைய (மலாடு) நாட்டைச் சேதி நாடு என்று சேக்கிழார் கூறுகிறார்.

மலையமான் நாட்டைக் குறுநில மன்னர்கள் ஆண்டனர். இவர்கள் சோழப் பேரரசுக்கு உட்பட்டிருந்தார்கள். இக் குறுநில மன்னர்கள் தங்களைச் 'சேதிராயர்' (சேதிநாட்டை ஆண்டதால்) என்றும் கூறிக் கொண்டார்கள்.

கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மலையமான்கள் தங்களைச் சேதிராயர் என்றும் கூறிக் கொண்டதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

சேதிராயர் என்று பலர் வாழ்ந்துள்ளனர்.

முதலாம் இராசராசச் சேதிராயன்
இராசேந்திரச் சோழச் சேதிராயன்
விக்கிரம சோழச் சேதிராயன்
குலோத்துங்க சோழச் சேதிராயன்

---

* திருத்தொண்டர் புராணம் - மெய்ப்பொருள் நாயனார்— பாடல் - 1

† விக்கிரமசோழன் உலா — வரி 168

இரண்டாம் இராசராசச் சேதிராயன்
முதலாம் இராச கெம்பீரச் சேதிராயன்
வீரராசேந்திரச் சேதிராயன்
இரண்டாம் இராசகம்பீரச் சேதிராயன்

முதலானவர்கள் சோழர் காலத்திய சேதிராய அரசர்கள் ஆவர்.

ஒன்பதாம் திருமுறையை ஆக்கிய சேதிராயர் என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

இவர் தன்னைச், 'சேதிபர் கோன்' என்று கூறிக் கொள்வது குறிப்பிடத் தக்கதாகும்.[1] இவர் குலோத்துங் கன் (கி. பி. 1070—1120) காலத்தில் வாழ்ந்தவர் என்று அறிஞர் கூறுகின்றனர்.[2]

## வாணகோவரையர்

இரண்டாம் இராசராசக் கோவலராசன் என்பவன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த மலைய மன்னன். இவனுக்குக் 'கூருடையான் இராமன் பொன் பரப்பினான்' என்னும் சிறப்புப் பெயரும் இருந்துள்ளது. இவன் தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் முகுகையூர் என்னும் ஊரிலிருந்துமலைய நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். இவன் ஆறகளூர் வாண

---

'1 ஏயு மாறெழிற் சேதிபர் கோன் தில்லை
நாயனாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக்கத்திடை
ஆய இன்பம் எய்தி யிருப்பரே'

—பாடல் 10

2 பெரிய புராண ஆராய்ச்சி, பக்.74: டாக்டர். மா. இராசமாணிக்கனார்.

கோவரையருடன் மணஉறவு கொண்டு தனக்குச் சிறந்த தொரு துணை வலிமையை உருவாக்கிக் கொண்டான்.

அதாவது,கோவலராயன் தன் மகள் புண்ணியவாட்டி என்பவளை ஆறகளூர் இராசராச வாண கோவரை யனுக்கு மணம் செய்வித்தான். இவள் ஆறகளூர் கரிவரதராசப் பெருமாள் கோயிலைக் கற்றளியாக எடுப் பித்து, அதற்கு 'இராசராச விண்ணகர்' என்று தன் கணவனின் பெயரை வைத்தாள் என்ற செய்தியை இக் கோயில் கல்வெட்டால்* அறியப் பெறுகிறது.

இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133-1150) காலத்தில் வாணர் குல மரபினன் ஒருவன், மகத நாட்டின் ஒரு பகுதிக்கு நாடுகாவல் அதிகாரியாய் இருந்துள்ளான்.

இவன் இராசராச மகதை நாடாழ்வான் என்று அழைக்கப்பட்டுள்ளான். இவன் தனக்குக் கிடைத்து வந்த **பெரும்பாடி காவல்** என்னும் வரிப்பணத்தைத் திட்டக்குடிக் கோயிலுக்கு அளித்ததைக் கல்வெட்டால் அறியலாம்.

12 ஆம் நூற்றாண்டில், [மகத] மகத மண்டலம் பாணர்களின் தலைநகரமா விளங்கியது. இந்தக் காலத்தில் தான் சோழ அரசின் வலிமை குறையத் தொடங் கியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு சோழநாட்டின் சிற்றரசர்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்களில் முக்கிய மானவர்கள் பாணர்கள் ஆவார்கள்.

இவர்கள் சோழராட்சியில் உள்நாட்டுக் கலவரங் களுக்கு ஊக்க மூட்டி அதில் பயன் பெற்றனர்.

---

* மலையமான்கள்-பாகூர் புலவர் சு. குப்புசாமி; பக். 106- 107, சேகர் பதிப்பகம், சென்னை. கல்வெட்டு: ARE, 1913 of 447

'மகத நாட்டை' ஆண்ட பாணர் குல அரசரில் சிறந்தவனாகத் திகழ்ந்தவன் இராச ராச வாண கோவரையன் ஆவான்.

இவன் 'பொன் பரப்பினான் மகதைப் பெருமானான இராசராச வாணகோவரையன்' எனப் புகழப்படுகிறான்.

இவன் மூன்றாம் குலோத்துங்கனுடன் நட்பு கொண்டிருந்தான். அவனுடன் சில போர்களில் கலந்து கொண்டான். இவனைப் பற்றி மூன்றாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி,*

'பாண்டியனைப் பாண்டிய னென்றும் பேர் மாறி வர
நெடும்படைத் தென்னவர் கெட

மதுரை கொண்ட தோள்வலி பாடிய பாணனைப்
பாண்டியனென்று பருமணிப் பட்டஞ் சூட்டினன்'

என்று கூறுகின்றது.

இதனால் பாண்டியனைப் பேர் மாற்றிப் பாணன் என்று பட்டஞ் சூட்டியது தெரியவருகிறது.

இவன் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்குப் பொன் பரப்பித் திருப்பணிகளைச் செய்திருக்கிறான்.

இவனைப் பற்றித் தனிப் பாடல்கள் உள்ளன. இவன் வில்லிபுத்தூராரைக் கொண்டு பாரதம் செய்வித்துளான். அதனால் இவனை 'மாகத கொங்கர் கோமன்' என்று வில்லிபுத்தூரார் கூறியுள்ளார் எனலாம்.

இவன் பின்னர் பாண்டியர்களோடு நட்பு கொண்டதாகத் தெரிகிறது. முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் குலோத்துங்கன் மீது போர் செய்தான்.

---

* SII. Vol. VIII. No 97.

## மகதை நாடு

இந்தப் போருக்கு மகதை நாடாழ்வானர்ன வாண கோவரையன், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனோடு மிகுந்த நட்பு கொண்டு இருவரும்குலோத்துங்கனைஎதிர்த் துள்ளார்கள்.

இந்தப் போரில் சுந்தர பாண்டியன் வெற்றி கொண் டான். எனவே தனக்குப் பலவகையில் உதவி புரிந்த வாண கோவரையனுக்குத் தன் நன்றிக் கடனாக அச்சோணாட் டின் ஒரு பகுதியை அளித்தான்.

இதனை,

'மகதை நாடாழ்வானான வாண கோவரையனும்
குலோத்துங்க சோழ வாண கோவரையனும் பக்கல்
ஆனதால் ஒலையாதல் பொகக் காட்டுதல் உறவு
பண்ணுதல் அறுதி செய்தல் செய்யக் கடதவா
மல்லாதொ மாகவும்'

என்று கூறும் திருவண்ணாமலைக் கல்வெட்டால்[1] அறிய முடிகிறது.

அடுத்து,

கோப்பெருஞ் சிங்கன் (கி. பி. 1213 இல்) மூன்றாம் குலோத்துங்கனுக்கு அடங்கிய சிற்றரசனாகக் காணப்படு கிறான்.

கோப்பெருஞ் சிங்கன் சோழ பாண்டியப் பேரரசுகள் வலிகுன்றியபோது (கி. பி. 1214 இல்) முடிசூட்டிக்கொண் டான்.

கோப்பெருஞ்சிங்கன் மூன்றாம்இராசராசனைவென்று சேந்தமங்கலத்தில் சிறை வைத்தான். போசளமன்னன்

1 S.I.I. Vol. VIII, No. 106.

கோப்பெருஞ்சிங்கனை வென்றான். இப் போரில் மகதநாடு போசள மன்னன் வசமானது. மூன்றாம் இராசராசன் மீட்கப் பட்டான். இந்தச் சமயத்தில் வாணர்குலத்தினர் சோழருக்குப் பகையாயிருந்தனர். இதனைப் பயன்படுத்திக் கொண்டு சுந்தர பாண்டியன் சோழ நாட்டைக் கைப்பற்றியபோது அதில் ஒரு பகுதியை வாணர் குல மன்னனுக்குக் கொடுத்தான்.[1]

இராசராசனுக்கு உதவியாய் இருந்தவன் போசள மன்னன் வீரநரசிம்மன் என்பதையும் அவன் மகதை நாட்டை ஆண்ட வாணர்களைத் தாக்கியதையும் கல்வெட்டால்[2] அறிய முடிகிறது.

புறமலை நாடு எனப்படும் (சேலம்) நாட்டில் உள்ள திர்த்த மலை கற்கட மாராயன் என்னும் சிற்றரசன் இருந்தான். இவன் மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் வாழ்ந்தவன் என்பதைக் கல்வெட்டுச்[3] செய்தியால் அறியலாம்.

இவன் காலத்தில் (கி. பி. 1257 இல்) முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன், கொங்கில் இருந்த வீரசோமேசுவரன் என்பவனைக் கண்ணனூர் என்னுமிடத்தில் வென்றான். பின்னர், சேந்தமங்கலத்தை முற்றுகையிட்டு, கோப்பெருஞ் சிங்கனையும் வென்றான்.

கோப்பெருஞ்சிங்கனைத் தன் ஆட்சிக்கு உட்பட்ட குறு நில மன்னனாக்கினான். இதனால் மகத நாட்டையும் கொங்கு நாட்டையும் கைப்பற்றினான் என்பதை அறி

1 பிற்கால சோழர்ச் சரித்திரம் — பகுதி II மூன்றாம் பதிப்பு பக். 186

2 Ep. Ind vol. 9 III. No 21

ARE 658, 659, 672 of 1905

கிறோம். இதனால் மூன்றாம் இராசேந்திரனும் பாண்டிய னுக்குச் சிற்றரசனானான் என்பதை அறியலாம்.

## விஜயநகரப் பேரரசின் ஆட்சி

இவ்வாறு சோழ, பாண்டியப் பேரரசுக்கும் சிற்றரசுக்கும் உட்பட்டிருந்த மலையமான் நாடாகிய மகதை (நடுநாடு) நாடு கி. பி. 1360 இல், விஜயநகரப் பேரரசின் கீழ் வந்தது.

இவர்கள் காலத்தில், குறுநிலமன்னர்களாகவும் நாயக்கர்களாகவும், ராயர்களாகவும், உயர்மட்ட அலுவலர்களாகவும் இருந்த மலையமான்கள் எவ்வித அதிகாரமும் இல்லாமல் போனார்கள். இதன் பிறகு மலையமான்கள் மிகச் சாதாரண நிலைக்கு மாறினார்கள்.

சகம் 1454 (கி. பி. 1532) ஆம் ஆண்டில் அச்சுத தேவ ராயர் துலுக்கர்களையும் உடையார் படைகளையும் வென்று அழித்ததாக **எலவானாசூர்க்** கோயில்[1] கல் வெட்டால் அறிய முடிகிறது.

மலை நாட்டு எல்லைக்குள் குறிப்பாகக் கள்ளக்குறிச்சி வட்டத்தில் **உடையார்** என்னும் வழியினர் பேரெண் ணிக்கையில் உள்ளனர். இவ்வுடையார்கள் மலைய மான்கள் எனவும், அகமுடையார் எனவும், நத்தமர் எனவும், சுடர்மான்[2] எனவும் தங்களைப் பல பிரிவுகளாகக் கூறிக் கொள்கின்றனர்.

இவர்களில் மலையமான் பிரிவைச் சேர்ந்த உடையார் கள் தம்மை மலை நாட்டை ஆண்ட அரசன் ஒருவனின் வழித்தோன்றல்கள் என்று கூறிக் கொள்கின்றனர்.[3]

---

* பிற்காலச் சோழர் வரலாறு — பக். 462—463

1 ARE : 175 of 1905

2 கி.பி. 1216 இல் நடுநாட்டில் பாண்டிய மரபிர் தொண்டைமான் எனப்பட்டனர். 'கொங்கு' 15. 10. 75

3 மலையமான்கள் —பாகூர் சு.குப்புசாமி பக்.145 - 146.

கி. பி. 1532—1579 ஆண்டுகளில் விஜய நகர அரசனாகிய அச்சுத தேவராயர், கல்வராயன் மலையில் உள்ள **சின்ன திருப்பதி** வெங்கடேஸ்வரர் கோயிலுக்குத் தானம் வழங்கியதைச் செப்பேடுகள் மூலம் அறிகிறோம்.*

அடுத்து,

முதலாம் வல்லாளன் (கி. பி. 1100—1106) தோற்றுவித்த ஹொய்சள அரசைச் சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஒடுக்கினான். இவன் காலத்தில் காவிரிக்கரை வரை பரவியிருந்த ஹொய்சளரைத் தோற்கடித்தான். இதனால் மகத நாடு இவன் வசமாயிற்று. இவன் காஞ்சிபுரம்வரை போர் தொடுத்து வெற்றியும் பெற்றான் என்பதை அறிகிறோம்.

எனவே கி. பி. 1251 இன் மத்திய காலம்வரை இப் பகுதி ஹொய்சளர் ஆட்சியின் கீழும், பின்னர் கி.பி. 1279 வரை பாண்டியர் ஆட்சியின் கீழும், பின்பு சோழ அரசர் கீழும், பின் விஜய நகர அரசர் கீழும் இருந்துள்ளது.

பின்னர் இப் பகுதி மாலிக்காபூர் படையெடுப்பால் முஸ்லிம்மன்னர்களின் ஆட்சிக்கு வந்துள்ளது. ஹைதர் அலியின் ஆளுகைக்கு வந்தது. பின்பு திப்புசுல்தான் ஆட்சியின் கீழும் இருந்துள்ளது என்பதும் தெரிய வருகிறது.[1]

---

★ Madras—District Gazetteers south arcot; Dr. B. S. Balliga 1962—p. 471

1 „ „

# செழியதரையர்

*17, 18* ஆம் நூற்றாண்டுகளில், 'செழியதரையர்கள், என்னும் பட்டப் பெயர் கொண்ட குடியினர் சின்னசேலம் பகுதியில் பாளையக்காரர்களாக இருந்துள்ளார்கள்.*

செழியர் என்பது பாண்டியர்க்குரிய குடிப் பெயர். இக் குடியினர் நடுநாட்டின் மேற்குப் பகுதியான மகத மண்டலத்தினை ஆட்சி செய்த தலைவர்களாவர்.

**கோலமார் இனிய கல்லைக்**
**குறிச்சி நல் நாடதன்பேர்'**

என்று **திருவாணிதூது** எனும் நூல் கங்காகர செழியனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

எனவே, கள்ளக்குறிச்சியைச் சூழ்ந்துள்ள ஒரு நிலப் பகுதியை இவன் ஆண்டுள்ளான் என்பது தெரிகிறது.

' **தென் மகதை[1] நாட்டினான்'** (மஞ்சரி—*143*)
' **மகதைத் திருநாடன் வந்தான்'** (மஞ்சரி—*319*)
, **தென்மகதை நாடாளன்'** (பிள்ளை. வருகைப் *5*)
' **மகதைத் திருநாடா'** (பிள்ளைச் சிறுவரை *3*)

எனச் செழியதரையர்களின் இடமான மகதை நாடுபற்றிக் கூறப்படுகிறது.

செழியன் என்றும் செழியதரையன் என்றும் பெயர் கொண்டவர்கள் பலர் இருந்துள்ளனர்.

' **சேலம் தாலங் தீர்த்தசெழியன்'**
' **தாகங்தீர்த்த செழியன்'**

---

* . 'சேலம் செழிய தரையர்கள் — ஒரு சிற்றாய்வு' —ப. வெ நாகராசன்.

*1* நடுநாட்டின் மேற்குப் பகுதி மகத நாடு எனப்படும். வடக்கில் ஒருமகதம் இருப்பதால் இதனைத் தென் மகதை எனப்பட்டது என்பர்.

'கங்காதரச்செழியன்'

என்றும்,

**சேலம் திருவேங்கட செழியதரையன்**
**தாகந்தீர்த்த செழியதரையன்**

என்றும், செழியதரையர் கூறப்படுகின்றனர்.

இப் பெயர்களைக் கொண்டு, இப் பகுதியை ஆண்ட பாண்டியர் தலைவர்களாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

மேலும்,

**'செங்குவளை மாலைதிரு மார்பன்'** (மஞ்சரி-152)

என்றும்,

**'வெறிஆரும் ஆய்தார் குவளைச் செழியா'** (நன்னெறி-13)

என்றும்,

**'மேழிக் கொடியான்'** (மஞ்சரி—155)

என்றும்,

**'மேழிக் கொடியினான்'** —(வண்ணம்)

என்றும் செழியதரையர்களின் சிறப்புப்பற்றியும், அவர்தம் கொடியைப் பற்றியும் கூறப்படுகிறது. எனவே இவர்கள் வேளாளர் என்பது உறுதியாகிறது.

இவர்கள் பாண்டியர் மரபில் அரசுரிமை அற்ற இளைய குடிவழியில் தோன்றியவர்களாக இருக்கலாம். மற்றும் இவர்களுடைய முன்னோர்கள் பாண்டியரிடம் படைத்தலைவர்களாகவோ, அமைச்சர்களாகவோ, சிறப்புடன் பணியாற்றி அந்நாளைய மரபிற்கேற்பச் 'செழியதரையன். என்னும்பட்டப் பெயரையும் பெற்றிருக்கலாம் (கன் 158, 160 -280) என்றும் கருதப்படுகின்றனர்.

செழியதரையன் வழியினர் இன்றும் சின்ன சேலத்தில் (தென்னார்க்காடு மாவட்டம்) வாழ்கின்றனர். இவர்கள் பிற்காலத்தில் பாளையக்காரர்களாய் இருந்துள்ளனர். இவர்களது பாளைய ஊர்களில் கல்வராயன் மலை இல்லை. இது ஆங்கிலேயர்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட ஊர்களேயாகும். இப்போது இவர்கள் 'நயினார்' என்னும் பட்டப் பெயரைக் கொண்டுள்ளனர்.

இச் செழியதரையர்களைப் பற்றிய ஓலைச்சுவடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.* அவற்றில்,

'தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி'

'தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத் தமிழ்'

'செழியதரையன் கோவை'

'செழியதரையன் வண்ணம்'

'செழியதரையன் நன்னெறி'

'செழியதரையர் திருவாணிவாது'

'செழியதரையன் பஞ்சதந்திரம்'

ஆகிய நூல்களின் மூலம் இவர்களைப் பற்றி நன்கு அறிய முடிகிறது. இவர்கள் பல்வேறு காலத்தில் மகதநாட்டைப் பல்வேறு இடத்திலிருந்து ஆண்டதையும் அறிய முடிகிறது. விஜய நகர, ஆங்கிலேயர் ஆட்சியின் போது இவ் வமிசா வழியினர் பாளையக்காரர்களாய் இருந்துள்ளனர்.

---

★ 21 - 10 - 85 கூகையூர் திரு அடிகளாசிரியன் சந்திப்பு; இவர் செழியதரையர் பற்றிய ஓலைச் சுவடிகளைச் சேகரித்து தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார். அச் சுவடிகள் ஆராயப்பட்டு, சில நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

ஆங்கிலேயர் காலத்தில், இவர்களின் பாளையப் பட்டைச் சேர்ந்த ஊர்கள் மாற்றப்பட்டு இருக்கிறது. அப்போதுதான் கல்வராயன் மலை ஜாகீர்களின் பொறுப்பில் சேர்ந்தது போலும்.

இவ்வாறு, கல்வராயன் மலை சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் கீழும் குறுநில மன்னர்கள், மலையமான்கள், போசள மன்னர்களின் பொறுப்பிலும் இருந்துள்ளதை நன்கு அறிய முடிகிறது.



# கல்வராயன்மலையும் காடும்

## அமைவிடம்

கல்வராயன் மலை, பெரிய கல்வராயன் மலை, சின்னக் கல்வராயன் மலை என்னும் இரு பிரிவுகளை உடையது

பெரிய கல்வராயன் மலையின் உயரம் சுமார் 4 300" அடி ஆகும். சின்னக் கல்வராயன் மலை உயரம் சுமார் 3000 அடி,

'இம்மலையின் மொத்த நிலப்பரப்பு 57, 11, 124 எக்டேர்களாகும். இதில் காடுகள் மட்டும் 45, 22 5, 06 எக்டேர் பரப்பு இருக்கிறது. மீதமுள்ள 11, 886, 18 எக்டேர் பரப்பில்தான் நஞ்சை, புஞ்சை, புறம் போக்கு நிலங்களும் உள்ளன.

106 கிராமங்களில் சுமார் 35, 000 க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். இந்த நிலப் பரப்பில்தான் கல்வராயன் மலை மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மலைகளுள் கல்வராயன்மலையே பெரியமலையாகக் கருதப்படுகிறது.

* இந்நூல்உருவாகிய(1985)ஆண்டில்தெரிந்தவிவரம் இது.

கல்வராயன் மலை தென்னார்க்காடு மாவட்டத்தின் கள்ளக் குறிச்சி வட்டத்தின் மேற்குப் பகுதியாய் இருக்கிறது. இம் மலை சுமார் 600 கி. மீ. பரப்பளவு உடையது. பசுமையான பலவகை மரங்களையும், சிறுசிறு குன்றுகளையும் உடையது இம்மலை.

இம்மலை கடல் மட்டத்திலிருந்து 100 முதல் 3, 500 அடி உயரம் உடையதாக இருக்கிறது.

இம் மலைக்கு வடக்கில் திருவண்ணாமலை வட்டமும், வடமேற்குப் பகுதியில் தருமபுரி மாவட்டத்தின் அரூர் வட்டமும், தென்கிழக்குப் பகுதியில் சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் வட்டமும் எல்லைகளாக இருக்கின்றன.

## நீர் வளம்

இம் மலையில் ஆறுகளும் ஓடைகளும் உள்ளன. ஒவ்வொரு ஊரும் நதிகளின் கரையிலோ ஓடையின் கரையிலே அமைந்துள்ளன.

கோடைக் காலத்தில் பல ஓடைகள் வறண்டு போகின்றன. சில ஓடைகளில் ஊற்று நீர் இருக்கிறது. மக்கள் இந்த ஊற்றுநீரைக் குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இம் மலையில் தோன்றும் பெரியாறு, குட்டாறு ஆகிய இரண்டு ஆறுகளும் ஒன்று கலந்து 'சரபங்க ஆறு' எனும் மறு பெயருடன் ஓமலூர் வட்டம் வழியாகப் பாய்ந்து சென்று காவேரிப்பட்டி என்னும் இடத்தில் காவிரியுடன் கலக்கிறது.

கல்வராயன்மலை கிழக்கு நோக்கிச் சரிந்து இருப்பதால், மழை பெய்யும்போது நீர் கிழக்கு நோக்கி ஓடி வருகிறது. இவ்வாறு வரும் நீர் கோமுகி, மணிமுத்தாறு-

ஷ்யூரா. வசிட்டர் என்னும் ஆறுகளாகவும் பெருகட்டி, பாப்பக்கல் என்னும் முக்கிய ஓடைகளாகவும் பெயர் பெற்று மலையை அழகு படுத்துகின்றன.

இம் மலையில் நொச்சிமேடு, தொரடிப்பட்டு மேகம் ஆகிய இடங்களில் அழகான நீர் வீழ்ச்சிகள் உள்ளன. இந் நீர் வீழ்ச்சிகளின் அழகைப் பார்த்து இன்புறல் வேண்டும்.

வசிட்டா நதி, பேராறு என்னும் பெயரில் தென்னார்க் காடு மாவட்டத்திலும், ஆத்தூர் வட்டத்தின் பல பகுதி களிலும் பாய்ந்து செழுமைப் படுத்துகிறது.

கொல்லி மலையில் தோன்றும் சுவேதநதி வசிட்டா நதியோடு கலந்து தென்னார்க்காடு மாவட்டத்தில் வெள்ளாறு எனப் பெயர் பெற்று பயன் தருகிறது.

இம் மலையில் குளங்களே இல்லை.

## விளை பொருள்கள்

இம் மலையில் இரும்புத்தாது இருப்பதாக ஆராய்ச்சி செய்து அறியப் பட்டிருக்கிறது.

காடுகளில், கடுக்காய் சந்தனம், மா, பலா, மூங்கில், புளி, எலுமிச்சை ஆகிய முக்கிய மரங்களும் வேலம், நுணா, காய்ச்சான், வேங்கை போன்ற பலவகை மரங் களும் நிறைந்துள்ளன. காடுகளில் சில இடங்களில் மிக உயரமான, பெரிய மரங்கள் உள்ளன.

காடுகளை அழித்து இம்மலை மக்கள் சாமை, முத்துக் கொட்டை கடுக்காய், புங்கன், நெல், வரகு, தினை, சோளம், கேழ்வரகு, குச்சி வள்ளிக்கிழங்கு முதலிய வற்றைப் பயிர் செய்கின்றனர்.

இம் மலையில் கருவேப்பிலை நன்கு விளைகிறது. இது பெரும் வருமானத்தைக் கொடுக்கிறது.

இம்மலையில் உள்ள சின்னதிருப்பதி மலையில்விஷ்ணு கோயிலும் ஆண்டி, மேல்பதிக் ஆகிய ஊர்களில் சிவன் கோயில்களும் உள்ளன. இவை தவிர அம்மன், அய்யனார் போன்ற தெய்வங்களுக்குக் கோயில்களும் பல ஊர்களில் உள்ளன.

## பாதைகள்

மலைப் பரப்பில் ஊர்களை இணைக்கும் நல்ல பாதைகள் இல்லை. கரடுமுரடான பாதைகளில் இம் மக்களின் பயணம் துன்பத்துடன் நீண்டு கொண்டே இருக்கிறது.

இப்போது மலைப் பகுதியில் பேருந்துகளுக்காகப் புதிய தார்ச் சாலையை உருவாக்கி உள்ளனர்.

இம் மலையிலும் காட்டிலும் பலவகையான மிருகங்களும் பறவைகளும் வாழ்கின்றன; நஞ்சு மிகுந்த பாம்புகளும் உள்ளன. மலையில் வாழும் உயிரினங்கள் மலையாளிகளோடு வாழ்கின்றன எனலாம். இவைகளோடு தினந் தினம் மலை மக்கள் போராடி வாழ்கின்றனர்; உறவும் கொண்டுள்ளனர். இதற்கு மலையும் காடும் நன்கு துணை செய்கின்றன.

மலையாளிகள் தங்களை 'மலைப்பூச்சிகள்' என்று கூறிக் கொள்வர். தாங்கள் மலையில் வாழும் உயிர்கள் என்று தங்களைத் தாங்களே கருதுவதை இந்தச் சொல் விளக்குகிறது.

முன்பு மூன்று ஜாகீர்களின் கீழ் இருந்த இம் மலைகள் இப்போது மூன்று வட்டாட்சியர் கீழ் உள்ளது.

வெள்ளிமலை, மோட்டாம்பட்டி, கிளாக்காடு ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தனி வட்டாட்சியர் கீழ் அரசின் நிர்வாகம் செயல்படுகிறது.

ஃ

'கல்வராயன் மலை மக்கள்'



அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி

# கல்வராயன்மலை 'மலையாளிகள்' யார்?

கல்வராயன் மலை மலையாளிகள்' தங்களைக் காஞ்சி புரத்து வேளாளர் என்றும் கொங்கு நாட்டு வேளாளர்கள் என்றும் கூறுகின்றனர்.

பொதுவாகத் தாங்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்றும் கூறுகின்றனர். கவுண்டர்கள் என்று தங்கள் ஜாதியைக் குறிப்பிடுகின்றனர். கவுண்டன் என்றே ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்கிறார்கள்.

காரரளன் என்பதை இவர்கள் முதன்மையானபெயராகக் கொள்கின்றனர். கவுண்டன் என்னும்பெயர் இரண்டாவதாக உள்ளது.

## ஒரு பழங்கதை

இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்பதற்குக் காரணமாக ஒரு கதை கூறப்படுகிறது.

இவர்கள் முன்னோர்கள் ஒரு சமயம் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தபோது வேட்டைக்காகப் புறப்பட்டார்கள். வேட்டைக்கு வந்தவர்கள், வேட்டைக்கு மிருகம்கிடைக்காததால் பல இரவுகள் காட்டிலேயே தங்கிவிட்டார்கள். பிறகு ஒருவாறாக வேட்டையை முடித்துக்கொண்டுகாஞ்சிபுரம் திரும்பினர்.

காஞ்சிபுரத்தில் அவர்கள் மனைவியர்கள் தங்கள் கணவன்மார்கள் பல நாள்களாக வராமையால் வருந்தி, இறந்து போய் இருக்க வேண்டுமென்று முடிவெடுத்து, தங்கள் தாலிகளை அறுத்து விதவைகளாய் மாறிவிட்டார்கள். அச் சமயம் கணவர்கள் வீடு திரும்பினர். மனைவியரின் தோற்றத்தைக் கண்டு வருந்தினர். நடந்த நிகழ்ச்சிக்கு வருத்தப்பட்டனர்.

ஆனாலும் ஊரினர், இவர்கள் இறந்துவிட்டதாக, எண்ணி இறந்தவர்களுக்குச் செய்யப்படும்எல்லாச்சடங்குகளையும் செய்துவிட்டதால், அவர்களை மீண்டும் வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. ஆகவே, இவர்கள் மீண்டும் தங்கள் குழுவோடு காட்டிற்குத் திரும்பிவிட்டார்கள். அவ்வாறு திரும்பியவர்களில் ஒரு பிரிவினர் இம் மலைக்கு வந்தார்கள்.

இவர்களுக்கு முன்பே இங்கு வாழ்ந்தவேடர்கள்இருப்பதைக் கண்டு, அவர்களுடன் போரிட்டு, அவர்களை அடக்கியும், கொன்றும், அவர்களோடு சேர்ந்தும் வாழ முற்பட்டனர். அதே சமயம் அவர்கள் பெண்களையும்மணந்து கொண்டார்கள்.

இவ்வாறு தங்கள் முன்னோர்கள் இம்மலையில் வாழ்ந்தார்கள் என மலைமக்கள் கூறுகின்றனர்.

இவர்கள் முன்பு காஞ்சிபுரம் அரசனிடம் போரிட்டுத் தோல்வியடைந்தவர்களாம். அரசனின் சகோதரர்கள் என்றும் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். தோல்வியடைந்த சகோதரர்கள் மூவரும் பெண் ஒருவருமாகத் தங்கள் மக்களுடன் இம் மலைக்கு வந்து குடியேறினார்களாம்.

இவர்கள் குடியேறியபோது இம் மலையில் முன்பே வேடர்களும் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களோடு சண்டையிட்டு அவர்களை வென்று தங்கள் குடியை ஏற்படுத்திக் கொண்டனர் வேடர், வேளாளர்களோடு போராடிப் பின்னர் ஒன்றாகி வாழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றி, மலையாளிகள் (கவுண்டர்) தங்கள் திருமணச் சடங்கில் சொல்லப்படும் வார்த்தைகளால் அறியலாம் என்றனர்.

இந்தப் போராட்டமும் குடியேற்றமும் கி பி. 15-16 ஆம் நூற்றாண்டில் நடந்திருக்க வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர்.*

இவர்கள் தங்களைக் காராளன், கவுண்டன், வேளாளன் என்றும் கூறிக் கொள்கின்றனர்.

இப்பெயர்கள் அரச இனத்தவர் (குடும்பத்தினர்) களுக்கு உரியவை.

## கவுண்டர் எனும் பெயர்

பல்லவர் நாணயங்களில் 'கண்டர்' என்னும் பெயர் பொறிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். எனவே கண்டர் ஒரு சமயம் அரசர்களாக இருந்தவர்கள் என்பது உறுதியாகிறது.

பல்லவ மன்னன் நந்திவர்மன் பல போர்களில் வெற்றியைக் கண்டவன். எனவே அவனுக்கு நந்திக் கண்டன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இப்பெயர்

† தர்ஸன் — பக். 409

இவன், கச்சி [காஞ்சி] யைத் தலை நகராகக் கொண்டு ஆண்டபோது பெற்றது என்றும் அறியவாம்.*

பல்லவர் ஆட்சியின்போது காஞ்சிபுரம் பல்லவர்களின் தலைநகராய் இருந்துள்ளது.

பின்னர் விஜய நகர அரசர்கள் காலத்தில் முக்கிய நகரமாக இருந்தது. விஜய நகர அரசர்கள்கூடக் கண்டன் என்னும் சிறப்புப் பெயரை பெற்று இருக்கிறார்கள்.

சேர, சோழ, பாண்டியர்களை வென்று அவர்களின் அரச முடியினை ஆபரணமாகச் செய்து (கண்டத்தில்) அணிந்துகொண்டதால் விஜய நகர அரசர்களுக்கும் 'மூவராய கண்டன்' என்னும் பெயர் வழங்கியதைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்றில், உள்ள செய்தியும் இங்குக் கருதத் தகும்.

---

† கோதை சோரி சொரி கொங்கை விம்மல் விம்மு
சேர்தி வெளுக்கில் வெளு மருங்கில் குறுமுறுவர்
துவளினீயுந் துவள் கண்டாய்

காது நெடுவேற்படை நந்திக் கண்டன் கச்சிவள நாட்டு
மாதரி வரோயிருக்கின்ற வாளி மற்றென்மட நெஞ்சே.
— நந்திக் கலம்பகம் - 1●

" தண்டமனாயக்கன் மகன் தண்டின கொட்டி சுப்பிர கொப்ப கண்டன் கொப்படாய தண்டம நாயகன்" என்னும் பெயரைக் கல்வெட்டில் காணமுடிகிறது.

இதனால் கண்டன் என்னும் பட்டப் பெயர் விஜய நகர அரசர்கள் காலத்தில் வழங்கியதையும் அறியலாம்.

கண்டன் என்பது சிவபெருமானுக்கு ஒரு பெயர். நஞ்சை உண்டான். அது கண்டத்தில் நின்று விட்டது. அதுமுதல் சிவனுக்குக் கண்டன்* என்னும் பெயர் வழங்கப் பட்டது என்பர்.

நீலகண்டன், ஆலகண்டன், கறைக்கண்டன் என்னும் பெயர்கள் சிவனுக்கு உரியவையே.

எனவே, இறைவனுக்கு உரிய கண்டன் என்ற பெயர் அரசர்க்கும் வீரருக்கும் வழங்கியது' அவர்கள் சிறப்பைக் குறிக்கவே ஆகும்.

சங்க இலக்கியத்தில் 'கவணினர்'[1] 'கவணையர்'[2] 'கவணர்'[3] என்னும் பெயர்களைக் காணலாம்.

இளங்கோவடிகள். தம் சிலப்பதிகாரத்தில், வஞ்சினங் கூறிக் கவண்கல்லை வீசி எறிந்து வென்ற மறவர்களைக் கவணினர் என்று கூறுகிறார்

---

ஸ்ரீகாள கண்டேஸ்வர் என்னும் பெயர் [illegible] சிவனுக்கு உரியது.

1 சிலப்பதிகாரம் 5—82.

2 கலித்தொகை 52—13

3 நற்றிணை 108—4

வேளாவரும்* கவண்கல்லை எறிந்து பறவைகளை விரட்டியதால் கவணையர் என்று கூறப்பட்டனர்.

எனவே, கவணினர் அல்லது கவணையர் என்பதே கவ்ண்டர் என்றும், பிறகு கவுண்டர் என்றும் மாறியிருக்க வேண்டும் என்று கூறலாம்.

கண்டர், சிறந்த வீரர்களாகத் திகழ்ந்த அரசர்கள் என்பது தெரிகிறது. சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் கண்டர் என்னும் சாதியினர் வாழ்கின்றனர்.

காஞ்சிபுரத்தை ஆண்ட தொண்டைமானுடன் கண்டர் போரிட்டனர் என்பதைச் செங்கைமாவட்ட வடதிருமுல்லை வாயில் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

கண்டன் என்பது, கவுரியர், காமுண்டன்,காமிண்டன் என்றும் பல பெயர்கள் இருந்ததை இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

காமிண்டன் என்பவரே கவுண்டன் என்று கூறப்படுகிறார் எனலாம்.

இதனை இலக்கியத்தின் வாயிலாக உணர்ந்தால் இம் மலையாளிகளின் மரபு வழியினை ஓரளவு அறியலாம்.

இலக்கியத்தில் கவுரியர் என்னும் சொல் பல இடங்களில் உள்ளன.

* வேளிருள் சிலரும் வேறு சிலரும் முதன்முதலாக அகத்திய முனிவர் தலைமையிலும், பின்னர் கவுண்டின்யர் தலைமையிலும் வடநாட்டிலிருந்து தென்னாடு வந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்.

—டாக்டர் இரா.நாகசாமி-'யாவரும் கேளிர்'-பக்198

'வெல் போர்க் கவுரியர் நன்னாட்டு' (அகம். 342)
'நோ நெஞ்சின் தவிரா ஈகைக் கவுரியர்'(புறம். 3)
'வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கி வரும் பௌவம் இரங்கும் முன் துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவிந்த
பல்வீழ் ஆலம்.' [அகம். 70]

என்று பல இடங்களில் கவுரியர் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கவுரியர் போர்க் கலையில் வல்ல குடியினர்; கையில் வேலேந்தி வீரத்துடன் போர் புரிந்து வெற்றிபெறும்ஆற்றலுடையவர். இவர்களிடம் இரக்கம் மிகுந்திருந்தகாரணத்தால் பாவலர்க்கும் இரவலர்க்கும் எந்நேரமும் வாரி வழங்கும் பண்பினர். எளியவர்க்குக் கொடுக்க விரும்பிய பொருள்களை எல்லாம் அவர்களால் எளிதாக ஈட்ட முடிந்தது. எனவே, கவுரியர் என்னும் சொல் ஒரு குடியினரைக் குறித்துள்ளது தெளிவாகிறது.

கன்னட நாட்டில், ஊர்த்தலைவர்களை 'காவுட' 'காவுண்டர்' என்பர்.

கா→கிராமம் என்பதன் சிதைவு.

ஆகவே கிராமம் உடையார் என்ற சொல்லே காவுட என வழங்கியது போலும்.

இலக்கியம் சொல்லும் காவுரியர் என்பதே 'காவுட என்றும், காவுண்டன் என்றும் மருவியிருக்க வேண்டும்.

கன்னட நாட்டில் நிலத்தை வளப்படுத்திச் செழுமை பெருக்கிய வேளாண்குடி மக்களையே ஊர்த்தலைவர்களாக அமர்த்தியுள்ளனர். அவர்களே காவுடர் என்று அழைக்கப்பட்டனர்.

வேளாண் குடி மக்கள் ஊர்க் கிழார்களாக நியமிக்கப் பட்டதைப் போன்று வேட்டுவர்களும் ஊருடையார்களாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வெள்ளாளக் கவுண்டன்,[1] வேட்டுவக் கவுண்டன் என்றும் அழைக்கப்பட்டனர். எனவே இங்கு ஊர்க்கிழவர் களாகத் திகழ்ந்து பெருங்குடியினராகக் கவுண்டர்கள் திகழ்ந்திருந்தனர் என்பது தெளிவு.

கவுண்டர்களைப்பற்றிய பண்டைய செய்திகள் அவர் கள் முதலில் கன்னடப் பகுதியிலிருந்து தொண்டை நாட்டி லும், பின் கொங்கு நாட்டிலும் குடியேறியவர்கள் என்று கூறுகின்றன.[2]

காமிண்டன் என்ற கன்னடச் சொல்லுக்குக் காமுண் டன் என்று பொருள் கூறுவர்.

**மிண்டன்*** என்பது வலிபொருந்தியவன், ஆற்றல்மிக்க வன் என்பது பொருள்.

---

1 வெள்ளாளர் → வெள்ளம் என்ற சொல்லடியாகப் பிறந்தது. வழி துறையில்லாமல் ஓடும் வெள்ளத்தைத் தடுத்து வாய்க்கால் களின் வழியே செலுத்தி அதை ஆள்ப வர் என்பது பொருள்.

சங்க காலச் சிறப்புப் பெயர்கள்-டாக்டர். மொ.அ. துரை அரங்கசாமி, பக்.212-213

2 'கொங்கு' 15. 8. 1972, பக். 208.

* காமிண்டன் — கவுண்டன், மிண்டு, வலிமை, மிண் டோன் — வல்லோன் என்பர்.
காவலன்—தலைவன்

காவண்டன் — கவண்டன் — கவுண்டன் என்றானது.
'தமிழ் வரலாறு,— தேவநேயன். பக்.301-302.

எனவே, கிராமத்தில் வலி மிகுந்தவன், தலைவன் என்னும் பொருளிலேயே காமண்ட (கன்னடம்) என்றும், காமுண்டன் (தமிழ்) என்றும் கூறப்படுகிறது.

காமுண்டன் எனும் சொல் கல்வெட்டுகளில் கையாளப் பட்டிருக்கிறது.

கல்வெட்டு,†

'ஸ்வஸ்திஸ்ரீ சுப தொங்க தே
வர்குச் செல்லா
நின்ற யாண்டை
ந் தாவது பு
ற மலை நாட்டு
ச் சிந்தகப்பா
டிக் காமுண்டான்
நுளப்ப மாறன்
கன்னையந் சுப
ரத்தில் ஊழி விற்
பட்டான்'

என்பது. இதில் காமுண்டன் என்பவனைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

‡ தருமபுரி, அரூர் வட்டம் சித்தலபாடிக்கு மேற்கிலுள்ள பள்ளிப்பட்டி கிராமத்தின் நடுகல் கல்வெட்டு. 'கொங்கு குதழ்' — 1973 — பக். 17.

பல பெயர்கள்

எனவே, கவுண்டர் என்பார் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர். பல போர்களில் ஈடுபட்டு மாண்டு போயுள்ளனர். அவர்களுக்கு 10 ஆம் நூற்றாண்டு வரை நடுகல்[1] வைத்துள்ளனர்.

இவ் வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு, கல்வராயன் மலையாளிகள் கூறும் கதைகளை ஆராயும்போது, இவர்கள் வீரர்களாக இருந்திருக்க வேண்டும்.

விஜய நகர அரசர்கள் ஆட்சியில் வேளாளர்களுக்கு மூப்பன், பாளையத்தார் என்னும் பட்டப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.[2]

மலையாளிகளுக்கு மூப்பன் என்னும் தலைமைப் பெயரும், பாளையத்தார் என்னும் பெயரும் வழங்கப் படுகின்றன. ஜாகீரைப் பாளையத்தார் என்றே கூறுகின்றனர்.

காராளர் என்பது உழுது உண்ணும் தொழிலைச் செய்யும் வேளாளர். கார் அல்லது மேகத்திலிருந்து வரும் நீர் வெள்ளத்தை ஆளுபவர் என்று கூறுவர்.

'காராள ரேர்கள்கடவோசை' என்று அரிச்சந்திர மயான புராணம்* கூறுவதைக் காணலாம். கல்வராயன் மலையில்,

'காராளன் சொத்து
பாதாளம் போனாலும் விடாது'

என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

---

1 'செங்கம் நடுகற்கள்' 197 | 137
2 'தமிழர் வரலாறு' — தேவநேயன், பக். 283
* அரிச்சந்திர மயான புராணம்:— 25

இங்கு, இப் பழமொழியில் காராளன் என்பது உழுப வரைக் குறிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 500, 600 ஆண்டுகளுக்கு முன் தென்னார்க்காடு செங்கல்பட்டு (காஞ்சிபுரம் உட்பட) மாவட்டங்களில், அரசின் வரிக் கொடுமையால் மக்கள் பல்வேறு திசைகளில் சென்று குடியேறினர்.[1]

அடுத்து, இயற்கையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. இயற்கையின் கொடுமையால் உண்டான வறட்சியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழும் பல இடங்களை நோக்கிச் சென்று தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். கி பி. 1618 — 1619 வரை தமிழ் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தால்[2] அம் மக்கள் பல நூறு மைல்கள் கடந்து ம்ற்ற அரசர்களிடம் அடைக்கலம் புகுந்தார்கள், பலர் காடுகளிலும் மலைகளிலும் குடி புகுந்தார்கள். இப்படிக் குடி புகுந்தவர்களே பின்னர் ஆதிவாசிகளாயினர்.

### மாறிய வாழ்க்கை

கி. பி. 15 - 16 ஆம் நூற்றாண்டில் அய்தர் அலியும் பிறகு திப்பு சுல்தான் காலத்திலும் இப்பகுதிகள் (வட

---

1 அச்சுதராயர் காலத்தில் திருப்பத்தூரில் இருந்த ராயப்ப நாயக்கரின் வரிச்சுமையைத் தாங்க முடியாமல் மத்யானி வடபாறு கிராமமக்கள் தங்கள் உடைமைகளை விற்று விட்டுக் குடும்பம் குடும்பமாக வெறியேறினார்கள்

Administration and social life under Vijayanagar—Part III

T. V. Mahalingam University of Madras 1978 p-95

Moreland - william Harrison, form Agbar to Aurangazeb astady in Indian Economic History macmillan ondon 1923 - p. 208 209

ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கல்பட்டு) இவர்கள் வசமாயின. இவ்வரசர்கள் காலத்தில் அடிக்கடி சண்டைகள் நிகழ்ந்துள்ளன. போர்கள் பலவற்றினால் மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். வரிகள் ஏராளமாக விதிக்கப்பட்டது. இதனால், இப் பகுதி மக்கள் அடிமைகளாக வாழ விரும்பாமல் பலவேறு பகுதிகளில் குடி புகுந்தார்கள். இப்படிக் குடியேறியவர்கள், காராளர் என்றும், கவுண்டர் என்றும் கூறிக் கொண்டார்கள் என்பதை அறியலாம்.

இங்கு ஆதிவாசிகளைப்பற்றி மானிட இயலறிஞர் பிலோ இருதய நாத் அவர்கள் கூறுவது நோக்கத்தக்கது:

'பழங்குடியினர் வாழ்க்கை முறையினை நோக்கும் போது அவர்கள் அன்று அரசர்களிடம் பணிபுரிந்தவர்கள். சிலர் அரசர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அந்நியர்களின் படையெடுப்புகளுக்கும், அரசர்களின் கொடுமைக்கும் அஞ்சி மறைந்து காடுகளில் வாழ்வதாலும் அவர்களின் மூதாதையர்களின் பழக்க வழக்கங்களை மாத்திரம் அவர்கள் எப்படி மறக்க முடியும்?† என்று கூறியுள்ளார். இக்கருத்து. பழங்குடிகளாக உள்ளவர்களின் முன்னோடிகள் முன்னொரு காலத்தில் நாகரிக வாழ்க்கையை வாழ்ந்தவர்களே என்பதை நன்கு உணர முடிகிறது.

கல்வராயன் மலையாளிகளின் சடங்கு முறைகளில் உள்ள பழக்க வழக்கங்களைக் காணும்போது இவர்கள் அரசு இனத்தவர்களாகவும், அரசர்களிடம் வீரர்களாகவும், முக்கிய அதிகாரிகளாகவும் பணி புரிந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இம்மலை மக்கள் திருமணத்தில் துப்பாக்கியைப் பயன்படுத்துவதுபற்றி ஆராயும்போது, இவர்கள் விஜய

---

* 'பிலோ இருதயநாத் கட்டுரைகள்' —பிலோ இருதயநாத் — பக். 45

நீர் அரசர்கள் காலத்தில் வீரர்களாக இருந்தவர்கள் என்று ஊகிக்கலாம்.

'விசய நகர அரசு கி.பி. 1631 இல் முகமதியர் ஆட்சிக்கு மாறியது. பின்னர் ஆங்கிலேயர்கள் வசமானது. ஆங்கிலேயர்கள் ஆட்சியின்போது வரிவசூல்முறை பாளையக்காரரர் ஜமீன்தாரர், பேகார் என்பவர்களிடம் அளிக்கப்பட்டது. இவர்கள் எவ்வாறு வரி வசூல் செய்தனர்.

கிழக்கிந்தியக்கம்பெனி இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் அரசியல் ஆட்சியை விஸ்தரித்து வந்த அந்தக் காலத்தில்* அதன் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இருந்த விவசாயிகளிடமிருந்து நிலவரியை வசூலிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு அளித்தது. இந்த நபர்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செலுத்த வேண்டுமெனக் குறிப்பிட்ட தொகை நிர்ணயிக்கப் பட்டது. அதை ஆண்டுதோறும் செலுத்தி வந்தால் போதும். இத்தொகைக்குப் பெயர் 'பேஷ்குஷ்' (Peshkush).[1] அவர்கள் விவசாயிகளிடம் தங்களுக்கு இஷ்டமான அளவு பணமாகவோ அல்லது பொருள்களாகவோ வசூலித்துக் கொள்ளலாம்.

மேலும் விவசாயிகளிடம் நிலத்தை ஒப்படைக்காமல் ஒரு பெரும் பகுதி நிலத்தைச் சொந்த சாகுபடி என்ற பெயரால் அவர்கள் வைத்துக் கொள்ளலாம். இவர்களுக்கு ஜமீன்தார், மிட்டாதார், தாலுக்தார் என்று, இந்த உரிமைகளை வைத்துக் கொண்டு

---

* 17, 18 ஆம் நூற்றாண்டில்.

1 அரியஎ கவுண்டர் ஸ்வாதீனத்திலிருக்கிற மலைக் கிராமங்கள் 14 இன் இனாம் ரிஜிஸ்டருக்கு நக்கல் 1931 பேஷ்கிஸ்து என்று கூறுகிறது.

அவர்கள் மேலும் விவசாயிகளைக் கொடுமைப் படுத்தினர். 'பேகார்' வெட்டி என்றபெயரால்விவசாயிகள் இந்த ஜமீன்தார் இட்ட வேலையைக் கூலி ஒன்றும் இல்லாமல் செய்தாக வேண்டும். இவ்விதக் கொடுமைகள் பல உருவங்கள் எடுத்தன.

விவசாயிகள் வீட்டிலிருந்த மாட்டின் முதல் கன்று ஜமீன்தாரிடம் ஒப்படைக்க வேண்டும். ஜமீன்தார் வீட்டில் நடக்கும் திருமணங்கள் முதலிய சடங்குகளுக்கு விவசாயிகள் பால் முதலியவற்றை இனாமாக வழங்க வேண்டும். காலப் போக்கில் விவசாயி திருமணம் செய்துகொள்ள வேண்டுமானால், ஜமீன்தாரின் அனுமதியைப்பெற வேண்டும். இப்படிப்பட்ட வசூல்களுக்குக் குண்டர் படைகளை வைத்திருந்தனர்.

ஆரம்பத்தில் சர்க்காரின் சார்பாக விவசாயிகளிடத்தில் வரி வசூலிக்கும் காண்டிராக்டர்களாக நியமிக்கப்பட்ட இந்த ஜமீன்தார்கள், காலப்போக்கில் அந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகவே கருதப்பட்டார்கள். குடியான்வர்களை எந்தச் சமயத்திலும் அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றலாம். அவர் செய்யும் கொடுமைகளுக்குப் பிரிட்டீஷ் சர்க்காரின் போலீசும் நிர்வாகமும் உதவி செய்து வந்தன. இந்த ஜமீன்தார்களும் அவர்களுடைய ஆதரவில்வாழ்ந்தார்கள். பிரிட்டீஷ் சர்க்காருக்கு விசுவாசிகளாகவும் இருந்த சர்க்கார் வாழையடி வாழையாக இந்த நாட்டில் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்களாகவும் இருந்தார்கள்.'

என்று கூறுவதால்*, ஜமீன்தார்களின் தோற்றத்தையும் மாறிவரும் ஆட்சிகளால், மக்கள் மிகவும் பல கொடுமை

---

* ஆரிய மாயையா, திராவிட மாயையா } விடுதலைப் போரும்விடுதலை இயக்கமும், (1983), பக். 17—18,
—பி. ராமமூர்த்தி-எம்.பி. பழனியப்பா பிரதர்ஸ். சென்னை 14

களுக்கு உட்பட்டு வாழ்ந்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

ஆங்கிலேயர் ஆட்சியில் கல்வராயன் மலைவாழ் கவுண்டர்கள் செய்த உதவிக்காக ஜமீன் [ஜாகீர்] தார் பட்டமும் வரி வசூல் செய்யும் உரிமையும் இனாமாக அளிக்கப் பட்டது. இதை 1868 ஆம் ஆண்டு அளிக்கப் பட்ட 'நக்கல்' ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.

ஆகவே இலக்கியங்களைக் கொண்டும் வரலாற்றுச் சான்றுகளைக்கொண்டும் ஆராயும்போது, கல்வராயன் மலை மக்கள், பல அரசுகளின் மாற்றங்களினால் அவ் வரசுகளின் கொடுமைகளைத் தாங்காமல், தங்கள் வாழ்க்கையை இப்பகுதியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு குடியேறி இருக்கவேண்டும்.

இவ்வாறு குடியேறியவர்கள் மீண்டும் தங்கள் வாழ்க் கையை ஏனைய மக்களோடு தொடர்பு கொள்ள முடி யாமலோ, விருப்பமில்லாமலோ, தனித்தே வாழ முற் பட்டிருக்க வேண்டும். இதன் காரணமாக ஏனைய மக்களிடமிருந்து வேறுபட்டு, பண்பாடு, கலாச்சாரம், மொழி ஆகியவற்றில் மாற்றங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கருணையோடு சரியான முறையில் இவர்களை அணுகி மனமாற்றங்களை உருவாக்கினால் மலை மக்களின் வாழ்க்கை மேம்பாடு அடையும். சமூக மாற்றங்களுக்கு இது இணைப்பு முயற்சியாகவும் இருக்கும் எனலாம்.

★

# கல்வராயன்மலை மக்கள் பழங்குடிகளா?

இப்போது பழங்குடிகள் என்று கூறப்படும் இனத்தவர் யாரும் காட்டுமிராண்டிகளாகவோ, கொம்பு முளைத்தோர்களாகவோ இல்லை. பழங்குடியினர் எனப்படும் இனத்தவர் மலைப்பகுதியிலும், காட்டுப் பகுதியிலும், சமவெளியிலும் வாழ்பவர்களாக உள்ளனர். சிலர் நாடோடிகளாக வாழ்கின்றனர்.

பழங்குடிகள் நாகரிக வளர்ச்சியைப் பயன்படுத்துவத்ற்கே அஞ்சுகிறார்கள். பெரும்பாலும் அத்தகைய வாழ்க்கையை வெறுப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

இன்றைய பழங்குடிகளின் முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் சமவெளியில் வாழ்ந்தவர்களே. அவர்கள் மீது அந்நியர்கள் செலுத்திய கொடுமைகளையும் செய்த போர்களையும் எதிர்த்து நின்று, அவர்களை வெற்றி பெற முடியாமல் போயிற்று. அவர்களிடம் பயந்ததாலோ அல்லது தோல்வியடைந்ததாலோ, தாங்கள் வாழ்ந்த சமவெளியை விட்டு மலைகளிலும் காடுகளிலும் குடியேறி வாழத் தொடங்கினர். மறைவாக வாழ வேண்டியவர்களாயினர். இவர்களின் சந்ததியர்களே இக்காலப் பழங்குடிகளாவர்.

தமிழர்களும் பழங்குடிகளே.

துடவரையும் கோத்தரையும் முந்தியில் (Primitive) தமிழராகக் கொண்டு, நீலமலையைத் தமிழன் பிறந்தகம் எனவும் பேராசிரியர் எக்கேல் (Haeekel) என்பவர் கூறு கிறார்.[1]

நீலமலை, ஆனைமலை, பழனிமலை, ஏலமலை, சேர வரையன் (சேர்வராயன்) மலை ஆகியவற்றின் பாறை வகை எழுபது கோடியாண்டுகட்கு முற்பட்டுத் தோன்றியது என நில நூலாராய்ச்சியாளர் கருது கின்றனர்.'*

இம் மலைப் பகுதிகளில் கற்காலக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே, பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே இம் மலைப் பகுதியிலும் அதற்கடுத்த சமவெளியிலும் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகிறது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஓரி, பாரி, எயினி போன்ற மன்னர்கள் கொல்லிமலை, பறம்புமலை, குதிரைமலை களில் வாழ்ந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

முதலில் மலைகளில் வாழ்ந்த மனிதன் பின் காடுகளில் வாழ முயன்றான். காடுகளில் வாழ்ந்து பழகியவன் நிலங்களில் வாழ எண்ணினான். நிலத்தில் வாழ்ந்து பழகியவன் கடலில் வாழ இயல வில்லை

நிலத்தில் வாழ்ந்தபோது அவனுக்கு உண்டான போராட்டம், மீண்டும் காடுகளுக்கும் மலைகளுக்கும் போக வைத்தது.

---

1 தமிழர் வரலாறு—ஞா. தேவநேயன், முன்னுரை. பக்21,22
* ,, ,, (1972) பக்.8

இதனால் அவர்கள் நாகரிகம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அடுத்தடுத்துக் கூறப்படுவதை அறியலாம்.

இங்கு வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு நில நூல் ஆராய்ச்சியாளர்களும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் கூறும் கருத்தை ஒப்பு நோக்கும்போது பழங்குடிகள் பற்றித் தெளிவாகிறது.

## தமிழ்நாட்டில் பழங்குடிகள்

இந்தியாவில் முந்நூறுக்கும் அதிகமான பழங்குடிகள் இருக்கிறார்கள்.

இந்திய ஜனாதிபதி வெளியிட்ட ஒரு பட்டியலின்படி (1956) தமிழ் நாட்டில் மட்டும் 42 வகை (வகுப்பு) பழங் குடிகள் உள்ளனர் என்பது வெளிப்பட்டது.

1 காடர்கள்

2 இருளர்கள்

இவர்கள் தமிழ் நாடு முழுவதும் பரவலாக வாழ்கிறார்கள்.

3 அடியான்
4 அரநாடன்
5 கம்மர்
6 காட்டு நாயக்கன்
7 கொண்டபாடி
8 கொண்டா ரெட்டி
9 கொரகர்
10 கோத்தர்
11 முடியர்(அ)குடியன்
12 குரிச்சன்
13 குருமன்
14 மகா மலசர்
15 மலசன்
16 மலைய கருமான்
17 முதுகன் (அ)முதுவன்
18 பாலியன்
19 பணியன்
20 புலையன்
21 சோளகர்
22 தாதவர்

இவ்வினத்தவர் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டத்தில் (செங்கோட்டை தாலுக்காவைத் தவிர) வாழ்கிறார்கள்.

## 23 மலையாளிகள்

இவர்கள் தென்னார்க்காடு, வட ஆர்க்கர்டு, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில்உள்ள கல்வ ராயன் மலை, ஏலகிரி, ஜவ்வாது, ஏர்க்காடு, கொல்லி மலை,பச்சைமலை ஆகிய மலைகளில் வாழ்கிறார்கள். இவ் வினத்தவர்கள் ஏனைய பழங்குடிகளைக் காட்டி லும் அதிகம் இருக்கிறார்கள். தற்போது சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமாய் வாழ்கிறார்கள்.

## 24 கணியர் அல்லது கணியன்

இவர்கள் கோயம்புத்தூர், திருநெல்வேலி (செங் கோட்டைத் தாலுக்கா தவிர) பிற மாவட்டங்களில் வாழ்கிறார்கள்.

## 25 குறும்பர்

இவர்கள் நீலகிரி மாவட்டத்தில் வாழ்கிறார்கள். இங்கு, கோத்தர், பணியர், இருளர் ஆகிய இனத்தவர் களும் பெரும்பான்மையோர் வாழ்கிறார்கள்.

26 ஏராவனன்
27 மலையப்புலையர்
28 காணிகாரன்
29 கொச்சு வேலன்
30 மலைக் குறவன்
31 மலை அரையன்
32 மலைப் பண்டாரம்

33 மலை வேடன்

34 மலையன்

35 மலையரையர்

36 மண்ணான்

37 முத்துவன்

38 பன்றியன்

39 பாளியன்

40 உள்ளாடன்

41 ஊராளி

42 விசாவன் (விஷாவன்)

இவர்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் செங்கோட்டை வட்டத்திலும் வாழ்கிறார்கள்.

1961 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டில் பழங்குடிகள் 2,52,000 பேர்களாக இருந்தனர்.

1971 ஆம் ஆண்டில் இவர்கள் தொகை 3,11,515 ஆக வளர்ச்சியடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| 1 சேலம் | — | 94 383 பேர்கள் |
| 2 வடஆர்க்காடு | — | 70 727 ,, |
| 3 தருமபுரி | — | 30 123 ,, |
| 4 செங்கல்பட்டு | — | 26 189 ,, |
| 5 கோயம்புத்தூர் | — | 26 021 ,, |

| | | | |
|---|---|---|---|
| 6 திருச்சி | — | 14 731 | பேர்கள் |
| 7 நீலகிரி [உதகமண்டலம்] | — | 19 869 | ,, |
| 8 தென்னார்க்காடு | — | 14 105 | ,, |
| 9 பிற மாவட்டங்கள் | — | 14 367 | ,, |
| மொத்தம் | | 3, 10, 516 | ,, |

இவர்களில் மலையாளியின் எண்ணிக்கை மட்டும் பாதிக்கும் மேல் இருக்கிறது.

கல்வராயன் மலை (தென்னார்க்காடு) மக்களை மட்டும் இங்குக் காண்போம்.

அனைத்து மலைகளிலும், (சேலம், தர்மபுரி, வடஆர்க்காடு, தென்னார்க்காடு) வாழும் மலையாளிகளின் வாழ்க்கை முறை அவர்களைப்பற்றிய வரலாறு, பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள் யாவும் ஓரளவு ஒற்றுமை யுடையதாகவே இருக்கின்றன.

இவர்களுக்குள் ஓரளவு வேற்றுமைகளும் முரண்பாடு களும் காணப்படுவதற்குக் காரணம், அவர்கள் வாழும் இடத்தின் அமைப்பு, சூழ்ந்துள்ள மக்களின் நாகரிகம் ஆகியவற்றால் உண்டானது என்று கூறலாம்.

ஏனைய மலைகளில் வாழும் மலையாளிகள் கூறும் கதைகளும், கல்வராயன் மலை மக்கள் கூறும் கதைகளும் ஓரளவு ஒன்றாகவே இருக்கின்றன.

தங்களைக் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்றே கூறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைப் பற்றி (ஒவ்வொரு மலை மலையாளிகளையும்) முழுவது மாக ஆராய்ந்தால் உண்மை தெளிவாகும். அப்போது

அவர்களின் குடியேற்றத் தோற்றத்தையும் காரணங்களை யும் தெளிவாக அறிய முடியும்.

அதுவரை, ஆய்வாளர் தர்ஸன் கூறுவதை ஏற்றுக் கொள்வது சரியான முடிவாகவே இருக்கிறது. அவர், 'நீலகிரி — தோடர்களைப் போல ஒரு பழங்குடி என இவர்களை (கல்வராயன் மலையாளிகளையும்) கூறமுடி யாது. சமீப காலத்தில் சமவெளியிலிருந்து வந்த தமிழ் பேசும் இனத்தவர்கள்' என்று கூறுகிறார்.*



* தர்ஸன் — மேற்படி நூல். பக். 406

# கல்வராயன் மலையாளிகளும் ஏனைய மலையாளிகளும்

கல்வராயன் மலைக்கு வடக்கே (திருவண்ணாமலை) வடஆர்க்காடு மாவட்டமும், வடமேற்கே தர்மபுரிமாவட்டமும், (அரூர்வட்டம்) தெற்குதென்மேற்கில்சேலம்மாவட்டமும் (ஆத்தூர் வட்டம்), உள்ளன. இதனால் இம்மாவட்ட மக்களுக்கும் இம் மலை மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது.

கல்வராயன் மலையில் வறட்சியும் பஞ்சமும் ஏற்படும் போது இம் மலை மக்கள் சேலம், வடஆர்க்காடு ஆகிய மாவட்டத்திற்குச் சென்று அங்குள்ள மலையாளிகளுடன் சேர்ந்து வேலை செய்து, பின் தங்கள் மலைக்குத் திரும்பு வார்கள்.

இது போல ஏனைய மலையிலுள்ள மலையாளிகளும் இம்மலைக்கு வந்துதங்கள் பிழைப்பு நடத்தியபின் செல்வதும் உண்டாம்.

ஆத்தூர்க்குத் தெற்குப் பகுதியிலும், திருச்சி வட்டத்திலும் உள்ள மலையாளிகளோடு அதிகத் தொடர்பு இல்லையாம். தூரம் இவர்கள் தொடர்புக்கும் உறவுக்கும் தடை செய்கிறது.

கூறும் காரணங்கள்

ஏனைய மலைகளில் உள்ள மக்களும் தங்களைமலை யாளிகள் என்றும், கவுண்டர்கள்என்றும் கூறிக் கொள்கின் றனர். இதற்குக் காரணமும் கூறுகிறார்கள்.

இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தபோது மூன்று பேர்களாக (சகோதரர்களாக) வந்தார்களாம். இதில் பெரியவர் **சேர்வராயன்** மலையிலும், இரண்டாமவர் **கொல்லி மலையிலும்**, மூன்றாமவர் **பச்சை மலையிலும்** குடி யேறித் தங்கள் இனத்தைப் பெருக்கிக் கொண்டார்கள்.

இதனைச் சேர்வராயன் மலையாளிகளைப் **பெரிய மலையாளிகள்** என்றும், கொல்லிமலை மலையாளிகளைச் **சின்ன மலையாளிகள்** என்றும் அழைக்கப்படுவதைக் கொண்டு அறியலாம்.

அடுத்து, இன்னொரு கதையும் இவர்கள் மத்தியில் வழங்கி வருகிறது.

காஞ்சிபுரத்திலிருந்த அரசனின் சகோதரனை ஒரு குரு வின் வம்சா வழியினர் என்கின்றனர். குருவான சகோதரன் அரசனிடம் சண்டையிட்டுக் கொண்டு காஞ்சி புரத்தைவிட்டு 3 ஆண்களோடும் ஒரு பெண்ணோடும் சேர்வராயன் மலைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது சேர்வராயன் மலையில் வேளாளர்களும், வேடர்களும் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் காஞ்சிபுரத்தி லிருந்து வந்த இவர்களோடு போரிட்டுத் தோல்வியடைந் தார்கள்.

வெற்றி பெற்ற காஞ்சிபுரத்தினரோடு வேடர்களும், வேளாளர்களும் சமரசம் செய்துகொண்டு வாழ முற்பட்ட னர். இவர்களில் (மூவரில்) பெரியவர் பெரியண்ணன் சேர் வராயன் மலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். நடு அண்ணன் பச்சைமலையையும் சின்ன அண்ணன் கொல்லி

மலையையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு குடியேறித் தங்கள் வமிசத்தை விரிவுபடுத்தினர்.

பெரியண்ணன் சேர்வராயன் மலையில் கைக்கோளர் பெண்ணை மணந்து கொண்டார். நடு அண்ணன் வேடர் பெண்ணையும், சின்ன அண்ணன் தேவ இந்திரபள்ளன் (அரிஜன்) இனத்துப் பெண்ணையும் மணந்து கொண்டனர்.

தங்கள் சகோதரியை ஒரு தொட்டியனுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்களாம். தொட்டியர்கள் இவர்களுக்கு உணவிட்டுக் காப்பாற்றினார்கள். அதற்கு நன்றியாகத் தங்கள் சகோதரியைக் கொடுத்தார்கள்.

இவை பொதுவாகக் கூறப்படும் செய்திகளே என்றாலும் குறிப்பாகத் திருச்சிப் பகுதியில் வாழும் மலையாளிகளிடம் மரபுக் கதையாக இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

இனி. ஏனைய மலையாளிகளைப் பற்றித் தெளிவாக அறிய முடியும்.

எனவே முதலில் பச்சைமலை மலையாளிகளைத் தெரிந்து கொள்வோம்.

## பச்சைமலை மலையாளிகள்

### இருப்பிடம்

திருச்சி மாவட்டத்தில் உள்ள பச்சை மலையில் வாழும் பழங்குடி மக்கள் பச்சைமலைமலையாளிகள் என்று கூறப்படுகின்றனர். பச்சமலை என்று கூறுகின்றனர்.

காஞ்சிபுரத்திலிருந்தவர்களில் இரண்டாம் சகோதரர் வழியினர். இம்மலையில் வாழ்பவர்களாகக் கதை வழிகள் கூறுகின்றனர். இதனை இம்மலை மக்களின் பழக்கங்களின்

மூலம் அறியலாம். மலையாளிக்கு மரியாதை செய்தவன் மூலம் அவ் உண்மை புலனாகிறது.

## வேடருக்கு மரியாதை

பச்சைமலையில் இருக்கும் மலையாளப் பெண்கள், தங்கள் கணவனுக்கு உணவு கொடுக்கும்போது சிறிது உணவை எடுத்துத் தனியாக வைக்கிறார்கள். இது தங்களுடைய முன்னோர்களாய் இருந்த வேடர்களுக்கு மரியாதையும் நன்றியும் செலுத்தும் முறையாகக் கூறுகிறார்கள். முன்பு தங்கள் முன்னோர்க்கு வேடர்கள் உணவு கொடுத்தார்களாம். அதற்காக என்கிறார்கள். நன்றி மறவா மலையாளிகள்!

திருமணத்தின் போது மணமகள் தலையில் ஒரு சீப்பை வைக்கிறார்கள் அல்லது செருகுகிறார்கள்.* இது வேடர்களின் பழக்கமாம்.

அதேபோல மணமகன், மணப் பந்தலில் மணமகளுக்குத் தாலி கட்டும்போது ஒரு கத்தியையும் ஓர் அம்பையும் தன் மடியில் வைத்திருப்பான். இது வேடர்களின் பழக்கத்தையும் வேடர்களை வென்றதையும் குறிக்கப் படுவதாக இருக்கிறது என்கின்றனர்.

இவையாவும் வேடர்களுக்கு மலையாளிகள் செய்யும் மரியாதை என்றும் அவர்களுக்குச் செய்யும் நன்றி என்றும் கூறுகிறார்கள்.

## கொல்லி மலையாளிகளோடு தொடர்பு

பச்சை மலை, கொல்லி மலை மலையாளிகளுக்கிடையே பல வேறு பாடுகள் உள்ளன.

இம்மலையில் கொல்லிமலை மலையாளிகளும்குடியேறியுள்ளனர். நிரந்தரமாக வாழும் குடியினராகவும் உள்ளனர்.

---

★ பர்மா, சிங்கப்பூர் இனத்தவர்களிடையே தலையில் சீப்பு வைத்துக் கொள்ளும் வழக்கம் இருக்கிறது.

சில ஆண்டு, மாதங்கள் மட்டும் தங்கித் தங்கள் வாழ்க்கைக்கு ஒரு வசதி கிடைத்தவுடன் திரும்பிவிடக் கூடியவர்களும் இருக்கின்றனர். கொல்லிமலை மக்களின் வருகை நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இப்படி அடிக்கடி குடியேறி வாழும் கொல்லி மலை மலையாளிகளோடு முரண்பாடுகளோ பிணக்குகளோ, வழக்குகளோ எதுவும் ஏற்படுவதில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

பச்சைமலை, கொல்லி மலை மலையாளிகளுக்குள் திருமண உறவு ஏதும் முன்பு நிகழ்ந்ததில்லை. ஆனால் அதே சமயம் இருவர் வீட்டு விருந்துகளிலும் கலந்து கொண்டு உண்டு மகிழ்கிறார்கள். அதேபோல அவரவர் விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்கிறார்கள்.

இப்போது பத்து ஆண்டுகளுக்குப் பிறகுகொல்லிமலை மக்கள் பச்சை மலைக்கு வருவதும்போவதும் குறைந்துள்ளது. சிற்சில பிணக்குகள் ஏற்பட்டும் இருக்கின்றன. அவையாவும் பெரிய அளவில் நிகழ்ந்ததில்லை என்றும் கூறுகிறார்கள்.

பிணக்குகள், உடனுக்குடன் உள்ளூர் மக்களால் பேசித் தீர்த்துக் கொள்கிறார்கள். இப்போது இரு மலைமக்களுக்கும் கொடுக்கல் வாங்கல் மூலம் உறவுகள் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

### பச்சைமலைத் தலைவர்கள்

பச்சை மலைத் தலைவனைக் கவுண்டன் என்று கூறுகிறார்கள். கல்வராயன் மலை மூப்பனைப் போன்றவர் கவுண்டன் என்பவர்.

பச்சை மலையில் 5 முதல் சுமார் 10 வரை உள்ள ஊர்களுக்குச் **சிற்றம்பலம்** என்று பெயர். இச் சிற்றம்பலத்திற்

குத் தலைவனாக இருப்பவர், கவுண்டனைப் பெரிய கவுண்டன்என்று கூறுகிறார்கள். பெரியகவுண்டன் இந்தப் பத்து ஊர்களின் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார். முக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பெரிய கவுண்டனை எதிர்பார்க்கிறார்கள். பெரிய கவுண்டன், ஊர் வழக்கு, பெண்தகராறு ஆகியவற்றைத் தீர்த்து வைப்பார். இவருக்கு ஊர் மக்கள் காணிக்கைக் கொடுக்கிறார்கள்.

முன்பு கவுண்டன் வரி வசூல் செய்து கொடுப்பவராக இருந்தார்.

பெரிய கவுண்டனுக்கு அடுத்து உள்ளவர் பட்டக்காரன் (Pattakarans) என்பவர். பெரியகவுண்டன் சொல்லும் எல்லா வேலைகளையும் இவர் செய்யவேண்டும், பெரிய கவுண்டனுக்கு எல்லா வகையிலும் உதவியாய் இருக்கவேண்டும். சில சமயங்களில் பட்டக்காரனுடைய வேலைகளைப் பெரிய கவுண்டன் செய்வதும் உண்டு

இவர்கள் இருவரும் பரம்பரையாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பட்டக்காரனின் அனுமதியைப் பெற்றுத் திருமணம் நடைபெறுகிறது எனலாம்.

பட்டக்காரன், பச்சைமலை மலையாளி திருமணத்தில் முதன்மை வகிப்பார். திருமண வீட்டினர் பட்டக்காரன் வருகைக்கு மரியாதை செய்வார்கள். ஒரு தொகையும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும்.

## பச்சைமலை மலையாளிகள் வழிபாடு

பச்சைமலை மலையாளிகள் தெய்வ வழிபாடு ஒரு சிறப்பானது. பெண்தெய்வ வழிபாட்டையே முதன்மையாகக் கருதுகிறார்கள். அதை மிகவும் சிறப்பாகச் செய்ய விரும்புகிறார்கள். வழிபாட்டின்போது மிகவும் பயத்தோடு விழாவைச் செய்ய விரும்புகிறார்கள். இல்லா

விட்டால் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாவோம் என்று நம்புகிறார்கள்.

பச்சைமலை மலையாளிகள் வழிபடும் பெண் தெய்வத்தைப் **பிடாரி** என்று கூறுகிறார்கள். பிடாரி வழிபாட்டு முறை இங்குச் சற்று வித்தியாசமானதாக இருக்கிறது.

பிடாரியைப் 'பிடாரி' என்றும் 'பிடாரி அம்மன்' என்றும் 'மண்ணுப் பிடாரி' அல்லது **மனு பிடாரி** என்றும் கூறுகிறார்கள்.

பிடாரி மண்ணால் செய்யப்படுவதால் மண்ணுப் பிடாரி என்று கூறுகிறார் போலும்.

பிடாரி செய்ய களிமண்ணையே பயன்படுத்துகின்றனர். களிமண்ணை நல்ல நாளில் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். கொண்டு வந்த மண்ணை ஒரு குவியலாக உருவாக்குகிறார்கள்.

களிமண்ணைக் கொண்டு வந்து குவிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள்; அன்று தூய்மையாக இருக்க வேண்டும்.

குவியலை ஊருக்குச் சற்றுத்தொலைவில், வெட்ட வெளிப்புறத்தில் அமைக்கிறார்கள். ஊரினர் கூட்டமாக வந்து பார்க்கும்படியான இடமாக இருக்கிறது

வழிபாட்டு நாளன்று வீட்டில் சமைத்த சோற்றைக் கொண்டு வருகிறார்கள். இது மாலைப் பொழுதாகவோ, இரவாகவோ இருக்கும். சிலர் சோற்றோடு ஒரு ஆட்டையும் கூடவே கொண்டு வருகிறார்கள்.

இப்படி ஊரினர் சோற்றைக் கொண்டுவந்து குவியலுக்கு முன்பாக இலையில் வைத்துப் பரப்புகிறார்கள். சில சமயம் தனித்தனியாகவும், ஒன்றாகவும் சோற்றை வைக்கிறார்கள்.

சிலர் குவியலுக்கு முன்பாகச் சோற்றைச்சமைக்கிறார்கள். பெரும்பாலோர் வீட்டிலிருந்து கொண்டு வருகின்றனர்.

வீட்டிலிருந்து சோற்றைக் கொண்டு வரும்போது ஒருவகை காட்டுத்தழை, இலைகளினால் பாதையைச் சுத்தம் செய்கிறார்கள்.

களிமண் குவியலுக்கு முன் (பிடாரி) ஊரினர் வந்து சேர நடுஇரவு ஆகிவிடுகிறது. நடு இரவு வரைக்கும் ஏதாவது செய்தபடி இருக்கிறார்கள்.

நடு இரவு ஆனதும் படைக்க ஆரம்பிக்கிறார்கள்.

சோற்றுப்படையலுக்கு முன்பு ஆட்டைப் பலி இடுகிறார்கள். பலியிடப்பட்ட ஆட்டின் இரத்தத்தைச் சோற்றின் மீது தெளிக்கிறார்கள்.

ஆட்டின் ஈரலை மட்டும் எடுத்து வாயால் ஊதிக் களிமண் (பிடாரி) குவியல் மீது வைத்து வணங்குகிறார்கள்.

இவர்கள் இந்த வழிபாட்டை* மிக முக்கியமாகக் கருதுகிறார்கள்.

## திருமணம்

திருமணத்திற்கு பெண்ணைப் பார்த்து நிச்சயம் செய்கிறார்கள். பெண் பிடித்த உடன் பெண்ணை நிச்சயம் செய்ய நாள் குறிக்கிறார்கள். பெண்ணை நிச்சயம் செய்ய ஆண்வீட்டினர் பெண் வீட்டிற்கு வருகின்றனர்; அன்று விருந்து.

---

* கிராமங்களில் நடைபெறும் பெரியாயிவழிபாட்டுமுறையோடுஓரளவுஒத்துள்ளது. சிலர் பெரியாயி(வேண்டுதல்) வழிபாட்டின்போது கோழி, ஆடுபலியிடுகின்றனர். சிலர் பலியிடுவது இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அன்று பெண்ணுக்கு எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளிக்கச் செய்கிறார்கள்.

'நிச்சயம்' செய்ய நேரம் பார்க்கிறார்கள். நல்ல சகுனம், கெட்ட சகுனம் என்று பார்த்துச் செய்கிறார்கள். ஏதேனும் கெட்ட சகுனம் ஏற்பட்டு விட்டால் நிச்சயத்தைத் தள்ளிப் போடுவதும் உண்டு. இல்லை, அந்தப் பெண்ணை வேண்டாம் என்று விட்டுவிடுவதும் உண்டாம்.

திருமணம் வியாழக்கிழமையாக அமைதலையே இவர்கள் விரும்புகிறார்கள். பெரும்பாலான திருமணங்கள் இந்த நாளில்தான் நடக்கிறது.

திருமணத்திற்கு ஊரினர், உறவினர் அழைக்கப்படுகின்றனர்.

திருமணத்திற்குப் பிறகு உறவினர் மணமக்கள் தலையில் விளக்கெண்ணெய்யைத் தடவி கொஞ்சம் அருகம் புல்லையும் போட்டு வாழ்த்துகிறார்கள்

பச்சை மலையாளிகள் மணமக்களை வாழ்த்தும் முறைக்கும் கொங்கு வேளாளர்களது வாழ்த்தும் முறைக்கும் ஒற்றுமை இருக்கிறது என்கிறார்கள்.

பச்சை மலைப் பெண்கள் சேலையைக் கொசுவம் வைத்துக் கட்டுகிறார்கள். அதேசமயம் மார்பை மறைக்காமல் இருக்கிறார்கள்,

இப்போது, இவை மாற்றம் அடைந்து வருகிறது.

பச்சைமலை தொப்பர நாடு, வண்ணாடு, ஆத்தி நாடு என்று மூன்று நாடுகளாக முன்பு பிரிக்கப்பட்டு இருந்தது.

இவர்கள் பேசும் மொழி* ஓரளவு தமிழோடு ஒத்துள்ளது,

| | | |
|---|---|---|
| சீயோ | — | பாட்டன் |
| சீய்யம்பேத்தி | — | பேத்தி |
| சியாபேரன் | — | பேரன் |
| சின்னாயி | — | தாயுடன் பிறந்த சகோதரி |
| மாமியத்தெ | — | மனைவியின் தாய் |
| நங்கெ | — | அண்ணி |
| மேலய்க்கி | — | அடுத்த ஆண்டு |
| நாலாண்டிக்கி | — | நாளை மறுநாள் |

என்பன போன்று வழங்குவதைக் கொண்டு அவர்கள் பேச்சை ஓரளவு தெரிந்துகொள்ளலாம்.



* ஆராய்ச்சி மாணவர் திரு. ம. மகேசுவரன் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) பச்சைமலை மலையாளிகள் பேச்சைப் பற்றி ஆராய்ந்து வருகிறார். 'தமிழ் நாட்டுப் பழங்குடி மக்கள்' — டாக்டர். சு. சக்திவேல், பக். 160 — 162

# வட ஆர்க்காடுமலை மலையாளிகள்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி, சவ்வாது ஆகிய மலையில் மலையாளிகள் வாழ்கிறார்கள். இம் மக்களுக்கும், ஏனைய மலை மக்களின் வாழ்க்கைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஓரளவுதான் வேறுபாடு உள்ளன

* வட ஆர்க்காடு மலையாளிகள்

மலை வெள்ளாளர்

கொங்கு வெள்ளாளர்

காஞ்சி மண்டலத்தார்

மலைக் கவுண்டர்

மலைக் காரர்

என்றும் கூறப்படுகின்றனர்.

சேலத்தில் வாழும் மலையாளிகளை அடுத்து இம் மலையில் மக்கள் தொகை அதிகமாகும்.*

---

* *1971* ஆம் ஆண்டு கணக் கெடுப்பின்படி
சேலம் மாவட்டம் — *94383* பேர்கள்.
வட ஆர்க்காடு — 70, 727 பேர்கள்.

## சவ்வாது மலையில் வழங்கும் வம்ச வழிக்கதை

சவ்வாது மலையில் வாழும் மலையாளிகளின் வம்சா வழியைப்பற்றி ஒரு சிறப்பான கதை வழங்கி வருகிறது.

'காங்குண்டி வேடர்கள்' (Vedas of Kangundi* காஞ்சிபுரத்தில் வாழ்ந்த காரைக் காட்டு வெள்ளாளர் களிடம் பெண் கேட்டனர். காரைக் காட்டு வெள்ளாளர் கள் (Karaikkat Vellalas) பெண் கொடுக்க மறுத்து விட்டனர். இதனால் காங்குண்டி வேடர்கள் கோபம் அடைந்தனர்.

பிறகு காரைக் காட்டு வெள்ளாளக் குடும்பத்தில் 2 வேடர்கள் 7 வயது வந்த பெண்களைக் கடத்திச் சென்று விட்டார்கள். 7 பெண்களையும் மீட்டுக் கொண்டுவர 7 காரைக் காட்டு வெள்ளாளர்கள் 7 நாய்களுடன் வேடர் களைத் தேடிச் சென்றனர். சவ்வாது மலைக்கு வந்தபோது பாலாற்றில்வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. 7 வெள்ளா ளர்களும் பாலாற்றில் நீந்தி மறுகரையைச் சேர்ந்தார்கள். ஆனால் உடன்வந்த நாய்கள் நீந்த முடியாமல் கரை யிலேயே நின்றுவிட்டன. அந்த நாய்கள் திரும்பித் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டன.

மறுகரையை அடைந்த வெள்ளாளர்கள், காங்குண்டி வேடர்களுடன் போரிட்டுத் தங்கள் பெண்களை மீட்டுக் கொண்டு காஞ்சிபுரம் திரும்பினர்.

பெண்களோடு வீடு திரும்பிய வெள்ளாளர்கள் தம் வீட்டில் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். அதாவது 7நாய்

---

* காங்குண்டி — ஒரு ஊரின் (இடத்தின்) பெயராக இருக் கலாம். இவ்விடம் மலையை அடுத்தோ, மலையிலோ இருக்கலாம். இங்கு வாழ்ந்த வர்களுக்கு இப்பெயர் உண்டாகியிருக்கலாம்.

களும் திரும்பி வந்ததைக் கண்ட 7 வெள்ளாளர் குடும்பத்தினர்கள், பெண்ணைத் தேடிச் சென்றவர்கள் எப்படியோ இறந்து போய் விட்டார்கள். அதனால்தான் நாய்கள் மட்டும் திரும்பி விட்டன என்று நினைத்து, தங்கள் கணவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்து, மனைவியர்கள் விதவைகளாகியிருந்தனர்.

தங்கள் மனைவியர்கள் விதவைகளாக இருந்ததைக் கண்டு ஆண்கள் எழுவரும் அதிர்ச்சியடைந்தனர்; மனைவியர்களும் வருத்தப்பட்டனர். இறந்தவர்க்குச் செய்யும் சடங்குகள் செய்யப் பட்டதால், தங்கள் கணவர்களை வீட்டில் சேர்க்க முடியாது என்று மறுத்தனர். அவர்களைத் தங்கள் சாதியை விட்டும் நீக்கினர். ஏமாற்றம் அடைந்த வெள்ளாளர்கள் மட்டும் சவ்வாது மலைக்கே திரும்பி விட்டனர்.

மலைக்குத் திரும்பிய வெள்ளாளர்கள் மீண்டும் வேடர்களுடன் சேர்ந்து கொண்டனர். பின்னர் வேடர் பெண்களையே மணந்து கொண்டு சவ்வாது மலையிலேயே வாழத் தொடங்கினர்.

இந்தக் கதையைச் சவ்வாதுமலை மலையாளிகள் கூறுகின்றர். இக்கதையினை ஓர் ஓலைச் சுவடியின் மூலமாகவும் (கி. பி. 1132) அறியமுடிகிறது என்று தர்ஸன் தமது நூலில் (பக். 408, 409) கூறியுள்ளார்.

மற்றொரு செவிவழிச் செய்தியும் இவர்களைப்பற்றிக் கூறப்பட்டு தருகிறது.

இம் மலையின் மூதாதையர் காஞ்சிபுரத்தில் அரசாண்ட வழியினராம். அந்த அரசனுக்கு ஒரு சகோதரன்; சகோதரனிடம் நாடு, அரசு சார்பாகத் தகராறு உண்டாயிற்று. இதனால் தன் உயிருக்கு ஆபத்து வரும் எனத் தெரிந்து தனது மூன்று பிள்ளைகளையும் ஒரு சகோதரியையும் இரவோடு இரவாக அழைக்துக் கொண்டு இந்த மலைக்கு வந்து தங்கிவட்டான்.

அப்போது இந்த மலையில் மக்கள் வாழ்ந்தார்கள். அரசன் தன் மூன்று பிள்ளைகளுக்கும் இந்த மலைப் பெண்ணையே திருமணம் செய்து வைத்தான். தன் சகோதரியை மலையில் வாழ்ந்த ஒருவனுக்கே திருமணமும் செய்து கொடுத்தான்.

பிறகு அவர்கள் குடும்பம் வளர்ந்து பெருகி விட்டது; அம் மக்களே தற்போது உள்ளவர்கள் என்று தெரிய வருகிறது*.

## சவ்வாது மலையின் இருப்பிடமும் சிறப்பும்

சவ்வாதுமலை செங்கம் வட்டத்தின் எல்லையாக அமைந்துள்ளது. இம் மலைத் தொடரின் நீளம் சுமார் 65 கி. மீ; அகலமும் சுமார் 16 கி. மீ. உடையதாக இருக்கிறது. இம் மலையில் பல உயர்ந்த சிகரங்களும் உள்ளன.

சவ்வாது மலையில் **கர்நாடகக்கிரி** என்ற சிகரம் மிகவும் உயர்ந்தத. இதன் உயரம் சுமார் 2700 அடி. இச் சிகரத்தில் பாழடைந்த உயர்ந்த மதில் சுவர்களும், கோட்டையும் மாளிகையும், மருந்துக்கிடங்குகளும் உள்ளன. இக்கட்டிடங்கள் மராட்டியர் ஆட்சியின்போது கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

சங்ககாலத்தில் **நன்னன்** என்ற மன்னன் ஆண்டு வந்தான். இவனால் இப்பகுதி (செங்கம் வட்டம்) ஆளப்பட்டது என்றும் அவன் நாடு நன்னன் நாடு என்றும் கூறப்படுகிறது. இந்நாட்டில் தான் சவ்வாது மலை அமைந்துள்ளது.

---

* தகவல்: திரு பிரகாசம்(38), ஆலங்காயம், வரைவாளர், தமிழ் நாடு மின்சார வாரியம்; கடலூர்.— 3 12. 87.

மலைபடுகடாம். பெரும்பாணாற்றுப் படை ஆகிய சங்க இலக்கியங்களில் நன்னனையும், நன்னன் நாட்டையும் பற்றிச் [செங்கம்] கூறப்பட்டுள்ளன.

இம்மன்னனால் கட்டப்பட்ட பருவத வர்த்தினி, சிவன் கோயில் பருவதமலைச் சிகரத்தில் இருக்கிறது இக் கோயில் இறைவனுக்கு மார்கழியில்விழா எடுக்கின்றனர். இச்சிகரத்தில் ஏறுவது மிகவும் கடினம் இச்சிகரத்தில் ஏறும்போது, ஏணிப்படி, அந்தரப்படி, ஆகாயப்படி என்று மலையில் ஏறும் இடங்களைக் குறிப்பிடுகின்றனர்.

சவ்வாது மலையில் சந்தனம், மூங்கில் தேக்கு கரிமருது வேங்கை முதலிய மரங்கள் உள்ளன. கல்மூங்கில் மரங்களும் உள்ளன. கருங்காலி மரங்கள் அடர்த்தியாக இருக்கின்றன.

சவ்வாது மலைப் பிளவில், தண்டம் பட்டுக்கணவாய்' என்னும் பெயருடைய கணவாய் ஒன்று உள்ளது. இக் கணவாயைச் 'செங்கமா கணவாய்' என்றும் கூறுகின்றனர்.

இம்மலையில் சுமார் 138 க்கும் மேலான சிற்றூர்கள் உள்ளன.

சவ்வாதுமலை மலையாளிகள் தங்களை 'மலைவாணர்கள்' என்றும், 'கொங்கு வேளாளர்கள்' என்றும் கூறிக் கொள்கின்றனர். இவர்கள் சுமார் 15க்கும் மேற்பட்ட நாடு (ஊர்)களில் வாழ்கின்றனர்.

சவ்வாது மலை அடிவாரத்தில் போளூர் ஏரி இருக்கிறது. இம்மலையில் உற்பத்தியாகும் மஞ்சள் ஆறு இந்த ஏரிக்கு வருகிறது. சம்பத்கிரி வாசூர் என்னும் இரு மலைகளும் இந்த ஏரிக்குக் கரைகளாக இருக்கின்றன.

சவ்வாது மலையில் வாழ்பவர்களை வெள்ளாளர் (Vellalars) என்றும், பச்சை வெள்ளாளர் என்றும் கூறுகின்றனர்.

சவ்வாது மலையில் பல மூலிகைச் செடிகள் கிடைக்கின்றன. அவைகளில்,

சிந்திக் கொடி
கடுகு
பிரம்மதண்டு
பெரும்துத்தி
நெருஞ்சில்
பொரசு
நாய் வேளை
மவெளிங்கசெடி
மயிர் மாணிக்கம்
சீகை[ம] அகத்தி
சிக்கமுட்டி [Bryonia Epigala]
செம்பை
நன்னாரி
பொன் அவரை
புங்கம்
நிலாவரை
ஆகாசக் கருடக்கிழங்கு

முதலியனவாகும்.

இம் மலைக்கு இப்போது ஆலங்காயம் என்னும் ஊரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

### நாடுகளும் தலைவர்களும்

வடஆர்க்காடு மலையில் மலையாளிகள்சுமார் 18நாடுகளில் வாழ்கிறார்கள்.

இம் மலையாளிகள் தாங்கள் வாழும் இடங்களை பொதுவாக 'நாடு' என்றே குறிப்பிடுகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிற்கும் 10 முதல் 15வரை ஊர்கள் உள்ளன. புதூர் நாடு, நெல்லிநாடு [நெல்லிவாசல் நாடு] புங்கம்பட்டு நாடு என்று ஊர்களை 'நாடு' என்றே கூறுகின்றனர்.

இவர்களுக்கு கணமலை நாட்டு நாட்டானைப் பெரிய நாட்டான் என்று அழைக்கிறார்கள். இந் நாட்டானே

தலைவனாக இருக்கிறான். இந்நாட்டானே, ஏனை நாடு களுக்கான நாட்டானைத் தேர்ந்தெடுக்கிறார்.

பெரிய நாட்டானுக்குச் சாதி பஞ்சாயத்துக்களைக் கூட்டவும். வழக்குகளை விசாரித்து அபராதம் வழங்கவும், தண்டனை கொடுக்கவும், சாதியிலிருந்து நீக்கவும் முதலிய அதிகாரங்கள் உள்ளன.

நாட்டுக்குள் அடங்கிய ஒவ்வொரு ஊருக்கும் ஊரான் என்பவர் ஒருவர் உண்டு.

மலையில் சாதிக் கட்டுப் பாடுகளை மீறியவர்களுக்கும் மீறுபவர்களுக்கும் சாட்டை அடி (புளியங்கழியால்) கொடுக்கிறார்கள். அடிக்கும் அதிகாரத்தைப் பெரிய நாட்டானிடமிருந்து ஊரான் என்பவர்கள் பெறுகின்றனர்.

அபராதமாக வரும் பணத்தை, பெரிய நாட்டான் இரண்டு பங்கும் (பாதி அளவு எனலாம்) மீதம் உள்ளதை ஊரானும் பிரித்துக் கொள்வார்கள்.

இம்மலையில், ஊர் புனிதமானதாகக் கருதப்படுகிறது. முன்பெல்லாம் யாரும் செருப்புப் போட்டுக் கொண்டு நடப்பதில்லை. பிராமணர்கள்கூடச் செருப்பு இல்லாமல் தான் நடக்கவேண்டும்.

மலையாளிகள் சைவர்களாகவும், வைணவர்களாகவும் இருக்கிறார்கள். நெற்றிகளில் நாமமும் விபூதியும் இட்டுக் கொள்கிறார்கள்.

## தெய்வமும் வழிபாடும்

இம் மலை மக்கள், காளியையும் பெருமாளையும் வணங்குகிறார்கள். வழிபாட்டின் போது விபூதிநாமத்தை இட்டுக் கொள்கிறார்கள்.

இவர்களிடம் உள்ள காளி வழிபாட்டு முறைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறலாம். ஒவ்

வொரு ஆண்டும் 15 நாட்களுக்கு திருவிழா நடத்துகிறார்கள். திருவிழாவின்போது விருந்து அளிக்கிறார்கள்.

காளித் திருவிழாவின் போது சமவெளியிலிருந்தும், தங்கள் இனத்தில் இருக்கும் பெண்களையும் கண்டிப்பாய் அனுமதிப்பதில்லை. திருவிழாவைப் பார்த்து விட்டுத் திரும்பும் பெண்கள் திருமணம் ஆகாதவர்கள்) உயிர் பிழைப்பதில்லைஎன்று இவர்கள் காரணம் கூறுகிறார்கள்.

அதே சமயம் காளித் திருவிழா அன்று பங்கேற்கும் ஆண்கள் பெண்களிடம்(மனைவியிடம்) பேச அனுமதிப்பதில்லை.

பெருமாளுக்கு விழா செய்யும்போது மற்ற சாதியினர் பார்க்க அனுமதி இல்லை. பெண்களும் விளக்கப் படுகிறார்கள்.

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். பொங்கல் விழாவின்போது ஆண்கள் மட்டும் ஆடல் பாடல்களில் கலந்து கொள்கின்றனர். இதனை இவர்கள் **சேர்வையாடுதல்** என்று கூறுகின்றனர்.

எந்தச் சடங்கையும் வெளியிடத்தில் செய்கிறார்கள். **அம்மனை, வெள்ளாண்டிசாமி** என்னும் ஒரு தெய்வத்தின் எதிரில் வைத்து விழா நடத்துகின்றனர், இத் தெய்வத்திற்குக் கற்சிலை [உருவம்] செய்திருக்கிறார்கள்,

## திருமணமும் பழக்க வழக்கங்களும்

திருமணத்திற்கு நேரம் லக்கனம் எதுவும் பார்ப்பதில்லை? திருமணத்திற்குப் **பரிசப் பணம்** மணமனிடம் வாங்குகிறார்கள்.

திருமணச் சடங்குகளைத் திங்கள் கிழமையில் ஆரம்பிகின்றனர். அதற்குப் பிறகு வரக்கூடிய வெள்ளிக்கிழமை

யில் திருமணம் நடக்கும். இந்தத் திங்கள், வெள்ளிக் கிழமை அமாவாசைக்கு மறு நாளாக இருக்கக் கூடாது.

விதவைகள் திருமணம் உண்டு. ஒரு கன்னிப் பெண்ணுக்கோ அல்லது விதவைப் பெண்ணுக்கோ திருமணம் செய்ய வேண்டுமென்றால், ஊர்க்கவுண்டன் பாட்டன் அல்லது ஊர்த்தலைவனை அழைத்து ஒரு மணமகனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். திருமணம் பஞ்சாயத்தார் முடிவின்படிதான் நடைபெறும்.

பெற்றோர்கள் சம்மதத்தைப் பஞ்சாயத்தார் எதிர்ப்பதில்லை. மணமகன் நிச்சயம் ஆனவுடன் பெண்ணின் பெற்றோர்கள் திருமணத்திற்கு முடிவு செய்து பிற ஏற்பாடுகளைச் செய்கிறார்கள்.

இவர்கள், திருமணத்திற்குப் பூசாரியை வைப்பதில்லை.

மணப்பந்தல் அமைக்க 12 கால்களை நடுகின்றனர். மணப்பந்தலில் தானியங்களைக் கொட்டி அதன் மீது கம்பளி, அல்லது போர்வை விரித்து மணமக்களை அமரச் செய்கின்றனர். மணமக்களுக்குச் சந்தனத்தைத் தடவுகின்றனர். இவ்வாறு செயலதை நலுங்கு [நலங்கு] வைத்தல் என்கின்றனர். மறுநாளும் நலங்கு வைக்கின்றனர். இவ்வாறு செய்வதை நலங்கு வைக்கிறனர்.

மணப்பந்தலில் மணமக்களுக்கு முன்பாகத் தங்கள் குல தெய்வத்தை வைக்கின்றனர்; மணமகன் தாலிகட்டுகிறான். தாலி கட்டிய பிறகு கூடியிருக்கும் உறவினர்களும் ஊரினரும் மணமக்களை வாழ்த்துகின்றனர். பிறகு மணமக்களின் கால்களை மஞ்சள் நீரால் கழுவுவர். திருமணம் முடிந்ததும் தங்கள் குலதெய்வத்தை மணமக்கள் வணங்குகின்றனர். அப்போது, துப்பாக்கி வெடிக்கின்றனர். பந்தலை மூன்று முறைகள் சுற்றி வந்து பெரியோர் கால்களில் விழுந்து வாழ்த்துதலைப் பெறுகின்றனர். திருமண விருந்தில் சாதாரண உணவோடு பன்றிக்கறியையும் கொடுக்கின்றனர்.

திருமணத்திற்கு முன்பு மணமகன், பெண்ணின் வீட்டில் கொஞ்சகாலம் (குறைந்தது ஒரு வருடம்) வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் பெண் கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். இப்போது இப்பழக்கம் குறைந்து வருகிறது.

திருமணத்தின்போது பெண்ணின் தந்தைக்குப் பணமும் விறகும் கொடுக்க வேண்டும். இது அவர்களுக்கு இரண்டு நாட்களுக்கு விருந்தின் செலவுக்காகக் கொடுக்கிறார்களாம்.

திருமணத்திற்கு அரிசி, பருப்பு விருந்தும், இரண்டாம் நாள் பன்றிக்கறி விருந்தும் முடித்து மூன்றாம் நாள்தான் திருமணம் (தாலிகட்டுதல்) செய்கின்றனர்.

திருமணத்தின்போது மணமக்கள் மடியில் ஒரு நீளமான கத்தியை வைக்கிறார்கள். நாட்டான் தாலியை வாழ்த்திக் கொடுத்த பிறகுதான் மணமகன் தாலியைக் கட்டுகிறான்.

முன்பு, ஆண் பலவந்தமாகத் தூக்கிச் சென்று திருமணம் செய்வதும் உண்டாம். இப்படித் தூக்கிச் செல்லும் மணமகன் முகத்தில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, உடைந்த பானை (அ) குப்பைக் கூடையைச் சல்லடையை குடை போல் பிடித்துக்கொண்டு திருமண இடத்திற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்து வைப்பார்களாம்

ஒரு பெண்ணின் முதல் திருமணத்தைக் **'கலியாணம்'** என்றும், விதவைத் திருமணத்தைக் **கட்டுகிறாள்.'' 'கட்டிக்கிறது'** என்றும் கூறுகின்றனர்.

வெள்ளாளர் குடும்பத்திற்கும், பச்சை வெள்ளாள குடும்பத்திற்கும் திருமண உறவு இல்லை.

பச்சை வெள்ளாளப் பெண்கள் பச்சைக் குத்திக் கொள்ளவும், தலை முடியைச் சுருட்டிக் கொண்டை கட்டிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுவதில்லை.

திருமண ஏற்பாடு தொடங்கியதுமுதல் நலங்குவைக்கும் நாள் வரை மணப் பெண் தன் வீட்டின் எல்லாவேலைகளையும் செய்யவேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால்.

அவளை நோய் உள்ளவளாகவும் வலிமை இல்லாதவளாக வும் கருதி ஒதுக்கி விடுகின்றனர்.

நலங்கின்போது விளக்கெண்ணெய்யைத் தலையில் தேய்க்கின்றனர்.

மறுநாள் தாலி கட்டுகின்ற நிகழ்ச்சி. அதன் பிறகு செய்யும் சடங்கு முறைகள் சேலம் மலையாளிடம் இருக் கும் பழக்கங்களோடு ஒத்து உள்ளதாகத் தெரிகிறது.

திருமணச் சடங்கு முடிந்ததும் மணமக்கள் தங்கள் மாலையை கிணறு தண்ணீரில் போட்டுத் திரும்புகின்ற னர். பிறகு மணமக்கள் அவரவர் வீட்டில் சுமார் 15 நாட்களுக்குக் குறையாமல் தனித்து இருக்கச் செய் கின்றனர்.

ஆனால், மணமகன், மணமகள் வீட்டிற்குச் சென்று சாப்பிட்டு வரவேண்டும். அப்படி வரும் போது மணமகள் தன் கணவனுக்காக எதிர் நோக்கிக் காத்திருக்கவேண்டும். சாப்பிட வரும் கணவனை அவள் அன்போடு அழைத்து, உபசரிக்க வேண்டும்.

## குற்றமும் தண்டனையும்

விபச்சாரத்தில், விபச்சாரம் செய்தவனின் அந்தஸ்துக் குத் தக்கவாறு தண்டனையும் அபராதமும் கொடுக் கிறார்கள்.

அதே சமயம் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் தண்டனை கடுமையாகவே இருக்கிறது

விபசாரம் செய்தவளை அந்த இனத்து இளைஞர் பலரை அவள் மீது ஏவி விட்டு விடுகிறார்கள். அவ் இளைஞர்கள் அவளை வேண்டுமட்டும் அனுபவித்துக் கொள்ளலாம். அவளுக்கு எந்தப் பாதுகாப்பும் கொடுக்கப் படுவதில்லை. இதனால் பெண்கள் இறந்து போகவும் நேர்ந்துவிடுமாம்.

ஒரு வெள்ளாளன் வேறு சாதிப் பெண்ணை மணந்தால், அல்லது உறவு கொண்டால் சாதியிலிருந்து மட்டும் நீக்கப்படுவான். அதையே ஒரு வெள்ளாளப் பெண் செய்தால், முன்பு அவளுக்கு ரூ 3. 50 (ரூ 3—8—9) அபராதமும், ஆணுக்கு ரூபாய் ஏழும் அபராதமாய்க் கொடுத்தால் போதும்.

கெட்டுப் போன பெண்ணை (ஒரு சாதியிலிருந்து வேறு சாதியில் உறவு கொண்டால்) அதே சாதியில் சேர்த்துக் கொள்ள, குருவின் வழியாகத் தீர்த்தம் தெளித்தும், தீர்த்தம் குடிக்கக் கொடுத்தும் புனிதம் செய்கிறார்கள் அதன் பிறகு சேர்த்துக் கொள்கிறார்கள். இதற்குக் காணிக்கையாய் குரு 4 அணா முதல் ரூ. 12 வரை வாங்குகிறார். தீர்த்தத்தைக் குரு நேராகவோ, நாட்டாண் மூலமாகவோ கொடுத்தனுப்புவார்.

அபராதத் தொகையை உறவினர்களும் கட்டலாம். உறவினர் இல்லை என்றாலும், அபராதம் கட்ட முடியாதவர்களை, தவறு செய்வதனைக் கிராமத்திலிருந்து வெளியேறச் செய்கின்றனர்.

தவறு செய்த பெண், முன்னரே திருமணமாகியிருந்தால் அவளை அவளுடைய கணவனுடன் வாழ அனுமதிக்கப்படுகிறாள். இரண்டாவது கணவனாய் இருந்தவன் மூலம் பிறந்த குழந்தையை முதல் கணவன் வீட்டிற்கு எடுத்தும் செல்லலாம்.

கணவனை இழந்தவள், கணவனின் சகோதரனை மணந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறாள். அதே சமயம் முதல் கணவனுக்குப் பிறந்த குழந்தைகள் அவனுடைய உறவினர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன உறவினர்கள் இல்லாதபோது ஊர்க்கவுண்டன் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும்.

## ருது சடங்கு

ஒரு பெண் 'ருது' வானால் ஊருக்கு வெளியில் குடிசை அமைத்து, மூன்று வாரங்கள் வரை தங்கி இருக்கச் செய்

கிறார்கள். பெண்ணுக்கு உறவினராக இருப்பவர்கள் உணவு எடுத்துச் சென்று கொடுக்கின்றனர். தீட்டு முடியும் வரை பெண் வெளியில் வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

பிள்ளை பிறந்தால் சடங்கு எதுவும் செய்வதில்லை. ஆனால் குழந்தைப் பிறந்த 15 ஆம் நாள் பெயர் வைக்கிறார்கள். தாய், உட்கார்ந்தே குழந்தையைப்பெற்றெடுக்கச் செய்கிறார்கள். குழந்தை பிறந்த பிறகு தாய்க்கு ஐந்து நாட்கள்வரை **பத்தியம்** வைக்கின்றனர்.

## சாவுச் சடங்கு

வெள்ளாளர்கள், இறந்தவர்களைப் புதைக்கிறார்கள். அதேசமயம் கர்ப்பவதியான ஒரு பெண் இறந்துபோனால் எரித்து விடுகிறார்கள்.

இறந்து போனால், பிணத்துடன் ஒரு கட்டு புகையிலையைப் புதைக்கிறார்கள். புதைத்த இடத்தை அடையாளம் காட்டும் வகையில் மண்ணைக் குவித்து வைப்பர்; கற்களையும் வைக்கிறார்கள். இறுதிச் சடங்கின்போது துப்பாக்கிக் குண்டுகளை வெடிக்கிறார்கள். பிணத்தைப் புதைக்கும்போது கூடியிருப்பவர்கள் அனைவரும் ஒரு பிடி மண்ணைப் போடுகிறார்கள்.

யாருக்காவது உடம்பு சரியில்லை என்றால் மருந்து கொடுப்பதில்லை. பூசாரியைக் கூட்டி வந்து, நோயாளி எந்தக்கடவுளுக்குக் கோபம் உண்டாகும்படிச் செய்தார் என்று குறி கேட்கிறார்கள்.

கடவுள் கோபத்தால்தான் நோய் வருகிறது; கோபம் தீர்ந்தால் நோய் போய்விடும் என்று நம்புகிறார்கள்.

## திருமணம்

திருமணத்தை முறைப்படி பெற்றோர் பார்த்துச் செய்தால் அதை நல்ல திருமணம்என்று கூறுகின்றனர்.

காளைச் சண்டை மூலம் ஆண்கள் தங்கள் வீரத்தைக் காட்டுகின்றனர். சிலர் இந்த வீரர் களுக்குத் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்றனர்.



# ஏலகிரிலை மலையாளிகள்

ஏலகிரிமலை மலையாளிக்கும், சவ்வாதுமலைமலையாளிக்கும் இடையே வேறுபாடுகள் அதிகம் இல்லை எனலாம்.

ஏலகிரி மலை வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் வாணியம் பாடியிலிருந்து 16 கி. மீ. தொலைவிலும், ஜோலார்பேட்டை யி லிருந்து 5. கி. மீ. தொலைவிலும் இருக்கிறது. இம்மலை சுமார் 720 மீ. உயரம் இருக்கிறது.

இம் மலைமக்கள் காப்பி சோளம் போன்றவற்றைப் பயிர் செய்கின்றனர். ஆங்கிலேயர் காலத்தில் இம்மலையில் பலவகைப் பழத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன; இன்றும் அத் தோட்டங்கள் உள்ளன ஏலகிரி மலையாளிகள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். சோளம், கம்பு, நெல், பருப்பு, கொள்ளு, உளுந்து, காப்பி, சாமை போன்ற தானிய வகைகள் அதிகமாக விளைகின்றன.

ஏலகிரி மலையாளிகள் திருமணத்திற்காகஅதிகமுயற்சி எடுத்துக்கொள்வதில்லை. மணமகளின் தந்தை மணமகனைத் தேர்ந்தெடுக்கிறார். பெண்ணின் தந்தை, மணமகனின் ஊருக்கு ஆறு பேர்களாகச் சென்று ஊர்க் கவுண்டனைச் சந்திக்கிறார். கவுண்டனுடன் நட்பு கொள்கிறார். இதற்கு இருவரும் அணைத்துக் கொள்கிறார்கள். பிறகு

பெண்ணின் தந்தை, தான் வந்த நோக்கத்தைப்பற்றிக் கூற, ஊர்க் கவுண்டன் ஊராரோடுகலந்துபேசிமுடிவெடுக்கின்றான். நல்ல முடிவாக இருந்தால் மட்டும் பெண்ணின் தந்தை விருந்து வைக்கிறார். பிறகு திருமணம் நடைபெறும்

மணமகளின் வீட்டினர் பெண்வீட்டிற்கு வரும்போது, அந்த வீட்டில் உள்ள பெரிய மருமகள்தான் அனைவரையும் வரவேற்கிறார். மணமகன் வீட்டார் கொண்டு வந்த கைத்தடி முதலிய பொருள்களை வாங்கியும் வைக்கிறாள். பிறகு வந்தவர்களுக்கு, அவர்களுடைய நெற்றியில் சந்தனத்தைப் பொட்டாக வைக்கிறாள்.

கைத்தடி மூன்று முறைக்கு மேல் மாறிவிட்டால், அது அபசகுனம் என்று கருதுகின்றனர். இதற்காக அவ்வூர்காட்டுத் தெய்வத்திற்கு (தேவதைக்கு)ப் பூசை வழிபாடு செய்து திருமணம் செய்கின்றனர்.

பிறகு விருந்து நடக்கும் விருந்து முடிந்து, மணமக்களையும், மணமகன் வீட்டினர் வீடு போகும்போது, பெரிய மருமகளே அனைவரையும் நல்ல முறையில் உபசரித்து அனுப்பி வைக்கிறாள்

பொதுவாக இப்போது வடஆர்க்காடு மலையில் வாழும் மலையாளிகளின் வாழ்க்கையும் பழக்க வழக்கங்களும் மாறி வருகின்றன.

## உணவு

இவர்களின் முக்கிய உணவு கஞ்சி. கேழ்வரகால் செய்யும் களி அல்லது கூழ் மற்றொரு முக்கிய உணவாகும்.

இறைச்சிக்காக ஆடு, மாடு, பன்றி, நண்டு, எலி ஆகியவைகளையும் உண்ணுகின்றனர். பல ஊர் மக்கள் இவைகளை உண்பதில்லை. பறவைகள் கருங்குரங்குகளையும் உண்ணுவதாகத் தெரிகிறது. தெய்வத்திற்குப் பலி

கொடுக்கும் மிருகங்களைப் பின்னர் சமைத்துப் படைத்துக் கூடி உண்ணுகின்றனர். மதுபானங்களையும் (கள், சாராயம்) குடிக்கிறார்கள்.

இறைச்சியை வெள்ளி, சனிக் கிழமைகளில் உண்ப தில்லை.

## வழிபாடு

திருப்பதி வேங்கடாசலபதி இறைவனையும் திருவண்ணாமலைச் சிவனையும் வணங்குகின்றனர். திருப்பதி, திருவண்ணாமலைக்குச் சென்று வருவதைப் புனிதமாகக் கூறுகிறார்கள்; விரதமும் இருக்கிறாாகள். வெள்ளி, சனிக் கிழமைகளில் திருப்பதி சாமிக்காகவும், ஞாயிறு, திங்கள் கிழமைகளில் திருவண்ணாமலைச் சிவனுக்காகவும் விரதம் இருக்கின்றனர்.

திரௌபதி, மாரியம்மன், முருகன், பிள்ளையார், இவை தவிர, இன்னும் பல காட்டுத் தெய்வம், தேவதைகளையும் வழிபடுகின்றனர். இவற்றிற்காகப் பூசைகளையும் விழாக்களையும் செய்கின்றனர்.

பூசாரியே பூசை செய்கிறார். கோயிலில், இயற்கையான கருங் கற்களையும், இரும்புச் சூலம், கத்திஆகியவைகளையும் வைத்து அவற்றிற்குப் பூசை செய்து வழிபடுகின்றனர்.

மக்கள் விபூதி, நாமம், சிவப்பு ஆகியவற்றை அடையாளமாக வைத்துக் கொள்கிறார்கள்,

ஆடி மாதத்தில் வியாதி பரவாமல் இருக்கவும், மழைக்காகவும், விளைச்சல் பெருகவும்வேண்டி, விழா எடுக்கின்றனர். அப்போது தெய்வங்களுக்கு ஆடு, கோழிகளைப் பலியிடுகின்றனர். பலி கொடுக்கும்போது பெண்கள் பார்க்காமல் இருக்க வேண்டும். மறைவாக இருக்கச் செய்கின்றனர். பெண்கள் பார்ப்பது சாமிக்கு ஆகாது என்கின்றனர்.

## வேட்டையில் பெண்கள்

இம் மலையில் விவசாயம் முதல் தொழில், வேட்டையை முக்கியத் தொழிலாகச் செய்கின்றனர். பொங்கல், தீபாவளி ஆகிய நாட்களில் வேட்டைக்குச் செல்வதைப் புனிதமாகவும் பெருமையாகவும் இம் மக்கள் எண்ணுகிறார்கள்.

வேட்டையில் எந்த மிருகத்தையும் கொல்லாமல் வந்தால் கேவலமாகக் கருதுகிறார்கள். மிருகத்தோடு வந்தால் மேளம் அடித்து மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள்.

ஆண்களோடு பெண்களும் வேட்டைக்குச் செல்வது உண்டு.

## குழந்தையைத் தத்து எடுத்தல்

வட ஆர்க்காடு மலையாளிகள் தங்களுக்குக் குழந்தையைத் தத்து (சுவிகாரம்) எடுத்துக் கொள்கிறார்கள்.

பெண் குழந்தைகளே பிறந்து விட்டால் ஆண் குழந்தை தத்து எடுத்து வளர்த்து, தங்கள் பெண்ணுக்குத் திருமணமும் செய்து வைக்கின்றனர்.

ஏர்க்காடு மலையில் வாழும் மலையாளிகளைத் தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மாதங்களில் அதிகமாகக் காணமுடியும்.

சவ்வாது, ஏலகிரி மலைக்குள் பெண் கொடுக்கல், வாங்கல் நிகழ்கிறது.

தற்போது வட ஆர்க்காடு மலை மக்களின் வாழ்க்கையும் பழக்க வழக்கங்களும் மாறிவருகின்றன.

# கோயமுத்தூர், தர்மபுரி மலையாளிகள்

கோயம்புத்தூரிலும் மலையாளிகள்* வாழ்கின்றனர். இவர்களைப் பற்றி நாம் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

கோயமுத்தூர் மலையாளிகளும் தங்களை வெள்ளாளர் என்றே கூறிக் கொள்கின்றனர்.

## அழுதல் வேண்டும்!

இவர்கள் திருமணம் மூன்று நாள் சடங்காய் இருக்கிறது. இவர்கள் திருமணம் ஒரு வித்தியாசமானதாக இருக்கிறது. அதாவது திருமணத்தின்போது மணமகள் அழுது கொண்டே இருக்க வேண்டும். அப்படி மணமகள் அழவில்லை என்றாலும், அழ மறுத்தாலும் அவள் கெட்ட பெண்ணாக அழைக்கப்படுகிறாள். இதற்காக அழுது கொண்டே இருக்கிறாள். அழுதுகொண்டு இருப்பது போலவும் இருப்பார்களாம்.

அழும்போது மணமகள் கண்ணீர் விட்டு அழ வேண்டும் என்று எதிர்பார்ப்பர். இதற்காக நிர்ப்பந்தமும் செய்கிறார்கள்; அழும்போது கண்ணீர் வரவில்லை என்றால், அப்போது மணமகள் வாய்விட்டுச் சத்தம்

* தர்ஸன் — பர். 427 — 442.

போட்டு ஹா...... ஆ ஆ...... ஹ...... ஆ ஆ...... என்று சத்தம் எழும்படி அழ வேண்டுமாம்.

இப்படியும் சத்தம் போட்டு மணமகள் அழவில்லை என்றால் மணமகன் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள மாட்டான். மணமகன் பிடிக்கவில்லை என்றால் மணமகள் அமாமல் இருந்தால்போதும் எனத் தெரிகிறது.

தர்மபுரியில் வாழும் மலையாளிகளின் வாழ்க்கை முறை சேலம் மாவட்டத்தில் இருக்கும் சேர்வராயன் மலை மலையாளிகளின் வாழ்க்கை முறைகளோடு ஓரளவு ஒத்துள்ளது. ஆனாலும் இவர்கள் சில வழக்கங்களில் மாறுபட்டு உள்ளனர்.

தர்மபுரியில் இருக்கும் மலையாளிகள் சில சமயங்களில் 80 வயதான விதவையானாலும் திருமணம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதே சமயம் விதவையான வள், திருமணம் செய்து கொள்ள மறுத்தால், அவள் பட்டக்காரன் வீட்டிற்குப் போகவேண்டும். பட்டக்காரன் அவளை மனைவியாகவும் வேலைக்காரியாகவும்கூட வைத்துக் கொள்ளலாம்.

இந்தக் கொடுமையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே, வேறு திருமணம் செய்து கொள்ள வேண்டி யிருக்கிறது என்று சிலர் கூறினார்கள்.

# சேலம் கொல்லிமலை மலையாளிகள்

## *கொல்லிமலையின் சிறப்பு*

*கொல்லிமலை வரலாற்றுப் புகழ் பெற்றது. இம் மலை கொங்கு நாட்டுக்கு அரணாகவும், சேலம், திருச்சி மாவட்டங்களுக்கு எல்லையாகவும் இருக்கிறது.*

*கொல்லி மலையைப் 'பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரை' என்றும், இம் மலையை ஆண்ட வல்வில் ஓரி என்னும் மன்னனைக் '**கொல்லிப் பொருநன்** என்றும் '**வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை**' என்றும் சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன.*

*கொல்லி மலைக்கு,*

**'அழகு தவழ் குழல்'**
**'கட்டமண்ணு மின்னல்'**

*என்னும் புகழ்ப் பெயர்களும் உள்ளன.*

*இம் மலையின் உச்சியில் அறப்பளீசுவரர் என்னும் சிவன் கோயில் உள்ளது. இக் கோயில் சுமார் 1200 மீ. உயரத்தில் இருக்கிறது. இக் கோயிலுக்குமேற்கில் கருங் கண் கடவுள் ஒன்று அழகிய பாவையாய் பொறிக்கப் பட்டு இருந்தது. அப் பாவையைச் சங்க நூல்கள் **கொல்லிப் பாவை** என்று கூறுகின்றன.*

கொல்லிமலை நாமக்கல், இராசிபுரம் ஆகிய வட்டங்களில் தெற்கு வடக்காகச் சுமார் 30 கி. மீட்டரும்,கிழக்கு மேற்காகச் சுமார் 20 கி. மீட்டரும் பரவியுள்ளது.

கொல்லி மலையை **வேட்டைக்காரன்** மலை என்றும் கூறுகிறார்கள்.

இம் மலையில் **வரகூர் கோம்பை, முலைக் குறிச்சி, பெரிய கோம்பை, வாழைக் கோம்பை** என்னும் முக்கிய பள்ளத்தாக்குகள் இருக்கின்றன.

## வழங்கும் பெயர்

கொல்லி மலையில் வாழும் மலையாளிகளைக் கொல்லி மலையாளிகள் என்று கூறுகிறார்கள்.

கொல்லிமலை மலையாளிகள் தங்களை **மலையாளக் கவுண்டர்** என்று கூறிக் கொள்கின்றனர். இவர்களைச் சினைமலையாளிகள் என்றும் குறிப்பிடுகின்றனர். கொல்லி மலை கொங்குநாட்டில் இருப்பதால், இவர்களைக் **கொங்கர்** என்று சிறப்புடன் குறிக்கின்றனர். மேலும் ஆண்கள் கொங்கன், கொங்கக் கவுண்டன் என்றும், பெண்கள் கொங்கி, கொங்களாயி, கொங்காயி என்றும் பெயர்கள் வைத்துள்ளனர்.

இப்பெயர்களால் இவர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்த வேளாளர் இனத்தைச் சேர்ந்தவர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

## வழங்கப்படும் கதை

கொல்லிமலை மலையாளிகளிடையே அவர்கள் இனத்தைப் பற்றிய கதை ஒன்று வழங்கி வருகிறது.

தாங்கள் காஞ்சிபுரத்திலிருந்து இம் மலைப்பகுதியில் குடியேறியவர்களின் வழிவந்தவர்கள் என்பது. அப்படிக் குடியேறியவர்கள் வேளாளர் இனத்தைச் சேர்ந்தவர்கள். பின்னர், 'மலையாளி' என்று பெயர் பெற்றனர்.

காஞ்சிபுரத்திலிருந்து வந்து குடியேறியபோது, கொல்லி மலையில் வேடர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் சண்டையிட்டு வெற்றி பெற்று, அவர்களோடு கலந்து வாழ்ந்த கலப்பினமக்களே மலையாளிகள் என்றும் கூறுகின்றனர். இவர்களைப் பற்றி விரிவாக ஆராயப்பட வேண்டும். கொல்லிமலை மலையாளிகள், தங்கள் முன்னோரில் இருந்த சகோதரியை ஒரு தொட்டியனுக்கு மண முடித்து வைத்தார்களாம். இவர்கள் இம்மலைக்கு வந்த போது, தொட்டியர்கள் உணவளித்து இருப்பிடம் கொடுத்து உதவிகள் செய்தார்களாம். அதற்கு நன்றியாக இத்தகைய உறவு முறை வைத்துக்கொண்டனர். இதனை அவர்களின் சடங்குகளின் மூலம் அறியலாம்.

கொல்லி மலையில் வாழும் பள்ளர் பெண்கள், மலையாளி ஆண்களை **மச்சான்** என்று அழைக்கிறார்கள். இது ஆண் மலையாளிகளுக்குப் பிடிக்காமல் இருக்கிறது; தங்களுக்கு வெறுப்பைக் கொடுக்கிறது என்கிறார்கள்.

இம்மலையில் இருக்கும் **தொட்டியன்** இனத்து ஆண்களும் மலையாளிகளை **மச்சான்** என்று அழைக்கிறார்கள். அவர்களுடன் அன்பாகப் பழகுகிறார்கள்; அன்பாக வாழ்கிறார்கள் அதேசமயம் தொட்டியன் இனத்துப் பெண்கள் மலையாளி ஆண்களைச் சகோதரர்களாகவே கருதுகின்றனர். சில சமயம் அவர்களிடம் சற்றுக் கடுமையாகவே நடந்து கொள்கிறார்கள். 'தங்கள் உணவுக்காகத் தங்கள் சகோதரியை விற்று விட்டார்கள்' என்பதால் அவ்வாறு நடப்பதாகக் கூறுகிறார்கள்.

## கிராமங்களும் தலைவர்களும்

கொல்லி மலையில் 20 முதல் 30 வரை உள்ள கிராமங்கள் சேர்ந்த பகுதியை ஒரு நாடு என்கிறார்கள். இந்த நாட்டிற்குத் தலைவன் **மூப்பன்**. மூப்பனைப் பெரிய கவுண்டன் என்றும் சாதிக் கவுண்டன் என்றும் கூறுகிறார்கள்.

கொல்லிமலையை இம் மக்கள் நான்கு நாடுகளாகப் பிரித்துள்ளார்கள்.

ஒன்று முதல் நான்கு நாடுகள் சேர்ந்ததை ஒரு **பாட்டம்** அல்லது **பட்டம்** என்று கூறுகிறார்கள். பாட்டம் அல்லது பட்டத்திற்குரிய தலைவனைப் **பட்டக்காரன்** என்று அழைக்கிறார்கள்.

பட்டக்காரரில் வலப்பூர் பட்டக்காரனையே பெரியவனாகக் கருதுகிறார்கள்; பெரும் மதிப்பும் கொடுக்கிறார்கள். ஏனைய மூன்று நாடுகளுக்கும் ஒரு பட்டக்காரன் இருக்கிறார் நாடுகளின் எல்லா நிகழ்ச்சிகளையும் கண்காணித்தல் அல்லது மேற்பார்வையிடுதல் பட்டக்காரனின் முக்கிய வேலையாகும்.

பட்டக்காரன், தன் அதிகாரங்களைச் சாதிக் கவுண்டனுக்குக் கொடுப்பதுண்டு. இந்த உரிமையால் சாதிக் கவுண்டன் குதிரையில் செல்லவும் குடை பிடித்துக் கொள்ளவும் அதிகாரமும் உரிமையும் பெற்று விடுகிறார். இந்த உரிமை சாதாரண மலையாளிகளுக்கு இல்லை.

வயலில் முதல் விதைப்பு நாளில் முதலில் விதைக்கும் உரிமை ஊர்த் தலைவனுக்குத்தான் உண்டு. இந்த நாளில் மற்றைய மலையாளிகள், வேட்டைக்குச் செல்ல வேண்டுமாம்.

## தெய்வ நம்பிக்கையும் வழிபாடும்

கொல்லி மலை மக்கள் ஸ்ரீரங்கத்துப் பெருமாளை மிகவும் மதிக்கிறார்கள். அறப்பளீஸ்வரர் என்னும் சிவன் கோயிலும் இம் மலையில் இருக்கிறது. ஆடி மாதத்தில் கொல்லி மலையில் விழா நடத்துகிறார்கள். இந்த விழாவிற்குக் கொல்லி மலையில் உள்ள பெரும்பாலான மக்களும் வந்து கலந்து கொள்கிறார்கள்.

கொல்லி மலை, கொல்லிப் பாவையைப் பழந்தமிழரும் வழிபட்டனர். இப்போதும் வழிபாடு நடைபெறுகிறது. காற்று, மழை, இடி ஆகியவற்றால் தமக்குத்

துன்பமும் அழிவும் வராமல் கொல்லிப் பாவை காப்பாற்றும் என்று அம் மக்கள் நம்புகிறார்கள்.

கொல்லி மலை மலையாளிகள் கூறும் **கொங்காயி** என்னும் தெய்வமே கொல்லிப் பாவை என்று கூறலாம்.

நாச்சி (Nachi), கொங்களாயி என்ற பெண் தெய்வங்கள் சிறப்பு வாய்ந்தவை.

கொங்களாயி மீது உள்ள பக்தியால்,பயத்தால் தங்கள் பெண்களுக்குக் கொங்களாயி,கொங்காயி என்னும் பெயர்களை வைத்துப் பாராட்டுகின்றனர்.

நாச்சி தெய்வ வழிபாட்டிற்குப் பெண்களை அனுமதிப்பதில்லை எல்லோரும் பேசாமல் அமைதியாக இருக்க வேண்டும். யாராவது பேசினால் தேனீக்களாலும் வேறு சில பூச்சிகளாலும் கொட்டுப் படுவார் (கடிக்கப்படுவார்) என்று நம்புகிறார்கள். நாச்சியை மண்ணிலிருந்து தோன்றிய தெய்வமாக நம்புகிறார்கள்; தோன்றுவதாகவும் கூறுகிறார்கள். இத் தெய்வம் மண்ணிலிருந்து தோன்றும்போது, சேவலின் கொண்டையைப் போல இருக்கும் என்றும் கூறுகிறார்கள்.

கொங்களாயி தெய்வத்திற்கு உருவம் உண்டு. இத் தெய்வத்தை வழிபடும்போதும், விழாவின் போதும் இசைக் கருவிகளை இசைத்து வழிபடுகிறார்கள். இத் தெய்வத்தை ஒவ்வொரு முறையும் பயிர்த் தொழில் செய்ய துவங்கும் முன்பு சிறப்பாக வழிபாடு செய்கிறார்கள். இவ்வாறு தொழில் துவங்கும் முன்பாக வழிபாடு செய்தால் அதிகமான விளைச்சலைக் கொடுக்கும் என்று நம்புகிறார்கள். வழிபாட்டால் கொங்களாயி மனம் குளிர்ந்து, அதிகமாக விளைய அருள் புரிவாள் என்னும் நம்பிக்கையே முக்கியக் காரணமாக இருக்கிறது.

ஸ்ரீரங்கம் கோயிலுக்கு மாடுகளை வேண்டுதலாக விடுகிறார்கள். மாட்டை மேளத்துடன் கொண்டு செல்

கின்றனர். அப்போது தலையில் தலைப்பாகையும், அதில் இறகுகளையும் செருகிக் கொண்டு செல்வார்கள்.

ஸ்ரீரங்கம் கோயிலுக்கு விடப்பட்ட மாடு இறந்து போனால் புதைத்து புதைத்த இடத்தில் அலரிச் செடியை நடுகிறார்கள். இதை மலையில் உள்ள வைணவர்களும் செய்கிறார்கள்.

சிவன் கோயிலுக்குப் பொலி எருதுகளை விடுகிறார்கள். இந்தக் காளை இறந்துவிட்டால் மிகவும் மரியாதையுடன் கொண்டு சென்று புதைக்கிறார்கள். **திருமஞ்சன பாட்டன்*** என்னும் தெய்வத்தையும் வணங்குகிறார்கள்.

பேய் பிடித்தவனைப் பட்டவன் (பாட்டன்) பிடித்ததாக நம்புகிறார்கள்.

திருமஞ்சன பாட்டன் கோயிலில் வழிபாடு செய்யும் போது, தலை முடியை காணிக்கைக் கொடுக்கிறார்கள். கொடுக்கப்படும் தலை முடியை ஒரு மரத்தில் வைத்து ஆணி அடிக்கிறார்கள். அல்லது மரத்தின் மீது வீசி எறிகிறார்கள். இப்படிச் செய்வதால், பிடித்துள்ள ஆவி ஓடிப் போய் விடுவதாக நம்புகிறார்கள்.

பயங்கரமாக இறந்து போனவர்களின் ஆவியே 'பாட்டன்' என்று கூறுகிறார்கள் இந்த ஆவி மிகவும்பொல்லாதது என்கிறார்கள்.

பாட்டன் பிடித்தவரை, மிகவும் நல்லவர்களாக உள்ளவர்கள் என்று மதிக்கிறார்கள். அவர்களுக்கு எந்தத் துன்பத்தையும் செய்ய விரும்புவதில்லை பாட்டன்தெய்வத்தை வழிபாடு செய்யும்போது பலியிடுகிறார்கள். பலியிடுவதால்தான் பாட்டன் மிகவும் மகிழ்வதாகவும், அப்படி

---

* தர்ஸன் பக்கம் 432இல் கூறும பட்டவன்ஸ் என்னும் தெய்வம் இதுவாக இருக்கவேண்டும்.

மகிழ்ந்ததை ஆவி பிடித்தவன் பேச்சால் அறிகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

பலியிட்டபிறகு, பாட்டன் தெய்வத்திற்குப் படையலில் பலியிட்ட மிருகத்தின் தலையை வைத்துப் படைக்கிறார்கள். இது தவிர காளி, மாரி, பிடாரி ஆகிய தெய்வங்களையும் வணங்குகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

கொல்லி மலை மலையாளிகளிடம் காளி வழிபாடு மிகவும் பரவலாக இருக்கிறது. தினமும் வணங்குவர். ஆண்டுதோறும் விழா நடத்துகிறார்கள். இவர்கள் சிவனுடன் தொடர்புப்படுத்திக் காளியைக் கூறுவதில்லை.

இங்குக் காளி, தனித்தெய்வமாக விளங்குகிறது. காளியைக் கொல்லி மலை மக்கள் ஊர்த் தெய்வமாக வழிபடுகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. மாரியம்மன் வழிபாடும் இவர்களிடம் இருக்கிறது; மாரியம்மனுக்கு ஊர்தோறும் கோயில் இருக்கிறது. ஊருக்குச் சற்றுத்தொலைவில் மாரியம்மன் கோயிலை அமைத்துள்ளனர்.

மாரியம்மனே காலரா,அம்மைபோன்றநோய்களுக்குக் காரணம் என்று நம்புகிறார்கள். இந் நோய்கள் வர, மாரியம்மனின் கோபமே காரணம் என்கிறார்கள்.மாரியம்மனுக்கு வழிபாடு செய்தால், கோபத்திலிருந்து விடுபட்டு மகிழச் செய்து, நோய்களிலிருந்துதப்பித்துக்கொள்ளலாம் என்றும் நம்புகிறார்கள். மாசி மாதந்தோறும் மாரியம்மனுக்கு (மாரியாயி) விழா எடுக்கிறார்கள்.

பிடாரி என்னும் தெய்வத்தையும் வணங்குகிறார்கள். காளியைப் போன்ற ஒரு தெய்வம் பிடாரி என்கிறார்கள். பிடாரி தங்கள் ஊரை,நாட்டைஅழிவிலிருந்துகாத்துவருவதாக அவர்கள் நம்புகிறார்கள்.

ஊர்த் திருவிழாவின்போது பிடாரிக்கும் விழா எடுக்கிறார்கள். பிடாரி, தங்களிடம் அன்புடையவள் என்றும்

எதிரிகளிடம் கோபம் கொண்டுள்ளாள் என்றும் கூறுகின்றனர்.

புரட்டாசிமாதச் சனிக்கிழமைகளில் நாமக்கல் வட்டம் கபிலமலை அடிவாரத்தில் ஹரிதாசர்களும், மலையாளிகளும் பெருங் கூட்டமாகக் கூடுவர். கூடி, விஷ்ணுவை வழிபாடு செய்கிறார்கள். நாமக்கல் நகருக் கடுத்துள்ள சேந்தமங்கலம் செல்லும் வழியில் உள்ள நைனாமலை என்னும் ஊர், சேலம் மாவட்டத்தின் 'திருப்பதி' என்று கூறுகிறார்கள்.

கொல்லிமலையில் ஆனி மாதத்தில், 'கவுண்டன் சிறப்பு' என்னும் விழாவைக்கொண்டாடுகிறார்கள். இந்த விழாவைப் பெரிய அளவில், மிகவும் சிறப்பாக நடத்துகிறார்கள்.

### வீடுகள்

இவர்கள் வீடுகள் மூங்கில் பட்டைகளினால் ஆனவை. காட்டுப் புல்லால் கூரையை வேய்கின்றனர். வீடுகளுக்குப் பரண் வைத்துக் கட்டுகின்றனர். பரணுக்குச் செல்ல ஏணியைப் பயன்படுத்துகிறார்கள்.

வீட்டுக் கூரை வீட்டுச் சுவருக்குக் கீழே கொஞ்சம் நீண்டிருக்கும். இது மழையால் வீட்டுச் சுவர் சேதம் அடையாமல் பாதுகாக்கிறது. குனிந்து செல்லும்படியாக இவர்களது வீடுகள் உள்ளன. திண்ணை வைத்து வீடு கட்டுகிறார்கள். திண்ணையின் கீழே சிறிய சந்து வைத்திருக்கிறார்கள் கோழி, பன்றிகளை இரவில் அடைத்து வைத்துக் கொள்ளவும் அத்திண்ணை பயன்படுகிறது.

வீட்டுக் கூரையில் கந்தல் துணியையும் ஒரு கட்டு புல்லையும் வைக்கின்றனர். இது ஆந்தை, கோட்டான் முதலியவை வீட்டின் மேல் உட்காராமல் இருக்க உதவும் என்கிறார்கள்.

வீட்டிற்குப் பக்கத்தில் பட்டி அமைத்து ஆடுகளை அடைக்கிறார்கள்.

## கொல்லிமலை மக்கள் திருமண முறை

கொல்லிமலை மலையாளிகளிடையே இருக்கும் திருமண முறை வித்தியாசமானதாய் இருக்கிறது. அம்மாவின் மூத்த சகோதரி மகளை மணந்து கொள்ளுவதை நல்லதாகவும் பெருமையாகவும் நினைக்கிறார்கள். இந்த முறையில் ஆணைவிடப் பெண்ணுக்கு அதிக வயது இருந்தபோதும் திருமண உறவை வைத்துக்கொள்கிறார்கள்.

ஒரு பெண் தன் கணவனை விட்டு அதே இனத்து ஆணுடன் தொடர்பு வைத்துக்கொள்ளச் சம்மதிக்கின்றனர் அதே இனத்து ஆணைத் திருமணமும் செய்து கொள்ளலாம். அதே சமயம் கணவனுக்கு மக்கள் மீது உரிமை உண்டு. ஒருவன், ஒருவனின் மனைவியை ஒரு நாளைக்கு மட்டும் கடனாகக் கொடு என்று கூறினாலும், 'கடனாகக் கொடுப்பாயா?' என்று கேட்டாலும் கோபப் படுவதில்லை.

பல மனைவியரை மணக்கும் முறை இம்மலை மலையாளிகளிடமும் இருக்கிறது. இம் மலையில் திருமணத்திற்காக அதிக அக்கரையை யாரும் எடுத்துக் கொள்வதில்லை. ஒரு சின்ன அறிமுகத்தினால் திருமணத்தை எளிதாக முடித்து விடுகிறார்கள். திருமணத்திற்கு முன்பு குல தெய்வத்திற்கு கோழியைத் தருகிறார்கள். குல தெய்வத்திற்குப் பொங்கல் வைக்கிறார்கள். பலியிடுகிறார்கள். திருமணத்தின்போது பெண்ணுக்கு ஆடும் அரிசியும் கொடுத்து அழைக்கிறார்கள். மணமக்களுக்கு மாலை அணிவிக்கிறார்கள்.

மணமகன் தாலியை மணமகள் கழுத்தில் வைப்பான். ஊர்க்கவுண்டன் அதை முடிச்சுப் போடுவார். தாலி கட்டி முடிந்த பிறகு மணமக்கள் 7 அடிகள் நடக்கிறார்கள். பெரியவர்கள் வாழ்த்துதலைப் பெற அவர்கள் காலில் விழுகிறார்கள்.

மணமக்கள் தங்கள் மாலையைக் கழற்றிக் கிணற்றில் போடுகிறார்கள். மாலைகள் ஒன்றாய் மிதந்தால், ஒன்றாய் வாழ்வார்கள் என்று நம்புகிறார்கள்.

## சில விந்தையான பழக்கங்கள்

கொல்லி மலைப் பெண்கள் கொசுவம் வைத்துச் சேலை கட்டுவதில்லை. மார்பைத் துணியால் மறைத்துக் கொள்கிறார்கள். முன்பு பெண்கள் வெள்ளை நிற ஆடையை மட்டும் அணிந்திருந்தார்கள். இப்போது பல வண்ண ஆடைகளையும் அணிகிறார்கள்; அதே சமயம், வெள்ளைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

காட்டில் பெண்கள் வேலை செய்யும்போது மார்பை மறைத்துக் கொள்கிறார்கள் மறைக்காமல் போனால் கடவுளின் கோபத்திற்கு ஆளாவோம் என்று கருதுகிறார்கள். ஏனைய மலையாளிகளிடம் இருப்பதைக் காட்டிலும் இவர்களிடம் அபூர்வமான பழக்கங்கள் சில உள்ளன.

மழைக்காக ஒருவர் மீது ஒருவர் சாணியை அடித்துக் கொள்கிறார்கள். பிள்ளையாரைக் குப்பையில்குழி எடுத்து சாணத்தில் புதைத்து வைக்கிறார்கள். இந்தச் சமயத்தில் பன்றி வேட்டைக்குச் செல்கிறார்கள். பன்றியை ஈட்டி போன்ற ஆயுதத்தால் குத்திக் கொல்கின்றனர். இவர்கள் ஆனிமாதத்தின் முதல் நாளும் வயலில் விதைப்பதற்கு முதல் நாளும் முக்கியமாக வேட்டைக்குச் செல்கிறார்கள்.

மழை வந்த பிறகே குப்பையில் சாணத்தில் புதைத்த பிள்ளையாரை எடுக்கிறார்கள் தலையில் உண்டாகும் ஒருவகை (தலைவலி உட்பட) நோய்க்குச் செவ்வாய்க் கிழமையில் சூரியனுக்கு சிவப்பு நிறச் சேவலைப் பிரார்த்தனை செய்து அளித்து விடுகிறார்கள். தூக்கத்தில் கடித்துக் கொள்ளும் பழக்கம் உள்ளவர் ஊரில் உள்ள பெண் கடவுளுக்குப் படைத்த உணவைத் திருடிச் சாப்பிட்டால் அது நின்றுவிடும் என்று நம்புகிறார்கள்.

நோய்க்கு அதிகம்பயப்படுகிறார்கள்;ஒரு குடும்பத்தில் யாருக்காவது அம்மைநோய், பெரியஅம்மை, காலரா வந்தால் சமவெளிப் பகுதிக்குக் கொண்டு சென்றுவிட்டுவிடுகிறார்கள். பிழைத்து வந்தால் மீண்டும் சேர்த்துக் கொள்கிறார்கள். தொழுநோய் வந்தவர்கள் யாராய் இருந்தாலும் அடித்துக் கொன்று விடுகிறார்கள். அல்லது விரட்டி விடுகிறார்கள்.

சாவுச் சடங்கின்போதும் பிணத்தை எடுக்கும்போதும் துப்பாக்கியால்வானத்தை நோக்கிச் சுடுகிறார்கள். பிணத்தோடு புகையிலை, சுருட்டு, வெற்றிலைப் பாக்கை வைத்துப் புதைக்கிறார்கள். ஒருவனுடைய நிலத்தில்அதிகமான வேலைகள் இருந்தால் ஊர் மக்களை அழைக்கலாம்; அவ்வாறு வருபவர்களுக்கு உணவு மட்டும் கொடுத்தால் போதும்; அறுவடைசமயத்தில் 'போர் அடித்தலில்'ஒருவன் வேலைக்கு வந்துள்ளேன் என்றாலே போதும். வேலை இல்லாவிட்டாலும் கூலியைக் கண்டிப்பாய்க் கொடுக்க வேண்டும். இதனால் சில சமயம் கூலியைக் கடன் பட்டும் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இவர்கள் எருதுஆட்டம் என்னும்ஒருவகைஆட்டத்தை ஆடுவார்கள். இந்த ஆட்டத்தைப் பொங்கலுக்குப் பிறகு தான் ஆடுவார்கள்.

இப்போது பலவிதத் தொடர்பு வசதிகளால் கொல்லி மலை மக்களின் பழக்க வழக்கங்களில் சில மாற்றமடைந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

---

* 'தமிழ்நாட்டுப் பழங்குடிமக்கள்'—டாக்டர் சு. சக்திவேல்

## கொல்லிமலை மக்கள் பேச்சு

கொல்லிமலை மலையாளிகளின் பேச்சை விரிவாக ஆராய்ந்து வருகின்றனர். சில சொற்களை மட்டும் இங்கே எடுத்துக்காட்டுக் காண்போம்.

| | | |
|---|---|---|
| ஆயப்பா | — | தாயினுடைய தந்தை |
| ஆயம்மா | — | தாயினுடைய தாய் |
| பாசப்பா | — | தந்தையினுடைய தந்தை |
| பாசம்மா | — | தந்தையின் தாய் |
| நங்கை | — | மனைவியின் தங்கை |
| இசுக்குட்டி | — | பன்றி |
| அணத்தான் | — | அணில் |
| ஓரிசந்தி | — | விருந்து |
| உருவாயி | — | ரூபாய் |
| பிசாத்து | — | பேய் |
| சேடி | — | பெண்தோழி |
| சாமக்கிளமெ | — | வியாழக்கிழமை |
| கேந்து | — | காமம் |
| முச்சு | — | முத்தம் |
| மேசம் | — | பருவமடைதல் |

# சேர்வராயன்மலை மலையாளிகள்

## மலையின் இருப்பிடமும் சிறப்பும்

சேலம் மாவட்டத்தில் உள்ள சிறந்த மலைகளுள் சேர்வராயன்மலை தலை சிறந்ததாகும். இம் மலை சுமார் 5342 அடி உயரமும் சுமார், 27 கி. மீ. நீளமும், சுமார் 19 கி. மீ. அகலமும் உடையது. சுமார் 250 சதுர கி. மீ. பரப்பளவுள்ள இம்மலையில் பல உயரமான சிகரங்கள் உள்ளன. முன்பு வெள்ளையர் குறிப்பிட்ட பெயர்களில் இன்றும் வழங்கப் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| பிளான் பில் மலை | — 5410 | அடிகள் |
| பாலமடீஸ் | — 5370 | |
| காவேரிசிகரம் ,, | — 5086 | ,, |
| இரட்டைச்சிகரம் ,, | — 4855 | ,, |
| பிஷர்ஸ் மலை | — 4828 | ,, |
| சர்ச் மலை | — 4813 | ,, |
| பிராஸ்பக்ட் பாயிண்ட் | — 4759 | ,, |
| லேடீஸ் சீட் | — 4548 | ,, |
| பகோடா பாயிண்ட் | — 4507 | ,, |

முதலியசிகரங்கள் சிறப்பு வாய்ந்தவை. இதன் பெயர்களே புதுவிதமானவை.

இம் மலையின் ஒருபுறம் 'ஏர்க்காடு' என்னும் கோடை வாழ்விடம் அமைந்துள்ளது. 'சேலத்துக் காஷ்மீர்' என்று கூறலாம். அத்தனை சிறப்பு வாய்ந்தது.

இம் மலையில் கடுக்காய், சந்தனம், மூங்கில், சிலவகை முக்கிய மரங்கள் அதிகம் உள்ளன. பலவகையான பழ மரங்களும் இருக்கின்றன. 'பாக்சைட்டு' என்னும் கனிப் பொருள் இம் மலையின் ஒரு பகுதியில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இம் மலையில் காப்பிச் செடிகள் பயிரிடுதல் முக்கியத் தொழில்.

## தெய்வ நம்பிக்கையும் வழிபாட்டு முறையும்

இங்கு, மரங்கள் அடர்ந்த இடத்தில் கோயிலை அமைக்கின்றனர். இந்த இடத்தைப் புனிதமாக மதிக் கின்றனர். இந்த இடத்திலுள்ள மரங்களடர்ந்த தோப் பைப் 'புனிதமான தோப்பு' என்கிறார்கள். இத்தகைய கோயில்கள் ஊருக்கு வெளியில்தான் இருக்கின்றன. கற்களை வைத்தும் வணங்குகிறார்கள். இவைகளை இடி மின்னலாகக் கருதுகிறார்கள்.

இவர்கள், கடவுளிடம் பயமும் பக்தியும் உடையவர் களாய் இருக்கிறார்கள். கடவுள் கோபப் படுவார் என்பதற்காக மரத்தை இழைப்பதில்லை. வீட்டிற்கு ஓடு போடுவதில்லை. நிலத்தைச் சங்கிலி கொண்டு அளக்கவும் அனுமதிப்பதில்லையாம். சிவன், விஷ்ணு மற்றும் வேறு சில சிறு தெய்வங்களையும் இவர்கள் வணங்குகிறார்கள்.

இவர்கள் முன்னோர்கள் பூணூல் அணிந்திருந்தார் களாம். குறிப்பாக, இந்து மதத்தையும் இந்துமதத்தெய்வங் களையும் வணங்குகிறார்கள் எனலாம். இவர்கள் பெயர்கள் இந்துக் கடவுளின்பெயர்களாகவே இருக்கின்றன; பச்சை, பச்சையப்பன், கருப்பன். சின்னண்ணன், பெரியண்ணன், பரிய்முக்கன், இராமன், லட்சுமணன், கிருஷ்ணன் முதலி யன. சில இடங்களில் திரௌபதி அம்மன் கோயில் இருக்

கின்றது. இக்கோயிலில் எட்டு சிறு தெய்வங்களின் உருவங்களையும் வைத்துள்ளனர்.

சிவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தி முதலியவிழாக்களைக் கொண்டாடுகிறார்கள். ஆனால், இவற்றின் காரணம் வித்தியாசம் தெரியாதவர்களாய் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

புரட்டாசிச் சனிக்கிழமைகளில் இவர்கள் விரதம் இருக்கிறார்கள். வெள்ளி, சனி ஆகிய கிழமைகள் விஷ்ணுவுக்கும், ஞாயிறு, திங்கள் ஆகிய கிழமைகள் சிவனுக்கும் உகந்த நாட்களாகக் கருதுகிறார்கள்.

நோய்க்குக் காரணம் பேய் பிசாசு போன்றவைகளே என்றும், மந்திரக் கயிற்றைக் கட்டுவதால் தப்பிக்கலாம் என்றும் இம் மக்கள் எண்ணுகிறார்கள்.

சாமியை வணங்கக் கீழே விழுந்து வணங்குகிறார்கள், கடவுள் சிலைகளுக்குப் பூ மாலைகள் போடுகிறார்கள்; நகைகளை அணிவிக்கிறார்கள். விளக்குக்காட்டி, மணி ஆட்டிக் கற்பூரம் காட்டிக் கூடி இருப்போர் மீது புனித நீரைத் தெளிக்கிறார்கள். ஒவ்வொரு கோயிலுக்கும் பூசாரி இருக்கிறார்.

திரௌபதி அம்மன் கோயிலில் நடைபெறும் பூசையின் போது மஞ்சள் பொடியைக் கூடியிருக்கும் அனைவருக்கும் கொடுப்பார்கள்.*

சிலைகள், கல், பித்தளை, மண்ணால் செய்தவைகளாக உள்ளன. கோயில் திருவிழாவின்போது இங்குத் தேரைப் பயன்படுத்துகிறார்கள். தேருக்கு வாழை, காட்டுக் கொடிகள், காட்டுத் தழைகளால் அலங்கரிப்பார்கள்.

---

* தென்னார்க்காடு: விழுப்புரம், செஞ்சி வட்டங்களில் திரௌபதி, கன்னிகா பரமேஸ்வரி கோயில் விழாவில் மஞ்சள் பொடியைக் கொடுப்பார்கள் சில இடங்களில் குங்குமத்தையும் கொடுப்பார்கள்.

திருவிழாவின்போது பொட்டு வைத்துக் கொள்வார்கள். நீலம், கருஞ்சிவப்பு முதலிய நிறங்களால் பொட்டு வைக்கின்றனர். நெற்றியில் கோடும் இழுத்துக் கொள்வார்கள். திருவிழாவின்போது, வழிபாட்டில் தலைப் பாகைக் கட்டிக்கொள்கிறார்கள். தலைப் பாகையிலும், காதுகளிலும் (Artemisia anstriaca uar orientalis) சிவப்பு நிறமான பூக்களையே செருகிக் கொள்வார்கள்.

திருவிழா ஆரம்பிக்கும்போது பிள்ளையாருக்குப் பூசை செய்கிறார்கள்; பொங்கல் வைத்தும் படைக்கிறார்கள்.

திருவிழாவின்போது வாழை மரங்களை வணங்குகிறார்கள். அப்போது ஒருவர் கத்தியுடன் 'கோவிந்தா,' 'கோவிந்தா' என்று கூவ, அனைவரும் கூவுகிறார்கள். பிறகு அந்த வாழை மரத்தை எடுத்துக்கொண்டு மேளத்துடன் கொண்டு சென்று கோவிலுக்கு முன்பு வைக்கிறார்கள். இந்த மரத்திற்குக் கற்பூரம் ஏற்றித் தீபாராதனை காட்டுகிறார்கள்.

கற்பூரம் காட்டியபிறகு கத்தியைப் பிடித்து வந்தவருக்கு 'மிரல்' வர வைக்கிறார்கள். மிரல் வருகிறது. கூடியிருப்பவர்கள் மருள் வந்தவரிடம் மழை, விளைச்சல் பற்றிக் (கணி) கேட்கிறார்கள். அதே சமயம் மருள் வருபவரைப் பூசாரி கயிற்றால் அடிக்கிறார். இந்தச் சமயம், ஆட்டை வெட்டுவது போலவும் இரத்தத்தைப் பூசாரி குடிப்பது போலவும் பாவனை செய்கிறார்கள். அதன் பிறகு தனியே ஆட்டை வெட்டி உண்பார்கள்.

திருவிழாவிற்கு மேளத்தைப் பயன் படுத்துகிறார்கள். சாமியைக் கோவிலிலிருந்து வெளியே கொண்டு வரும்போது மேளத்தை வேகமாக அடிக்கிறார்கள்.

இரண்டு பூசாரிகளுக்கு வெள்ளை ஆடைகளையும் மல்லிகைப் பூப்போன்ற காட்டுப் பூக்களைச் சேர்த்துக் கட்டிய மாலைகளையும் அணிவிக்கிறார்கள். இதன் பிறகு

ஒரு பெண் தெய்வச் சிலையை இருவர் தூக்கி வருகிறார்கள். இன்னொருவர் புனித நீரையும் ஒரு (வெள்ளைப்) பாத்திரத்தில், நெருப்பையும் கொண்டு வருவார். கூடியிருக்கும் அனைவர் மீதும் புனித நீர் தெளிக்கப்படும். தெளிக்கும் நீர் தங்கள் மீது படவேண்டும் என்று அனைவரும் முந்துவார்கள்.

கோயிலிலிருந்து கொண்டு வந்த சாமியை மரக்குதிரை மீது அலங்கரித்து, மலையின் உச்சிப் பகுதிக்குத் தூக்கிச் செல்வார்கள். மலையின் உச்சியில், ஒரு பல்லக்குமீது சாமியை வைத்து நான்கு . பக்கமும் கொஞ்சம் கொண்டு சென்று திரும்பும்போது தேங்காய் உடைப்பார்கள். 'அப்போது பழம், தானியங்கள்,காசுகளைக் காணிக்கையாய்த் தருவார்கள்.

இந்தக் காணிக்கையை எடுப்போர், 'எப்போதும் கடவுளுக்கு நம்பிக்கை உள்ளவராக இருப்போர்' என்கிறார்கள். அப்போது பெரியபூசாரி, தோல் சாட்டையால் 15 அடிகளைக் கொடுக்கிறார். அதனைக் கடவுள் அடிப்பதாக நினைத்து மகிழ்ச்சியாய் வாங்கிக் கொள்கிறார்கள் இதன் பிறகு, சாமியைக் கோயிலுக்குக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். சாமிக்குச் சாமரமும், பூவேலைப் பாடுள்ள குடையையும் வைத்திருக்கிறார்கள். சாமரம் வீசியே கடவுள் சிலையைக் கொண்டு செல்கிறார்கள்.

சேர்வராயன் மலையில், கோயிலுக்கு அருகில் உள்ள குளத்தில், குழந்தை பிறக்க வேண்டிக் கத்துகிறார்கள் குளத்து நீரை எடுத்துத் தம் உடலின் மேலே தெளித்துக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் காவேரி அம்மனுக்கு இம்மலையில், மே மாதத்தில் திருமண விழாவைச் சிறப்பாகச் செய்கிறார்கள். காவேரி அம்மன் இம் மலையில் வாழ்ந்து இறந்ததாகக் கருதுகிறார்கள். இக்கோயில் ஒரு தோப்பில் இருக்கிறது. இங்குள்ள மலையிலிருந்து ஒருவழி (குகைப்

பாதை) மலையின் உச்சிக்கும் மற்றொரு பாதை கரடிக் குகைக்கும் செல்வதாகக் கூறுகிறார்கள்.

சேர்வராயன் மலையில் நடக்கும் இத் திருவிழாவின் போது பாம்பு நடனம், எருது ஆட்டம் மிகச் சிறப்பாக நடக்கும். இந்த நடனத்தின்போது இசைக் கருவிகளை வாசிக்கிறார்கள். இந்த நடனத்தைப் பார்க்க மலையின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரளாக வந்து கூடு வார்கள்.

இவர்கள் திருவிழாவுக்கு வருபவர்க்கு உணவு சமைத்துக் கொடுக்கிறார்கள். திருவிழாவில் மலையாளிகள் தான் சாமியைத் தூக்க அனுமதிக்கப்படுவார்கள்.

சாமி வைக்கப்பட்ட தேர் சென்ற பிறகு பழம், விதைகள், காசுகளை வீசி எறிகிறார்கள்.

காவேரி அம்மனை மலையின் உச்சிக்குக் கொண்டு வந்து காவேரி நதியை நன்றாகப் பார்க்கும்படி ஒரு பீடத்தில் வைக்கிறார்கள். அங்குப் பூசாரி சில மந்திரங்களைச் சொல்கிறார். இந்த உச்சிப் பகுதியிலிருந்து பெரும்பாலான ஊர்களைப் பார்க்கமுடியும். காவேரி அம்மனை இந்த உச்சியில் வைத்து வழிபடுவதற்கு மலையாளிகள், 'கடவுள் எல்லா மக்களையும் பார்த்துச் சீரான வாழ்க்கையை அருள் செய்கிறார்' என்று காரணம் சொல்கிறார்கள்.

கோயிலின் முன்னால்தான் வழக்குகள் யாவும் (விசாரிக்கப் பட்டுத் தீர்த்துக் கொள்கிறார்கள். வழக்கு சமயத்தில் சாமிகளுக்கு முன்பு, கற்பூரத்தை ஏற்றி உண்மை என்பதை நிரூபிக்க) ஊதி அணைக்கிறார்கள்.

மழை வேண்டி ஒருவரை ஒருவர் சாணி உருண்டைகளினால் அடித்துக் கொள்கிறார்கள். சாணியால் பிள்ளையார் செய்து எருக்குழியில் புதைத்த பிள்ளையாரை எடுப்பார்கள்.

தலை வலியைப் போக்கச் சிவப்பு நிறச் சேவலைச் சுற்றிக் கோயில் தெய்வத்திற்கு விட்டு விடுகின்றனர்.

ோயில் பூசை முடிந்த பிறகு மழை, மலைக்கு நன்மை தீமை, கால் நடை விருத்தி, நோய்கள் இவை பற்றி மருள் வந்தவரிடம் கேட்டு அதற்குப் பரிகாரம் செய்து கொள்கின்றனர். பூசையின் போதும், பிறகும் நடனம், கூத்து ஆடுகின்றனர். இவர்கள் விபூதியும் நாமமும் அணிகின்றனர்.

## குருவை மதித்தல்

சேர்வராயன் மலையில் மலையாளிகளுக்குப் பூசாரி தான் குருவாக இருக்கிறார். பூசாரி குதிரையின் மீது வரலாம். நடந்து வந்தாலும் குதிரையில் வந்தாலும் குருவுக்குக் குடை பிடிக்கிறார்கள். குரு என்பவர் பரம்பரையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். குரு பட்டத்திற்கு வர வேண்டியவர் குழந்தையாய், சிறியவயதினராய் இருந்தால் பழைய குருவின் தம்பி பட்டத்திற்கு வரலாம். எந்தத் தீட்டையும் குருதான் போக்க வேண்டும்.

குடிசையைப் பெருக்கும்போது துடைப்பம் யார் மீதாவது பட்டாலும், யாராவது உதைத்துவிட்டாலும், சிறையிலிருந்து கைதியாக வந்தாலும் அதைத் தீட்டு அல்லது குற்றமாகக் கருதுகிறார்கள்.

இக் குற்றங்களை, குரு என்பவர் தீர்த்து (நீக்கி) விடுவார். தீட்டுப்பட்டவரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, சாமிக்கும் அவனுக்கும் குறுக்காகத் திரையை அமைத்து," கடவுளின் தீர்த்த நீரைத் தெளிப்பார். தீர்த்த (புனித) நீரைக் குடிக்கக் கொஞ்சம் கொடுப்பார். பின்பு குருவின் காலில் விழுந்து தீட்டுப்பட்டவர் வணங்க வேண்டும். பிறகு தீட்டுப்பட்டவர் குருவை வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்து வைப்பார். இந்த விருந்தில் ஆடு அல்லது பன்றிக் கறி இருக்கவேண்டுமாம்.

## பொங்கல் விழா

சேர்வராயன் மலையின் பொங்கல் விழா பொதுவான் விழாவாக உள்ளது.

பொங்கல் அன்று, ஊர் மக்கள் அவ்வூரில் உள்ள மாரியம்மன் கோயிலுக்கு முன்பாகக் கூடுவார்கள். பெண்கள் வட்டமாகக் கூடிப் பாட்டுகள் பாடுவார்கள். மாரியம்மனுக்கு, பூசாரி தோலினால் ஆன கயிற்றைப் படைப்பார்.

கூடி இருப்பவர்கள், கோயிலுக்கு எதிரில் உள்ள இடத்தில் எருது ஆட்டத்தை (lull dance) ஆடுவார்கள். தயாராக உள்ள எருதுகளை ஒன்று ஒன்றாகக் கொண்டுவந்து கயிற்றினால் கட்டுவார்கள். இரண்டு பக்கமும் அதன் முனையைப் பிடித்துக் கொண்டு சுமார் 10, 15 பேருக்கு மேல் இழுக்கிறார்கள். இப்படி இரண்டு பக்கமும் வேகமாக இழுக்கும்போது மாடு அசைய முடியாதபடி நிற்கும். இநதச் சமயம் ஒருவன் மாட்டின் முகத்திற்கு நேராக கட்டிய ஒரு தோலை ஆட்டுவான்.

இப்போது கூடியிருக்கும் மக்கள் கூச்சலிட்டு மாட்டை மிரளச் செய்கிறார்கள். மக்களின் சப்தத்தைக்கேட்டு மாடு மிரள்வதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். மாட்டிற்கு சக்தி இருக்கும் வரை அது பலவகையில் குதித்துத் தன்னை விடுவித்துக் கொள்ள முயலும். கடைசியாகத் தன் சக்தியை மாடு இழந்துவிட்டது எனத் தெரிந்ததும் மாட்டைக் கட்டியுள்ள கயிற்றைத் தளர்த்தி மாட்டை விட்டு விடுகிறார்கள். இந்த ஆட்டத்தில் மாடு மிரளும்போது பலருக்குக் காயம் ஏற்படுவதும் உண்டு.

## பெண்களும் ருதுச் சடங்கும்

பெண்கள் ருதுவானால் குடிசைக்கு வெளியே தனிக் குடிசையில் 7 முதல்9 நாட்களுக்குத் தனித்திருக்கவேண்டும். இவர்கள் ஆண்களைக் கட்டாயம் பார்க்கக் கூடாது.

பார்த்தால் தீங்கு உண்டாகும் என்று நம்புகின்றனர். ருதுவான பெண்ணுக்குத் துணையாக வயதானவர்கள் தங்குகின்றனர். ருதுவான பெண் தனியாய் இருந்தால் அவர்கள் வணங்கும் கன்னித் தெய்வத்திற்கு ஆத்திரம் உண்டாகுமாம். ருதுவான பெண்ணை மஞ்சள் கரைத்த நீரால் குளிக்கச் செய்கின்றனர் பெண் வீட்டிற்கு வந்த பிறகு, குடிசையை எரித்து விடுகின்றனர். வீட்டில் 3 நாள்களுக்குத் தனியாக இருக்கச் செய்கின்றனர்.

ஒன்பது அல்லது பத்து நாள் கழித்து அமாவாசை இல்லாத நாளாகப் பார்த்துப் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வருகின்றனர்.

அவளுக்குப் பெண்கள் பெரியதாகவும் சிறியதாகவும் பொட்டு வைக்கின்றனர்.

பெண்கள் தலையில் பல சமயங்களில் சீப்பைச் செருகி வைத்துக் கொள்கிறார்கள்.

## திருமணங்கள்

## ஏனைய சடங்கு முறைகள்

சேர்வராயன் மலையாளிகள் செய்யும் திருமணம் சற்று மாறுபட்டு இருக்கிறது.

சேர்வராயன் மலையில், திருமணத்திற்கு முதல் நாள் மணமகன் தன் உறவினருடன் சிறிது தானியமும், 5 ரூபாயும் மணமகள் வீட்டிற்கு (கிராமத்திற்கு)க் கொண்டு சென்று கொடுக்கின்றான். மணமகள் வீட்டில் மண மகனின் உறவினருக்கு விருந்து கொடுத்தனுப்புவர்.

மூன்றாம் நாள் மணமகன் திருமணத்தின் போது தாலி கட்டுகிறான். தாலி கட்டிய பிறகு மணமகள் வீட்டினர் மணமகனுக்கு ஒரு விளக்கும், ஒரு பாயும், 3 கட்டு வெற்றிலையுடன் கொஞ்சம் பாக்கும் கொடுப்பார்

கள். வெற்றிலைப் பாக்கை மணமகன் வீட்டினர் அங்குள்ள அனைவருக்கும் கொடுப்பார்கள்.

திருமணத்தின்போது, மணப்பந்தலில் கடவுளாக ஒரு கல்லை வைப்பார்கள். அந்தக் கல்லைச் சுற்றி விளக்கு வைப்பார்கள். குரு திருமணத்திற்கு வருகை தரும்போது அவருக்கு மணப்பந்தலில் தனியாக ஒரு இடத்தைக் கொடுக்கின்றனர். குறிப்பாக மணமக்களுக்கு முன்பாக் குருவுக்கு இருப்பிடம் தருவார்கள்.

தாலி கட்டுவதற்கு முன்பு கூடியுள்ள அனைவருக்கும் பூவைக் கொடுப்பார்கள். தாலி கட்டும் போது பூவை மணமக்கள் மீது தூவி வாழ்த்துவார்கள்.

தாலி கட்டிய பிறகு மணமக்கள் கால்களை ஆலம் நீர்க் கொண்டு கழுவுவார்கள். அப்போது கழுவுபவர் கட்கு மணமக்கள் காணிக்கைக் கொடுப்பார்கள். பிறகு மணமக்கள் மணப்பந்தலில்உள்ள சாமிக் கல்லை மூன்று சுற்றுகள் வந்து, கல்லுக்கு நேரே வந்து, விழுந்து வணங்கு வார்கள். பிறகு மணமக்கள் இருவரும் பந்தலில் உள்ள பெரியவர்கள், உறவினர்களிடம் ஆசீர்வாதம் பெற்றதும் மணமக்களைக் குதிரை மீது உட்காரச் செய்து ஊர் சுற்று வார்கள். ஊரினர் மணமக்களுக்குப் பரிசு, காணிக்கை களைக் கொடுப்பார்கள். பிறகு மணவீட்டில் அனைவருக் கும் விருந்து தருவார்கள். விருந்து முடிந்ததும் திருமண மும் முடிந்தது எனலாம்.

திருமணம் முடிந்ததும் மணமகளை அதிகம் 15 நாள் வரை பிரிந்திருக்கச் செய்வார்கள். ஆனால் சாப்பாட் டிற்கு மட்டும் வர அனுமதிப்பார்கள். இந்த முறை, மண மக்கள் ஒருவரை ஒருவர் நேசித்துக் கொள்ளவும், அன்பை அதிகம் வளர்க்கவும் உதவும் என்கிறார்கள். இந்தச் சமயத்தில் மணமக்கள் அன்பாய் இல்லை என்று தெரிந் தால், குருவும், நாட்டானும், ஊர்த் தலைவனும், பெரிய வர்களும் அவர்களுக்குப் புத்திமதி சொல்லுவார்கள்.

சேர்வராயன் மலையாளிகள் விதவைத் திருமணத்தை அனுமதிப்பதில்லை. ஆனால் விதவைப் பெண்கள் ஆண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாம். அதிகமான வயதுள்ளவளைத் திருமணம் செய்து வைக்கும் போது கணவனின் தந்தையே பெண்ணின் [மருமகளுக்குக்] கணவனாக இருந்து பிள்ளையைக் கொடுப்பார். இவ்வாறு தந்தை மூலம் பிறந்த பிள்ளைகளை, மகன் (கணவன்) ஏற்றுக் கொள்வான்.

இது இப்போது மாறி வருகிறது.

## வேறுசில பழக்க வழக்கங்கள்

சேர்வராயன் மலையாளிகள் தலைப் பாகைக் கட்டிக் கொள்வார்கள். போர்வையை எப்போதும் போர்த்திக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு மலையாளியும், வெற்றிலை, புகையிலை உள்ள சுருக்குப் பை, நீண்ட கைப் பிடியுள்ள கொடுவாள், கத்தி, சுரைக் குடுவை, பூண் வைத்த கைத்தடி முதலியன வைத்திருப்பார்கள்.

பெண்கள் வளையலை அணிந்து கொள்வார்கள். பித்தளையால் ஆன நகைகளை விரும்பி அணிவார்கள். குறிப்பாக மோதிரம், மூக்குத்தி, காது வளையம் முதலியவைகளைப் பெரும்பாலும் விரும்புவார்கள்.

பெண்கள் நெற்றி, கைகளில் பச்சைக்குத்திக்கொள்வார்கள். பச்சை குத்திக் கொள்வதற்குக் குழந்தை முதல் அனைவரும் விரும்புவர்கள். பெண்கள் சேலை கட்டிக் கொள்ள விருப்பமும் ஆர்வமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். பெண்கள் சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். தலையில் பூ வைத்துக் கொள்வார்கள்.

இம் மலை மக்கள் சிறந்த மாட்டு வைத்தியர்களாக உள்ளனர். சேர்வராயன்மலை மலையாளிகள் மாட்டு வைத்தியத்தை நன்கு தெரிந்து வைத்திருப்பதால் வைத்திய

முறையால் வருமானமும் பெறுகிறார்கள். வைத்தியத்திற்குப் பெரும்பாலும் காட்டுத்தழை, பட்டைகளைப் பயன்படுத்துவார்கள். உடம்புக்கும் சில தழைகளை மருந்தாகப் பயன்படுத்துவார்கள்.

யாராவது இறக்கும் நிலையில் இருந்தால் உறவினர்கள், குடும்பத்தினர், அவர் வாயில் பால் ஊற்றி, நாணயத்தையும் போடுவார்கள். இறந்த உடலைச் சூரியன் மறைவதற்குள் கொண்டு சென்று விடுவார்கள். பாடை கட்டுவார்கள். பிணத்தை அமர்ந்த நிலையிலும் படுத்த நிலையிலும் கொண்டு செல்வார்கள் துணியால் உடலை மறைத்து வைப்பார்கள். புதைக்கும்போது தலை வடக்கிலும் முகம் கிழக்கிலும், கால் தெற்கிலும் இருக்குமாறு புதைப்பார்கள்.

புதைக்கும்போது மனைவி தன் தாலியைக் கழற்றிக் கணவனது பிணத்தின் காலில் வைக்க வேண்டும். கணவனை இழந்தவள் கருமாதி (காரியம்) முடியும் வரை யாரையும் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். மனைவி இறந்து விட்டால் கணவன் முகச் சவரம் செய்துகொள்வான்.

## தலைவர்களும் வாழ்க்கையும்

சேர்வராயன் மலையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவன் இருக்கிறார். இவர் சம்பளம் இல்லாதவர் எனலாம். இதற்காகக் கிராமத்தில் நடக்கும் நிகழ்ச்சியின் மூலம் ஒரு காணிக்கையைப் பெறுகிறார். விருந்தில் ஒரு பகுதியைச் சிறப்பாகக் கொடுப்பார்கள்.

கிராமத் தலைவனுக்கு அடுத்து இருப்பவன் கங்காணி என்று கூறப்படுவான். இவனுக்கு ஒவ்வொரு வீட்டினரும் இரண்டு 'பல்லம்' தானியங்களைக் கொடுக்கிறார்கள். கங்காணி பஞ்சாயத்தைக் கூட்டி, விசாரித்துத்

தீர்ப்பை வழங்கும் அதிகாரமும் உடையவன். தீர்ப்பை அபராதமாகவும் தண்டனையாகவும் கொடுக்கிறான்.

தங்காணிக்கு அடுத்தவன், **பட்டக்காரன்.** பட்டக்காரன் திருமணம், திருவிழா ஆகியவற்றில் கலந்து கொள்ள வேண்டுமென மக்கள் விரும்புவர். பட்டக்காரனுக்குத் திருமணத்திற்கு 8 நாட்களுக்கு முன்பு ஒரு ரூபாயும், ஒரு கட்டு வெற்றிலையும், சுமாராக அரைப்படி பாக்கும் கொடுப்பார்கள்.

பட்டக்காரனுக்குஅடுத்து இருப்பவன் மணியக்காரன். இம்மணியக்காரன், திருமணம் முதலான செய்திகளை நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் தெரியப் படுத்துகிறான். இதற்காக ஒருதொகையை மக்கள் கொடுக்கிறார்கள்.

சேர்வராயன் மலையாளிகள் தங்களைக் காஞ்சி மண்டலத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறுகிறார்கள். தங்களைக் 'காராளன்' என்றும் **'வெள்ளாளன்'** என்றும் கூறிக்கொள்கிறார்கள்.

சிறப்பாகக் குறிப்பிடும்போது, 'மலைக்காரன்' என்றும் 'மலை நாய்க்கன்' என்றும் அழைக்கிறார்கள். இவ்வாறு அழைப்பதை அனைவரும் விரும்புகிறார்கள்

பொதுவாக மலையாளிகள் **கவுண்டன்** என்று கூறுவது குறிப்பிடத்தக்க தாகும். சேர்வராயன் மலையாளிகள், ஏனைய மலையாளிகளை விடப் பெரிய மலையாளிகள் என்று தங்களைக் குறிப்பிடுகின்றனர். ஏனைய மலையாளிகளும், சேர்வராயன் மலையாளிகளைப் **பெரிய மலையாளிகள்** என்றே குறிப்பிடுவார்கள்.

## மக்கள் வீடும் வாழ்க்கையும்

சேர்வராயன்மலையில் வாழும் மக்கள் தாங்கள் வாழும் இடங்களைக் **காடு** என்றும் **பாடி** என்றும் கூறுகின்றனர்.

இம் மலை மக்கள் தங்கள் குடிசையைக் குடான் என்று கூறுவார்கள். காட்டில் கிடைக்கும்'காணாங்குப்புல்'எனும் ஒருவகைப் புல்லால் கூரையை அமைக்கின்றனர்.

இப் புல்லைச் சில நோய்களுக்கு மருந்தாகவும் பயன் படுத்துகின்றனர். குடிசைக்குப் பக்கத்தில் தானியங்களைக் கொட்டி வைக்கப் 'பல்லா' வை அமைத்துக் கொள்கின்றனர். தங்கள் குடிசையின் மேல் பறவைகள் (கோட்டான்) உட்காராமல் இருக்க உச்சியில் புற்பிடிகளைக் கட்டி வைக்கின்றனர். பல்லா அமைக்கும்போது கீழ்ப்பகுதியில் பலகைக்கல் வைப்பார்கள். குடிசைகளில் பரண் அமைத்துள்ளனர்.

துப்பாக்கி, அம்பு, வில், ஈட்டி ஆகிய ஆயுதங்களைப் பயன் படுத்துவார்கள். இவை தற்போது மிகவும் குறைந்து விட்டதற்காக வருந்துகின்றனர்.

அரைஞாண் கயிறு கட்டியுள்ளனர். கோவணத்தைத் **தோப்பை** என்பார்கள். பெண்கள் பச்சை குத்திக்கொள்வார்கள். ஆண்களும் பெண்களும் முதுகு, மார்பு, கைகள், கால்களில்,தெய்வம், பறவை, தேள், தங்கள்பெயர்களுடன் அழகிய கோலத்தையும் பச்சை குத்திக் கொள்வார்கள்.

காட்டு வேர்களைக் கொண்டு தயாரித்த ஒருவகைத் தூளைக் கொண்டு தங்கள் பற்களைக் கறுப்பாக்கிக்கொள்ளும் பழக்கம் இப்போது இவர்களிடம் குறைந்து உள்ளதாம்.

# கல்வராயன்மலை ஜாகீரும் மக்களும்

கல்வராயன் மலையில் சுமார் 106 கிராமங்கள் இருக்கின்றன. இவ்வூர்களில் மூன்று ஜாகீர்களே உரிமை பெற்றிருந்தன. அவை,

அரியக்கவுண்டர் ஜாகீர்
குறும்பக் கவுண்டர் ஜாகீர்
சடையக் கவுண்டர் ஜாகீர்

என்பன.

ஜாகீர்களைக் 'காராளர்' என்றும் கூறுவர். இவர்களும் மலையாளிக் கவுண்டர்களே. இம்மலையில் வாழ்ந்த ஒருவரே ஜாகீர் ஆக்கப்பட்டார். பொதுவாக இவர்கள் தங்களைக் கொங்கு வேளாளர்கள் எனவும், காஞ்சிபுரத்திலிருந்து வந்தர்கள் என்றும் கூறிக் கொள்கிறார்கள். எல்லாக் கிளைகளும் வேளாளர்கள் என்றே கூறுகின்றனர்.*

இப்போது உள்ள ஜாகீர்களின் முன்னோர்கள் விஜய நகர அரசர்கள் காலத்தில், ராணுவத்தில் பணிபுரிந்தவர்கள். இதனால் விசய நகர அரசர்களால் உரிமை வழங்கப்பட்டது. காராளர் சமுதாயத்தைச் சேர்ந்த இவர்கள்,

---

* Thurston - castes and Tribles of Southern India Vol. IV. Page - 401

மலையில் உரிமை பெற்றதும், தங்கள் சமுதாயத்தாரோடு இம்மலையில் வாழ்ந்து கொண்டிருந்த வேடர்களைக் கொன்றும், அவர்களை அடக்கியும், அவர்களோடு கலந்தும் தங்கள் அதிகாரத்தை இம்மலையில் அமைத்துக் கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றன.[1]

விசய நகர அரசின் அழிவுக்குப் பிறகு கர்நாடக நவாபுகளின் நிலையான ஆட்சி ஏற்பட்டது. இடையில் சில ஆண்டுகள் மராட்டிய மன்னர்களின் ஆட்சியும் நடைபெற்றது. இம் மராட்டியர்கள் ஆட்சியில் வடஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் பல ஜாகீர்கள் அளிக்கப் பட்டதை வரலாற்றுச் சான்றுகளால் அறியலாம்.[2]

## ஜமீன்தார் – ஜாகீர்தார்

ஜாகீர்கள் முன்பு பாளையக்காரர்களாக இருந்தவர்களாவர். பாளையக்காரர் என்பவர் விசய நகர அரசர், அரசின் அதிகாரிகள், முதலியோரைக் குறிக்கும் இவர்கள் காலத்தில் மராட்டியர் ஆட்சி தோன்றியது. அதாவது கி. பி. 1750 — 90 இல் மராட்டியர் ஆட்சி தமிழ் நாட்டில் இருந்தபோது அவர்களின் பிரதிநிதிகள் பொறுப்புடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் பல அதிகாரங்களைப் பெற்றிருந்தார்கள் வரிவசூல் செய்யும் உரிமை மிகப்பிரதான மானதாகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் வரிவசூல் செய்யும் அதிகாரம் ஜமீன்தார்கள் என்ற அதிகாரிகளிடம் இருந்தது. முகமதியர் ஆட்சிக்காலத்தில் ஜாகீர்தார்கள்என்பவர்கள் நியமிக்

1 தென்னார்க்காடு மாவட்டம் கல்வராயன்மலை கோடை விழா — சிறப்பு மலர் — 1984 — பக். 14

2 மராட்டிய நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு ஜாகீர் அளிக்கப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டதில் ஆரணி (வடஆர்க்காடு) ஜாகீர் ஒன்றாகும்.

கப்பட்டாலும் ஆங்கிலேயர் ஆட்சியிலும் ஜாகீர் என்றே தங்கள் அதிகாரங்களுடன் இருந்துள்ளனர். ஆங்கில அரசும் இவர்களுக்கு மேலும் சில உரிமைகளும் பட்டங் களும் கொடுத்துக் கௌரவித்து உள்ளனர்.

ஜமீன்தாரர்களுக்கு நிலவரி வசூலிக்கும் அதிகாரம் மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜாகீர்தாரர் களுக்கு மேல்வாரம். குடிவாரம் என்ற தனி அதிகாரங் களும் கொடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்க தாகும்.

இந்த வகையில் அதிகாரங்களைப் பெற்ற ஜாகீர்களே கல்வராயன் மலையின் வரிவசூல் செய்யும் உரிமை பெற்றவர்களாக இருந்தார்கள்.

மூன்று ஜாகீர்களாகப் பிரிக்கப் படுவதற்கு முன்பு இருந்தது **அரியக் கவுண்டன் ஜாகீர்** என்பது மட்டுமே. இவரே மலை முழுமைக்கும் உரிமை பெற்றவராக இருந் தார்.

அரியக் கவுண்டன் ஆர்க்காடு நாவாபிடம் ராணுவ வேலைசெய்தவர். இவரின் சிறப்பான சேவையைக் கருதி, நாவாப்பால் அரியக்கவுண்டருக்குக் கல்வராயன் மலை ஜாகீராக உரிமை வழங்கப்பட்டது. அரியக் கவுண்டன் வழியில் பெண் உறவு ஏற்பட்டது. அதற்காக அரியக் கவுண்டன் தன் அதிகாரத்தைப் பிரித்தார். அவ்வாறுபிரித்த அதிகாரம், **குறும்பக் கவுண்டன்** என்பாருக்குக் கிடைத்தது. அப்போது இரண்டு ஜாகீராக ஆயின.

மூன்றாவதாக உண்டான ஜாகீர் **சடையக் கவுண்டன் ஜாகீர்**. சடையக் கவுண்டன், கல்வராயன் மலையில் உள்ள சின்னத் திருப்பதி என்னும் மலையில் உள்ள விஷ்ணு கோயிலின் பணிகளைக் கண்காணித்து வந்தவர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இவர் ஏதோ உதவியதற்காக ஆங்கிலேயர்களால் ஜாகீர் உரிமையைப் பெற்றார் சடையக் கவுண்டர். அதுமுதல் **சடையக் கவுண்டன் ஜாகீர்** தோன்றிற்று

1867 ஆம் ஆண்டிற்கு முன்பே மூன்று ஜாகிர்கள் இருந்துள்ளதை அறிய முடிகிறது. இந்த ஆண்டுகளில் அரியக் கவுண்டன் ஜாகீருக்கு 14 கிராமங்கள் இருந்திருக்கின்றன.

அவை,

1 கன்னாறூர் (கள்ளிப்பாறை பூண்டியூர் சேர்ந்தது)
2 புதூர்
3 நெலியூர்
4 கிளாக்காடு
5 சேம்பிப்பட்டு
6 ஆத்தூர்
7 பருவாநத்தம்
8 மணியார் பாளையம்
9 ஈச்சக்காடு
10 கீளத்தகுளி [கீழ்த்தகுளி]
11 மேலத் தகுளி
12 நெக்கரியச்சாம் பாளையம்
13 கூடாரம்
14 மாம்பாடி

ஆகிய ஊர்களாகும்.*

இவ்வூர்கள் தும்பைநாடு, கள்ளிப்பாறை நாடு என்ற இரு நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன.

அரியக் கவுண்டன் நாடுகளை இருகரை நாடு என்றும் கூறுகின்றனர். புதூரில்தான் அரியக் கவுண்டரின் ஜாகீர் இருப்பிடம். இவரை அரியாக் கவுண்டன் என்றும் கூறுவர்.

* ஊர்கள் வரிசையாக இல்லை.

அரியாக் கவுண்டர் வழியில் உதவு ஏற்படுத்திக் கொண்டதால் அரியாக் கவுண்டரால் குறும்பக் கவுண்டருக்கு ஜாகீர் உரிமை வழங்கப்பட்டது, இது அவரின் ஊழியத்தின் தன்மைக்காகவும் சிறப்புக்காகவும் இனாமாக வழங்கப்பட்டது என்று 1870 ஆம் வருடத்திய ஒரு ஒப்பந்தம் மூலம் அறியலாம்.

குறும்பக் கவுண்டருக்கு எப்போது முதல் ஜாகீர் உரிமை கிடைத்தது என்று அறிய முடியவில்லை. குறும்பக்கவுண்டன் ஜாகீர் ஊர்கள் மூன்று நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை, தென் மலை நாடு, கடிய நாடு, ஆதிபத்தி நாடு என்பன இம் மூன்று நாடுகளில் சுமார் நாற்பத்திரண்டு ஊர்கள் இருந்தன.

1 வாழப்பாடி மதுரா தும்பை
2 பாச்சேரி
3 கூடலூர் உள்பட மோட்டாம்பட்டி
4 அரசம்பட்டு உள்பட பானப்பாடி
5 அத்திப்பாடி
6 மொட்டயனூர்
7 எடப்பட்டு
8 எருக்கம்பட்டு
9 பொரசாம்பூண்டி
10 இறும்பலப் பூண்டி
11 விலாரிக் காடு
12 மூணா மதுரை
13 தூறூர்
14 முத்தனம் பெலாப் பூண்டி
15 சின்ன பெலாப் பூண்டி
16 இன்னாடு
17 வெதூர்
18 பொர்ம்ப நந்தம்
19 முருக்கணாம் பட்டு
20 குழிப்புளி
21 ஏரிக்கரை
22 தும்பராம்பட்டு (தும்பராம்பட்டி)
23 ஆத்தூர்
24 வஞ்சிக் குழி
25 எடப்பட்டு
26 பல்லாறு
27 மான் கொம்பு
28 செருக்களூர்
29 பொரசம்பட்டு
30 வினா நெல்லி

31 பூதானம் பாக்கணம்
32 வாழகுழி
33 பெரும்பழூவூர்
34 பறிக்கஞ் சேரி
35 ஆளனூர்
36 தேக்கப்பட்டு
37 ஆனைமடுவு
38 மூலக்காடு
39 பாப்பாத்தி மூலை
40 கீறிப்புள்ளி (கீறிப்புலி)
41 கள்ளிப்பட்டு
42 பாலப்பட்டு

பாலப்பட்டு என்ற ஊரில் குறும்பக்கவுண்டன் ஜாகீரின் இருப்பிடம். இங்குதான் சிறந்த அரண்மனை ஒன்று இருந்தது. இவற்றில் குதிரை யானைகளுக்கெனத் தனி இடமும் இருந்தது. சிறைப்பகுதியும் இருந்தது கண்ணாடி சுண்ணாம்பினால் வனப்போடு இருந்த இந்த அரண்மனை அழிந்து போய் உள்ளது. இன்றும் பாலப்பட்டில் குறும்பக் கவுண்டன் ஜாகீரின் அழிந்த அரண்மனையைக் காணலாம்.

## சடையக் கவுண்டன் ஜாகீர்

பொட்டியம் என்னும் ஊரில் தற்போது சடையக் கவுண்டன் இருப்பிடம் இருக்கிறது. இப்போது உள்ளது புதியதாகக் கட்டப்பட்டது. பழைய வீட்டை அரண்மனை என்று குறிப்பிடுவார்கள். இவ்வரண்மனையை இப்போது காணலாம். சாதாரண வசதியான வீடாக இருக்கும்.

இவரது ஊர்கள் 4 நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை,

உழவு நாடு
உப்பு நாடு
மதுநாடு
கண்டப்ப நாடு

என்பனவாகும்.

## 1 உழவு நாடு

இவற்றில் 21 குடியிருப்புகள் இருந்தன.

1 பொட்டியம்
2 மாயம்பாடி
3 சின்னத்திருப்பதி
4 தெத்துப்பட்டு
5 கொடமாசி
6 இணத்தூர்
7 சோந்தூர்
8 நாரணம்பட்டி
9 மேல் பாச்சேரி
10 தாள் பாச்சேரி
11 புதூர்
12 எட்டறைப்பட்டி
13 எழுத்தூர்
14 கவியம்
15 தாள் மொண்டியூர்
16 மேல் மொண்டியூர்
17 வன்னிப் பாடி
18 நத்தம் புளியூர்
16 தேர் புளி
20 வெளாம் பூண்டி
21 சேனாபுரம்

## 2 உப்பு நாடு

இந்நாட்டில் 16 குடியிருப்புகள் இருந்தன.

1 தாள் தோடிப்பட்டு
2 நடு தோடிப்பட்டு
3 மேல் தோடிப்பட்டு
4 புளியாந்துறை
5 மட்டப் பட்டு
6 எருக்கம்பட்டு
7 உப்பூர்
8 சேத்தூர்
9 பட்டி வளைவு
10 வண்டகப் பாடி
11 வாரம்
12 மேல் முருகம்
13 கரு நெல்லி
14 தொரங்கூர்
15 கொடர்
16 மணப்பாச்சி

முதலிய ஊர்கள் ஆகும்.

## 3 மது நாடு

இந்நாட்டில் சுமார் 26 குடியிருப்புகள் அடங்கியிருந்தன.

1 மல்லியப் பாடி
2 தாள் மதூர்
3 நடு மதூர்
4 மேல் மதூர்
5 கொட்டப்புத்தூர்
6 கெங்கப்பாடி
7 சாத்தனூர்
8 ஊத்துக்காடு
9 தாள் வன்னியூர்
10 மேல் வன்னியூர்
11 ஆரம் பூண்டி
12 வாழப் பூண்டி
13 புது வளைவு
14 மேல் மொழிப்பட்டு
15 தாள் மொழிப்பட்டு
16 கோயில் வளைவு
17 கோணக்காடு
18 வெள்ளிமலை
19 தாள் வாழப்பாடி
20 மேல் வாழப்பாடி
21 கறுமாத்தூர்வளைவு
22 தாள் கெண்டிக்கல்
23 மேல் கெண்டிக்கல்
24 மேல் தேவனூர்
25 தாள் தேவனூர்
26 பரங்கி நத்தம்

என்னும் ஊர்களாகும்.

## 4 சுண்டப்ப நாடு

சுந்தப்ப நாடு என்றும் இதைக் கூறுவர்.

இந் நாட்டில் 18 குடியிருப்புகள் இருந்தன. அவை :

1 கல் கொடை
2 மேல் பரிகம்
3 கொண்டியா நத்தம்
4 கொடுந்துறை
5 கொறத்திகுன்னூ
6 மாவடுப் பட்டு
7 கரியாலூர்
8 தாள் வெள்ளார்
9 மேல் வெள்ளார்
10 நடு வெள்ளார்
11 புலுவப் பாடி
12 ஆலத்தி
13 சுண்டா பாடி
14 நொச்சி மேடு
15 மேல் கருலாம்பாடி
16 தாள் கருலாம்பாடி
17 வையலாம் பாடி
18 மட்டப் பாறை

இவ்வூர்களில் தாள் (கீழ்), மேல், நாடு எனப் பிரிந்துள்ளன. இவற்றினால் சுமார் 22 ஊர்கள் அதிகமாயின. ஆக சுமார் 164 குடியிருப்புகள் கொண்டது கல்வராயன்மலை.

இம் மலை மக்களை இம் மூன்று ஜாகீர்களும் ஆண்டு வந்தனர் எனலாம். ஜாகீர்தாரர்களின் ஓரளவு குறுநில மன்னர்களைப் போலவே வாழ்ந்தார்கள். பல்லக்கும், யானையும் குதிரையும் உடையவர்களாக இருந்தார்கள். பாதுகாப்புக்கு வீரர்கள், அடிமைகள் வேலையாட்கள் என்போரும் இருந்தனர்.

மலை மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டவரிகளாலும், அவர்களிடமிருந்து பெறப்பட்ட தானியங்கள், தேன், மான் கொம்பு, காட்டுக்கனிகள், மற்றுமுள்ள விளைபொருள்கள் முதலியவைகளால் ஜாகீரின் எல்லாச் செலவுகளும் ஈடு செய்யப்பட்டன.

ஜாகீர், மக்களிடமிருந்து பலவரிகளைவசூல்செய்தார். வரி கொடுக்காதவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள்; மேலும் அடிமைகளாக ஜாகீரில் வேலை செய்தார்கள். இவர்களின் உழைப்பு இனமாகக் கொள்ளப்பட்டது.

ஜாகீர், தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு மக்களிடம் பல வரிகளை விதித்தது.

1 கொடுவாள் வரி
2 குடி வரி
3 வீட்டுவரி
4 வெள்ளாடு வரி
5 கால் நடை (மாடு)
6 புனல் காடு வரி
7 புல்வரி
8 கூட்டுவரி

9 நாட்டுவரி
10 ஏர்வரி
11 திருமண வரி
12 காவாலி வரி [திருமணம் ஆகாதவர்களுக்கான வரி]

போன்ற பல வரிகள் இருந்தன.

### கொடுவாள் வரி

மரம் வெட்டப் படுவதற்காகப் பயன் படுத்தப் பட்ட கொடுவாளுக்குவரி வசூலிக்கப்பட்டது. வீட்டிற்குள் இருக்கும் ஆண்களைப் (எண்ணிக்கை) பொறுத்தும், வயதைப் பொறுத்தும் இவ்வரிவிதிக்கப்பட்டது. கொடுவாள் வைத்திருக்கும் ஒரு நபருக்கு ரூ. 5.00 என விதிக்கப்பட்டது.

### குடி வரி

வீடு கட்டி வாழ்பவர்க்குத் தனி வரி. குடும்ப வரி என்றும், தலைக்கட்டு வரி என்றும் கூறப்பட்டது.

### வெள்ளாட்டு வரி

ஆடுகளுக்கான வரி. ஆடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தும் வரி விதிக்கப்பட்டது.

### வீட்டு வரி

வீடுகளுக்காக வசூலிக்கப்பட்ட வரி.

### கால்நடை வரி

ஆடு, மாடுகளுக்கு வசூலிக்கப்பட்டவரி, எண்ணிக்கையைப் பொறுத்து இவ்வரி தீர்மானிக்கப்பட்டது. ஓர் ஆட்டிற்கு வரி ஒரு ரூபாய்.

**புனல்காடு வரி**

காடுகளை வெட்டித் திருத்திப் பயிரிடப்பட்டதற்காக வாங்கப்பட்ட வரி. இவ்வரி நிலத்தின் பரப்பைப் பொறுத்து வசூலிக்கப்பட்டது.

**புல்வரி**

வீடுகட்டப் பயன்படுத்தப்படும் மஞ்சள் புல் அறுக்க வாங்கப்பட்ட வரி.

**கூட்டுவரி**
**நாட்டுவரி**

பஞ்சாயத்தார்கள் கூடும்போது. அதற்கு முன்பாகவும், பஞ்சாயத்தார் கூடிக் கூட்டம் கூட்டுவதற்காகவும் வசூலிக்கப் பட்ட வரி. பஞ்சாயத்தில் கலந்து கொண்டு, வழக்கு முடித்ததற்கான வரி, நாட்டு வரி.

**ஏர் வரி**

கலப்பை வரி என்றும் கூறுகின்றனர். ஒரு குடியானவனிடம் எத்தனை கலப்பை உள்ளன என்பது கணக்கிடப்பட்டு, அதன்படி வரிகள் விதிக்கப் பட்டன. ஒரு கலப்பைக்கு 1 ரூ. 25 காசு. வசூலிக்கப்பட்டது.

**திருமண வரி**

திருமணம் நடைபெறும்போது இரு வீட்டாரிடமும் வசூலிக்கப்படும் வரி. 1திருமணத்திற்கு ரூ7|= வரியாகும்.

**காவாலி வரி**

திருமணம் ஆகாத ஆண், பெண்களுக்கு விதிக்கப்பட்ட வரி. ஒரு நபருக்கு ரூ - 1 - 50|. திருமணம் ஆனதும் ரூ. 2| = வசூலிக்கப்படும்.

இப்படி ஒரு ஜாகீருக்கு வரிகளின் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு (1976 க்கு முன்பு) ரூ. 3000 | =முதல் ரூ5000|= வரை வருமானமாக வந்ததாம்.

இவை தவிரக் காட்டுப் பொருள்கள் பலவும் இனாமாக மலை மக்களிடமிருந்து பெற்றார்கள். தேன், சந்தனம், வாழை, நெய், மூங்கில் போன்றவற்றைத் தங்கள் தேவைக்குப் பெற்றுக் கொண்டார்கள.

மேலும் ஜாகீருக்குக் காட்டுப்பொருள்கள், கடுக்காய் மூங்கில், சந்தனம், புங்கங்காய், புளி, மா, தென்னை முதலானவற்றைக் காண்ட்ராக்ட் மூலம் அனுமதி வழங்கப்பட்டன. இதனால் பல ஆயிரம் ரூபாய்கள் வருமானமாகக் கிடைத்தன.

இவற்றின் மூலம் அரசாங்கத்தாருக்கு வரியைக் கொடுத்து மீதத் தொகையை ஜாகீர்தார்கள் தங்கள் செலவுக்கு வைத்துக் கொண்டார்கள்.

இவை தவிர, ஜாகீருக்கு **'உலுப்பைச்'*** செலுத்தல் மூலம் ஜமீனுக்கு வருமானம் கிடைத்தது.

**நவராத்திரி**[1] சமயத்தில் ஜாகீரிலிருந்து அவர்கள் ஊர் களுக்கு உலுப்பைப் பற்றித் தெரியப்படுத்துவார்கள்.

இந்த நாளில் மூப்பன், நாட்டான், கவுண்டன், கங் காணி முதலியோரும், மலை மக்களும், காண்ராக்டர் களும் வந்து கூடுவர், அன்று ஜாகீர் அரண்மனைக்கு வந்தவர்களுக்கு விருந்து நடைபெறும். விருந்து சமயம் அல்லது அதற்கு முன்போ ஜாகீர்தாரருக்கு மரியாதை செலுத்துவர். இம் மரியாதை பணமாகவும், பொருளாக வும், பரிசாகவும் இருக்கும். இவ்வாறு பரிசு கொடுப்பதை **உலுப்பை வாங்குதல்** என்று கூறப்படுகிறது.

---

* உலுப்பை. உல்பத் (உருது) ULPATH என்றால் அன்பு. அன்பளிப்பு என்பது. இதன் அடிப்படையில் உலுப்பை இருக்கலாம்.

1 தெலுங்கர், வடநாட்டினர் (தெலுங்கு பேசுவோர்) சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

ஜாகீரும் முக்கியமானவர்களுக்கும் மக்களுக்கும் பரிசு கொடுப்பார். அவர் மக்களுக்குக் கொடுப்பது துணியாக இருக்கும்.

உலுப்பை செலுத்தும் நாளை, முன் கூட்டி ஜாகீர் தாரர் தன் ஆட்கள் வழி மூப்பனுக்குத் தெரியப் படுத்தி விடுவார். சில சமயம் கடிதம் மூலமும் தெரியப் படுத்து வார்கள். உலுப்பைச் செலுத்தப்படும் நாளன்று ஜாகீர் அரண்மனையில் அனைவரும் கூடுவர். அன்று அரண்மனை யில் உள்ள எல்லா ஆயுதங்களும் சுத்தம் செய்யப்பட்டு, பூசை செய்யப்படும். பூசை முடிந்ததும் அனைவருக்கும் விருந்து உண்டு.

## ஜாகீர்தாரர் பயணம்

ஒவ்வொரு ஜாகீர்தாரரும் தன் ஜாகீர் 'நாடு'களைப் பார்க்க மலைக்குச் செல்வது உண்டு.

ஜாகீரிதாரர் மலைக்கு வரும் நாள் முன் கூட்டியே தெரிவிக்கப்படும். அதன்படி அந்நாட்டு மூப்பன். நாட்டான், கவுண்டன், கங்காணி ஆகியோர் முன்பே வந்து ஜாகீர்தாரரை மலைக்கு அழைத்துச் செல்வர்.

ஜாகீர்தாரர் மலைக்குப் பல்லக்கில்தான் செல்வார். பல்லக்கில் அவர் உட்கார்ந்து கொள்ள, மலையாளிகள் தூக்கிச் செல்வர். ஜாகீர் மலைக்குச் சென்றால், அவருடன் குறைந்தது 50பேர்க்கு மேல் செல்வர். ஜாகீர்தாரர் மலைக் குச் சொல்கிறார் எனறால் வழக்கு, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள, வசூல் திருவிழா, வழிபாடு என்னும் முக்கிய காரணமாகவே இருக்கும். சில சமயம் தன் ஓய்வுக்காக (உல்லாசமாகப் பொழுது போக்க)வும் மலைக்குச் செல் வார். ஜாகீர்தாரர் மலைக்கு வரும் நாளுக்கு முன் நாளில், ஊருக்கு வெளியிலிருந்து பாதைகள் சுத்தம் செய்து ஒழுங்குப்படுத்துவார்கள். ஊரின் தொடக்கத்திலிருந்து ஜாகீர்தாரர் தங்குமிடம் வரை தெரு முழுவதும் மாவிலை, காட்டுத் தழைகளைக் கொண்டு தோரணம் கட்டுவர்.

ஜாகீர் அரண்மனையி லிருந்து புறப்படும்போது தீவட்டிக் கொளுத்திக் (இரவு பகல் எந்த நேரமானாலும்) கொண்டு ஒருவர் பல்லக்கு முன்னே செல்ல, பின்னே பல்லக்கைத் தூக்கி வருவர். ஊர் எல்லைக்கு ஜாகீர்தாரர் வந்தவுடன் மேளதாளத்துடன் வரவேற்பு ஊரில் பெண்கள் ஆரத்தி எடுப்பர். ஆரத்தி எடுக்கும் பெண்களுக்கு ஜாகீர்தாரர் தன் காணிக்கையைக் கொடுப்பார்.

ஜாகீர்தாரர் எந்த ஊருக்குச் சென்றாலும் பெண்கள் ஆரத்தி எடுத்துக் காணிக்கைப் பெறுவர்.

ஜாகீர் இருப்பிடம் வந்த பிறகு, பானம், மோர் அருந்துவார்; இதைக் கொடுப்பதை மிகவும் மரியாதையாகக் கருதுகிறார்கள். ஜாகீர் எத்தனை நாள் இருக்கிறாரோ அதுவரை அரிசிச் சோறு கொண்ட விருந்து தான். சாப்பாட்டிற்குக் கறி இருக்கும். ஆடு, முயல், மான் போன்றவைகளில் எது வேண்டுமானாலும் இருக்கலாம்.

அன்று பகல் இரவு முழுவதும் ஜாகீருக்குத் துணையாக மூப்பன் இருப்பார். ஜாகீரின் தேவைகளை மூப்பன் மற்றவர்கள் மூலம் பூர்த்தி செய்வார் ஜாகீர் மகிழும்படி மூப்பன், நாட்டான் எல்லா ஏற்பாடுகளையும் செய்வர்.

ஜாகீருக்கு அளிக்கப்படும் விருந்தில் ஊர் மக்களும் பங்கு பெறலாம். விருந்து முடிந்த பிறகு மக்களுடன் ஏதாவது குறை கேட்டு அளவளாவுவார். பிறகு ஜாகீர் மக்களோடு சாராயம் சாப்பிட்டு மகிழ்வார். இரவு ஜாகீர் தங்கும்படி நேர்ந்தால், அவருக்குச் சிறப்பான கவனிப்பு உண்டு. கேளிக்கை, கூத்து, பாட்டு முதலிய நிகழ்ச்சிகளைக் காணச் செய்வர்.

ஜாகீர் ஊருக்கு வரும்போது, தங்கள வணக்கத்தை மக்கள் தெரியப்படுத்துவது தனிச் சிறப்பாக இருக்கிறது. ஒவ்வொருவரும் அவர் முன் வணங்குவர். இது தரையில் விழுந்து வணங்குவது போன்று இல்லை. முட்டியிட்டு

இரண்டு கைகளையும் ஊன்றி உடலை வலது பக்கமாகச் சிறிது சாய்த்து, தலையை வலதுப் பக்கமாகத் திருப்பிக் கீழே தாழ்த்தி வணங்குவது மிகச் சிறப்பானது; வித்தியாசமானது.•

ஜாகிர்தாரர் மக்கள் ஊர் வழக்கில் சில சமயம் நேரில் பங்கு கொள்வார். அப்போது அவரின் தீர்ப்பு மிகக் கடுமையானதாக இருக்கும். கட்டிப் போட்டு அடிப்பது, சிறை வைப்பது, அடிமையாக ஆக்குவது என்பவை குறிப்பிடத் தக்கவை. அடிக்கப்படும்போது குற்றவாளி இறந்து விடுவதும் உண்டு. அதற்கு ஜாகிர்தாரர் பொறுப்புடையவர் அல்ல; அது அவன் விதியாம்.

தண்டனை எதுவாயினும் ஊர் மக்கள் முன்னிலையில் தான் நடைபெறும். தண்டனையாகச் சொத்துக்களை எடுத்தல், அல்லது ஏலம் போடுதல் வழக்கம். மனைவியையுப் ஏலம் போடுவது உண்டு.

ஜாகீர் மலையில் இருக்கும்போது சந்தனத்தை இழைத்துக் கொண்டு, கையால் கை, கழுத்து ஆகிய இடங்களில் கோடு இழுப்பார்கள். இதைத்தான் கீறு சந்தனம்' போடுதல் என்று கூறுகிறார்கள்.

எத்தனைக் கொடுமைகள் செய்தாலும் மக்கள் ஜாகீர் தாரரிடம் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள். இது இவர்களின் வயிற்றுப்பிழப்புக்காகஎன்கின்றனர் இவர்களுக்கு வெளி மக்களோடு தொடர்பு இல்லாமல் போனதும் ஒரு காரணம் என்றனர்.

ஜாகிரின் கொடுமைகள் படிப்படியாகக் குறைந்தது எனலாம். 1960க்குப் பிறகு வந்த ஜாகீர்தாரர்களின் தண்டனை அவ்வளவு பயங்கரமாக இல்லை; ஓரளவு அதிகம் இல்லை என்றார்கள்.

---

• 19.7.85 பொட்டியம் ஜாகீரில் நேரில் காண நேர்ந்தது.

ஜாகீர்தாரர்களின் கொடுமைகள் முகமதியர்களின் ஆட்சியின்போது அதிகமாக இருந்தன எனலாம். அவர்கள் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ள பல கொடூர மான வழிகளைப் பின்பற்றியுள்ளனர். மக்களைத்துன் புறுத்தியுள்ளனர். வரிகள் மூலம் ஏய்த்துள்ளார்கள், இந்து மதத்தை அழிக்கவும், தங்கள் மதத்தைப் பரப்பவும் எடுத்துக்கொண்ட முயற்சியில் இந்த வகையும் ஒன்றாம். சமவெளி மக்களுக்கே இந்தக் கதி என்றால் மலை மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்.

முகமதியர் ஆட்சிக்குப் பிறகு வந்த அரசர்கள் ஓரளவு நன்மைகளைச் செய்தனர். விஜய நகர அரசர்கள் இந்து மதத்தை வளர்க்கும் நோக்கத்தோடும் தங்கள் அரசை அமைத்தார்கள் எனவே மத நம்பிக்கை உடையவர்களை அரசப் பிரதிநிதியாகவும், ஜாகீர்தாரராகவும், ஜமீன் தாராகவும் நியமித்தனர். இதனால் ஓரளவு கொடுமைகள் குறைந்தன.

## விருதலைக்குப் பின்

சுதந்திரம் அடைந்து சுமார் 20 ஆண்டுகள் கழிந்த பின்பு மலை மக்களோடும்சமவெளி மக்களோடும் ஓரளவு தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்புக்கு ஜாகீர்தாரர் களும் உதவினர் எனலாம்.

உலுப்பை போன்ற நாட்களில் கிராம, நகர மக்க ளோடு மலையாளிகள் தொடர்பு கொள்ள முடிந்தது. இத் தொடர்பு, விவசாயம், உணவு, உடை வகைகளில் ஓரளவு மாற்றத்தை, நாகரிகத்தை உருவாக்கியது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கொடுமை களின் தன்மைகள் குறைந்தன. ஆனாலும் நகர், கிராமப் புற எளிய மக்களின் வாழ்க்கையைவிட இவர்கள் நிலை தாழ்ந்தே இருந்தது. 20 விழுக்காடு அளவுக்குகூடவசதிகள்

இல்லாமல் இம் மக்கள் வாழ்ந்தார்கள். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இது படிப்படியாகக் குறைந்தே வந்துள்ளன. இதனால் சமூகப் பொருளாதார வளர்ச்சியைப் பெற முடிந்தது. இவ் வளர்ச்சியில் ஜாகீருக்கும் முக்கியப் பங்கு உண்டு. கல்வி, அரசியல் தொடர்புகள் முதலிய பல வசதிகளை மக்கள் அடையப் பல உதவிகளைச் செய்ய ஜாகீர்தாரர்கள் முன் வந்தனர். இதில் குறிப்பாகக் குறும்பக் கவுண்டன் குறிப்பிடத் தக்கவர். இவர் அரசியல் உணர்வு, கல்வி முதலியவற்றை ஓரளவு பெற்று இருந்தார்.

இருந்தாலும், உந்துதலின் காரணமாக ஜாகீரை விட்டு இந்திய அரசு முறைகளை அறிந்து, நேரடி அரசின்கீழ் வர முயன்றும், பயன்பட்டும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

ஜாகீர்தாரர்களும் கல்வராயன் மலையைச் சேர்ந்த மலையாளிகளாய் இருந்தாலும் சில சடங்கு முறைகளில் வேறுபட்டு இருக்கிறார்கள்.

நவராத்திரி விழாவைக் குறும்பக் கவுண்டன் ஜாகீர் தான் மிகச் சிறப்பாக நடத்தி வந்திருக்கிறார். இவர் திருவிழா, பண்டிகையைப்பற்றி மக்களுக்குத் தெரிவித்து இருக்கிறார். நவராத்திரிக் கொலுவை மக்களுக்குத் தெரியப்படுத்தி மக்கள் பார்வையிட அனுமதி அளித்துள்ளார். இந்த நாட்களில் மலை மக்கள் வந்து வேலை செய்வார்கள். இதற்குப் பரிசும் அன்பளிப்பும் பெற்றனர்.

நவராத்திரிக் கொலுவை மற்றைய ஜாகீர் மக்களும் வந்து பார்க்கலாம். சமவெளி மக்களும் வந்து பார்த்து மகிழ்ந்து போவர். இந்தச் சமயம் யாவருக்கும் உணவு அளிக்கப்படும். நவராத்திரி நாட்களான 9 நாட்களும்

குறும்பக் கவுண்டர் ஜாகீர் விழாக்கோலம் பூண்டு இருக்கும். ஜாகீர் ஊரும் உற்சாகமாக இருக்கும்.

நவராத்திரி விழாவின் போது குறும்பக் கவுண்டன் ஜாகீர்தாரர் **வன்னிக் குத்தல்** என்ற விழாவை நடத்துகிறார். சின்னதிருப்பதி விஷ்ணு கோயிலில் புரட்டாசி மாதம் 5 ஆம் சனிக்கிழமை அன்று சடையக் கவுண்டன் ஜாகீர்தாரர் வன்னிக் குத்தல் சடங்கைச் செய்து வருவார்கள்.

குறும்பக்கவுண்டன் ஜாகீரில் வன்னிக் குத்தல், நவராத்திரி கொலுவ்ழா இப்போது இல்லை. இவர்கள் நடத்திய வன்னிக் குத்தல் விழாவை, சின்னதிருப்பதி விழாவில் நடைபெறும் 'வன்னிக் குத்தல் விழா' என்ற பகுதியில் (பக். 279-280) தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

குறும்பக்கவுண்டர், வன்னிக்குத்தலைத் தெரியப்படுத்துகிறார். மக்கள் கூடுவார்கள். வன்னிக்குத்தலின்போது ஆடு ஒன்று பலியிடப்படும்.

அப்போது வாழை மரம் வெட்டப்படும். வெட்டப்பட்ட ஆட்டின் ஒருகாதை வண்ணானுக்குக் கொடுத்து விடுவார்கள். இதற்கு விளக்கம் தெரியவில்லை. அதன் பிறகு மேளத்தோடு ஜாகீர்தாரர் வீட்டிற்கு வருவார். நவராத்திரியில் வன்னி குத்தும் நிகழ்ச்சிவரை - இந்த ஜாகீர் குடும்பத்தினர் யாரும் மாமிசம் உண்பதில்லை; வன்னி குத்தப்பட்டபிறகு கட்டாயம் மாமிசம் உணவில் சேர்க்கப்படும். வன்னிகுத்தும் நிகழ்ச்சி முடிந்து ஜாகீர் தாரர் வீடுவந்ததும் அரண்மனையில் கொலு இருக்கும் ஆயுதங்கள் யாவும் கலைக்கப்படும். ஆயுதங்கள் கலைக்கப்பட்ட பிறகு, இருப்பவர்களுக்கு உணவு கொடுக்கப்படுகிறது.

ஜாகீர் குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தால், கத்தியின் முனையில் பாலை நனைத்து குழந்தையின் வாயில் விடுவார்கள். இந்தப் பால்தான் குழந்தைக்கு அளிக்கப்படும் முதல் பாலாகும். இந்தப் பால் தாயின்

பாலாகவும் மாட்டுப் பாலாகவும் இருக்கலாம். தாயின் பாலையே முக்கியமாக எதிர்பார்ப்பார்கள். இது ஆண் வாரிசு வீரத்தோடுவாழவேண்டும் என்பதற்காகவே என்று கூறுகிறார்கள்

ஜாகீர் குடும்பப்பெண்களுக்குமாதவிடாய்வரும்சமயம் அந்த வீட்டில் உணவு கொடுக்க மாட்டார்கள்; வேறு வீட்டில்தான் உணவு. இவர்களுக்குத் தனியாக வேறு இடம் விடப்படுகிறது. இந்தஇடத்திற்கு யாரும்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. சுமார் 5முதல் 7நாட்கள் வரை தனித்தே இருக்க வேண்டும். புரட்டாசி மாதத்தில் ஜாகீர் குடும்பத்தினர், தங்கள் குடும்ப நபர்களைத் தவிர வேறு யாருக்கும் தண்ணீரைக்கூடக் கொடுக்கமாட்டார்கள். யாராவது முக்கியமானவர்கள் (அதிகாரிகள், தெரிந்தவர்கள்) வந்து விட்டால், வேறு இடத்தில் அவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்யப்படும்.



7

# கல்வராயன்மலை மக்கள் தலைவர்கள்

கல்வராயன்மலை மூன்று ஜாகிர்களாகப்பிரிக்கப்பட்டு அவர்களின்கீழ் இருந்தது. முன்புஜாகிர்தாரர்தாம் மலைத் தலைவர். இப்போது ஜாகிர்தாரரைத் தலைவராக மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என்றாலும், சடையக்கவுண்டன் ஜாகிரைத் தலைவர் அந்தஸ்துக்கொடுத்து மதிப்பார்கள். ஏனைய இருஜாகிரும் சுவடின்றிப் போயிற்று எனலாம்.

ஜாகிர் பொறுப்பில் இம்மலைமக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை அறிதலே இங்கு நோக்கம். ஜாகிரைப் பற்றிய செய்திகளை ஜாகிரும் மலையமக்களும் என்ற தலைப்பில் காணலாம். மலையில் தங்கள் குடியிருப்பில் மக்களின் தலைவராக இருந்தவர்களைப்பற்றி அறியலாம்

## மூப்பன்

கல்வராயன் மலையிலிருந்து மூன்று ஜாகிருக்கும்ஜாகிர் தாரர் தலைமையாளராக இருந்தார்கள். ஜாகிருக்கு அடுத்தவர் மூப்பன்.

ஒவ்வொரு ஜாகிருக்கும் மூப்பன் என்பவர் ஒருவர் இருப்பார். இவருக்கு இருபதுக்கும் மேற்பட்ட ஊர்கள்பொறுப்பில் இருக்கும். ஊர்களைப் பொறுத்து மூப்பன் தேர்ந்தெடுக்கப்படுவார். மூப்பன் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், சில சமயம் வாரிசுமுறையில் பதவியைப்பெறுவதும் உண்டு.

ஜாகீர் முறை இருந்தபோது 5 முதல் 8 மூப்பன்கள் இருந்தனர். ஜாகீருக்குப் பிறகு இப்போதும் மூப்பனாய் இருந்தவர்க்கு மதிப்பும் மரியாதையும் மக்கள் கொடுப் பார்கள். இப்போதுகூட எதையும் மூப்பன் முன்னிலை யிலேயே கூற விரும்புவார்கள். எந்த நிகழ்ச்சிக்கும் மூப்பனே காரணம், பொறுப்பு என்ற மதிப்பு இருந்தது. இன்றும் இந்த நிலை உள்ளது. ஜாகீர் இருந்தபோது ஜாகீர்தாரர் மக்களுக்குத் தெரிவிக்க விரும்பிய செய்தி களை, மூப்பன் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்வார்.

ஒரு மூப்பனுக்கு எத்தனை ஊர்கள் என்று ஒருதிட்டம் இருந்துள்ளது. 10முதல் 20-25 ஊர்கள் வரை ஒரு மூப்பனின் பொறுப்பில் விடப்படுகிறது. மூப்பனின் பொறுப்பில் விடப்பட்ட ஊர்களில் உண்டாகும் எல்லாத் தகராறுகளையும் அந்த மூப்பனே தீர்த்து வைப்பார்.

மூப்பன் கல்வராயன் மலையின் குடியாக இருப்பார். ஜாகீர்தாரிடம் நெருங்கிப் பேசுபவராகவும், அநுபவம் நிறைந்தவராகவும் இருப்பார். அதாவது மலைமக்களுக்கும் மலை ஜாகீருக்கும் பாலமாக இருப்பவர் மூப்பனேயாவார்.

மூப்பன் ஓர் ஊரில் உண்டாகும் தகராறுகளைப் பஞ்சாயத்து மூலம் பேசி முடிவெடுத்தார். மூப்பனின் முடிவே முடிவானதாக இருக்கும்.

மூப்பனுக்கு அடுத்து நாட்டாண்மை, கங்காணி, கவுண்டன் என்பவர்கள் இருப்பார்கள். மூப்பனுக்குத் தேவையானபோது இவர்கள் ஆலோசனை சொல்பவர்க ளாகவும் இருப்பார்கள்.

மூப்பன், ஜாகீருக்கு வரிவசூல் செய்துகொடுப்பார். ஜாகீர், தன் ஊர்களுக்கு (மலைக்கு) வந்து பார்வையிட நேரிடும்போது, அவருக்கு வேண்டிய வசதிகளையும் இம் மூப்பனே செய்து கொடுப்பார். ஜாகீர்தாரர் மலைக்கு

வந்து, தன் வீடு திரும்பிப் போகும் வரை அவருக்கு உதவியாயும் துணையாயும் மூப்பனே இருப்பார்.

மூப்பன் வரிகளை வசூல் செய்யும்போது மிகக் கொடூரமாக நடந்து கொள்வார். வரிகட்ட முடியாத போது சிலரை ஊரை விட்டு அகற்றியும், வீட்டுச்சாமான் களையும், ஆடும், மாடுகளையும் கைப்பற்றி, அவற்றை ஏலமிட்டும் ஜாகிருக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தைக் கொடுத்து விடுவார்.

மூப்பனுக்குச் சம்பளம் என்று எதுவும் இல்லை. மக்களே மூப்பனுக்கு இவ்வளவு என்று விளைவின்போது (அறுவடையில்) கொடுத்துவிடுவார்கள். திருமணம், வழக்கு, பஞ்சாயத்து போன்ற நிகழ்ச்சிகளில் மூப்பனுக் கென்று ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது; அல்லது கொடுப்பர்கள்.

மூப்பனுக்குச் சொந்தமாக நிலங்கள் உண்டு; வீடும் உண்டு. மூப்பனுடைய் நிலத்தில் மூப்பனே உழ வேண்டும்.

இவ்வாறுள்ள மூப்பனின் நிலத்தில் வேலை செய்யும் நபருக்கு மூப்பன் கூலி கொடுப்பதில்லை. கூலி இல்லாத வேலையே!

மூப்பன் விதவைகளை மனைவியாக வைத்துக்கொள் வார். பெண் வழக்குகளில் குற்றம் சாட்டப்படும்— (சாட்டப் பட்ட) பெண் சில நாட்கள், சில மாதங்கள் வரை மூப்பன் வீட்டில் இருக்கவேண்டும். மூப்பன் சொல்லும் எல்லா வேலைகளையும் குற்றம் சாட்டப்பட்ட விதவைப் பெண் செய்தே ஆக வேண்டும்.

ஜாகீரின் வருமானத்தை மூப்பனே வரிவசூல் செய்து கொடுப்பான். என்றாலும், இவ்வளவுதான் என்பதற்கு மேலாகவும் வரி வசூலித்துவிடுவான்.

ஜாகீரின் ஜவான் 'காரப்பாரி' எனப்படுவான். இவன் தான் வசூல்பணத்தைவாங்கிச் செல்ல மலைக்கு வருவான்.

சில சமயம் ஜாகீரும் வருவது உண்டு. பெரும்பாலும் கார்பாரியே வருவான். இந்தக் கார்பாரி முதலில் மூப்பனைத்தான் வந்து பார்ப்பான். மூப்பன் கார்பாரி வந்ததை நாட்டானுக்கும், நாட்டான் கவுண்டனுக்கும், கவுண்டன் கங்காணிக்கும் தெரிவிக்க, கங்காணி ஊராருக்குத் தெரியப் படுத்துவான். பிறகு வசூல் நடக்கும். அன்று கொடுக்காதவர் அடுத்த முறை கொடுக்குமாறு கூறி விடுவர். அந்தக் கெடுவுக்குள் கொடுக்காவிட்டால் ஜப்தி நடக்கும்.

ஜப்தி, மூப்பனின் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும். மூப்பனை இந்தச் சமயத்தில் தனிப் பட்ட முறையில் கவனித்துக் கொண்டால், வரி கொடுக்க வேண்டியவர் தப்பித்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் தவிப்பும் திண்டாட்டமும்தான்.

மூப்பன் என்னும் பட்டம் குறும்பர் இனத்தவர்க்கும் உண்டு. (பல்லவரைக் குறும்பர் என்று கூறுவார்கள். மேலும் அம்பலக்காரர், கோளன், பள்ளன், பறையன், வலையன், வாணியன் ஆகிய இனத்தில் உள்ளவர்களுக்குள் மூப்பன் என்னும் பட்டப்பெயர் வழங்கப்பட்டு வருவார்கள்.

மூப்பனாய் இருப்பவன் துப்பாக்கி வைத்துக் கொள்ளவும், குதிரை மீது சவாரி செய்யவும் தனியான அதிகாரம் பெற்றவன். மூப்பனுக்கு இவ்வதிகாரம் ஜாகீரால் கொடுக்கப்பட்டதாகும்.

## நாட்டானும் மற்றவரும்

மூப்பனுக்கு அடுத்தபடியாகக் கல்வராயன் மலை மக்களிடம் ஊர்த்தலைவன் எனும் தகுதியைப் பெறுபவன் நாட்டான்.

மூப்பனைப் போல இவனும் மலையாளியே; காடு வெட்டியே பிழைக்க வேண்டும். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு நாட்டான் இருப்பான். நாட்டானுக்கு மூப்பன் செய்திகளை எப்படியும் தெரியப்படுத்தி விடுவான்.

மூப்பனின் உண்மையான, நம்பிக்கைக்கு உரிய ஆள் நாட்டானே. நாட்டானை ஊரினர் நாட்டுக் கவுண்டன் என்றும் கூறுவார்கள். ஊர்ப் பஞ்சாயத்து, வாழ்க்கைச் சிக்கல் முதலிய நிகழ்ச்சிகளில் மூப்பன் இல்லாமல் போனாலும் நாட்டான் கலந்துகொண்டு முடித்து வைப்பான். நிகழ்ச்சியை மூப்பனுக்கு நாட்டான் தெரிய வைத்து விடுவான். இவன் ஊர்த் திருவிழா நாட்களிலும் நிகழ்ச்சிகளிலும் முக்கிய ஆளாக இருப்பான். ஊரில் பிறப்பு இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளை மூப்பனுக்குத் தெரியப்படுத்த வேண்டியது இவனது முக்கிய வேலையாகும்.

ஒரு மலையாளி எவ்வளவு காடுகளை அழித்தான், அதில் என்ன பயிர் செய்துள்ளான் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும் இதனால் வரியைத் தீர்மானிப்பதில் மூப்பன் நாட்டனைத் துணையாகப் பயன்படுத்திக் கொள்வான். ஊரில் மூப்பனைப்போல் அதிகாரம் உள்ளவன் நாட்டான். ஊரில் எந்த நிகழ்ச்சியாய் இருந்தாலும் நாட்டான் பங்கு பெறுவான்.

திருமணம் ஆகாதவர்கள் பட்டியலை (காவாலி பற்றிய விபரங்களை) மூப்பனுக்குத் தெரியப்படுத்துவது நாட்டானின் ஒரு முக்கிய வேலையாகும்.

### கவுண்டன் கங்காணி

நாட்டானுக்கு அடுத்த மதிப்புடையவர்கள் கவுண்டன், கங்காணி என்பவர்கள். இவர்கள் ஜாகிருக்கும் மூப்பனுக்கும் ஊர் மலையாளிகளுக்கும் நடுவில் இருப்பவர்கள்.

ஓர் ஊரில் நிகழும் நல்லது கெட்டது ஆகியவற்றில் பங்கு கொள்வார்கள். இவ்வாறு பங்கு கொள்ளும் முறைக்கு ஊர் மக்கள் **கவுண்டன் காணிக்கை, கங்காணி காணிக்கை** என்று ஒரு தொகையைக் கொடுப்பார்கள்.

கவுண்டனைச் சேவகன் என்றும் கூறுகிறார்கள். ஊர் கவுண்டன் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள், வரிவசூல் செய்யும்போது முக்கிய பங்கு கொள்வர்; சில சமயங்களில் இவர்களே வசூலித்து மூப்பனுக்குக் கொடுத்து விடுவர்.

ஜாகீர் மலைக்கு வரும் நாட்கள் முதல் போகும் வரை ஜாகீரின் கையாகவும் காலாகவும் இருந்தனர். வரும் போது ஊர் எல்லையிலிருந்து கூட்டி வந்து, திரும்பும் வரை நிழலாக இருந்தனர்.

மலையாளிகள், கங்காணிக்கு ஒவ்வொரு அறுவடையின் போதும் ஓரளவு தானியத்தைக் கொடுப்பார்கள். இவ்வாறு கொடுக்கப்படும் தானியத்தின் அளவை இரண்டு பல்லம் என்கிறார்கள். இதனை இரண்டு மரக்கால் என்று கொள்ளலாம்.

ஒரு மலையாளிக்கு இவ்வளவு விளைந்தது என்பதைக் கங்காணி தெரிந்து கொள்வான். விளைவைப் பொறுத்து வரிகள் இருப்பதால் கங்காணிக்கும் காணிக்கை கொடுத்து வரியைக் குறைத்துக் கொள்வார்கள். விழாக் காலங்களில் திருவிழாப் பொறுப்புகளை இவர்கள் கண்காணித்து வருவார்கள்.

வழக்குகள் உண்டாகும்போது பஞ்சாயத்தைக் கூட்டுவது இவர்களது முக்கிய பணி. பஞ்சாயத்து முடிவுகளைக் கங்காணி கவனிப்பதும் தீர்மானிப்பதும் உண்டு. சில சமயம் முடிவாக அபராதமும் தண்டனையும் இவர்கள் தீர்மானிக்கலாம்; அபராதம் ஆடு, பணம் முதலியவைகளை வசூல் செய்யலாம். தண்டனை, இலவசமாக வேலை செய்யச் சொல்லவும், ஜாகீருக்கு அனுப்பி அடிமை வேலை செய்யச் சொல்லவும் இவர்களுக்கு உரிமை உண்டு.

கல்வராயன் மலை மக்களுக்கு மூப்பன், நாட்டான், கவுண்டன், கங்காணிகள் ஜாகீர் காலத்தில் இருந்தார்கள். இவர்களிடமிருந்த அதிகாரம் இப்போது வேறு சிலருக்கு மாற்றப்பட்டு விட்டது.

# வழக்குகளும் பஞ்சாயத்து முறைகளும்

கல்வராயன் மலையில், மக்களிடம் உண்டாகும் வழக்குகளை ஊர்ப் பஞ்சாயத்து மூலமே தீர்த்துக் கொள்கிறார்கள்.

## நீக்கம் செய்தல்

கணவன் மனைவி தகராறுகளை ஊரினரே பேசித் தீர்த்துக் கொள்கிறார்கள். விவாகரத்துக்குத் திருமணச் செலவு வாங்கிக் கொண்டு வேறு திருமணம் செய்கின்றனர்.

ஒரு பெண் மலையாளியைத் தவிர வேறு இனத்தில் திருமணம் புரிந்தால், அவளை, 'நீக்கம்' என்று கூறி நீக்கி விடுகிறார்கள். நீக்கம் செய்ததை மூப்பனே ஊரார் முன்னிலையில் கூறிவிடுகிறான்.

## சொத்து தகராறு

சொத்துகளில் தகராறு உண்டாகும்போது, தகராறுக்கு உரியவர் செய்தியை ஊர்க்கங்காணிக்குத் தெரியப்படுத்துகின்றார். முதலில் கங்காணி விசாரிப்பான். முடிவு ஆகவில்லையென்றால் நாட்டானுக்குத் தெரியப்படுத்தி, நாட்டான் விசாரிப்பான். முடிவு சரியில்லை யென்றால் மூப்பனுக்குத் தெரியப் படுத்துவர்.

## கோயில் முன்பு சத்தியம்

இம் மலையில் வழக்குகள் எல்லாம் வாய் மொழி யாகவே இருக்கும். வழக்கு, தகராறு முடிந்த பிறகு முடிவு குறித்து எதையும் எழுதிக்கையெழுத்துவாங்குவதுஇல்லை. வழக்கின்போது கோயிலின் முன்பு சத்தியம் செய்து வழக்கை முடித்துக் கொள்வார்கள்.

கோயிலுக்கு முன்பு கற்பூரத்தை ஏற்றித் தாங்கள் சொல்லுவது உண்மைஎன்பதற்காகக்கற்பூரத்தைஅணைப் பார்கள். கற்பூரத்தை அணைப்பதால், தான் சொல்லியது பொய்யாய் இருந்தால் கடவுள் என்னைத் தண்டிக்கட்டும் (எப்படியும் தன்னை அழித்து விடுவான்) என்பதற்கு ஆதா ரமாய் இப்படிச் செய்வார்களாம்.

## நாக்கில் சூடு போடுதல்

ஒரு பெண் வேறு இனத்து ஆணுடன்சென்று வாழ்ந்து மீண்டும் மலைக்கு வந்தால், அவளை விசாரித்துத்தான் ஊருக்குள் சேர்க்கின்றனர். வழக்கின்போது அந்த ஜாகீர் மூப்பன், அந்த நாடுகளின் நாட்டான், கங்காணிஆகியவர் (களோடு இவர்கள் மலை முழுவதும் உள்ளவர்) இம் மலைக்கு என்று இருக்கும் சாதிக் குரு முன்பு வழக்கு விசாரிக்கப்படும். விசாரணைக்குப்பிறகு சேர்த்துக்கொள் ளப்படுவாள். அல்லது நீக்கி வைக்கப்படுவாள். நீக்கம் செய்யும்போது (ஆண், பெண் இருவரையும்) 'நீக்கப் பட்டது' என்று கூறி நீக்கி விடுவார்கள். வழக்குக்குப் பிறகு சேர்த்துக்கொள்ள வேண்டி இருந்தால், தவறு செய்தவளின் நாக்கில் சூடு போடுவார்கள். சூடுபோட்ட பிறகு சாதிக்குருவிடம் உள்ள மந்திரத்தண்ணீரை நாக்கி லும் அவள் மீதும் தெளிப்பார்களாம்.

## வண்ணெய்க்குளியல்

சூடு போட்ட பிறகு, அவளை வீட்டிற்கு அழைத்து வருவர். முதலில் அவளை வெளியிலேயேஇருக்கச்செய்வர்;

பிறகு எண்ணெய்த் தேய்த்துக் குளிக்கச் செய்து வீட்டிற்குள் அழைப்பார்கள். வீட்டிற்கு அழைக்கும் அன்று, அவன் வீட்டில் விருந்து. வழக்கில் கலந்து கொண்டவர்களுக்கு முக்கியமாக விருந்து உண்டு. விருந்தின்போது பன்றிக்கறி முக்கியமாக இருக்கும்.

## கடுமையான தண்டனை

வழக்குகளை விசாரிக்கப் பஞ்சாயத்தார் ஒற்றை (5, 7, 9)யில் வரவேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள்.

மூப்பனின் முடிவை ஏற்றுக்கொள்ளாத ஆணுக்கு சவுக்கு அடி கொடுக்கப்பட்டது. ஊரை விட்டு விலக்கி வைக்கப்படுவான்; இதில் கண்டிப்பாய் இருந்தார்கள். விலக்கப்பட்டவனுக்கு உணவு ஊருக்கு வெளியில் (குறிப்பிட்ட இடத்தில்தான்) கொடுக்கப்படும். இதில் மீறல் இருந்தால் அபராதம் வாங்கப்பட்டது.

பெண்ணாய் இருந்தால் நீக்கப்படுவாள். எல்லார் மத்தியிலும்அவமானப் படுத்தப்படுவாள். கட்டிய புடவையை யாராலாவது அவிழ்க்கப்பட்டுச் சிறிது நேரம் வரை அம்மணமாக நிற்க வேண்டும். கசை அடி கொடுக்கப்படும். நெருப்பால் சுடப்படும். இந்தக் கடுமையான தண்டனைகள் இப்போது குறைந்து வருகின்றன.

திருட்டு வழக்குகள் இவர்களிடம் இல்லை. கடன் வாங்கி ஏமாற்றி விடுவது போன்ற வழக்குகளும் இல்லை.

## வழக்கு விசாரிக்கும் முறை

முதலில் வழக்கு தெரியப்படுத்துவர்; ஊர்பஞ்சாயத்து கூடும் ஊர்ப்பூசாரிதலைவன் முதலில்விசாரிப்பான். இவன் சிறிய தண்டனை, சிறிய அபராதத்தைக் கொடுத்து வழக்கை முடிப்பான்.

விசாரணை ஊருக்கு வெளியில், கோயில் முன்போ, பக்கத்திலோ நடக்கும். விசாரணை நடக்குமிடமான சற்று மேடான இடத்தில் பூசாரி, மூப்பன், நாட்டான், கங்காணி முதலியோர் அமர்வர். வாதி, பிரதிவாதி, சாட்சியங்கள் ஆகிய அனைவரும் இருந்தால்தான் வழக்கு நடக்கும்.

வழக்கு நடைபெற இருக்கும் நாள், வழக்கைவிசாரிப்பவர்கள், வழக்கைத் தொடுப்பவர், வழக்குவிசாரிக்கப்படும் நபர், சாட்சிகள் ஆகிய இவர்கள் வந்து சேர வேண்டிய இடம் முன் கூட்டியே தெரியப்படுத்தி விடுகின்றனர். வழக்குகள் யாவும் மாலை நேரத்தில்தான் ஆரம்பம் ஆகும். இரவுவரை நீடிக்கும் விசாரணை நடக்கும் தினத்தில் மூப்பன் மற்றும் முக்கியமானவர்களுக்குச் சாராயத்துடன் விருந்து கொடுக்கப்படும்.

'கல்வராயன்மலை மக்கள்'



அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி எம். ஏ.,

# வாழ்வியல்



கல்வராயன் மலை மங்கை

# மக்களின் தோற்றம்

## 'மலையாளிகள்'

கல்வராயன் மலையில் வாழும் மக்கள், மலையாளிகள் நல்ல உயரமும் கறுத்த மேனியும் உடையவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களைக் கறுப்பு வைரம் என்று சொல்லலாம். அத்தனை உறுதியான உடற்கட்டுடையவர்கள்.

## உயரம்

சுமார் 5 அடி முதல் 6½ அடி உயரம் வரை வளர்ந்தவர். இம் மக்களின் உயரமே காட்டில் வாழ வசதியாக இருக்கிறது.

## தலைமுடி

சிலர் தலைமுடியைப் பல மாதங்கள் வரை வளர்க்கிறார்கள்; தாடியும் மீசையும் உடையவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களது தலைமுடி கருத்தும் அடர்த்தியாகவும் இருக்கிறது. வயதானவர்கள் முடியைப் பாதுகாப்பது பற்றி (சீவுதல், எண்ணெய் தடவுதல்) அக்கறை எடுத்துக் கொள்வதில்லை.

இவர்கள், தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில்லை; எப்போதாவது விளக்கெண்ணெயைத் தடவிச் சீவிக் கொள்கிறார்கள். இதனால் பரட்டைத் தலையுடையவர்களாகவும் சிலர் இருக்கிறார்கள்.

## அணிகள்

ஆண்கள் நகைகளை அணிந்து கொள்வதில்லை. ஒரு சிலர் பித்தளையால் ஆன மோதிரம் போட்டிருக்கின்றனர். எப்போதும் கையில் அரிவாள், கடப்பாறையுடன் இருக்கிறார்கள். இளைஞர் சிலர் கையில் கடிகாரம் கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

## ஆடைகள்

குறைந்த அளவு ஆடையை அணிந்திருக்கிறார்கள்; வேட்டியும் துண்டும் ஆண்களின் முக்கிய ஆடைகள். சிலர் துண்டு, கோவணத்துடனும் இருக்கின்றனர்; சட்டையைப் பயன்படுத்துகிறார்கள்.

## பெண்களும் மேலாடையும்

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் மேல் ஆடை, ரவிக்கையை அணியாமல் இருந்தார்களாம். இப்பொழுதும் வயதான பெண்கள் ரவிக்கை இல்லாமல் இருக்கிறார்கள். இளம் வயதுப் பெண்களும் (15 முதல் 25 வயதுக்குள்) கூட ரவிக்கை அணியாமல் இருப்பதுண்டு.

பெண்கள் நிலத்தில் வேலை செய்யும்போது மேல் ஆடை இல்லாமல் இருப்பார்களாம். தேவையான துணிகளை வாங்க முடியாமல் இருப்பதும், அதற்கானபொருளாதார வசதி இல்லாமல் இருப்பதும் காரணங்களாகும். என்கிறார்கள்

சிலர் அரைஞாண் கயிற்றைக் காட்டுக் கயிற்றால் (எருக்கம் நாரினால்) கட்டி யிருக்கிறார்கள். நூல்

கயிற்றைத் தற்போது அதிகம் பயன்படுத்துகிறார்கள். இதனைத் தோப்லை என்று கூறுகிறார்கள்.

1983 க்கு முன்பு பணிகளைச் செய்த ஊழியர்கள், மேல் ஆடைகள் இல்லாத பெண்களைப்பார்த்தார்களாம். அவர்கள் உடலைத் தொட்டாலும் வெட்கப்படாமலும், நாணப் படாமலும் இருந்தார்களாம். பெண்களைத் தொடும்போது, அவளின் கணவன்கூட எதுவும் பேசுவதில்லையாம்.

ஆண்கள் தலைப்பாகை அணிகின்றனர். இதற்குத் 'தலைவாட்டி' என்று கூறுகிறார்கள். எப்போதும் காலணியை அணிந்துள்ளனர் சிலர் காலணி இல்லாமலும் இருக்கிறார்கள். காலணிகளைத் தயாரிப்பவர்கள் இவர்களுக்குள்ளேயே சிலர் இருக்கிறார்கள்.

ஆண்கள் வட்டமான முகமும், கூர்மையான மூக்கும், சுருங்கியது போன்ற காதையும் உடையவர்கள்.

சிலர் நீண்ட முகமும், தட்டையான மூக்கும், படர்ந்த (பெரிய) காதுகளையும் உடையவர்கள். இது இவர்கள் வாழும் இடத்தைப் பொறுத்து இருக்கிறது என்றார்கள்.

## உடல் நிறம்:

ஆண்கள் கறுத்தவர்களாக இருந்தாலும் சிலர் மாநிறம் உடையவர்களாக இருக்கிறார்கள். உயரமான இடத்தில் வாழ்பவர்கள் சற்றுக் கறுத்தும், பள்ளப் பகுதியில்வாழ்பவர்கள் மாநிறமும், நல்ல நிறமும் உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஆண்கள் விபூதியை இட்டுக் கொள்கிறார்கள். சந்தனம் பூசிக் கொள்கிறார்கள். நாமத்தையும் போட்டுக் கொள்கிறார்கள். சந்தனப் பொட்டு வைத்து அதன் மேல் சிவப்பையும் வைத்துக் கொள்கிறார்கள்.

வறுமையின் காரணமாகச், சிலர் நலிந்த உடலை உடையவர்களாகவும், ஒட்டிய கன்னங்கள், குழி விழுந்த கண்களை உடையவர்களாயும் இருக்கிறார்கள்.

காட்டு வேலைகளின் காரணமாக இவர்களது கைகள் நன்றாகக் காய்ப்புக் காய்த்து விரைப்பாக இருக்கின்றன.

## பெண்களின் நிலை

பெண்கள் கறுத்த மேனியும் நல் உடற்கட்டும் உடையவர்கள். சிலர் நல்ல நிறமுடையவர்களாக இருக்கிறார்கள். அதிக உழைப்பு இவர்களை, வெளி உலகத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியாமல் செய்துள்ளது.

பெண்கள் நெற்றியில் பெரிய அளவு பொட்டு வைத்துக் கொள்கிறார்கள். பொட்டுக்குத்தற்போது நவீன சாந்துகளையும் பயன்படுத்துகிறார்கள். நீண்ட கறுத்த கூந்தலை உடையவர்களாக இருக்கிறார்கள்.

வெற்றிலைப் போடும் பழக்கத்தால் பற்கள்சிவப்பேறி இருக்கிறது. ஆண்களும் பெண்களும் அதிகம் வெற்றிலை போடுகிறார்கள். நெற்றி அகலமாய், மூக்கு குட்டையாய் இருக்கின்றன. காதுகள் அகன்றும்பருத்தும இருக்கின்றன.

இவர்கள் பேசும் மொழி, தனிக் கவர்ச்சியைக் தருகிறது. பயந்த சுபாவம் உடையவர்களாகப் பெண்கள் இருக்கிறார்கள். மற்றவர்களுக்குத் தெரியும்படி தங்கள் பயத்தை வெளிப்படுத்துகிறார்கள.

வாய்ச் சண்டை வீரர்களாக இருக்கிறார்கள். சண்டையின் போது ஆண்களும் பெண்களும் அதிகம் கோபம் கொள்கிறார்கள்.

பெண்கள் கூந்தலைக் கொண்டையாகப் போட்டுக் கொள்கிறார்கள். முடியை அப்படியே எடுத்துக் கட்டிக்

கொள்வதும் உண்டு. தலைக்கு எண்ணெய் தடவி, சீவி, பூவைத்துக் கொள்கிறார்கள். காகிதப் பூக்களை மிகவும் விரும்புகிறார்கள். காட்டுச் செடிப் பூக்களை அதிகம் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். பெண்கள் நிலத்து (காட்டு) வேலையின்போது தலையில் ஒரு துணியைக் கட்டிக்கொள்வர். இதனை 'முண்டு' என்று கூறுகிறார்கள்.

நரை உடையவர்களை அதிகம் பார்க்க முடிய வில்லை. வயதான பலரின் முடி கறுத்தே இருக்கிறது.

பெண்கள் 6 அடிக்குக் குறைவான உயரம் உள்ளவர் களாக இருக்கிறார்கள்.

வேறு இனத்தாரோடு பேசவும் பழகவும் வெட்கப் படுகிறார்கள். அவர்களுக்கு அதிகம் தெரிந்தவர், பழக்கம் உள்ளவர்களோடு மட்டும் மிக நெருங்கியும் கலகலப்பாக வும் பேசுகிறார்கள்.

அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச அஞ்சுகிறார்கள். புதியவர் பேசினாலும் பேசுவதில்லை.

இவர்களது தாலிச்சரடு கயிற்றால் ஆனது. தாலி பித் தளையால் ஆனதாக இருக்கிறது. இதோடு 25 பைசா நாணயத்தைப் பற்றவைத்துக் காசு மாலைப் போல அணிந்து கொண்டு இருக்கிறார்கள். பெண்களில் சிலர் முகத்திற்கு மஞ்சளைப் பூசிக் கொள்கிறார்கள்.

குழந்தைகள் நாகரிகத்தின் தொடக்கத்தில் உள்ளவர் களைப் போல் இருக்கிறார்கள். அழுக்கேறிய ஆடைகளே அவர்களின் கறுத்த நிறத்திற்கு அழகு தருகின்றன. குழந்தைகளுக்குத் தற்போது சத்துணவு முறையால் ஓரளவு உணவு கிடைக்கிறது.

இவர்களில் வயதானவர்களுங்கூட ஏதாவது ஒரு வேலையைச் செய்கிறார்கள்.

தற்போது இளம் வயதுடைய ஆண்களும் பெண்களும் சோப்பு, பவுடர்களை விரும்பிப் பயன்படுத்துகிறார்கள். புதுமைப் பொருள்களின் மீது அதிக ஆர்வம் உள்ளவர் களாகவும் விரும்பி வாங்குபவர்களாகவும் மாறிஉள்ளனர். இப்பொழுது கட்சிச் சின்னம் போட்ட ஆடைகளையும் பூ உருவங்கள் உள்ள துணிகளையும் விரும்பி அணிகிறார் கள். நாகரிகத்தோடு வாழவும், பிறரோடு போட்டி போடவும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள்; மாறிவிடுவார்கள் எனலாம்.



# வீடும் வீட்டுச் சாமான்களும்

மலையாளிகள் சிக்கனமான வாழ்க்கையை உடைய வர்கள். அவர்கள் வீடும் வீட்டுப் பொருள்களும் மிகவும் எளிமையானவை; அவசியமானவை.

கல்வராயன் மலையில் உள்ள ஊர்கள் குடிசைகளால் ஆன வீடுகளைக் கொண்டவை. 50 முதல் 100 க்கும் மேல் வீடுகளை உடைய ஊர்களும், 50க்குக் கீழ் வீடுகளை உடைய ஊர்களும் இம் மலையில் உள்ளன. இவர்கள் வீடுகளை மலைச்சரிவிலும், தாழ்வான பகுதியிலும் அமைத்துள்ளார்கள். இவ்வமைப்பு மழை நீர், காற்று இவைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வசதியாக உள்ளது.

ஒவ்வொரு ஊரும் ஆற்றங்கரைக்கு (ஓடை) மேலும் அல்லது அருகாமையிலும் அமைந்துள்ளன. ஊரைச் சுற்றிலும் புளிய மரங்கள், தென்னை, காட்டுமரங்கள் முதலியன நிறைந்துள்ளன. தோப்புக்கள் உள்ள குடிசை கள் போலத் தோன்றுகிறது. இவை கடுமையான காற்று. மழை, வெய்யில் இவைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் முறையில் உள்ளன,

ஊர்களுக்கு உரிய காட்டுப் (நிலம்) பகுதிக்கு மத்தி யிலோ அல்லது அருகிலோ ஒவ்வொரு ஊரும் அமைந் துள்ளது.

இவர்கள் இயற்கையான காட்டை அழித்துத் தங்களுக்கு வேண்டிய நிலங்களை உருவாக்கிக் கொண்

கிறார்கள். ஆனால் இந்த நிலங்கள் நிலையானவையாக இரா. வேறு வேறு இடங்களில் காட்டை அழித்து நிலத்தை உண்டாக்கியே விவசாயத்தைச் செய்பவர்களாக இருந்த தால், தங்கள் வீடுகளையும் அதற்குத் தகுந்தாற்போல் வேறு வேறு இடங்களில் மாற்றிக் கொண்டிருந்தார்கள். இதனால் தங்கள் வீடுகளை மிகச் சிறிய குடிசைகளாக அமைத்துக் கொண்டார்கள்.

ஜாகீர் முறை நீக்கப்பட்ட (1976 க்குப்) பிறகு, நிலங் களை வேறு இடத்தில் உருவாக்க முடியாமையால் சுமார் பத்து ஆண்டுகளாகத் தங்கள் வீடுகளையும் மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

## வீட்டமைப்பு

வீடுகளின் சுவரைப் பெரிய கற்களை அடுக்கி மண்ணைக் குழைத்துச் சேர்த்துக் கட்டிக் கொள்கிறார்கள். வீட்டின் சுவர்கள் 8 அடிக்கும் குறைவாக இருக்கிறது. நான்கு சுவர்களைக் கொண்ட ஒரு அறையே வீடாக இருக்கிறது. சன்னல் என்பது எந்த வீட்டிற்கும் இல்லை. தற்போது நகர்ப் பகுதியிலிருந்து வந்து குடியிருக்கும் சிலர் கட்டியுள்ள வீடுகளுக்குச் சன்னல் வைத்துள்ளனர்.

## குடான் — குடிசை

இவர்கள் வீட்டை 'வீடு' என்றும் 'குடிசை' என்றும் கூறுகிறார்கள். சில இடங்களில் **குடான்** என்றும் கூறு கிறார்கள்.

## மஞ்சம் புல்

வீடுகளை, மூங்கில், காட்டுக் கழிகளால் அலைத்து மஞ்சம் புல் என்ற நீண்ட புல்வகையைக் கொண்டு கூரை வேய்ந்துள்ளனர். மஞ்சப் புல் என்பது கிராமங்களுக்கு கூரை வேயப் பயன்படுத்தப்படும் 'விழல்' என்பதைப் போன்று இருக்கிறது. இம்மஞ்சள் புல்லைச்

சமவெளியிலிருந்தும், காட்டில் சில இடங்களிலிருந்தும் கொண்டு வருகிறார்கள், இப் புல் ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் பயன்படுகிறதாம்.

மூற்றிய மூங்கிலைப் பிளந்து குடிசைக்குச் சுவராகவும் அமைத்துள்ளார்கள். பெரிய பெரிய காட்டு மரங்களை வீட்டிற்குக் குறுக்காக (உத்திரமாகப்) பயன்படுத்தி யிருக்கிறார்கள். காட்டு நார்களால் கூரைக் கழிகளைக் கட்டி யிருக்கிறார்கள்.

வீடுகளை எதிர் எதிராகக் கட்டி இருக்கிறார்கள். பெரும்பாலான வீடுகள் தெற்கு வடக்காக, வடக்குத் தெற்காகவே முகப்பு வைத்துக் கட்டி இருக்கிறார்கள்.

குடிசைகள் பெரும்பாலும் குனிந்து போகும்படியாகத் தாழ்வாக இருக்கின்றன.

ஒவ்வொரு குடிசைக்கு வெளியிலும் திண்ணை அமைத்துள்ளார்கள். திண்ணைகள் இல்லாத வீடுகளே இல்லை இத் திண்ணைகள் விறகு, சாமான்கள் வைக்கப் பயன்படுகின்றன. திண்ணையின் ஒரு மூலையில் உள்ள வழியாக உள்ளே பன்றியை, கோழியைத் தங்க வைக்கிறார்கள். இரவில் இவைகளுக்குத் திண்ணையின் கீழ்ப்பகுதி தங்குமிடமாக இருக்கிறது.

## மருவு

குடிசையின் மேல் கூரையில் புல்லால் **கேள்விக் குறி** போல அமைத்துள்ளார்கள். இதை **மருவு** என்று கூறுகிறார்கள். இம்மருவு காற்று கருப்பிலிருந்து தங்களையும், தங்கள் வீட்டையும் காப்பாற்றுகிறதாம். சில வீடுகளில் இந்த **மருவு** வில் பழைய துணியைச் சுற்றியுள்ளார்கள். இதனால் பறவைகளால் கூரைக்கு நாசம் உண்டாகாது. பொங்கலன்று, இலையில் ஒரு படையல் வைத்து மருவுக்குப் படைக்கிறார்கள். இப் படையல் இலையைக் கூரையின் மேல் பகுதியிலே வைக்கிறார்கள்.

குடிசைக்குப் பக்கத்தில் ஆடுகளுக்குப் பட்டி உள்ளது. இவை காட்டுக் கழிகளால் அமைந்தவை. பட்டியில் தரைக்கு இரண்டடிக்கு மேல் பரண் அமைத்துள்ளார்கள். இப் பரணில்தான் ஆடுகள் இரவில் தங்குகின்றன. இப் பரண் அமைப்பு ஆடுகளுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எந்த ஊரும் ஓர் ஆண்டுக்குமேல் நிலையாக இருக்காதாம். ஜாகீர் முறை நீக்கப்பட்ட பிறகு, அப்போது இந்த வீடுகள் அப்படியே இருக்கின்றன. ஆனாலும் சில இடங்களில் சிறு சிறு குடிசைகளைக் கட்டிக் கொள்கிறார்கள்.

குடிசைகளை எப்போதும் பிரித்து விடுவதற்கு ஏற்றாற் போலக் கட்டி இருக்கிறார்கள். இரண்டு பக்கக் கூரையைத் தகடு எடுப்பது போல எடுத்து விடலாம்.

## சேர் தொம்பை

குடிசைக்கு எதிரிலோ, அல்லது பக்கத்து பக்கத்திலோ, ஓரத்திலோ சேர் (குதிர்) அமைத்துள்ளார்கள். இவற்றைத் தானியங்களைச் சேமித்து வைக்கப்பயன்படுத்துகிறார்கள். இவற்றை மண்ணாலும் மூங்கிலாலும் அமைத்துக் கொள் கிறார்கள். இவை வட்டமாக 3 அடி முதல் 6 அடி வரை உயரமும் 3 அடி முதல் 4 அடி அகலமும் உடையதாக இருக் கின்றன. இவற்றிற்குப் புனல் போல மூடியை வைத் துள்ளார்கள்.

இவர்கள் சேரை என்பதைத் **தொம்பை** என்று கூறு கிறார்கள்.[1]

ஒரு பெரிய கல்லுக்கு மேலே இத் தொம்பையை அமைத்துள்ளார்கள். இந்த முறை தானியங்களைப் பூச்சி களிலிருந்து அழியாமல் பாதுகாக்க உதவுகிறது.

---

[1] ஏலகிரி, கொல்லிமலை மலையாளிகள் 'பின்லா' என்கிறார்கள்.

## பொதுச் சேமிப்பு

இது போன்ற தொம்பை அல்லது சேர் ஒன்று ஊருக்குப் பொதுவாகவும் அமைத்துள்ளார்கள். இது ஏனைய தொம்பையைவிடப் பெரியதாக இருக்கும். ஊர்ப் பொது வில் நடைபெற இருக்கும் திரு விழாவிற்காக ஒவ்வொரு வீட்டாரின் காணிக்கையை வாங்கி இதில் சேமித்து வைக்கிறார்கள். இக்காணிக்கை கட்டாயமாக வாங்கப் படுகிறது. திருவிழா சமயம் ஊரார் முன்னிலையில் சேமிப்புகளை எடுத்துப் பயன்படுத்தப் படுகிறது.

## பரண்

வீட்டிற்கு வெளியில் பரண் அமைந்துள்ளது போல ஒவ்வொரு வீட்டிற்கும் உள்ளே ஒரு பரண் அமைத்துள்ளனர். இப்பரண் 5 அடி உயரத்திற்கு மேல் இருக்கும். பரணை இரவில் படுத்துக் கொள்ளவும், சாமன்கள், விறகு, தானிய மூட்டைகளை வைக்கவும் பயன்படுத்துகிறார்கள்.

மழைக் காலங்களில் பரணுக்குக் கீழே காட்டு மரங்களை எரித்துக் (சுவாலை விட்டு எரியாது) குளிர் காய்கிறார்கள். இது இரவில் மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும் பாதுகாப்பாக இருக்கிறது. பரண் மீது ஏறி இறங்க, மூங்கில் ஏணியைப் பயன்படுத்துவர்.

பரண் என்பதைத் தட்டு என்றும் கூறுகிறார்கள்.

## கதவும் அடுப்பும்

வீடுகளுக்குப் பெரும்பாலும் மரக்கதவுகள் இல்லை. மூங்கில்பட்டை அல்லது காட்டுக் கழிகளால் ஆன தட்டியைப் பயன்படுத்துகிறார்கள்.

வீட்டின் உள்ளே வட கிழக்கு மூலையில் அடுப்பை வைத்து இருக்கிறார்கள்.

## சாணம் பயன்படுத்தல்

வீட்டை மாட்டுச் சாணத்தால் மெழுகிச் சுத்தம் செய்கிறார்கள். வெள்ளிக் கிழமையில் அவசியம் சாணத்தால் மெழுகுகிறார்கள்,

## கோலம்

தினமும் காலையில் வீட்டிற்கு முன்பு சாணத்தைக் கரைத்துத் தெளித்துக் கோலம் போடுகிறார்கள். கோடுகளால் சுவரில் கோலம் போட்டு அழகு செய்கிறார்கள். புள்ளி வைத்த கோலம் போடத் தெரியாமல் இருக்கிறார்கள்.

வீட்டு வேலைகளைப் பெண்களே செய்கின்றனர். சமையல் இவர்களுடைய முக்கிய வேலை.

## உரல், எந்திரம்

வீட்டில் தினை, கேழ்வரகு முதலியவைகளைச் சுத்தம் செய்துகொள்ள மர உரலைப் பயன்படுத்துகிறார்கள், உரல் இரண்டு பாகமாக இருக்கிறது. சிலர் ஒன்றாகவும் வைத்திருக்கிறார்கள். மர உரல் 2½ அடி முதல் 3½ அடி உயரம் வரை இருக்கிறது.

தினை, கேழ்வரவு, கம்பு ஆகிய தானியங்களை அரைத்துக் கொள்ள மரத்தால் ஆன எந்திரம் வைத்திருக்கிறார்கள்.

மர உலக்கை வைத்திருக்கிறார்கள். உலக்கைக்குப் பூண் போட்டு இருக்கிறார்கள். பூண் வெளியிலிருந்து வாங்கப் படுகிறது. சிலர் பூண் இல்லாத உலக்கையையும் பயன்படுத்துகிறார்கள்.

## புதியன புகுதல்

இப்போது வீட்டிற்குக் கதவுகள் வைக்க ஆரம்பித்துள்ளனர். மரத்தால் வாயிற்படி வைத்துள்ளனர்.

பித்தளைக்குடம், தம்ளர், தட்டுகள் வாங்கியுள்ளனர். அலுமினிய பாத்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். சில்வர்குடம், சில்வர் தம்ளர் முதலிய சில்வர் பாத்திரங்களை விரும்பி வாங்குகிறார்கள்.

## மூங்கில் குழாய், சுரைக் குடுவைகள்

மூங்கில் குழாயைத் தேன் சேகரிக்கவும் தண்ணீர் குடிக்கவும் பயன்படுத்துகிறார்கள். சுரைக்குடுவையையும் வைத்துள்ளனர். காட்டிற்கு கஞ்சியை இதில் கொண்டு செல்கின்றனர். இப்பொழுது அலுமினியம்இரும்புக்கரண்டி நெருப்பெடுக்க இடுக்கி முதலியவைகளையும் வைத்துள்ளனர்.

மண்பாத்திரமே இவர்கள் குடிசையில் அதிக இடத்தை அபகரித்துக் கொண்டிருக்கிறது. படுத்துக் கொள்ளக் கோரைப் பாய்களைப் பயன் படுத்துகிறார்கள். ஈச்சம் பாய்களையும் வைத்துள்ளனர். போர்வை, தலையணைகளையும் பயன்படுத்துகிறார்கள்.

## ஒளி விளக்கு

இரவில் வீட்டிற்கு விளக்கேற்றுகிறார்கள். இரவு முழுவதும் விளக்கெரியச் செய்கிறார்கள்.

இப்பொழுது மின்சாரம் பயன்படுகிறது. பெரும்பாலான ஊர்களுக்கு மின்சார வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. விளக்கிற்கும் வானொலிக்கும் மின்சாரத்தைப் பயன் படுத்துகிறார்கள். மின்சாரம் இப்போது இவர்கள் வீட்டையும் ஊரையும் வெளிச்சமாக வைத்துள்ளன.

முன்பு, சிக்கி முக்கிக் கல்லால் தீயை உருவாக்கினார்களாம். (இப்போதும் மிக உயரமான மலை ஊர்களில் இப்பழக்கம் இருக்கிறதாம்) இப்போது தீப்பெட்டியைப் பயன்படுத்துகிறார்கள். இரவில் இவர்களுக்கு உறங்க வீடுபயன்படுகிறது; பாதுகாப்புத் தருகிறது.

# மக்களின் உணவு

மலை மக்கள் காட்டு மரங்களை அழித்துத் திருத்தி நிலமாக்கித் தினைவகைகளைப் பயிரிடுகிறார்கள்.

தினை, வரகு முக்கிய உணவுப் பயிர்களாக உள்ளன, சிறப்பான விருந்து, இவற்றால் சமைத்த உணவாகவே இருக்கிறது. இவற்றின் மூலம் கஞ்சி, கூழ் ஆகிய உணவையும் தயாரிக்கிறார்கள்.

அரிசி உணவு மிகவும் குறைவு; மிகவும் முக்கியமான நாட்களில் அரிசியைச் சமைக்கிறார்கள்.

கம்பு, சோளம், கேழ்வரகு ஆகியவற்றையும் பயிர் செய்கிறார்கள். இவற்றிலிருந்தும் உணவைத் (கூழ், அடை) தயாரிக்கிறார்கள். கூழ், கஞ்சி போன்ற உணவுகளுக்கு மிளகாயை முக்கியமாகப் பயன் படுத்துகிறார்கள்.

காட்டுக் கிழங்குகளைச் சுட்டும் குழம்பில் சேர்த்தும் பயன் படுத்துகிறார்கள்.

தேங்காய், மாங்காய்களை உணவுக்குப் பயன்படுத்துகிறார்கள்; விற்கவும் செய்கிறார்கள். மளிகைப் பொருட்களை நகர்ப் பகுதியிலிருந்தே வாங்கிக் கொள்கிறார்கள். உப்பு இவர்களுக்கு எப்போதும் தேவைப்படுகிறது. உப்பைக் குறைந்தது ½ மூட்டைக்கு மேல் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள்.

## இறைச்சி உணவு

மான், காட்டுப்பன்றி, முயல் போன்ற காட்டு உயிர்களை வேட்டையாடி உண்ணுவார்கள். பறவைகளையும் மீனையும் உண்கிறார்கள்; கருவாடும் முதன்மையாக இருக்கிறது. ஆடு, கோழி முக்கியமான மாமிச உணவாக இருக்கிறது. முக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பன்றிக் கறியை உண்பார்கள். மான் கறியை யாருக்கும் கொடுப்பதில்லையாம். காட்டு எலிகளையும் உணவாகக் கொள்வார்கள்.

தேனைத் தினை மாவுப் பொருள்களோடு சேர்த்து உண்பார்கள்.

## குடிப் பழக்கம்

சாராயத்தையும் கஞ்சாவையும் பயன்படுத்துவார்கள். ஆண் பெண் இரு சாராரும் சாராயத்தைக் குடிப்பார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் எப்போதும் சாராயம் கொஞ்சம் இருக்கும், விருந்தினருக்கு வந்தவுடன் கொடுக்கப்படும் விருந்து சாராயமாக இருக்கும். சாராயம் குடிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. சாராயம் குடிப்பதை ஒரு தீங்காகக் கருதவில்லை.

## சில பழக்கங்கள்

பாலை, மோருக்காகப் பயன்படுத்துகிறார்கள். பாலைக் கன்றுக்கே குடிக்கவிட்டு விடுவார்கள். ஆடு, பாலுக்காக வளர்க்கப்படுகிறது. ஆட்டுப் பாலைத்தான் இம் மக்கள் சாப்பிடுகிறார்கள்; விற்கிறார்கள். மாட்டுக் கறியை விருப்பாத இவர்கள் ஆட்டுக்கறியை மிகவும் விரும்புகிறார்கள்.

இவர்கள் வெற்றிலை, பாக்கு, புகையிலையைப் பயன்படுத்துகிறார்கள். புகைக்கவும் பழகி இருக்கிறார்கள்.

மா, பலா வாழை முதலிய மரங்கள் ஒவ்வொரு ஊரிலும் உள்ளன. இவற்றின் காய் கனிகளைப் பயன் படுத்துவார்கள். உணவிலும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

மழைக் காலத்தில் தோன்றும் ஈசலைப் பிடித்து வறுத்து சோளப்பொறி, வறுத்த அரிசி, பருப்புகளுடன் சேர்த்து உண்பார்கள்.* இவர்களுக்கு இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உணவுப் பொருள் கிடைக்கிறது.



* 10 6. 85 வஞ்சிக் குழியில் ஈசலைச் சாப்பிட நேர்ந்தது.

# மக்களின் ஆடைகள்

கல்வராயன்மலை மக்களின் ஆடைகள் அவர்களின் பொருளாதாரத்தைக் காட்டும் அளவு கோல இருக்கின்றன

முதன் முதல் (10. 6. 85) நான் மலையைப் பார்க்கச் சென்றபோது எங்கள் ஆடையைக் கண்டு பயந்து போனதை அறிந்து வியப்பு அடைந்தோம். பிறகு எங்கள் ஆடைகளை மாற்றிக் கொண்டோம்.

மேலுக்குத் துண்டைப் போட்டுக் கொள்வார்கள். 8 முழம் அல்லது 4 முழம் வேட்டியைத் தலைப்பாகைக்குக் கட்டிக் கொள்வார்கள். குளிர் காலத்திலும் மற்றைய காலத்திலும் ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டிருப்பார்கள். நகர்ப்புறத்துக்குச் சென்று தங்களுக்கு வேண்டிய துணிகளை வாங்கிக் கொள்வார்கள்.

பெண்கள், முன்பு ஒரு புடவையை இரண்டாக்கி இடையில் சுற்றிக் கொண்டு மேலுக்கு போட்டுக் கொள்வார்கள். இப்போது இப்படி ஆடை அணியும் பெண்களைக் காண முடிந்தது*. முன்பு சேலை, ஜாக்கெட் போட்டால் சாதிக் குற்றம் என்றும் கருதினார்களாம். ஜாகிர்தார் முன்பு அணிந்து சென்றால், வரி போடப்பட்டதாம்; தண்டனையும் உண்டு. இதற்காக வீட்டிலேயே கட்டிக் கொள்வார்களாம். பிறகு சேலையை இரண்டாக்கிச் சுற்றிக் கொள்வார்கள்.

* கீரிப்புலி, தும்பராம்பட்டு.

இப்போது பெண்கள் புடவை, உள்பாவாடை, ஜாக்கட், உள்பாடி முதலியன அணிய விரும்புகின்றனர்; சிலர் அணிந்தும் இருக்கிறார்கள்.

நகர்ப் பகுதிகளோடு தொடர்பும் போக்கு வரத்து வசதிகளும் உண்டாகி வருவதால், இவர்களது ஆடைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

## மக்களது அணிகலன்கள்

மக்கள் வாழ்க்கையில் அணிகள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. பழங்காலம் முதல் இக்காலம் வரை அணிகளின் வகைகள் பலவாக உள்ளன.

## பித்தளை அணிகள்

இங்குள்ள மக்கள் தாலியைக்கூடத் தங்கத்தால் செய்வதில்லை. பித்தளையே இவர்களுக்கு எல்லாமாக இருக்கிறது. தாலி காதுக் கம்மல், மூக்குத்தி போன்ற முக்கிய அணிகள் பித்தளையால் ஆனவையே. தாலிக் கயிற்றில் கறுப்பு மணியைக் கோத்துக் கொள்கிறார்கள். பித்தளையால் ஆன குண்டுகளையும் இத்துடன் இணைத்துக் கொள்கிறார்கள்.

தாலிக்குப் பதிலாகக் கறுப்பு மணிகளைக் கோத்து மணிமாலை என்று அணிந்து கொள்கிறார்கள். தாலிக் கயிற்றில் சிலர் 25 பைசா நாணயத்தில் வளையம் வைத்துக் காசு மாலை என்று அணிந்திருக்கின்றனர்.

ஆண்கள் கயிற்றால் அரைஞாண் கயிற்றை கட்டியிருக்கிறார்கள். பித்தளை மோதிரத்தைப் போட்டுக் கொள்வார்கள்.

காசு மாலை 5 முதல் 10க்கும் மேற்பட்ட காசுகளைக் கொண்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கு இந்தக் காசு

வைரத்தோடாக இருக்கிறது. இந்த வைரத்தோடு இல்லாத பெண் குழந்தைகளே இல்லை. குழந்தை முதல் பெரியவர் வரை உள்ள பெண்கள் காசு மாலையைப் போட்டிருக்கிறார்கள்.

## தெய்வங்களுக்கு அணிகள்

தெய்வச் சிலைகளுக்குப் பித்தளை மணிகளால் ஆன சில அணிகளைப் போட்டு அழகு பார்ப்பார்கள். விழாக் காலங்களில் இவற்றைக் கொண்டே அலங்காரம் செய்வார்கள். சில சமயம் சமவெளி ஊர்களிலிருந்து சில நகைகளைக் கடனாக வாங்கி வந்து அலங்காரம் செய்வதும் உண்டு.

## கூத்துக் கலை

ஆண்கள் கண்ணாடித் துண்டுகளால் ஆன ஆடை, சோடனைப் பொருள்களை வாங்கிவந்து வைத்துள்ளார்கள் கூத்துச் சமயத்தில் இவற்றை அணிந்து அழகு பார்க்க வேண்டுமென்பதற்காகக் கூத்தை அதிகம் விரும்பி ஆடுவார்கள் தலைப்பாகையே மகுடமாக இருக்கிறது. தலைப்பாகை இல்லாத ஆண்களைப் பார்க்க முடியாது. காட்டு வேலைகளின்போது முக்கியமாகப் பெண்கள் ஒரு துணியைத் தலையில் கட்டிக் கொள்வார்கள்.

முகம் பார்க்கும் கண்ணாடியை ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருப்பார்கள். கண்ணாடியைப் பார்த்துத் தலையைச் சீவிக் கொள்ளவும், பொட்டு வைத்துக் கொள்ளவும் பயன் படுத்துகிறார்கள். திருவிழாக் காலங்களில் கோயிலில் சாமிக்கு முன்பாக ஒரு கண்ணாடியை வைத்திருப்பார்கள்.

பெண்கள் கையில் பித்தளையால் ஆன வளையம் (காப்பு) அணிந்திருக்கிறார்கள். காதில் சிலர் ஓலையைச் செருகி வைத்துள்ளார்கள். ரப்பர், கண்ணாடியால் செய்

யப்பட்ட வளையல்களைப் பெண்கள் அதிகம் விரும்பி அணிவார்கள். இவைகளை அருகில் உள்ள ஊர்களுக்கு, நகர்ப்புறங்களுக்குச் செல்லும்போது அவசியம் வாங்கிக் கொள்வார்கள். விழா, திருமணம் போன்ற நாட்களில் இவற்றை அணிவார்கள்.

மண்ணால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள் களை வாங்கி வைத்திருப்பார்கள். தாயம் விளையாடு வார்கள்.

ஆண்கள் கஞ்சா வைத்துக் கொள்ளவும், வெற்றிலைப் பாக்கு வைத்துக் கொள்ளவும் துணியால் ஆன சுருக்குப் பையும் பனை ஓலையால் ஆன பெட்டியும் வைத்திருப் பார்கள். இவை பெண்களிடமும் உள்ளன.

சில ஆண்டுகளாகப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட் டுள்ளதால், அணிகலன்களில் மாற்றமும் புதுமையும் ஏற்பட்டுள்ளன.

சடைகளுக்குச் சுங்கு, தலையில் பின் குத்திக் கொள்ளு தல், இவற்றைப் பல விதங்களில் வாங்கிப் பயன்படுத்து வார்கள்.

ரப்பர் பூக்களை வாங்கித் தலையில் செருகிக் கொள் வார்கள். சிலர் சில்வர், வெள்ளியால் ஆன கால்மெட்டி, அணிந்துள்ளனர். சில்வர் மோதிரம், வளையல்களை அதிகம் வாங்கி அணியும் பழக்கத்தை விரும்புகிறார்கள்.

வேங்கடாசலபதி உருவம் பதித்த டாலர் கயிற்றையும் சிலுவைச்சின்னம் உள்ள சில்வர் சங்கிலியையும்பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் அணிந்துள்ளனர். இப் பொழுது காலுக்குத் தோல், ரப்பர், பிளாஸ்டிக் ஆகிய வற்றால் ஆன செருப்புகளைப் பயன்படுத்துகிறார்கள்.

# ஆயுதங்கள்

மனித நாகரிகத்தில் ஆயுதங்களின் வளர்ச்சியும் மாற்றமும் முக்கியமானவை.

கல்வராயன்மலை மக்களிடம் இரும்பால் ஆன ஆயுதங்கள் இருக்கின்றன.

கற்களாலான ஆயுதங்கள் பலவற்றை ஓடைப்படுக்கைகளில், குன்றுகளில் காண முடிந்தது.

கல்வராயன் மலை மக்கள் வரலாற்றைக் கொண்டும் சடங்கு (திருமணம்) முறைகளைக் கொண்டு ஆராயும் போதும், வில்லும் அம்பும் தொடக்ககாலத்தில் இவர்களின் கருவிகளாக இருந்தன. பிறகு இரும்பால்ஆன ஈட்டி, கத்தி, அரிவாள், துப்பாக்கி முதலிய ஆயுதங்களைப் பயன்படுத்தி உள்ளனர்.

மிகவும் உயரமான மலைகளில் வாழும் மலையாளிகளிடம் இப்போதும் வில்லும் அம்பும் இருக்கிறதாம். அம் மக்களைச் சந்திக்க முடியவில்லை.

போக்குவரத்துப் பாதைக்கு அருகிலும்சற்றுத்தொலைவிலும் உள்ள ஊர்ப்பகுதிகளில் இவ்வாயுதங்கள் இல்லை.

பெரும்பாலான மலையாளிகள் துப்பாக்கியைப் பயன்படுத்துவார்கள். இவர்களிடமிருந்த பல துப்பாக்கிகள் ஜாகிர்முறை அழிக்கப்பட்டபோது போலீஸ் துறையால்

கைப்பற்றிக் கொள்ளப்பட்டதாம். இப்பொழுதும் சிலர் அனுமதி பெற்று வைத்துள்ளனர். மிருகங்களை வேட்டையாடத் துப்பாக்கியைப் பயன்படுத்துவார்கள். இவைகளைத் தவிர மிருகங்களை வலை போட்டும் மருந்து வைத்தும் பிடித்து விடுவார்கள்.

ஜாகிர் காலத்தில் கத்தியும் ஈட்டியும் மக்களின் முக்கிய ஆயுதங்களாக இருந்தன. ஜாகிருக்கு வேண்டிய மூப்பன், காட்டான் ஆகியோர் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டுமாம்.

மண்வெட்டி, கடப்பாறை, களைக்கட்டு, கொடுவாள் முதலிய இரும்புக் கருவிகளைப் பயன்படுத்துவார்கள். கொடுவாள் இல்லாதமலையாளியைக்காணவே முடியாது. இது இவர்களது சிறந்த ஆயுதமாக உள்ளது. இதனை மரம் செடி கொடிகளை வெட்டவும், மிருகங்களோடு போராடவும் பயன்படுத்துவார்கள். சிறு கத்தியையும் பயன்படுத்துவார்கள். காதில் குரும்பி எடுக்க உதவும் காது குரும்பியைச் சுருக்குப் பையோடு சேர்த்து வைத்துள்ளனர்.

முள் எடுக்க உதவும் முள் வாங்கியையும், சிறிய ஊசிகளையும் வைத்துள்ளனர்.

தேன் எடுக்க உதவியாக இவர்களிடம் வலிமையான கயிறும், அதில் வளையமும் உள்ளன. தீவட்டியாகப் பயன்படுத்தித் தேன் அழிக்க உதவியாக இரும்புக் கம்பியைச் சுமார் இரண்டடியளவுக்கு வைத்துள்ளனர்.

கத்தி, வேல், சூலம் முதலிய இரும்பு ஆயுதங்களைக் கோயிலுக்கு முன்பும் வீட்டுச் சாமி அறையிலும் வைத்து வழிபடுகிறார்கள். கோடாலியைப் பயன்படுத்துகின்றனர். காட்டை அழித்துக் கழனியாக்க, மரங்களை வெட்டியெடுக்க கோடாலி பெரிதும் உதவியாகவுள்ளது. முன்பு பாதுகாப்புக்காக வைத்திருந்த ஆயுதங்கள் இப்போது இவர்கள் வழிபாட்டில் உள்ளன.

# மக்களின் திறமை

## உழைப்பு

உழைப்பால் வாழும் இவர்கள் நாகரிகத்தில் கவனம் இல்லாமல் இருக்கிறார்கள். நாகரிகத்தை மறுக்கிறார்கள்; அவர்களையும் மீறி இப்போது வளர்ந்து வருகிறது.

கல்வராயன் மலை மக்கள் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் திறமையை இவர்கள் உணராமலே இருக்கிறார்கள்.

இம் மக்கள், காட்டை அழித்து நிலத்தை உருவாக்கக் கடுமையாக உழைப்பார்கள். பெரிய பெரிய மரங்களைக் கூடத் தங்கள் திறமையால் சலிப்பில்லாமல் வெட்டியெடுக்கிறார்கள். பெண்களும் சலிப்பில்லாமல் வேலைகளைச் செய்வார்கள். மாட்டைப் பழக்கி நிலத்தை உழுவுவதற்குப் பயன் படுத்துவார்கள்.

காட்டுக்கும் வீட்டுக்கும் உள்ள தூரத்தில் விளையும் பொருள்களைச் சுமந்து வந்தே வீட்டில் சேர்க்கிறார்கள் இவைகளைச் சுமப்பதிலும் தூக்குவதிலும் இவர்கள் திறமைசாலிகள். 12. 6. 85 இல் சேராப்பட்டு என்னுமிடத்தில் 15 அடி நீளமுள்ள சுமார் 60 க்கும் மேற்பட்ட மூங்கில் கழிகள் கொண்ட கட்டை 5 பேர் பேருந்தில் ஏற்றியதை வியப்பாகப் பார்த்தோம்.

மலையில் கால்நடையாகவே சென்று வருகிறார்கள். நகர்ப் பகுதிகளுக்கு வரவேண்டியபோதும் நடந்தே வந்து போகிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு 60 கி. மீ. தூரத்தை ஒரே நாளில் சுமைகளைக் கொண்டு வந்து விற்று இரவு மலைக்குப் போய்ச் சேர்ந்து விடுவார்களாம்.

## வேட்டை

வேட்டைக்குச் சென்றால், வேட்டையில்லாமல் திரும்ப மாட்டார்கள். மான், முள்ளம் பன்றி, கரடி வேட்டையில் இவர்களின் திறமையை நன்கு அறியலாம். மிருகங்களின் பாதச் சுவடுகளை வைத்து இன்ன மிருகம், இந்த வழியில் சென்றிருக்கும் என்று அறிந்து வேட்டை ஆடுவார்கள்.

20-7-85 இல் பொட்டியம் என்னும் கிராமத்தில் தங்கியபோது இரவு மழை! அப்போது என்னோடு பேசிக் கொண்டிருந்த மலையாளிகள் ஒருவகை சத்தத்தைக் கேட்டு மான் கத்துகிறது என்றும் வேட்டைக்குப் போகவேண்டும் என்றும் கூறினார்கள். இரவு நான் தூங்கிவிட்டேன். காலையில் எழுந்து என்னோடு பேசியவர்கள் வீடு சென்று விசாரித்தேன். 'மழை விட்ட பிறகு சென்றபோது அது ஆற்றைக் கடந்து மலைப்பக்கம் போய் விட்டதால், திரும்பி விட்டோம்' என்றார்கள். அவர்களோடு அந்த இடத்தைப் பார்த்தேன். சற்று தூரம் ஆற்றோரமாகச் சென்று இருந்தது என்பதை அறிந்தேன். சிறுத்தை, கரடி, காட்டுப் பன்றி போன்ற விலங்குகளின் பாதச் சுவடுகளை நன்கு அறிந்து கொள்வார்கள்.

ஆடு மாடுகள் காட்டில் தவறிப் போனால் அவற்றை அறிந்து கொள்ள இவர்கள் ஒருவகையான குரலெழுப்புவர். அக் குரலைக் கேட்டுப் பிரிந்த ஆடோ மாடோ வந்து சேரும். இவர்கள் புறா, கிளி முதலியவற்றை வளர்ப்பர். கிளிகளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்துள்ளனர்.

20. 7.85 அன்று பொட்டியம் ஜாகீரைச் சந்தித்தேன். அவர் கிளி வளர்த்து வந்தார். 'சாப்பிட்டியா! சௌக்கியமா' என்று பேச, அதுவும் அவ்வாறே கூறியதைக் கேட்டேன்.

இம் மலைமக்கள் எவ்வளவுதான் சாராயத்தைக் குடித்து இருந்தாலும் நிலைமாறித் தவறுகளைச் செய்யாதவர்களாக உள்ளனர். சாராயம் குடித்ததால் உண்டான தவறுதலால் ஏற்பட்ட வழக்கு ஏதும் வந்ததில்லை என்று பொட்டியம் ஜாகீர் கூறினார்.

சாராயம் இவர்கள் திறமையைக் கொஞ்சங் கொஞ்சமாய் அரித்துகொண்டு இருக்கிறது. அடிச்சுவட்டை வைத்து மிருகங்களை அறிதல்போல் சிலர் மோப்ப சக்தியின் மூலம் என்ன மிருகம் அண்டையில் உள்ளது என்பதை அறிவார்கள். கரடி, பாம்பு, சிறுத்தை, பன்றி, நரி ஆகியமிருகங்கள் இருப்பதைத் தங்களுக்கு இருக்கும் மோப்பச் சக்தியால் அறிந்து கொள்வார்கள். மிருகங்களுக்குப் பயப்படாத இவர்கள் நோய், மரணத்திற்கு மிகப் பயப்படுவார்கள்.

# தொழில்கள்

## உழைப்பை மதித்தல்

மனிதன் உழைக்கும் மிருகம். உழைப்பால்தான் மனிதன் உண்ண முடியும். இந்த மலை மக்கள் சிறந்த உழைப்பாளர்களாக உள்ளனர். உழைப்பவனைத்தான் மதிப்பார்கள். சோம்பேறியைக் 'காவாலி' என்று கேவலப் படுத்திக் கூறுவார்கள். தொண்டம் என்றும் கூறுவார்கள். உழைக்க முடியாதவனை மலைப்பெண்கள் விரும்புவ தில்லை. உழைக்கும் ஆற்றல் உள்ளவனைநல்ல **கவுண்டன், நல்ல மலையாளி, நல்லகாராளன்** என்று புகழ்வார்கள்.

ஆண்டில் சில மாதங்கள் பயிர்த் தொழில் இல்லாத போது காடு வெட்டும் பணியில் இருப்பார்கள். இந்த நாளில் விழா எடுப்பார்கள். இவர்கள் வேடர்களை வென்று காடுகளைப் பெற்றதால் **காராளர்** என்றும் காடு களை வெட்டி நிலத்தை உருவாக்கிப் பயிர்த் தொழில் செய்ததால் **வேளாளர், வெள்ளாளர்** என்றும் பெயர் பெற் றுள்ளனர். இதனால் இவர்களின் உழைப்பை அறியலாம்.

காட்டு மரங்களை வெட்டும்போது குடும்பத்தோடு ஈடுபடுவார்கள். இந்தப் பணிக்கு மிகவும் கடுமையாக உழைப்பர். ஒவ்வொரு ஆண்டும் காட்டு வேலைகளைக் குருவோ பூசாரியோ செய்த பிறகே மற்றவர்கள் செய்ய வேண்டும். காட்டு வேலை இல்லாதபோது வேட்டைப் பணிகளில் ஈடுபடுவர் ஒரு மலையாளி, காலையில் காட்டிற்குச் சென்றால் இரவில்தான் வீடு திரும்பு கிறான். காட்டுவேலைக்கு மனைவி, மக்கள் துணை புரிகின்றனர். இவன் தொழிலுக்குத் துணைக்காகவே

பல மனைவிகள் தேவைப்படுகின்றனர். வெட்டுதல், துப்புரவடித்தல் தோண்டுதல், வாருதல் ஆகிய பணிகளுக்குப் பெண்களே துணை செய்கிறார்கள். பெண்கள், பாதிக்கும் மேல் ஆண்களின் உழைப்பில் பங்குகொள்கிறார்கள். முன்பு ஒரு மலையாளி அவனுக்குத் தேவையான நிலத்தை அவனே வெட்டி உருவாக்கிக் கொண்டான். அந்தநிலத்தை மூன்று நான்கு ஆண்டுகளே பயன்படுத்துவான்; பிறகு வேறு இடம்தான்!

அழித்த காட்டில் விதைப்பதை, அறுப்பதை முக்கியத் தொழிலாகக் கருதுகிறார்கள். அறுவடை நாட்களில் யார் இறந்து போனாலும் அதில் கலந்து கொள்வதில்லை. இவ்வாறு தொழிலை முக்கியமாகக் கொள்கிறார்கள்.

காட்டு வேலை இல்லாதபோது விறகு வெட்டுதல் தேன் எடுத்தல் முக்கியத் தொழில்கள்.

காட்டுப் புல் அறுத்து குடிசையைப் புதுப்பிப்பதை இவர்கள் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர்.

கடுக்காய்களைச் சேகரிக்கின்றனர். இதனை விற்றும், கூலியாகவும் பொருளீட்டுகிறார்கள். கறிவேப்பிலைகளை விற்கின்றார்கள்.

மூங்கில், காச்சான் போன்ற மரங்களை வீட்டு வேலைக்கு வெட்டிக் கிராமங்களில் கொண்டு சென்று விற்றுத் திரும்புகின்றனர். வியாபாரிகளுக்கு இம் மரங்களை வெட்டிக் கொடுப்பதற்குக் கூலியும் பெறுகிறார்கள்.

தங்கள் வீடுகளைத் தாங்களே கட்டிக் கொள்கிறார்கள் பிறரைப் பயன் படுத்தும்போது அவர்களுக்குக் கூலியும் கொடுக்கிறார்கள்.

மாடு, ஆடுகளுக்குப் பட்டி அமைத்தல், சரிப்படுத்துதல் ஆகிய தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள்.

காட்டு உழைப்பின்போது சிலச் சில தகராறுகள் உண்டாகின்றன; இதனைப் பேசித் தீர்த்துக்கொள்கிறார்கள்.

நிலம் இல்லாதவர்கள் கூலிவேலைகள் செய்கிறார்கள். சில சமயம் மற்றவர் காட்டுக்குச் சென்று அவர்களுக்குக் காட்டு வேலைகளில் உதவிகளைச் செய்து, பின்னர் அவர்களைக் கொண்டு தங்கள் காட்டு வேலைகளை முடித்துக் கொள்கிறார்கள். உழைப்பு, தொழில்கள்கைமாற்றாகவும் இருக்கின்றன.

இவர்கள் ஆடு, மாடு, கோழி, பன்றிகளை வளர்க்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

காட்டுப்பன்றி, மான், முயல், கரடி ஆகிய மிருகங்களை வேட்டையாடுதலை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். வில், துப்பாக்கியை வேட்டைக்குப் பயன்படுத்துகிறார்கள்.

காட்டுப் பன்றியைப் பிடித்தலுக்கு ஒரு தந்திரத்தைச் செய்கிறார்கள்

தேங்காயின் உள் பகுதியைத் துளையிட்டுச் சுரண்டி எடுத்து விடுகிறார்கள். அத்துளையின் மூலம் உள்ளே வெடிமருந்தை அடைத்து விடுகிறார்கள். தேங்காய் மீது சோற்றை, கறியை வைத்து விடுகிறார்கள். இரவில் உணவைத் தேடி வரும் காட்டுப் பன்றி, கறி கலந்து சோற்றை உண்ணத் தொடங்கும். அப்போது தேங்காயை எடுத்துக் கடிக்கும். தேங்காய் வெடிக்கும். பன்றியின் முகம், உடல்பகுதி, வெடித்தால் காயம் பட்டுத் தப்பிக்க முயலும். அப்போது மறைந்திருப்போர் வலை வீசிப் பன்றியைப் பிடித்து விடுகிறார்கள். பன்றியை அடித்துக் கொன்று தலை கீழாகக் கட்டித் தொங்கவிட்டுக் கீழே நெருப்பிட்டுச் சுடுகின்றனர். பன்றியின் உடலில் மயிர்கள் பொங்கிய பின்பு மஞ்சள் தடவித் தீயில் வாட்டுகின்றன. பின்னர் அறுத்து பிரித்து பிரித்துக் கொள்கிறார்கள்.

சிறுத்தை, புலி வேட்டைத் தொழிலிலும் ஈடுபடுகிறார்கள். மான் வேட்டைக்கு விரும்பிச் செல்கிறார்கள்.

## துணைத் தொழில்கள்

மழைக் காலத்தில் காட்டுப் பகுதியில் ஈசல் பிடிக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆபத்தான இத் தொழிலை விளையாட்டாகச் செய்கிறார்கள்.

மலையின் உச்சியிலும் சரிவிலும் உள்ள தேனை எடுக்கும் தொழில் இவர்களிடம் பொழுது போக்காக இருக்கிறது. உயரமான மரத்தின் கிளைகளில் இருக்கும் தேனை அழித்துச் சேகரிக்கிறார்கள். தேனை நகர்ப் புறத்தில் கொண்டு போய் விற்றுச் செல்கிறார்கள்.

காட்டுக் கொடிகளால், கயிறு தயாரித்தல் மூங்கில் கழிகளைக் கொண்டு தட்டி செய்தல் முதலான தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

## வேங்கைமரப் பால்

வேங்கை மரப் பாலைச் சேகரித்தலைப்பொழுதுபோக்காகச் செய்தாலும் அனைவரும் சேகரிப்பதில்லை அப்படிச் செய்வது கொஞ்சம் துன்பமானது என்பதால் இருக்கக் கூடும்.

பெரிய வேங்கை மரத்தின் அடிப் பகுதியில் பெரிய கத்தியால் வெட்டி, வெட்டுகளை உண்டாக்கப் பால் கொட்டும். கொட்டும் பாலை மூங்கில் குழாயின் மூலம் ஒரு பாத்திரத்தில் பிடித்துக் கொள்கிறார்கள். பிறகு நிழலில் வைத்துக் கட்டியாய் ஆகும்படி உலர்த்தி எடுத்துக் கொண்டு தேவைப்படும்போது சிறு துளி தண்ணீர் விட்டுக் குச்சியால் தொட்டுக் கண், நெற்றி, புருவங்களில்வைத்துக் கொள்கிறார்கள். வேங்கைப் பால் சேகரித்தலைப் பெண்களே செய்கிறார்கள்.

# மக்களின் பண்புகள்

மனிதனின் பண்புகளே உயர்வு தாழ்வை உருவாக்கு கின்றன. 'உள்ளத்தனையது உயர்வு' என்று கூறுகிறார் திருவள்ளுவர். உள்ளத்தில் உயர்வான பண்புகள் இருந் தால் தான் மனிதன் உயர்ந்த நிலை (புகழ்) அடைய முடியும்.

ஒரு சமயம் சமவெளியில் நாகரிகமாக வாழ்ந்த மனிதன் காலத்தால் மலை வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்து விட்டது. அது அவர்களின் பண்பாட்டை (பண்பு களை) மாற்றி விட்டது.

முன்பு ஜாகீர்களின் கொடுமைகளைத் தாங்கிய ஏமாளிகளாக இருந்தார்கள். எதையும் தீர ஆலோசிக்கும் ஆற்றல் இல்லாதவர்களாக இருந்திருக்கிறார்கள். தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற முடியாமல் சிக்கலான வாழ்க்கை இவர்களைத் தடுத்துக் கொண்டிருந்தது.

ஒரு வேலையைச் செய்யும்போது அவர்கள் மனது புண்படும்படி ஏதாவது சொல்லிவிட்டாலோ, நடந்து கொண்டாலோ அன்று அந்த வேலை நின்றுவிடும். பிறகு சமாதானம் செய்யவேண்டும்.

பண்பாட்டை ஒட்டிப் பண்புகள் அமையும். இவர்கள் பலியிடும் பழக்கத்தை உடையவர்கள். மாமிசத்தை உண்ணும் விருப்பம் உள்ளவர்கள். மிருகங்களைக் கொல்வது, அழிப்பது பாவம் என்று கூறினால், ஏற்றுக் கொள்வதில்லை.

தெய்வங்களுக்கு உயிர்களைப் பலியிடும் முறையே உயர்ந்தது என்னும் பழமை எண்ணமுடையவர்கள் இவர்கள்.

விழாக்கள் சமயத்தில் வேற்று இனத்தவரை அனுமதிப்பதில்லை. இது 'தெய்வத்தின் சீற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவே' என்று கூறுகிறார்கள். கடவுளின் மீது அதிக நம்பிக்கையை உடையவர்களாக இருக்கிறார்கள். எல்லாச் செயல்களுக்கும் கடவுளை நம்புகிறார்கள். இந்நம்பிக்கையை இவர்களின் விழாச் சடங்கு முறைகளே வெளிப்படுத்துகின்றன. இயற்கையான கற்களையும் கடவுளாகக் கருதி, வழிபாடு செய்கிறார்கள்.

பல பெண்களை மணப்பது பற்றிய எண்ணத்தை இம் மக்கள் சிறந்ததாகக் கருதுகிறார்கள். பெண்களுக்கு விதவை என்னும் நிலைமை இல்லை. ஆண்களும் மனைவியை இழந்தவராக இருக்க முடியாது.

பல மனைவியரை மணப்பதைப் பற்றிக் கேட்டதற்கு, 'அதிக நாள் வாழ்வதற்குத்தான்' என்று கூறுகிறார்கள்.*

குடும்ப வாழ்க்கையில் அதிக நாட்டமும் பற்றும் உடையவர்களாக இருக்கிறார்கள்.

## கட்டுப்படுதல்

இவர்கள் பெரியவர்களுக்கும் தலைவர்களுக்கும் கட்டுப் பட்டு வாழ்கிறார்கள். அவர்களின் சொற்களுக்கும் கருத்துக்களுக்கும் அதிகம் மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். அவர்களின் கருத்தையே முடிவாக ஏற்றுக் கொள்கிறார்கள், வயதானவர்களிடம் மதிப்பும் மரியாதையும் காட்டுகிறார்கள். பணிவுடன் பேசுகிறார்.

---

* திருமணம் செய்து கொண்டு வாழ்பவர்களே அதிக நாள்களுக்கு வாழ்கிறார்கள் என்று ஐ. நா. சபை தெரிவித்து இருக்கிறது

கள். மூப்பன், நாட்டான் போன்ற ஊர்த் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழும் குணத்தை உடையவர்கள் இவர்கள்.

ஜாகீர் இருந்தபோது, ஜாகீரிதாரரைப் பார்க்க மூப்பன், நாட்டான் இவர்களின் அனுமதி பெற்றும், அல்லது இவர்களின் முன்னிலையிலுந்தான் பார்க்கவும் பேசவும் வேண்டும்; முடியும்.

திருமணம், சாவு முதலிய சடங்குகளில் காணப்படும் முறைகளின் மூலம் இவர்கள் பழமையின் மீதும் தங்கள் செய்கையின் மீதும் அழுத்தமான நம்பிக்கையை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் மற்றவர் பொருளைத் திருடுதல், அபகரித்தல், ஏமாற்றுதல் ஆகிய குணங்கள் இல்லாதவர்கள். அதே போல் தங்கள் பொருளை மற்றவர்களுக்கு விற்கும்போது, தங்களுக்கு வேண்டிய பொருளின் அவசியத்தையும் விற்கப்படும் பொருளின் மதிப்பையும் சரி பார்த்து விற்கிறார்கள்.

ஜாகீர் இருந்தபோது இவர்களுக்குத் தேவைக்குப் போக மீதியைத்தான் ஜாகீருக்குக் கொடுத்தார்கள்.

## புதுமை நாட்டம்

இப்போது நகரப் பகுதிகளோடு தொடர்புகள் அதிகரித்துள்ளன. போக்குவரத்து வசதிகளினால் நாகரிகத்தை விரும்புகிறார்கள். இளைஞர்கள் பழமையை விட்டுப் புதுமையை விரும்புகிறார்கள். முதியவர்கள் பழமையில் ஆழ்ந்த பற்றுடையோர்.

பொருள் (பணம்) சேர்க்க வேண்டும். மாடிவீடு கட்ட வேண்டும், நிலங்கள் அதிகம் இருக்க வேண்டும் என்னும் எண்ணமே, இல்லாமல் வாழ்ந்த இம் மக்களின் மனத்தில் இவை பற்றிய சிந்தனை இப்போது உண்டாகி வருகிறது. பழமை மறையத் தொடங்கி விட்டது எனலாம்.

ஆயினும், இவற்றில் இவர்கள் வாழ்க்கை அளவிற்கு மட்டும் இருந்தால் 'போதும் என்ற' நிறைவு உடையவர்களாக வாழ்கிறார்கள்.

ஜாகீர் இருந்தபோது எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் இல்லாமல் இருந்த இவர்கள், இப்பொழுது 'நாளை' எனபதைப் பற்றிக் கவலைப் படுகிறார்கள். தன் குடும்பம், தன் மனைவி, தன் மக்கள் என்ற குடும்பப் பாச உறவு முறையைப்பற்றிக் கவலைப்படுகிறார்கள். இவர்கள் தம் வறுமையை நினைத்து வருத்தப்படுகிறார்கள்.

பெண்கள் தங்கள் கணவன் பெயர்களைச் சொல்ல வெட்கப்படுகின்றனர்.

நோயும் சாவும் ஆண்டவனால்தான் வருகின்றன என்கிறார்கள். சகுனம் பார்க்கும் குணமுடையவர்கள். மழைய நம்பிக்கையில் கண்மூடித்தனமாக இருக்கிறார்கள். குருவின் மூலம் தீர்த்த நீர் (புனிதநீர்) தெளிக்கப்பட்டவுடன் தீட்டும் பாவமும் போய்விடுகின்றன என்று நம்புகிறார்கள்.

பூமியை அளப்பதும் பூமியைத் தோண்டுவதும் பாவம் என்கிறார்கள். இது இவர்களிடமுள்ள காட்டைப் பற்றிய உரிமையையும் சொந்தம் கொண்டாடும் எண்ணத்தையும் காட்டுகிறது. இப்படிச் செய்வதால், தெய்வத்தின் கோபம் உண்டாகும் என்றும், தெய்வ நம்பிக்கை குறையும் என்றும் எண்ணுகிறார்கள்.

# மக்களும் கலைகளும்

கலைகள் பழங்குடி மக்களிடம்தான் பிறந்தன. அங்குதான் வளர்ந்தன; கலைகள் வளரும்போது அந்த மக்களின் பண்புகளும் வாழ்க்கை முறைகளும் பல மாற்றங்களை அடைந்தன.

கல்வராயன் மலை மக்களிடம் கலைகள் பழமையோடு புதிய மாற்றங்களுடன் வளர்ந்து கொண்டு வந்திருக்கின்றன. எனவே இங்குப் புதுமை கலந்த பழமையான கலைத் தன்மைகளைக் காண முடிகிறது.

இவர்களிடம் உள்ள கலைகள் யாவும் பொழுது போக்காகவே வளர்ந்து உள்ளன. ஆனாலும் அவற்றில் இனம் புரியாத நம்பிக்கையையும், பற்றுதலையும் உடையவர்களாக இருக்கிறார்கள். இதைப் **பக்தி** என்றும் கூறுகிறார்கள்.

கலைகள் என்று நாம் கூறுபவை அப்படிப்பட்ட எண்ணங்களுடனோ, கருத்துக்களுடனோ இவர்களிடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கலைகள் என்றால் இன்னது என்பது பற்றித்தெரியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள் எல்லாம்.

குளிப்பது ஒரு வகையான அழகை உருவாக்கிக் கொள்ளத்தான். உண்பதும், உறங்குவதும் ஒரு வகையான கலையே என்றால், 'அப்படியா?' என்கிறார்கள்.

## பச்சைக் குத்துதல்

பச்சைக் குத்துதல், குத்திக் கொள்ளுதல் ஒருவகைக் கலை என்று கருதப்படுகிறது. அதனை இம்மலை மக்கள் ஒரு சடங்காகவே கொண்டிருக்கிறார்கள். இது இவர்களிடம் பேய். பிசாசு ஆகியஆவிகளிடமிருந்து காப்பாற்றவும், அவற்றால் உண்டாகும் நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் தான் பச்சைக் குத்திக் கொள்வதாகக் கூறுகிறார்கள்.

ஆதி மனிதன் மலைக் குகைகளில் பாறைகளில் தன் உள்ளத்து உணர்வுகளை ஓவியமாகத் தீட்டியவன் பின்னர் அவற்றைச் சிலையாக்கினான். இப்போது அது பல மாற்றங்களைப் பெற்று விட்டது. பாறை ஓவியங்களின் வளர்ச்சி பச்சைக் குத்திக்கொள்வதாய் ஒரு மாற்றத்தைப் பெற்று உள்ளது எனலாம்.

உடலில் இயற்கை உருவங்கள், மிருகங்களின் உருவங்கள், மற்றுமுள்ள மரம் செடி போன்ற தாவரங்களையும் குத்திக்கொண்டு, தன்னை அழகு படுத்திக் கொண்டான் அது அவனிடம் ஒரு கலை உணர்வைத் தோற்றுவித்தது.

இறந்தபிறகு, பச்சைமட்டும்தான் உடலோடுவருகிறது என்று இவர்கள் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது. பச்சைக் குத்திக் கொள்ளுதல், பின்னர் சமயச் சடங்காக மாறிவிட்டது. சடங்கோடுதொடர்புடையதாகமாறிவிட்ட போது, தெய்வத் தொடர்புடையதாகவும் மாறிவிட்டது.

இந்திய மக்களிடம் பரவலாகக் காணப்படும் பச்சைக் குத்தும் பழக்கம் குலமரபுச் சின்னமாகத் தோன்றி இருக்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.*

---

* Crooke- The popular Religions and Folklore of Northern India- p-6.

'தமிழ்க்கலை'—தமிழ் 2, கலை 2.3.1984, பக். 117.

இது (பச்சை) இவர்களிடம் ஒரு நம்பிக்கையைவளர்த்துள்ளது. அந்நம்பிக்கை இன்றும் பல்வேறு மாற்றங்களோடு வளர்ந்துள்ளது.

## கூத்துக் கலை

மலை மக்களிடம் கூத்துக்கலை பொழுதுபோக்காகவே இருக்கிறது. காட்டு வேலைகளை முடித்து வீட்டிற்கு வந்தவுடன் சாராயத்தையும் உணவையும் முடித்தபிறகு, ஆண்கள் (கூத்துக் கலைஞர்கள்) வீடுகளின் முன்பு ஒன்று கூடுகிறார்கள்.

மகாபாரதக் கதைகளின் சில பகுதிகளைக் கூத்தாக ஆடுகிறார்கள் 'திரௌபதியம்மன் வரலாறு' இவர்களிடம் முக்கிய கூத்தாக இருக்கிறது. சில சமயம் விடியும்வரையும் கூத்தாடுகிறார்கள்.

விழாக்கள், திருமணம் ஆகிய நாட்களில் கூத்து இவர்களிடம் சிறப்பாக இருக்கிறது. கூத்திற்காக வேண்டிய பொருட்களை வெளியிலிருந்து வாடகையாகவும், பணம் கொடுத்தும் வாங்கி வருகிறார்கள். சொந்தமாகவும் பல ஊர்களில் வாங்கி வைத்துள்ளனர், கூத்துப் பொருட்களை பக்கத்து ஊர்களில் கைமாற்றாக வாங்கிக் கொள்வதும் உண்டு

கூத்திற்காக ஒப்பனைகளும் செய்கிறார்கள். கூத்தை இவர்களுக்குள் உள்ள ஒரு வாத்தியார் மூலம் தெரிந்து கொள்கிறார்கள். கற்றுக் கொடுக்கும் வாத்தியாரை 'குரு' என்று கூறுகிறார்கள்.

மலையிலேயே சில ஊர்களுக்குச் சென்று கூத்து ஆடும் குழுக்களும் உள்ளன. ஒவ்வொருவரும் கூத்தில் பங்கு கொள்ளுவார்கள். திரை, மிருதங்கம் போன்றவை அதிகம் பயன்படுத்துவதில்லை; சில குழுக்களிடம் இருப்பதாகவும் தெரிகிறது.

கூத்தைக்கற்றுக்கொள்வதை,கூத்தாடுவதை பெருமைக் குரியதாகக் கருதுவார்கள். கூத்தாடுபவர்களிடம் (ஆடும் போது) ஊரினர் மிக மரியாதை செலுத்துகிறார்கள்.

கூத்தைக் காணும்போது, இவர்கள் அதைக் கலையாக எண்ணவில்லை. பொழுது போக்கு என்றனர்.* ஆனால் இவர்கள் கூத்தின்போது ஒப்பனை, பாவனை, உடல் அசைவு முதலியவைகளைக் கலையாகவே செய்கிறார்கள்.

இவர்களுக்குக் கூத்தின் பிறப்பு, வளர்ச்சிகள் பற்றித் தெரியவில்லை.

ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொண்டோம் என்கிறார்கள். சில சமயம் சமவெளியிலிருந்து கூத்தாடுபவர்களைச் கூட்டி வந்து கூத்து நடத்துகிறார்கள். அவர்களுக்கு அதிக மரியாதை செய்கிறார்கள், அவர்கள், இவர்களுக்குக் கூத்தைக் கற்றும் கொடுத்துள்ளார்களாம். படிக்கத் தெரியாத இவர்கள், பழக்கத்தினாலேயே வசனங்களைக் கூறுகிறார்கள். இயற்கையில் இவர்களின் உடல் வாகு கூத்திற்கு அழகைத் தருகிறது.

'கூத்தாடுங்கள், பார்க்க வேண்டும்!' என்றால், சில நிமிட நேரத்தில் நடத்துகிறார்கள். இரவு இருந்தால் நல்ல முறையில் கூத்தை நடத்திக் காட்டுவார்கள். இவர்கள் கூச்சமோ, வெட்கமோ, வெறுப்போ காட்டுவதில்லை; அடைவதும் இல்லை.

இம் மலையில் ஏதேனும் ஓர் ஊரில் கூத்து நிகழ்ச்சி தினமும் நடைபெற்றுக் கொண்டே இருக்குமாம். கூத்தின் கதையாக மகாபாரதம், இராமாயணம் ஆகிய புராணக் கதைகளையே பாடல்களாகப் பாடுகிறார்கள்.

---

* *11.8.85—இன்னாடு.*

சேர்வராயன் மலை மலையாளிகள் கண்ணகிக்குக் குரலைக் கூத்து ஆடுவார்கள். இக் கூத்திற்குக் கண்ணகி பற்றிய தனிப் பாடல்களையும் பாடுகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இன்னாடு எனும் ஊரில் 11. 8. 85 அன்று இரவு ஒரு மணிவரை கூத்தை நடத்திக் காட்டினார்கள். இரவு அந்த ஊர் மக்கள் கூடிக் கண்டுகளித்தனர் ஊரினர் சிலர்கூத்துப் பாட்டைக் கூடவே பாடிக் காட்டுகின்றனர்.

பொங்கல் விழாவே இவர்களுக்கு முக்கிய விழா. பொங்கல் சமயத்தில் பெண்களும் ஆண்களும் கூடி ஆடுவார்கள்; பாட்டுப் பாடுவார்கள்; இவ் ஆட்டத்தைக் கும்மி என்று கூறலாம்.

நான்கு பெண்கள் சேர்ந்து நாட்டுப் பாடல்களைப் பாடுவார்கள். நால்வர் நால்வராகவே பாடுவார்கள். முதல் நால்வர் பாட,அப் பாடலை மீதமுள்ளவர்கள் பாடுவார்கள். இவர்களிடையே கும்மி, கோலாட்டம் சிறப்பாக விளங்குகின்றன.

எங்கள் முன் முதலில் பெண்கள் பாட்டுப் பாடக் கூச்சமும் நாணமும் பட்டார்கள். அவர்களிடம் பலவாறு பேசி, ஒருவாறு சம்மதிக்க வைத்துப் பாட்டைப் பதிவு செய்தோம்*. பிறகு பதிவு செய்த பாடல்களைப்பாட வைத்துக் காட்டியபோது, அவர்கள் குரலைக் கேட்டு மகிழ்ந்தார்கள். பாடலைப் பதிவு செய்தால் குரல் போய் விடும் என்று முதலில் பாட மறுத்தவர்கள், பாடலைக் கேட்ட பிறகு நான், நீ என்று பாட முன் வந்தார்கள்.

---

* 10-6-85 வஞ்சிக்குழி, 11-6-85 கிரிப்புலி, 12-6-85 தும்பராம்பட்டு.

பெண்களிடம் பேசும்போது நாம் சிரிக்காமல் இருக்க வேண்டும். ஒன்றுமே தெரியாதவர்கள்போல் இருக்க வேண்டும். அவர்கள் பாடும்போதோ, அவர்களிடம் பேசும் போதோ, சிரித்து விட்டால், நாம் வந்த காரியம் ('பேட்டி') கெட்டுப் போகும்.

10 - 6 - 85 வஞ்சிக் குழியில் பாடல் பதிவு செய்த போது சிரிக்க நேர்ந்து விட்டது; பாட மறுத்து விட்டார்கள். பிறகு உண்மை அறிந்து கொண்டேன். சிரிக்காமல் இருக்க முயன்று, பாடல் பதிவு செய்து முடிந்தது. இதனை ஆய்வு நாட்களில் அனுபவிக்க நேர்ந்தது. அம்மாச்சி என்பவர் பாட மறுத்துப் போய் விட்டார். பிறகு சின்னா என்பவர் பாடினார். இதே போல் பல இடங்களில் நேர்ந்தது.

சிரித்தால் அவர்களைப் பரிகாசம் செய்வதாக எண்ணிப் பாட மறுத்து விடுகிறார்கள்.

அவர்களுக்குள் சிரித்துக் கொள்ளலாம். நாம் சிரித்து விடக் கூடாது என்பதுதான் முக்கியம்.

## பாடும் பெண்கள்

நால்வர் மட்டும் பாடல் பாடும்போது, முதலில் இருவர் பாடுகின்றனர். அவரைத் தொடர்ந்து அடுத்து இருவர் பாடுகின்றனர். அவரைத் தொடர்ந்து அடுத்துப் பாடுவதால், முதலில் பாடியவருக்குக் கொஞ்ச நேரம் ஓய்வும், முதலில் இருவர் பாடும் போது மீதமுள்ளவர்களுக்குக் கொஞ்ச நேரம் ஓய்வும் கிடைக்கிறது. இதனால் தொடர்ந்து பாட முடிகிறது. ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகவும் தொடர்ந்து பாடும் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள்.

படிப்பறிவு இல்லாத இம் மலைப் பெண்களிடம் தாட்டுப் பாடல்கள் எதுகை, மோனையுடன் இருக்கின்றனர். பாடல்கள் மடை திறந்தது போல வருகின்றன. ஒவ்வொருவருக்கும் பாடல்கள் வித்தியாசப் பட்டா

லும் அறியப்படும் கருத்து ஓரளவு ஒன்றாகவே இருக்கிறது. ஒவ்வொரு பெண்ணும் பல பாடல்களைத் தெரிந்து வைத்திருப்பது வியப்பாக இருக்கிறது. இம் மலைப் பெண்களிடம் நாட்டுப் பாடல்களை மட்டும் சேகரித்தாலே ஒரு நூல்கம் அமைத்துவிடலாம். கூத்தும், பாட்டும் இவர்களிடமுள்ள முக்கிய கலைத் திறன்கள்; படிக்காத மேதைகள் இவர்கள்.

இவர்களிடம் இருக்கும் மற்றொரு கலை கோலம்! கோலம் ஓவியக் கலையிலிருந்து தோன்றியது என்பர்.

நகர்ப்புறம், கிராமப்புறத்தைப் போலவே, மலைப் பெண்கள் வீட்டின் முன்பு கோலங்களைப் பல விதங்களில் போட்டு மகிழ்கிறார்கள், இவர்களிடம் புள்ளி வைத்து இழுக்கப்படும் கோலம இல்லை. கோடுகளையே இழுத்து வளைத்து வரைகிறார்கள்.

திருவிழா, திருமணம் ஆகிய நாட்களில் வீட்டைச் சாணம் போட்டு மெழுகிச் சுவரிலும் தரையிலும் கோலம் போடுகிறார்கள். சுவரில் போடப்பட்டுள்ள கோலத்தைச் 'சுவர்க் கோலம்' என்று கூறுகிறார்கள். சித்திரம் என்றும் சொல்கிறார்கள்.

செம்மண்ணால் இந்தச் சித்திரங்கள் வரையப்படுகின்றன. இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கோலம் போடுவதில் ஆர்வம் உள்ளவர்களாக இப் பெண்கள் இருக்கிறார்கள்.

சுவரில் வரையப்படும் (கோலங்கள்) சித்திரத்தைப் போலவே தங்கள் கையிலும் பச்சைக் குத்திக் கொண்டுள்ளனர். பச்சைக் குத்திக் கொள்ளும்போது சுவர்க் கோலத்தைக் காட்டிக் குத்தச் செய்கிறார்கள். தங்கள் பச்சையைப் பார்த்தே கோலத்தைப் போடுவதாகவும் கூறினார்கள்.

இவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்:



கோலங்கள் : நான்கு வகைகள்



கோலங்கள் மூன்று வகைகள்





கோலங்கள் : இரண்டு வகைகள்

இச் சித்திரங்கள் வழிபாட்டுக்காகவும் வளத்திற்காக வும் உரிய குறியீடுகளாக இருக்கவேண்டும்.

1 சூரியனையும் 2 தாவரத்தையும் (மரம், செடி), 3 மழையையும், 4 மரத்தையும், 5 வளத்திற்கான (ஏணி) குறியீட்டையும், 6 மலையையும் அதில் மரங்களையும் 7, 8, மலையையும் மிருகங்களையும், 9குடியிருப்புகளையும் மலைகளையும் குறிப்பிடுவனவாக இருக்கின்றன. இவை பற்றி விரிவாக ஆராயப்பட வேண்டும்.

இவை தவிர, பறவைகளையும் சுவரில் வரைந்து இருந்தார்கள். மான் போலவும் நாய் போலவும் சில மிருகங்களையும் வரைந்திருந்தார்கள்.

தும்பராம்பட்டுக் கிராமத்தில் சுவரிலும் சித்திரங்கள் வரைந்திருந்ததைக் காண முடிந்தது. இங்கிருந்த சித்திரங் கள் (கோலம்) இறை வழிப்பாட்டுக் குறியீடுகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இக் குறியீடுகள்:



சுவர்ச் சித்திரம் 1



கலைச் சித்திரம் : 2

இச் சித்திரங்கள் சக்தியைக் குறிப்பிடுவனவாகவும் இருக்கலாம். சக்தி எனக் கொண்டு, ஆராய்வோமேயா னால் நான்கு திசைகளையும் குறிக்கும் குறியீடுகளாகக் கொள்ளலாம் எனலாம்.

எனவே, சக்தி தெய்வம் வீட்டையும் மலையையும்காத் தால் தங்கள் வாழ்வும் செம்மையடையும் என்ற எண்ணத் தால் சக்தியை நினைவுறுத்தும் சித்திரமாக உள்ளது. மலையிலுள்ள மக்களைத்தவிர சமவெளியில் இருக்கும் சில ஊர்களில் பல வீடுகளில் இவை போன்ற சித்திரங்களைக் காணமுடிந்தது.

28. 7. 85 அன்று உடையாநத்தம்* ஊர்சென்றபோது, வீடுகளின் சுவர்களில் இத்தகைய சித்திரங்களைக் காண முடிந்தது. எனவே, பண்டைய மக்களின் கலைகள் தற் போது சில மாற்றங்களைப் பெற்றாலும் அதன் எச்சங் களாக— சித்திரக் கோலங்கள் இருக்கின்றன இத்தகைய சுவர்ச் சித்திரங்கள் மேலும் ஆராயப்பட வேண்டியன வாகும்.

கோலங்கள் இறைத் தொடர்புடையன என்றும் கோலங்களே சக்கரம், தகடு எழுதுவதாகஇருந்தனஎன்றும் கூறுவதையும் இங்கு நோக்கத் தக்கதாகும். பண்பாட்டுத் தொடர்பு இல்லாமல் போகவே வளர்ச்சியில்லாமல் இருக் கிற.இக் கலைகளை முழுவதும் ஆராய்ந்தால் பல உண்மை கள் தெரிய வரும்.

'பழங்கால மனிதர்களின்வாழ்க்கையில்அவர்களுடைய வாழ்க்கைமுறைக் கேற்ற கருத்துக்களும் நம்பிக்கைகளும் தோன்றியிருக்க வேண்டும். அவை கல், கற்கருவிகள்,

---

* விழும்புரம்வட்டம்கீழ்வாலைக்கு (விழுப்புரம்-திருவண் ணாமலை நெடுஞ்சாலையில்-23 கி.மீ.) வடக்கே சுமார் 1 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்குள்ள குன்றுப்பகுதி யில் த.நா. தொல்பொருள் துறையினர் கற்கால மக்களின் தாய்த் தெய்வக் கல்லைக் கண்டு பிடித்துள்ளனர்.

இயற்கைச் சூழல், வேட்டை வாழ்க்கை இவற்றைச் சுற்றியே சுழன்றிருக்க வேண்டும்.'[1]

என்னும் கருத்தின்படி, இவர்களின் கலை நாகரிகத் தோற்றத்தோடு காணப்படுவது விளங்கும்.

இவர்களின் கூத்தையும் நடனத்தையும் பாடல் முறைகளையும் காணும்போது, அவை மிகப் பழங்காலத்து மக்களின் எச்சங்களாக இருக்கின்றன. சில பழங்குடிகளின் முறையைப் போல் இல்லாமல், வளர்ச்சி யடைந்த சில கூறுகளை இங்கே காண முடிகிறது.

பண்டைக்கால மக்கள் குழு நடனங்கள் என்ற கலை யுருவங்களை உருவாக்கி யிருக்க வேண்டும். அவற்றின் எச்சங்களே, பழைய குழுவாழ்க்கை அழிந்த பின்னும், பல குழு நடனங்கள் நாகரிக சமுதாயங்களில் நாட்டு நடனங்களாக எஞ்சியுள்ளன. இவை கும்மி, ஒயில் முதலியன.

சங்க காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப் பகுதிகளில் மக்கள் பரவி வாழ்ந்தனர். மருத நில வாழ்க்கையானது செழிப்பு மிக்கதாயிருந்தது. இந் நிலத்தில் குழு வாழ்க்கை அழிந்து அரசு முறை தோன்றியது. பிற மக்களையும் அரசில் இணைத்துக் கொள்ள பல போர்கள் நிகழ்ந்தன. ஒவ்வொரு குழுவாக அழிந்தது. குழு வாழ்க்கையை யிழந்த மக்கள், மருதநில மக்களில் உழைப்பாளிகளாயினர். வாழ்க்கையில் கூட்டு வாழ்க்கையை இழந்த பின்னரும் அவ் வாழ்க்கையில் தோன்றிய பல கருத்துக்களும் நம்பிக்கைகளும் எச்சங்களாயின. நம்பிக்கையில் பலவற்றிற்கு வாழ்க்கையில் ஆதாரமில்லாமற் போயினும், அக் குழு மக்களின்

---

1. நா. வானமாமலை, M. A., L. T. 'தமிழர் பண்பாடு தத்துவமும்' பக். 65, 1978

பழைய நம்பிக்கைகளால் ஏற்பட்ட சடங்குகளையும் நடனங்களையும் பாடல்களையும் மறக்கவில்லை'[1] என்று கூறப்படுவது ஆராயத் தக்கதாகும்.

இம் மக்களின் இக்கலைகள். இவர்கள் பழைய வாழ்க்கையை இழந்து, மாறுபட்ட வேறு வாழ்க்கைக்குக் காலத்தால் (அரசுகளால்) மாற்றப்பட்டபோது, இவர்களின் கலைகள் யாவும் மாறுபட்ட எச்சங்களாகவே இருக்கின்றன.

இதனை.

'சமுதாய வளர்ச்சியினால் உடைமையாளர், உடைமையற்றோர் என்னும் இரு பகுதிகள் சமுதாயத்தில் ஏற்பட்டுவிட்ட பின், கூட்டு நடனம், கூட்டமைப்பில் இருந்து தோன்றிய கலைகள் உடைமை யற்றோரிடையே பழங்கால எச்சமாக நின்றன. இரு கூறுபட்ட சமுதாயத்தில் தனித் திறமையுடைய கலைகள் வளர்க்கப்பட்டன. கலைஞர்களது கலைத்திறமை ஒரு தொழிலுக்கு அடிப்படையாயிற்று'[2] என்று கூறுகின்றனர்.

இது மேலும் ஆராயப்பட வேண்டியதாகும்.

---

1. நா. வானமாமலை- தமிழர் பண்பாடும்தத்துவமும் பக். 72-73

2. ,, ,, பக். 88-89



கல்வராயன் மலைக்கு முன்புள்ள கோமுகி அணை



வளர்ச்சிப் பணி : குடிநீர் வசதி



மாட்டுக் கொட்டகையும் ஆட்டுப்பட்டியும்



மணமக்களை அழைதது வரப்போகும் உறவினர்



மரக் குதிரில் வரகு குத்தும் பெண்மணி



அரசின் வளர்ச்சிப் பணி : புதிய வீடுகள்



3. குடிசைகள் மீது ஆவிகளைத் தடுக்கும் சின்னங்கள்



பொங்கலன்று வீட்டுக் கூரையில் வைக்கப்பட்டுள்ள திருஷ்டிப் பொருள்கள்



தாலி, காசு மாலைகளுடன் மலைப்பெண் (வஞ்சிக குழி)



பொங்கல் விழாவில் பெண்கள் கும்மியாட்டம்



காளி (மகிஷாசுரமர்த்தினி) வெள்ளிமலை



திருமாலுடன் ஸ்ரீதேவி & பூதேவி (வெள்ளிமலை)



அண்ணமலையார் கோவில் மரத்தில் வேண்டுதல்
தொட்டில் தூளிகள்



அண்ணாமலையார் கோவில் சிற்பங்கள் (கொடுவந்துறை)



பழைய பாலப்பட்டு குறும்பக் கவுண்டர் ஜாகிர்தாரர் அரண்மனை சிதைந்துள்ளது



ஜாகீர்தாரர் வாள்



ஜாகீர்தாரர் இராமசாமி சடையக் கூ
கவுண்டர் துப்பாக்கி ஜவான், மூப்பன்,
நடிகர் ராஜா 31.5.1964



மேனா பல்லக்கு - குறும்பக் கவுண்டன் ஜாகீருடையது

# மொழியும் கல்வியும்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது சான்றோர் வாக்கு. இவர்களிடம் கணக்கும் கல்வியும் இல்லை. எல்லாம் அனுபவமே! இவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் உழைப்போடு போராடும் மக்களாக மாறியதால் கல்வி அறிவைத் தேடும் வழி தெரியாமல் போயிற்று.

உழைப்பவர்களிடம் கல்வியறிவு என்பதுமிகக்குறைவு இதை உயர்த்தும்போது உழைப்பின் தரமும் தன்மையும் குறைந்துவிடும் என்று ஒரு சாரார் கணிக்கின்றனர்.

இம்மக்கள்எந்தவழக்கிலும் தீர்மானத்திலும்கைநாட்டு இடுபவர்களாகவே இருக்கிறார்கள். கல்வி இவர்களுக்குக் கிடைக்காமல் இருந்ததால் இவர்களைமிகஎளிதில்ஏமாற்ற முடிந்தது; ஏமாறவும் செய்தார்கள் தங்கள் ஏமாற்றத்தை வெளியில் சொல்ல முடியாமல் தாங்கிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## காலக் கணக்கீடு

கிழமை, நேரம் ஆகியவற்றையும் கூட ஒரு தோராய மாகக் கணக்கிடுவார்கள். மூப்பன் என்பவனேநாட்களைக்

குறித்துக் கொடுப்பார். இவர்களிடம் பௌர்ணமியை வைத்து நாளைக் கணக்கிடும்முறை உள்ளது. கிழமையைப் பற்றித் தெரிந்து வைத்துள்ளார்கள். தமிழ் மாதங்களின் பெயரைச் சரியாகஅறிந்துள்ளனர். மாதங்களைச்சரியாகக் கணக்கிட்டுக் கூறுகிறார்கள். இது இவர்களது தனித் தன்மையாகவே உள்ளது.

இப்பொழுது எல்லா ஊர்களிலும் ஆரம்பப் பள்ளிகள் (பால்வாடிகள்) உள்ளன. ஓரளவு கல்வியைத் தெரிந்து கொள்ள ஆர்வம் கொண்டுள்ளார்கள். ஆனாலும் இதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை.

கல்வி என்பது ஏதோ ஒரு வித்தை என்பது போலப் பயந்தே இருக்கிறார்கள். தங்கள் சாதிக்குப் படிப்பதுமிகக் கேவலமான ஒன்று(முறை)என்றஎண்ணமுடையவர்களாகவும் சிலர் இருக்கிறார்கள்.

'காட்டுப் பூச்சிக்குப் படிப்பு எதுக்குங்க?'*

என்று கேட்கிறார்கள். படிப்பறிவு இல்லாத எங்களைப் படித்தவர்கள் ஏமாற்றாமல் இருந்தாலே போதும் என்கிறார்கள். 'படித்தவர்களால் மிகவும் துபம் அடைந்து இருக்கிறோம்' என்று பலவாறாகக்கூறினர். இவர்கள், பொருளை வாங்கிக் கொள்வது, கொடுப்பது முதலியவற்றில் அளவுகளை(படி முறைகளை)ச்சரியாகத் தெரிந்து வைத்துள்ளார்கள். கிலோ போன்ற எடைகளை ஓரளவு தெரிந்து வைத்துள்ளனர். ரூபாய், பைசா நாணயத்தைத் தெரிந்து வைத்துள்ளார்கள்.

பணத்தின் [ரூபாய்] மீது அதிக ஆசை இவர்களுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்புவரை இல்லை. பணத்திற்காக உள்ளூரில் எதையும் கொடுப்பதில்லை. பண்டமாற்று

* 12. 6. 85 இல் வஞ்சிக்குழியில் நான் நேரில் கேட்டது.

முறையில்தான் பொருள்கள் கைமாறுகின்றன. இப்பொழுது சமவெளி மக்களோடு தொடர்பு அதிகரித்துக் கொண்டு வருவதால் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

*12. 6. 8.* வஞ்சிக்குழி: ஒரு இளநீர் தரையில் 2ரூ. என 4 இளநீருக்கு 8 ரூபாயைச்சண்டையிட்டு வாங்கிக் கொண்டார்கள். எங்களுக்கு வழிகாட்டியாய் இருந்தவர்க்கு இளநீர் கொடுத்த மலையாளி மிகவும் தெரிந்தவர். வழிகாட்டியின் வீட்டில் தான் வந்து தங்குவாராம்; சாப்பாடும் தருவார்களாம். எங்களைத் திருப்தி செய்யவே இளநீரைக் கேட்டாராம்; இலவசமாகக் கொடுப்பார் என்ற எண்ணத்தோடு கொஞ்சமும் யோசனை இல்லாமல் கறாராய்ப் பணத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டானே—என்று வருத்தப்பட்டார்.

நகர்ப்புறங்களுக்குச் சென்றால், ஒருவர் ஒரு பொருளை ஒரு விலைக்குக் கேட்டுவிட்டால், அவரோடு உள்ளவர்களும் அவர் கேட்ட அதே விலைக்கு அப்பொருளைக் கேட்பார்கள். ஒருவர் ஒருவிலைக்கு ஒரு பொருளை வாங்கினால் மற்றவர்களும் அதேவிலைக்குத் தான் வாங்குவார்கள்.

விற்பவரைப் பொறுத்துதான் விற்பனை. சில சமயம் விற்பனை ஆகவேண்டும் என்பதற்காக நட்டத்திற்கும் கொடுத்து விடுவார்களாம்; ஏனென்றால், ஒரே சமயம் பத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் விற்பனை ஆகிவிடும். ஒரு பொருளை ஒரு விலைக்குக் கேட்டு விட்டால் கடைசி வரைக்கும் அதே விலைதான். கொஞ்சம் ஏறினாலும் ஒப்புக் கொள்வதில்லை.

வேறு இடத்திலும் அதே விலைக்குத்தான் கேட்பார்கள். பொருளின் தரம், மதிப்புப் பற்றி அவர்களுக்குப் புரியாமல் இருப்பது ஒரு காரணம், என்றாலும், அந்தப் பொருளின் தேவைதான் அவர்களுக்கு முக்கியம். அதற்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பு, அவர்கள் கூறும் விலைதான்.

இதனால், சிலசமயம் வாங்க வந்த பொருளை வாங்காமலும் சென்று விடுவார்கள். நகரத்திற்கு வரும்போது குறைந்தது 10 பேருக்கு மேல் சேர்ந்தே வருவார்கள். நகரத்தோடு அடிக்கடி தொடர்பு உடையவர்தாம் விலை கேட்பார். மற்றவர்கள் விலை கேட்பதில்லை

இப்படிக் கூட்டமாக வருவது, இவர்களை யாரும் ஏமாற்றிவிடக் கூடாது என்பதற்காகவே என்று கூறுகிறார்கள். ஏமாறாமல் இருக்கத் தேவையான முயற்சிகளைப்பற்றி இவர்கள் எவ்விதத் திட்டமும் செய்யவில்லை. அதற்கான எந்த முயற்சியும் இவர்களிடம் இல்லை.

தற்போது முதியோர் கல்விப்பயிற்சி தரப்படுகிறது. அதையும் இவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறார்கள்; இனியாவது மாறலாம்.

கல்வி அறிவு இல்லாமையால் இம் மக்கள் எதையும் சொல்லவும் அஞ்சுகிறார்கள்; எதையும் மறைக்கிறார்கள்.

## பேச்சு மொழி

இவர்கள் பேசுவது தமிழ்; ஓரளவு சமவெளி மக்கள் போசும் மொழி போலவே இருக்கிறது. இலக்கணத்தையும் இலக்கிய நயத்தையும் பார்க்க முடியவில்லை. ஆனால் சில தமிழ்ச் செற்களைக் கேட்க முடிகிறது தெலுங்குமொழி கலந்துள்ள வார்த்தைகளையும் பேசுகிறார்கள். இந்த மலையில் இவர்கள் பேசும் பேச்சு அவர்கள் வாழ்கின்ற இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன.*

* கொல்லி மலை மக்களுககும் பச்சைமலை மக்களுக்கும், ஏர்க்காடு, கல்வராயன் மலை மக்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. பேச்சு, மொழிகளில் வேறு பாடுகள் உள்ளன. கல்வராயன் மலை மக்களிடம் வடக்கு—தெற்குப் பகுதிகளில் வித்தியாசங்கள் உள்ளன.

தாங்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என்பதால், தமிழ் நாட்டினரே என்றும் கூறுகிறார்கள். தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளின் வார்த்தைகளையும் காண முடிகிறது. விசயநகர ஆட்சிக் காலத்தின் போது தெலுங்கு தமிழோடு இரண்டறக் கலந்துவிட்ட பாதிப்பை உணரலாம்.*

உதாரணத்திற்குச் சிலவற்றை மட்டும் காண்போம்.

| | மலையாளிகள் பேசுவது |
|---|---|
| தூக்கம் | : நித்திரை |
| அவர்கள் | : அயலு |
| இவர்கள் | : இயலு |
| திரும்பவும் | : புனி |
| உங்களை | : உனி |
| சாப்பிட்டியா | : துண்டாண்டி |
| கூழ் | : கூலு |
| நிலம் | : காடு |
| குதிரை | : குதர |
| பன்றி | : பண்ணி |
| ஆடு | : கூவே |
| அத்தை | : அத்தே |
| அக்கா | : அக்கே |
| அப்பா | : யப்பே |
| அம்மா | : யம்மே, அம்மே, உம்ம, உம்ம |
| வெட்டப்படும் நிலம் | : புனல்காடு |

* 13 . 6 . 85 திரு. F. சிரில் அந்தோணி கருத்து. (புதுவை வரலாற்றுச் சங்கம்.)

| | | |
|---|---|---|
| தழை கழிக்க | : | இலக்கு அடித்தல் |
| கேழ்வரகு | : | ஆரியம் |
| மனைவி | : | புள்ள |
| சாவி | : | திறவுகுச்சி |
| இருக்கு | : | கீறு |
| காணடிப்பது | : | தாரா போயிட்டுது |
| தொடாதே | : | தீட்டு |
| நாவிதன் | : | நாசுவன், பெரியாளி |
| வரிசைப்பணம் | : | மொயி |
| உண்மை | : | உம்ம |
| சண்டை | : | சண்டை |
| மாமா | : | மாமா |
| இருக்கு | : | கீது |
| அழித்திட்டான் | : | அவிச்சிட்டான் |
| வாழை | : | வால |
| குழம்பு | : | கொளம்பு |
| மூழம் | : | மொளம் |
| இடம் | : | தாவு |
| விரைந்து | : | மளார் |
| வழி | : | தடம் |

மலையாளிகள் பேசும் மொழியைப்பற்றித் தனியாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.*

* கொல்லிமலை மக்கள் பேச்சை
டாக்டர். திரு. கி. கருணாகரன் (1969)
பச்சைமலை மக்கள் பேச்சை
டாக்டர் திரு. மகேசுவரன் (1979)
டாக்டர் கோ. சீனிவாச வர்மா (1979)
கல்வராயன் மக்கள் பேச்சை
டாக்டர் திரு. கே. அண்ணாதுரை (1981)
ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

மனைவியைப் 'புள்ள', 'புள்' என்றுதான் அழைக்கிறார்கள் வீட்டுக்காரி என்றும் குறிப்பிடுகிறார்கள்.

கணவனையும் ஏனையோரையும் (ஆண்களை) 'பியா' என்று பெண்கள் அழைக்கிறார்கள்.

மூன்றாம் நபரை 'மாமன்', 'மச்சான்', 'அண்ணன்'. 'தம்பி' என்று அழைக்கிறார்கள்.



# மலை மக்களும் விலங்குகளும்

இம் மக்களது வாழ்க்கையின் பெரும் பகுதி காட்டு விலங்குகளோடும் வீட்டுமிருகங்களோடும் கலந்துள்ளது. அவைகளோடு போராடுவது, உழைப்பது இவர்களது வாழ்க்கையாகவும் பொழுது போக்காகவும் உள்ளது.

இவர்கள் உழைப்பிற்கு மாடுகள் பெரும் உதவியாக உள்ளன. ஏர் உழுவதற்கு முக்கியமாகப் பயன்படுத்துவர். சில சமயம் பொருளாதார நெருக்கடியை மாடுகளை விற்றுத் தீர்த்துக் கொள்வார்கள். இவர்களின் பொருளாதாரத்தை மாடுகளை வைத்து மதிப்பிடுவார்கள். முன்பெல்லாம் மாட்டின் பாலைப் பயன்படுத்தாமல், கன்றுக்கே விட்டு விட்டார்கள். இப்போது மாட்டின் பாலை விற்கவும் பழகியுள்ளார்கள். பாலைக் கறந்து விடுவது பாவம் என்னும் எண்ணமும் கொண்டுள்ளார்கள்.

எந்தக் காரணத்திற்காகவும் மாட்டுக் கறியை உண்பதில்லை. 'மாடு எங்களது உயிர்' என்று கூறுகிறார்கள்.

வயலில் (காட்டில்) தனியாகப் பட்டி அமைத்து அங்கே மாடுகளை விட்டு அடைத்து விடுகிறார்கள். கரடியோ, நரியோ மாடுகளைக் கொல்வதில்லை. இம் மக்கள் மாடுகளுக்குச் செல்லப் பெயர்களை வைத்து இருக்கிறார்கள். இப் பெயர்கள் கோவிந்தன் என்றும், ராமன் என்றும், கருப்பன் என்றும் இருக்கின்றன.

ஆடு இவர்களுக்கு இரண்டாவது செல்லப்பிள்ளை யாகும். ஆடுகள் இல்லாத மலையாளியே இல்லை என்று கூறலாம். கூலி வேலை செய்பவர் கூட ஓரிரு ஆட்டையாவது வளர்க்கிறார். பாலுக்கும் கறிக்கும் ஆட்டைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

தங்கள் வீட்டிற்குப் பக்கத்திலேயே ஆடுகளுக்கென்று பட்டி அமைத்திருக்கிறார்கள். பட்டி பரண் போன்ற அமைப்பில் இருக்கும்.

காட்டு வேலைகளை முடித்து மாலை வீட்டிற்கு வரும் போது காட்டிலிருந்து ஓட்டிவந்து பட்டியில் ஏற்றிவிடுவார்கள். பிறகு பட்டியை மூடிவிடுவார்கள். பட்டியில் அடைக்கப்பட்ட பிறகு மிருகங்களால் ஆடுகளுக்குத் தொல்லை இருக்காது.

இவர்கள் ஆட்டுப்பாலை பலவகையிலும் பயன்படுத்தத் தெரிந்துள்ளார்கள். பாலை அருந்துகிறார்கள்.

தயிர், மோர், நெய் தயாரிக்கவும் பயன்படுத்துகிறார்கள். காபி குடிக்கவும் பாலைப் பயன்படுத்துகிறார்கள்.

விழாக்கள், விருந்து போன்ற நாட்களில் ஆட்டைப்பலியிடுகிறார்கள். ஆட்டுக் கறியை அதிகமாக விரும்பி உண்கிறார்கள். ஆட்டைவிற்றும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

இவர்கள் கோழிகளையும் நாய்களையும் வளர்ப்பதுடன் விருந்துக்கும் பலியிடுவதற்கும் கோழியை வளர்க்கிறார்கள்.

## நாய் வளர்ப்பு

நாய்கள் காடுகளில் இவர்களோடு இருக்கின்றன. வேட்டைக்கு நாயைப் பயன்படுத்துகிறார்கள். நாய்மிருகங்களின் வருகையை, இருப்பிடத்தைத்தெரியப்படுத்துகிறது. முக்கியமாக இரவில் மாடுகளின், ஆடுகளின் பட்டிகளைக்

காவல் காத்து வருகிறது. மலையாளிகளைத் தவிர மற்ற வர்கள் ஊருக்குள் செல்ல நாய்கள் அனுமதிப்பதே இல்லை.*

நாய்களைக் கட்டிப்போட்டு வளர்ப்பதில்லை. சில நாய்களை மரம் ஏறவும் பழக்கப்படுத்தி யிருக்கிறார்கள். தேன் சேகரிக்கப் போகும்போது நாயைக் கூட்டிச் செல் கிறார்கள்.

## பன்றிகள்

சமவெளிகளில் காணப்படும் பன்றிகளே இவர்களிடம் வளர்க்கப் பெறுகின்றன. வசதியானவர்கள் 20 க்கும்அதிக மான பன்றிகளை வளர்க்கிறார்கள். பன்றிகளுக்கு வரகு, தினைக் கஞ்சியையும், தவிட்டையும் உணவாகத்தருகிறார் கள். பன்றி இவர்களுக்கு முக்கிய உணவாகவும் இருக் கிறது. விருந்தின்போது பன்றிக் கறியை முகியமக்ாகச் சமைக்கிறார்கள். பன்றியை வீட்டுத் திண்ணைக்குக் கீழே கூண்டு அமைத்துத் தங்கச் செய்து பாதுகாக்கிறார்கள்; பகலில் வெளியில் மேய்கிறது. உணவுக்காகவே பன்றியை வளர்க்கிறார்கள்.

## குதிரை

குதிரையைத் திருமணங்களுக்காகவே வளர்க்கிறார் கள். வாழக்குழி என்ற கிராமத்தில் குதிரையை வளர்ப் பவர்கள் இருக்கிறார்களாம். இது தவிர, குதிரை தேவைப் படும்போது சமவெளியிலிருந்து வாடகைக்குக் கொண்டு வருவார்கள்.

கழுதை, எருமைமாடு ஆகியவற்றை உயரமானமலை ஊர்களில் காணமுடியவில்லை.எருமைமாட்டைத்தரையை ஒட்டிய ஊர்களில் வளர்க்கிறார்கள்.

---

* வஞ்சிக்குழி, தும்பராம்பட்டியில் நாய்களிடமிருந்து தப்பித்துக் கொள்வது பெரும்பாடு ஆயிற்று.

சென்ற நூற்றாண்டில் கல்வராயன் மலையில் யானைகள் வாழ்ந்ததாகக் கூறுகிறார்கள்.[1] ஆனை மலை ஆனைக்குன்று என்னும் மலைப் பகுதியில் யானைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளைச் சில ஆண்டுகளுக்கு முன்பு பார்த்ததாகவும், வேட்டை ஆடியதாகவும் அறியமுடிகிறது.[1] இப்போது பார்க்க முடியவில்லையாம். ஆனால் சிறுத்தை அடிக்கடி வருகிறதாம். ஆடு, மாடுகளைக் கொன்று விடுகிறது; சிறுத்தையின் தொல்லை அதிகமாகவே உண்டாம். மனிதர்களைக்கூடக் கொன்று இருக்கிறதாம்.

சிறுத்தையை வேட்டையாடியும் இருக்கிறார்கள். வேட்டையின்போது சிறுத்தை வந்துவிடுமே என்னும் பயம் உடையவர்களாக இருக்கிறார்கள். வேட்டையின் போது சிறுத்தை மனிதர்களைக் கொன்று இருக்கிறதாம்.

## மான்கள்

குரைக்கும் மான்கள் பொட்டியம், சின்னத் திருப்பதி போன்ற காடுகளில் இருப்பதாகக் கூறுகிறார்கள். புள்ளி மான்கள் நிறைய இம்மலையில் இருக்கின்றன. மக்கள் மான் வேட்டைக்காகவே அதிகம் செல்கிறார்கள். மான்களைப் பொட்டியப் பகுதியில் காண முடிகிறது.

செந்நாய்கள் இருக்கின்றன; எப்போதாவது பார்க்க முடிகிறது என்கிறார்கள் தாங்கள் வேட்டைக்குப் போகும்போதே கூடவே வரும் தங்கள் வேட்டை நாய்கள்

---

* Madrae District gazetteers - seuth Arcot. Chapter I Dr. B. S. Balliga

1 பொட்டியம், கிரிப்புலி, தும்பராம்பட்டு ஆகிய ஊர்களில் தகவல் தெரிந்தது.

செந்நாய்களைப் பார்த்துச் சண்டை போட்டுக் கொள்வதும், அவைகளுக்குப் பயந்து ஓடிவிடுவதும் உண்டாம்; சண்டை போட்டுக் கொள்ளும்போது செந்நாய் வேட்டையாடப்படும்.

மரங்கள் அடர்த்தியாகவும் புதர்கள் நிறைந்தும் உள்ள பகுதியில் மான்கள் வாழ்கின்றன மான்வேட்டைக்குக் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து சிலர் வருகிறார்களாம்.

கொம்புடைய மான் இம் மலையில் (மான்கொம்பு) இருப்பதாகத் தெரிகிறது. **மான் கொம்பு** என்ற ஊர் சேராப் பட்டிற்குப் போகும் வழியில் இருக்கிறது இவ்வூர்ப் பகுதியில் இத்தகைய மான்கள் முன்னர் அதிக அளவில் இருந்ததாகக் கூறினார்கள்.

ஒருசமயம் **சேராப் பட்டில்** நாங்கள் தங்கியிருந்தபோது இரவு சுமார் 8-00 மணிக்கு மழை பெய்தது. அப்போது எழுந்த குரலைக் கேட்டு, '**மான்கத்துகிறது**' என்று கூறி மான் வேட்டைக்குச் சென்றார்கள். மறுநாள் அவர்களைக் கேட்ட போது, 'மான் அகப்படவில்லை' என்றார்கள. இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. மிருகங்களின் குரலை இவர்கள் நன்கு தெரிந்துள்ளார்கள்.

பாம்புகள் எங்கும் நிறைந்துள்ளன. மலைப்பாம்பு, நல்லபாம்புகளோடு இவர்கள் போராடுகிறார்கள். பாம்புகளின் தொல்லைக்கு மிகவும் அஞ்சுகிறார்கள். பாம்புக் கடியிலிருந்து தப்பிக்க பச்சிலையைப் பயன்படுத்துகிறார்கள்.

புறா, கிளி போன்ற பறவைகளையும் உண்கிறார்கள்.

பறவைகளை வேட்டையாடிக் கறி சமைத்து விருந்தினரை மகிழ வைக்கிறார்கள்.

இம்மலைமக்கள் தினந்தினம் மிருகங்களோடு போராடுகிறார்கள். இப்போராட்ட நிகழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார்கள். போராட்டத்தில் மகிழ்ச்சியடைகிறார்கள். இத்தகைய வாழ்க்கை இவர்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டது. வேட்டையாடுவதை ஒரு தொழிலாக மலைமக்கள் கொண்டிருக்கிறார்கள். வேட்டையாடுவதும் ஒரு வாழ்க்கை என்று கூறுகிறார்கள்.

# பிள்ளைப்பேறு நம்பிக்கைகள்

இம் மலை மக்களிடம் பிள்ளைகள் தேவை என்பது அதிகமாக இருக்கிறது பிள்ளைகள் இருப்பதை அதிகம் விரும்புகிறார்கள் தங்களது கால் நடைகளை மேய்ப்பதற்கும் காடுகளில் (வயல்களில்) உதவிக்கும் பிள்ளைகள் தேவை என்று விரும்புகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் நான்குக்குக் குறையாமலும் 10 க்கு மிகாமலும் குழந்தைகள் இருக்கின்றன.

இம் மலை மக்களிடம் குழந்தைக்காகவும்— குழந்தை சம்பந்தமாகவும் பலவகை நம்பிக்கைகள் இலை மறைவு, காய் மறைவாக இருக்கின்றன. குழந்தை உள்ளவர்களே இந்த ஜன்மத்தில் வாழ்ந்து வேறு உலகத்தில வாழத் தகுதி உடையவர்கள்.* குழந்தைகள் இல்லாவிட்டால் பேயாய், பிசாசாய் அலைய வேண்டி இருக்குமாம். அதாவது குழந்தை இல்லாதவர்களுக்கு நரகம்தான் கிடைக்கும் என்றும் நம்புகிறார்கள்.

பிள்ளை இல்லாதவர்களை இந்தச் (பலை மக்கள்) சமூகத்தில் விரும்புவதில்லை. அவர்கள் எதிரில் வரவும் கூடாது என்று கண்டிப்பாக இருக்கிறார்கள்.

நல்ல நிகழ்ச்சிகளின் காரணமாகச் செல்லும்போது பிள்ளை இல்லாத பெண்கள் எதிரில் வருவதை விரும்ப வில்லை. இதனைக் கெட்ட சகுனமாக நினைக்கிறார்கள்.

* இது சங்க நூல் கருத்தும் ஆகும். புறம். 5, குறள் 62

பெண்கள் பிள்ளைகளைப் பெற்றுவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். பிள்ளைகள் இல்லாமல் இறப்பதையும் வெறுக்கிறார்கள். எப்படியாவது ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட வேண்டும்; குழந்தை இல்லாதவள் என்ற அவப்பெயர் தனக்கு வரக் கூடாது என்று பெண்கள் விரும்புகிறார்கள்.

பிள்ளை இல்லாததால் — கணவன்மார் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். இதற்காக, பிள்ளை வேண்டித் தெய்வத்திடம் விரதம் (நோன்பு) இருந்துபெற முயல்கிறார்கள். தங்கள்குலதெய்வத்திற்குச் சடங்கும் செய்கிறார்கள்.[1]

பிள்ளைகள் பிறக்காதபோது ஆண் வேறு பெண்ணையும், பெண் வேறு ஆணையும் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். வேறு திருமணத்தை — அபராதம் அல்லது வழக்கு மூலம் செய்து கொள்கிறார்கள்.

**புத்தரன்** என்பது **மகன்** என்னும் பொருளில் வழங்கப் பட்டாலும், இவர்களிடம் **பேரன்** எனும் கருத்துள்ள உறவு முறையாகக் கருதப்பட்டு வருகிறது.

மகனின், மகளின் குழந்தையைப் **புத்தரம்** என்று கூறுகிறார்கள். தாத்தாவாகிய தங்களை நரக உலகத்திலிருந்து புத்தரனே* விடுவிக்கிறான். புத்தரன் கொள்ளி வைக்க வேண்டும். அப்படி அவன் கொள்ளி வைத்தால் தான் தமக்குச் சொர்க்கம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள்.

---

1 வஞ்சிக்குழியில் — ஆய்வில் — தும்பராம்பட்டு பெண் வந்து படைத்ததை நேரில் பார்த்தேன்.

* (Put) நரகம் என்னும் புற்றிலிருந்து வெளியேற்ற வந்தவன் புத்திரன் என்னும் பொருளில் இவர்களிடம் வழங்கி, வருகிறது.
புத் — வட சொல்.

பிள்ளைகள் ஈமச்சடங்கு செய்வதாலும், திதி முதலி யவைகளைச் செய்வதாலும் சுரியராமன் வாழும் உலகத்தில் தங்களுக்கு இடம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இதற்காகவே, சுரியராமனுக்குப் பூசையும் விழாவும் செய் கிறார்கள்.

ஈமச் சடங்குகளை ஆண் மக்களே செய்ய வேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள்.

இறந்தவர்கள், பிறகு வேறு உலகத்தில் வாழ்வார்கள், வாழ்கிறார்கள். அப்படி வேறு உலகில் வாழ புத்தரர்களே வழிகாட்டுகிறார்கள். புத்தரர்கள் இல்லாதவர்கள் அந்த வழியில் செல்ல முடியாது என்றும் நம்புகிறார்கள்.

தங்கள் இனத்தையும் சொத்தையும் பிள்ளைகளே காப்பாற்ற முடியும்; பிள்ளைகளுக்காக நிறைய உழைக் கிறார்கள்; பிள்ளைகள் தங்கள் குடியை நிலை பெறச் செய்கிறார்களாம்.

பிள்ளைகளுக்காக இவர்கள் ஒரே குலமரபைச் சேர்ந்த வர்களோடு மண உறவை வைத்துக் கொள்ளுவதில்லை. வேறுபட்ட குலமரபுகளில்தான் திருமண உறவை வைத்துக் கொள்கிறார்கள்.

கணவனின் தந்தை (மாமனார்) மூலம் பிறந்த பிள்ளையாக இருந்தாலும், வேறு ஆண்மூலம் பிறந்த பிள்ளையாக இருந்தாலும் கணவனே பிள்ளைகளுக்குப் பொறுப்புள்ளவனாக இருக்கிறான்.

ஒருபெண், வேறு ஆணுடன் வாழ விரும்பும்போது முதல் கணவனுக்குப் பிறந்த குழந்தைகளைப் புதிய கணவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என விரும்புகிறாள். அதே சமயம் முதல் கணவனின் சொத்தில் இந்தக் குழந்தைக்கு உரிமையும் கொடுக்கிறார்கள். இந்த வகையில் குழந்தைகளின் வாழ்வில் தனி அக்கறை காட்டுகிறார்கள்.

குழந்தைபெற்ற பெண்ணைத்தான் விரும்புகிறார்கள். இவளைத்தான் குடும்பத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் சேர்த்துக் கொள்கிறார்கள். குழந்தை பெற்றவளையே சடங்குகளில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள்.

திருமண நிகழ்ச்சியில் நலங்கு வைத்தல், ஆலத்தி (ஆரத்தி) எடுத்தல் முதலியவைகளைக் குழந்தை பெற்றவளே செய்ய வேண்டுமாம்.

பிள்ளையைப் பெற்றிருக்கும் போது அவள் விரும்பும் வரை கணவனே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் குடும்பத்தில் உள்ளவர்களும் இவளுக்கு உதவியாய் இருக்கிறார்கள்.

## மலடியார்

பிள்ளை பெறாதவளை 'மரடி' என்றும் வரடி' என்றும் கூறுகிறார்கள். மலடியாய் இருப்பவளை எந்த நிகழ்ச்சிக்கும் சேர்த்துக் கொள்ளுவதில்லை; வெறுக்கிறார்கள். குழந்தை பெற்றவளுக்கு உதவியாய் இருந்தால் தனக்குப் பிள்ளை உண்டாகும் என்று மலடியாய் இருப்பவள் நம்புகிறாள்.

மலடியாக இருப்பவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். மலடியாக இருப்பவளை முழுவதுமாக வெறுத்து ஒதுக்கி விடவில்லை.

பிள்ளை பெறாதவளை மட்டும் மலடி என்று கூறவில்லை; பெண்குழந்தை பிறந்து இருந்து, ஆண்குழந்தையைப் பெறாதவளையும் மலடி என்றே கூறுகிறார்கள்.

## பிள்ளைக்காக வேண்டுதல்

பிள்ளை பிறக்க வேண்டிக் கரியராமனுக்குப் பூசை செய்கிறார்கள். விழா நாட்களில் காணிக்கையும் செலுத்துவார்கள்.

திருவண்ணாமலைச் சிவன் கோயிலுக்கும், திருப்பதிக்கும் சென்று பிள்ளை பிறக்கவேண்டித் தலைமுடியைக் கொடுத்து வருகின்றனர். ஊர்த் தெய்வங்களாக இருக்கும் முருகன், மாரியம்மன், பிள்ளையார் ஆகியவற்றுக்கும் பூசை செய்வர்; காணிக்கையும் செலுத்துவர். இம் மலையில் சின்ன திருப்பதி விஷ்ணு கோயில் முன்பு பிள்ளை வேண்டி (தொட்டில்) ஊஞ்சல் கட்டுகிறார்கள். இக்கோயில் திருவிழாவின்போது தேர்விழா நாளில் தேருக்குமுன்பு தேங்காய், உடைத்து அடுப்பு வைத்துப் படைக்கிறார்கள்,

பிள்ளை பிறக்க வேண்டிச் செய்யும் எந்த ஒரு காரியத்திலும் கணவனும் கலந்து கொள்வார். சின்னதிருப்பதி தேர்விழா அன்று இரவு பெருமாளை வைத்து ஊஞ்சல் விழா செய்கின்றனர். அன்று இரவு ஊஞ்சல் ஆடும்போது இறைவனை வேண்டிப் பெண்களும் ஆண்களும் பாட்டுப் பாடுகிறார்கள். ஊஞ்சலின்போது பாட்டுப் பாடினால் பிள்ளை பிறக்கும் என்று நம்புகின்றனர்.

சின்னதிருப்பதிவிழா அன்று 'வன்னிக்குத்தல்' என்னும் நிகழ்ச்சியை நடத்துகின்றனர். அப்போது அம்பு விடுவதைப் பார்த்தாலும், அங்கு இருக்கும் வாழைமரத்தின் பாகங்களைச் சமைத்துச் சாப்பிட்டு, இரவு உறவு கொண்டாலும் கண்டிப்பாய் குழந்தை பிறக்கும் என்று நம்புகின்றனர்.

பிள்ளை பிறந்த பிறகு, தொப்புள்கொடியையாருக்கும் தெரியாமல் மண்ணில் புதைத்து விடுவார்களாம்.

தொப்புள் கொடியை மிருகங்கள் தின்று விட்டால் அடுத்து குழந்தை பிறக்காதாம். அதனால்அதைப்புதைத்து விடுவார்களாம்.

# ஆவியும் நம்பிக்கையும்

ஆவியைப் பற்றிய நம்பிக்கை எல்லா மக்களிடமும் இருக்கிறது. நகர்ப்புற மக்களிடம் இது பற்றிய நம்பிக்கை விஞ்ஞான முறைகளோடு நம்பவைக்கப்படும். நல்ல ஆவிகள் என்றும், தீய ஆவிகள் என்றும் ஆவிகளை இருவகையாகப்பிரித்து நம்பும் பழக்கம் பண்டைக் காலத்திலிருந்துவருகிறது. நல்ல ஆவிகளை வணங்குவதால், தீய ஆவிகளை விரட்டலாம் அல்லது அவைகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று இம் மலை மக்களும் நம்புகின்றனர் கல்வராயன் மலை மக்கள் கொண்டுள்ள ஆவிகளைப் பற்றிய நம்பிக்கை சற்று வித்தியாசமானதாக உள்ளது. ஆவிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவே பெண்கள் வயதுக்கு வந்தவுடன் தனித்திருக்கச் செய்வர். இரத்தத்தை உண்ணும் ஆவிகள், வயதுக்கு வந்த பெண், தன் குடும்பத்தாரோடு இருக்கும்போது குடும்பத்தில் இருக்கும் நபர்களைத் துன்புறுத்துமாம். இத் துன்பத்திலிருந்து காத்துக் கொள்ளவே பெண்ணைத் தனியாய் விடுவார்களாம். தனித்திருக்கச் செய்தால் வயதுக்கு வந்த பெண்ணை ஒன்றும் செய்யாதாம்.

விழாக் காலங்களில் பூசாரிக்கோ அல்லது வேறு நபருக்கோ மருவு (சாமியாடி) வருகிறது. அவர் மூலம் மழை வளமைப்பற்றிக் கேட்பார்கள். சாமியாடிகூறும்சொல்லைத் தெய்வம் வந்து கூறுவதாக எண்ணுகின்றனர்.

சாமியாடி மூலம் நல்ல ஆவி வந்து பேசுவதாக நம்புகின்றனர். குறி கேட்கும்போது சாமியாடியைக்கூடிஇருப்

போர் வணங்குவர். குறி கூறும்போது சாமியாடிக்குக் காணிக்கைச் செலுத்துவர். இக் காணிக்கையால் ஆவி களின் நல்ல அருள் பெறலாம் என்றும், ஆவி காணிக்கைப் பெறுவதால் மகிழ்ந்து குடும்பத்தையும் காட்டையும் காப் பாற்றும் என்றும் கருதுகின்றனர்.

எந்த ஒரு காரியத்தையும் பூசாரியைச் கேட்டே செய்ய எண்ணுவார்கள். இறந்தவரோடு பேசும் ஒருவராகப் பூசாரியைக் கருதுவர். பூசாரி கூறும் சொல், ஆவி சொல்லுவதாகத் திடமாக நம்புவர் மகளிர் வேறு ஆடவர் களோடு சென்று இருந்து திரும்பினாலும், வயதுக்கு வந்த பெண்கள் தனித்து இருந்து பின்னர் வீட்டிற்கு அழைக்கும் போதும் தீர்த்த நீரைத் தெளிப்பார்கள்.

புனித நீரில் நல்ல ஆவி வாழ்வதாகக் கூறுகிறார்கள். எனவே புனித நீரைப் பெறும்போதும்தெளிக்கும்போதும். வைத்திருக்கும்போதும் எச்சரிக்கையாகவும், மரியாதை செலுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். இறந்தவர்கள் சில ஆண்டுகள் வரை உரியவர்களோடு வாழ்கிறார்களாம் ஆவர்கள் மகிழ்ச்சியடைந்தால் குடும்பத்தில் நன்மை கிடைக்கிறதாம். அதற்காக இறந்தவர்க்குப் புண்ணியம், தரும காரியங்களைச்செய்வார்களாம். இதனால் இறந் தவர்களின் ஆவி மகிழ்ச்சி அடையுமாம்.



# பச்சை குத்தும் பழக்கம்

வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் மலையாளிகளிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும், பச்சை குத்திக் கொள்வதில் ஒற்றுமையைக் காண்கிறோம்.

சவ்வாது மலையாளிகளிடம் பச்சைக் குத்திக் கொள்ளும் பழக்கம் இல்லை எனலாம்.

கல்வராயன் மலையாளிகள் 5 வயது முதலே பச்சை குத்திக் கொள்ள விரும்புகின்றனர். ஆண்களும் பெண்களும் குத்திக் கொண்டாலும் பெண்களே அதிகம் குத்திக் கொண்டிருக்கின்றனர். பெண்கள் பச்சைக் குத்திக் கொள்வதில் அதிக ஆசை கொண்டுள்ளனர்.

முதல் மாத விடாய் முடிந்த பிறகு, பெண்கள் பச்சை குத்திக் கொள்கிறார்கள். சில சமயம் இதற்கு முன்பே கூடக் குத்திக் கொள்வர்.

## பச்சை குத்திக் கொள்ளும் இடங்கள்

பெண்கள் நெற்றி, கன்னம், கை (முழங்கை முழுவதும்), கால், மார்பு, முதுகு ஆகிய இடங்களில் குத்திக் கொண்டுள்ளார்கள்.

ஆண்கள் கை, மார்பு, முதுகு ஆகிய இடங்களில் குத்திக் கொண்டுள்ளார்கள்.

பச்சை குத்துவோர் சமவெளிப் பகுதியிலிருந்து வருகின்றனர். இவர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் அல்லது பத்தாண்டுகளுக்கு ஒரு முறையும் வந்து பச்சை குத்திச் செல்கிறார்களாம்.

குறவர் இனப் பெண்களே இவர்களுக்குப் பச்சை குத்துகிறார்கள்.; ஆண்களுக்கும் தான். பச்சைக் குத்துவதற்கு இவர்கள் தானியங்களையோ, பணத்தையோ கூலியாகப் பெறுகிறார்கள்.

## பச்சை குத்தலுக்குக் காரணம்

இறந்த பிறகு உடலோடு வருவது பச்சை ஒன்றுதான் என்று இவர்கள் கூறுகின்றனர்.

அழகுக்காகக் குத்துவதில்லையாம். உடல் நோய்க்காக குத்திக் கொள்வதாம். பச்சை குத்துவதால் வலிப்பு வராதாம். பெண்கள் பிரசவத்தின்போது இழுப்பு, வலிப்பு முதலிய நோய்களால் துன்பப்படாமல் இருக்க பச்சை குத்திக் கொள்வார்களாம்.

தீய சக்திகளிடமிருந்து காத்துக் கொள்ளவே குத்தப் படுகிறது என்பது பொதுக் கருத்து.

நோய்கள், ஆவிகளினால்தான் வருகின்றன என்கின்றனர். ஆவிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள உடலில் ஒரு மாற்றம் செய்து கொள்ளவேண்டும். அதற்காக குளிக்காமல் இருப்பர்! இதனால் ஆவிகள் நெருங்காது. உடலில் வண்ணங்களைப் பூசிக்கொள்வது என்னும் பல நம்பிக்கைக்குப் பிறகு பச்சைக் குத்திக் கொள்கின்றனராம்.

ஆவிகள் முக்கியமாகப் பெண்களைத்தான் வந்துபிடித்துக் கொள்கிறதாம். எனவேதான் பெண்கள் அதிகம் பச்சைகுத்திக் கொள்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள்,

## பச்சைக்கு உரிய உருவங்கள்

குறவர்ப் பெண்கள் பச்சைக் குத்துவதை ஒரு தொழிலாகச் செய்கிறார்கள்.

இவர்கள், தெருவில், வீட்டில் போடும் கோலம் போலப் பல வகையான உருவங்களைக் குத்திக் கொள்கிறார்கள். இதைப் பார்த்தே தெருவிலும் வீடுகளிலும் கோலம் போடுகிறார்கள். சுவரில் காணப்படும் கோலங்களைப் போலவே தங்கள் கை, முதுகில் பச்சை குத்திக் கொண்டுள்ளனர்.



மேலே உள்ளது போன்ற கோலங்களைத் தங்கள் உடலில் பச்சை குத்திக் கொண்டிருக்கிறார்கள்.* மேலும் இவர்கள் பறவை, தேள், மீன், சூரியன் முதலிய உருவங்களையும் உடலில் பச்சை குத்தி இருக்கின்றனர்.

பெண்கள் தங்கள் கணவன் பெயரையும், ஆண்கள் மனைவியின் பெயரையும், கடவுள் பெயரையும் பச்சை குத்திக் கொள்கின்றனர்.

---

* 12. 6. 85 வஞ்சிக்குழியில் பச்சை 'டிசைனை'க் கோலமாகப் பார்த்தேன்.

பச்சைக் குத்திக் கொள்வது, 'முன்னெச்சரிக்கையாக வும், பாதுகாப்புணர்வு காட்டுவதாகவும், மந்திர நோக்குடையதாகவும், வலி நீக்கும் வழியாகவும், நல்வாழ்வு வேண்டியும், காதலுணர்வு நோக்கமாகவும் இளமை நிலைக்கவும், பாலினக் கவர்ச்சியாகவும் இடம் பெற்றிருந்தது'* என்று கூறுவது இம் மக்களைப் பொறுத்த வரையில் உண்மையே.

## நோய்களும் மருத்துவமும்

இந்த மலையாளி மக்களிடம் திருமண உறவுக் கட்டுப்பாடு இல்லை. அதாவது ஓர் ஆணோ, 'ஒரு பெண்ணோ தனக்குப் பிடித்தவர்களோடு வாழலாமாம், இதற்குச் சிறிய அபராதம் மட்டுமே கட்டவேண்டும்.

ஒருவன் பல திருமணங்களைச் செய்து கொள்ளலாம் என்னும் பழக்கமும், விரும்பியவளோடு உறவு கொள்ளலாம் என்னும் பழக்கமும் இம் மக்களிடம் முன்பு இருந்தது என்று கூறப்படுகிறது.

தனது மலையை விட்டு வேறு மக்களுடன் மணத் தொடர்பு கொள்ளக்கூடாது என்பது கண்டிப்பாகக் கடைப் பிடிக்கப்படுகிறது

சிறிய வயது உடைய ஆண், அதிக வயது உடைய பெண்ணை மணப்பதும், சிறிய வயதுடைய பெண் அதிக வயதுடைய ஆணுக்கு மனைவியாய் இருப்பதும் இவர்களிடம் நடைமுறைப் பழக்கமாய் இருந்ததாகும்.

இத்தகைய பழக்கங்களினால், இவர்களிடம் பால் உறவு நோய்கள் அதிக அளவில் பரவியிருக்கிறது கட்டுப்பாடு இல்லாத திருமண முறையும், உறவு முறைகளும் நோய்க்குக் காரணமாய் இருந்தன எனக் கூறப்படுகிறது.

---

* 'தமிழ்க் கலை'— தஞ்சைப் பல்கலைக்கழகம்,
தமிழ்-2, கலை - 2.3; 1984 - பக்.117

இவர்களிடம் உள்ள குடிப் பழக்கம் உடல் நோய்க்கு முக்கியக் காரணமாக இருக்கிறதாம். ஆணும் பெண்ணும் குடிப் பழக்கத்திற்கு அடிமையாய் இருக்கிறார்கள். சாதாரண நாட்களிலும் விழா நாட்களிலும் குடிப்பது இவர்களது வழக்கமாம்.

இவர்களுடைய உணவும் உழைப்பும் உடல் நோய்க்குக் காரணங்கள் எனலாம்.

கல்வராயன்மலை, அரசின் நேரடி நிர்வாகத்திற்கு வந்த பிறகு, மக்களின் நோய்களைத் தீர்க்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பால் உறவு நோய்களைத் தீர்க்க அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. மருத்துவ அதிகாரிகள், மருத்துவப் பணியாளர்கள் இம் மலையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று மருத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் மருத்துவர் முகாமிட்டு மக்களைப் பரிசோதித்துச் சிகிச்சைகளை மேற்கொண்டதன் காரணத்தால், நோயின் வளர்ச்சி வெகுவாக குறைந்து வருகிறது.

மருத்துவ அதிகாரிகளும்,மருத்துவப் பணியாளர்களும் மருத்துவ முகாமில் பல இன்னல்களை அடைந்தாலும், அயராது மருத்துவ உதவிகளைச் செய்வதில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். முன்பு இவர்களைக் கண்ட போது, ஓடி மறைந்தும், ஆயுதங் கொண்டு தாக்கவும் முயன்று இருக்கிறார்கள். முன்னால் தீராமல் இருந்த பால் உறவு நோய்கள் இப்போது 90% குறைந்துள்ளது என்கின்றனர்.

குடிப்பழக்கத்தால் எலும்புருக்கி நோய், குடல்நோய்கள் நரம்புத்தளர்ச்சி நோய்கள், கண்பார்வை இழத்தல் முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், இன்று மருத்துவ உதவிகளினால் நலம் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

பால் உறவு நோய்களைப் பற்றி மருத்துவரிடம் கூற வெட்கப்பட்டு, 'ஒடம்புக்கு சூடா இருக்கு' என்று கூறுவர். 100 பேருக்கு 60 முதல் 70 பேர் இந்த பால் உறவு நோய்களால் பாதிக்கப்பட்டு இருந்தார்களாம்.

மருத்துவர்களின் முயற்சியால், விலை மிகுந்த ஊசி மருந்துகள், மாத்திரைகளினால் சுமார் ஓராண்டுக்கும் மேலான மருத்துவ உதவியும் தற்போது நோயின் அளவைக் குறைத்துள்ளது.

இப்பொழுது மக்கள் ஊசியை விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். மருந்து, மாத்திரைகளைப் பயன்படுத்த அஞ்சுகின்றனர். இதனால் மாத்திரை மருந்துகளைச் சாப்பிடாமல் போனதால் நோயைத் தீர்க்க முடியவில்லை என்று மருத்துவர்கள் வருத்தமுடன் கூறினர்.

வெள்ளிமலை என்னுமிடத்தில் ஒரு நடமாடும் மருத்துவ மனையும், மோட்டாம்பட்டி, சேராப்பட்டு, தொரடிப்பட்டு முதலிய ஊர்களில் அரசு மருத்துவ மனைகளும் செயல்படுகின்றன.

இவை தவிர, கரியாலூர், சேராப்பட்டு எனும் ஊர்களில் 'கிறித்துவ மிஷின்கள்' நடத்தும் மருத்துவ மனைகளும் செயல்பட்டு வருகின்றன

இன்னாடு எனும் ஊரில் டேனிடா திட்டத்தின் கீழ், பஞ்சாப் ஆதர்ச சங்கம் ஒரு மருந்தகத்தையும் நடத்தி வருகிறது.

மகப்பேறு மருத்துவ வசதியும், குழந்தைகளுக்கான மருத்துவ மனைகளும் இல்லாததால், மக்கள் பெருமளவு இழப்புகளை அடைகிறார்கள்.

நவீன மருத்துவ முறைகளைப் பற்றி அறியாமல் இருக்கிறார்கள். இதனால் மருத்துவ சிகிச்சைகளைப் பெற அஞ்சுகின்றனர்.

காய்ச்சல், பேதி, வயிற்றுச் சம்பந்தமான பல நோய்களினாலும் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கு உணவும், சுகாதார வசதியும் இல்லாமையே காரணம்.

கிடைக்கும் மருத்து மாத்திரைகளை ஒழுங்காகப்பயன் படுத்தினாலே போதும்; பெரும் அளவு நோய்களைக் குறைத்து விடலாம். மாத்திரைகளைச் சாப்பிட மாட்டேன் என்று மக்கள் மறுப்பதனால் மருத்துவர்கள் மிகவும் வருத்தப்படுகின்றனர்.*



---

* 22 10. 85 டாக்டர் திரு. பரசுராமனுடன் உரையாடல். சுமார் 7 ஆண்டுகளாகக் கல்வராயன் மலையில் நடமாடும் மருத்துவ மனையில் பணி செய்து வரும் இவர் 8 முறை இம் மலையில் விபத்துக்குள்ளாகியும் மக்களின் பல எதிர்ப்புக்கு உட்பட்ட போதும், தொடர்ந்து தம்பணிகளைச் செய்து வருகிறார்.

# தெய்வமும் பலியும்

கல்வராயன் மக்கள் ஊர்த்தெய்வ வழிபாட்டின் போது பலியிடுகிறார்கள்.

கரியராமன் தெய்வத்திற்குப் பலி கொடுப்பதில்லை. ஆனால் மறைவாகக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது.

மாரியம்மன் திரௌபதியம்மன், சோலை அம்மன், காவேரி அம்மன் போன்ற பெண் தெய்வ வழிபாட்டில் உயிர்ப் பலி கொடுக்கப்படுகிறது.

ஆடிமாதத்தில் பெண் தெய்வங்களுக்கு விழா தொடங்கும்போது ஆட்டைப் பலியிடுகிறார்கள்.

விழாவில் யாருக்காவது (பூசாரி உட்பட) மருவு (சாமி) வந்தால், பலி இட்டே குறி கேட்கிறார்கள்.

அம்மை, காலரா போன்ற நோய்கள் வந்தால் மாரியம்மன் கோயில் முன்பு பொங்கல் வைத்து ஆடு' கோழி பலியிட்டுப் பூசை செய்வர். பலியிட்டபிராணியின் உடலை அங்கேயே சமைத்தும், வீட்டிற்குக் கொண்டு வந்து சமைத்தும் உண்பார்கள்.

கல்வராயன்மலையில் உள்ள ஊர்களில் ஒரு விழா என்றால், கண்டிப்பாக உயிர்ப் பலி யிடப்படும்.

முதல் முதல் காட்டில் (நிலத்தில்) ஏர் ஓட்டப் போகும் போதும்; காடு வெட்டப் போகும்பொழுதும் பலியிட்டே தொடங்குவார்கள்.

கங்கை அம்மன், காவேரி அம்மனுக்குப் பொங்கல் வைத்து மழை வேண்டி, கோழி அல்லது ஆட்டைப் பலியிடுவார்கள்.

பெண்கள் தீட்டு முடிந்து வீட்டிற்கு அழைக்கப்படும் போதும் கோழியை அறுத்துச் சாமிக்குப் படைப்பது வழக்கம்.

## மக்கள் நம்பிக்கை

கல்வராயன் மலை மக்களிடம் உள்ள நம்பிக்கைகள் பக்தியை ஒட்டியே உள்ளன. **தெய்வ நம்பிக்கை!** 'இந்தப் பூமியை, மலையை எங்களுக்காகக் கொடுத்தார் கரியராமன்' என்று கூறுகிறார்கள்.

புதிய வீட்டைக் கட்ட அஞ்சுவார்கள். அப்படிப் புது மாதிரியான வீட்டைக் கட்டினால் கடவுளுக்குப் பிடிக்காது; கடவுள் கோபப்படுவார் என்கிறார்கள்.

வெட்டப்படும் மரத்தையும் இழைத்துப் பயன்படுத்த அஞ்சுவார்கள். அப்படி மரத்தை இழைப்பது கடவுளை இழைப்பது போலாகுமாம்.†

காட்டைச் சங்கிலி கொண்டு அளக்கப்படுவதையும் வெறுப்பார்கள்.

கிணறு வெட்டித் தண்ணீர் எடுப்பது கடவுள் உடலை (தோண்டுவது) வெட்டுவது போல ஆகுமாம்.

பூமியை — மலையைத் தாயாக எண்ணுவர். இயற்கையான கற்களைத் தெய்வமாகக் கருதுவர். அவற்றை இடி மின்னல் என்றும் நம்புகின்றனர்.

---

† (12. 6. 85) தும்பராம்பட்டில் அரசு கட்டித் தரும் வீட்டிற்குத் தச்சரைக் கொண்டு இழைத்து, மரவேலை செய்தார்கள்.

திருமணம், கோயில்விழா போன்ற நாட்களில் விளக்கு ஏற்றி வணங்குவர். கடவுள் விளக்கு வடிவத்தில் வந்து உதவி செய்வதாக நம்புகின்றனர். இறந்து போனவரின் ஆவி விளக்கு ஒளியாக வந்து உதவி செய்யுமாம். அதற்காக விளக்கு ஏற்றி வைப்பார்களாம்.

கரி(ய)ராமனுக்கு திருவிழாச் செய்யும் நாட்களில் தோட்டி, பறையர், முஸ்லீம்கள் ஆகியோர் கோயிலுக்குள் வரக்கூடாது. இவர்கள் கோயிலுக்கு வந்தால், தெய்வத் திற்குத் தீட்டு ஆகிவிடும்; தெய்வம் கோபமுற்று விளைச் சலை அழிந்து விடுமாம். பலியிடுவதால், தெய்வம் மகிழ்ச்சி யடையுமாம்.



# சகுனங்களில் நம்பிக்கை

கல்வராயன் மலை மக்கள் சகுனங்களைப் பார்ப்பதில் கவனமாய் உள்ளனர். நல்லதும் கெட்டதும் கடவுளால் வருவது; கெட்டதை ஆண்டவன் சகுனங்களின் மூலம் தெரியப்படுத்துகிறார். நல்லதைக் கெட்டதாகச் சகுனமே ஆக்குகிறதாம்.

பெண் பார்க்கப் போகும்போது சகுனம் பார்ப்பார்கள். பூனை, பறையன், அம்பட்டன் [நாவிதன்], விதவை, ஆகியோர் எதிரில் வந்தால், பெண் பார்க்கப் போவதை அன்று நிறுத்திவிடுவர். ஊரில் சாவு ஏற்பட்டிருந்தாலும் செல்லும் ஊரில்சாவு ஏற்பட்டிருந்தாலும், திருமணத்தைப் பற்றிப் பேசுவதும் தெரியப்படுத்துவதும் இல்லை.

விதை விதைக்கப் போகும்போது, மனைவியை இழந்தவன் (முண்டையன்), விதவை (முண்டச்சி) எதிரில் வரக்கூடாது. வந்தால் நல்ல விளைச்சல் இருக்காதாம். கிழஆடு கத்தக் கூடாது; பாம்பு குறுக்காகப் போகக் கூடாது. இப்படிநேர்ந்தால் மறுநாள்தான் விதைக்கப்போவார்கள்.

பிணம் எதிரில் வந்தால் விதைக்கவும் அறுக்கவும்போக மாட்டார்கள். பெண்பார்த்தலையும் திருமண நிகழ்ச்சியையும் ஒத்திப் போட்டுவிடுவார்கள்.

### நல்ல சகுணம்

விதை விதைக்கவும், அறுவடை செய்யவும், திருமணம் தொடங்கவும், முதல் உழவு உழுவுதற்கும், வேட்டைக்குச் செல்லவும் கோயில் திருவிழாவைத் தொடங்கி வைக்கும் போதும், பஞ்சாயத்து கூட்டும்போதும் நல்ல சகுனங் களைப் பார்த்தே செய்கிறார்கள்.

மூப்பன் கூறும் நேரம், கிழமை, காலத்தை நல்லதாக எண்ணுகின்றனர்.

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது, ஊர்ப் பயணத்தின்போது யாராவது தும்மினால் அங்கேயே உட் கார்ந்து விடுவார்கள் தும்மியவர் சென்ற பிறகு (அவருக் குத் தெரியாமல்) அவர் காலடி மண்ணை எடுத்துத் தலை யைச் சுற்றி வீசுவர்.

திருமணம் தொடங்கி, அது சம்பந்தமாக மறுமுறை போகும்போது ஆகாத சகுனங்கள் இருந்தால், போகும் வழியை விட்டு வேறு வழியாகச் சென்று, பூக்கும் மரத்தின் பச்சைத் தழைகளையும் அம் மரத்தின் குச்சியையும், கொஞ்சம் முள்ளையும் வைத்து, அதன்மீது ஒரு கல்லை வைத்துவிட்டுப் போகிறார்கள்.[1] இப்படிச் செய்வதால் திருமணம் நல்ல விதமாக நடக்கும் என்பது நம்பிக்கை.

### சில நம்பிக்கைகள்

பழைய துணிகளைக் கொடுப்பதில்லை. பாய் கொடுப் பார்கள்; தலையணை கொடுப்பதில்லை. தலையணை கொடுத்தால் பாய் கொடுக்க மாட்டார்கள். இரண்டையும் கொடுத்தால் உறவு போய்விடும்; அல்லது சண்டை உண்டாகுமாம்.[2]

---

1. 10 6 85 இதை வஞ்சிக்குழி— தும்பராம்பட்டுப் பாதை யில் நேரில் பார்த்தேன். தொட்டியர்களிடம் இந்த முறை இருக்கிறது. அவர்கள் காலால் மிதிக்கிறார் களாம். பார்க்க: 'மேற்கு மலை வாசிகள்' — பிலோ இருதயநாத். பக். 62
2. 19. 7. 85 பாலப்பட்டு ஜாகீரில்கண்ட அனுபவம்.

ஒரு பெண், தவறு செய்த பிறகு அப் பாவத்தை நீக்கத் தீர்த்தம் (புனிதநீர்) தெளிக்கின்றனர் 'தீர்த்தத்தை'க் குருவே தெளிக்க வேண்டும்; புனித நீர் கடவுளால் ஆசீர் வதிக்கப் பட்டது என்றும், குரு கடவுளைப்போன்றவர் என்றும்,நம்புகின்றனர். குரு உரைப்பவை யாவும் கவுடள் கூறுவதாகவும் என்று மதிக்கிறார்கள். மந்திரித்த புனித நீரைத் தெளித்தால் பாவம் நீங்கும் என்றும் கோயிலி லிருந்து கொண்டுவரும் நீர் புனிதமானது என்றும் நம்பு வார்கள்.

குழந்தைச் சடங்கில் குழந்தைக்கு எருக்கஞ் செடியின் நார்க்கயிறு கட்டுவது, 'காத்து கறுப்பில்' இருந்து காப் பாற்றுவதற்காம். கறுப்பு வளையல் போடுவதால் திருஷ்டி கழியும் என்றும், கறுப்பு அணிந்து (பொட்டு, துணி) குழந்தை பால் எடுக்காது என்றும், வளையலை உடைப்பதால் தோஷம் நீங்கும் என்றும் நம்புகிறார்கள்.

குடும்பப் பெரியோர், (மூதாதையர்) பெயரை வைத் தால் அவர்களின் ஆவி குடும்பத்திற்கு நல்லதைச் செய்யு மாம்; இதனால் ஆவிகள்மீது நம்பிக்கை உள்ளது. ஒருவருக்கு ஆவி பிடித்துக் கொண்டு இருக்கிறது என்றால், கோழியைப் பலி கொடுக்கிறார்கள். பலி கொடுக்கும் போது, அதன் இரத்தத்தைக் குடித்த ஆவி, தான் பிடித்த வரை விட்டு விட்டுப் போய்விடுமாம்.

ஆந்தை, கோட்டான் முதலியன வீட்டுக் கூரையின் மீது உட்கார்ந்தால். குடும்பத்துக்குத் தீங்கு உண்டாகும்; இதற்காகப் பொங்கல் அன்று கூரையில் படையல் வைத்து வணங்குவார்கள்.

குழந்தை இல்லாதவர்கள் புண்ணியத்தை அடைய முடியாது. புத் தென்னும் நரகத்திலிருந்து புத்திரன் என்ப வன் காப்பாற்றுவான் என்று நம்புவார்கள்.

இறந்தவர் உடலைத் தொடுதல், மாதவிடாய் ஆன பெண்ணைத் தொடுதல் முதலியன பாவம் என்றும் அதற்குக் குளித்தால் பாவம் நீங்கும் என்றும் நம்புகின்றனர்.

ஊரையும் தங்களையும் வெளியிலிருந்து வரும் தீய சக்திகளிடமிருந்து ஊர்த் தெய்வங்களே தடுத்து விடுகின்றன என்று நம்பிப் பூசையும் பலியும் செய்கிறார்கள். தெய்வம் நோயிலிருந்து காப்பாற்றுகிறது; தெய்வம் தான் மழையைக் கொடுக்கிறது என்றும் கூறுகின்றனர்.

கர்ப்பவதியையும் விதவையையும் குதிரையில் ஏற்றினால் மலைக்கு ஆகாது. கடவுள் கோபமடைந்து மழையைக் கொடுக்க மாட்டார் என்கின்றனர்.

குழந்தைக்குக் கொடுக்கும் தழைச்சாற்றின் (தழை) பெயரைச் சொன்னால் மருந்து வேலை செய்யாதுஎன்பது அவர்கள் நம்பிக்கை.

நோய்கள் உண்டாவது ஆவிகளின் செயல் என்றும், மந்திரக் கயிறுகளை மந்திரித்துக் கட்டினால் நோய் தீரும் என்றும் நம்புகிறார்கள்,



அனந்தபுரம் **கோ. கிருட்டினமூர்த்தி**

# தெய்வமும் திருவிழாக்களும்

கல்வராயன் மக்களின் தெய்வங்கள் திராவிடரின்தெய் வங்களாக உள்ளன. சிவனும் விஷ்ணுவும் தெய்வமாக உள்ள கோயில்கள் இங்கே உண்டு அத் தெய்வங்களுக்குத் திருவிழாக்களும் செய்கின்றனர். கிராமத் தெய்வங்களாக வழிபடுவர். இத் தெய்வங்களின் கோயில்களில்தான் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள் கின்றனர். இம் மக்களின் வாழ்க்கை எந்த நிலையில் இருக் கிறதோ அதற்குத் தக்கபடியே அவர்கள் வழிபடும் தெய்வத்தின் கோயிலும் சாதாரண நிலையிலேயே உள்ளது. இவர்கள் வழிபடும் தெய்வங்களின் சிலைகள் பெரும்பாலும் உருவமில்லாத கற்களாகவே இருக்கும். இத்தகைய தெய்வக் கற்களை இவர்கள் வாழும் இடத்தின் எல்லைப் பகுதியில் வைத்து வழிபாடு செய்கின்றனர்.

## கரிய ராமன் மீது நம்பிக்கை

கல்வராயன் மக்கள் கிராமத் தெய்வங்களின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். அதே சமயம் மலை முழுவதும் உள்ளவர்களுக்குக் கரியராமன், ஒரே முக்கிய தெய்வமாகத் திகழ்கிறார் கல்வராயன் மலையாளிகள், தாங்கள் காஞ்சிபுரத்திலிருந்து வரும்போது தங்கள் தெய்வமாகக் கரியராமனையும் கொண்டு வந்துவிட்ட தாகக் கூறுகின்றனர்.

குறும்பக் கவுண்டன் ஜாகீரில் கரியராமனுக்குத் தனிக் கோயில் உள்ளது. குறும்பக்கவுண்டன் குடும்பத்தினருக்குக் குல தெய்வம் கரியராமன்! மக்கள் இக் கோயிலுக்கு மாடுகளைத் தானமாக விடுவார்கள். விடப்படும் மாடு களைக் கோயிலுக்கு ஓட்டிச் சென்று விட்டுவிடுவர்.

தங்கள் குல தெய்வமான கரியராமன் பெயராலேயே 'கரிய மலை' என்று முன்பு வழங்கியதாகக் கூறுவர். விஜய நகர அரசர்கள் காலத்தில் இம் மக்களுக்கு தலைவ னாக இருந்த கல்வராயன் என்பானுக்கு இம்மலை பரிசாக வழங்கப்பட்டது அதுமுதல் கல்வராயன் மலைஎன அழைக் கப்படலாயிற்று.

கரியராமன் பெயராலேயே தங்களைக் கரியக் கவுண்டர் என்று கூறிக் கொள்வர். கரியராமன் உருவச் சிலையின் கையில் வில் இருப்பது குறிப்பிடத்தக்கது. கரியராமனை வேண்டிக்கொள்ளும்போதும் திருவிழாவின் போதும் மக்கள் பயபக்தியோடு கூடி வணங்குவர். கரியராமன் மிகவும் கோபம் உள்ளவர்; அதே சமயம் மக்கள் வணங்கிக் கேட்பதைக் கட்டாயம் கொடுப்பார் என்றும் நம்பி யுள்ளனர்.

இத் தெய்வத்திற்குக் குறிப்பிடத்தக்க திருவிழா எதுவும் இல்லை எனலாம்.

## சின்ன திருப்பதி விஷ்ணு

காரியராமனுக்கு அடுத்து, விஷ்ணுவை வணங்குவார் கள், சடையக் கவுண்டன் ஜாகீரில் உள்ள சின்ன திருப்பதி யில் இருக்கும் விஷ்ணு கோயில் முக்கியமான கோயிலாக உள்ளது. இதைத் திருப்பதி என்றும் கூறுவர் இக்கோயில் சுமார் 1,500 அடி உயரத்தில் உள்ளது. இக் கோயில் களுக்கு விஜயநகர அரசர்கள் காலத்தில், அச்சுத ராயன் தானங்கள் வழங்கியுள்ளதை இரண்டு செப்பேடுகள் மூலம் (கி பி. 1512, 1579) அறியலாம்.

இக் கோயிலில் உள்ள விஷ்ணுவுக்குப் புரட்டாசி மாதத்தில் சிறப்பான பூசைகள் செய்யப்படும்.

இப் பூசைக்காக 5 பேர் நம்பியார் என்போர் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்களே திருவிழாசமயம் [புரட்டாசி மாதம்] முழுவதும் பூசை செய்வார்கள்.

புரட்டாசி மாதத்தில் மலையிலிருந்தும் வெளி ஊர்களிலிருந்தும் மக்கள் கால் நடையாக வருவர். கோயிலுக்கு முன்புள்ள பரந்த வெளியில் கூடுவர். அன்னதானம் [கஞ்சி] வழங்கப்பெறும்; புரட்டாசியில் சனிக்கிழமைகளில்மட்டும் சிறப்பான பூசையும் இரவில் [சின்ன திருப்பதியில்மட்டும்] ஊர்வலமும் நடைபெறும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை புரட்டாசி சனிக்கிழமைக்கு மட்டும் பிராமணர்களை அழைத்து வந்து மந்திரங்களை கூறிப் பூசைகளைச் செய்து வந்தார்கள். 1983 ஆம் ஆண்டிலிருந்து இல்லை.

விழா நாட்களில் கோயிலுக்கு முன்பு கூத்து நிகழ்த்தி மகிழ்கின்றனர்.

புரட்டாசி விழாவிற்காகத் தானியங்களையும் பணத்தையும் மலை மக்கள் கொடுப்பார்கள். கிராமங்களில் வசூலிக்கப்பட்ட அபராதம் முதலான வரிப் பணத்தை விழாச் செலவுக்குப் பயன் படுத்துவார்களாம்.

ஜாகீர் பொறுப்பில் இருந்தபோது இம்மலைவிழாவிற்கென்று பணம், தானியம் வசூலிக்கப்பட்டன. ஜாகீர்களும் தனித்தனி பங்குத்தொகை கொடுப்பர். சடையக்கவுண்டன் ஜாகீரில் இம்மலை இருப்பதால், அவரேஇம்மலைவிழாவின் போது முதன்மையும் தலைமையும் வகித்துள்ளார். இப்போதும் சடையக் கவுண்டன் வாரிசுக்கு முதன்மையும் மரியாதையும் தரப் பெறுகிறது.

விழா நாளில், இக்கோயிலைச் சுற்றியுள்ள சமவெளி மக்கள் பொங்கல் வைத்துப் படைக்கின்றனர். மலை மக்களும் பொங்கலோடு, பழம் தேங்காய் வைத்துப் படைத்து வணங்குகின்றனர்.

புரட்டாசி சனிக்கிழமைகளில் விஷ்ணுவுக்கு விரதம் இருக்கிறார்கள். விஷ்ணுவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இம் மலைமக்கள் வெள்ளிக் கிழமையும் சனிக் கிழமையும் கணவன் மனைவி உடல் உறவு கொள்வ தில்லையாம். சேர்வராயன் மலைமக்களும் இவ்வாறு இருக்கின்றனர்.

சின்ன திருப்பதியில் விஷ்ணுவுக்குச் செய்யும் அபிஷேக நீரை மக்கள் போட்டிப் போட்டுக் கொண்டு பிடித்துக் கொள்கிறார்கள். இந்த நீரைப் புனித நீராக மதிக்கிறார் கள். வீட்டுத் தீட்டுக்கும்குற்றம் செய்தவர்மீது தெளிக்க வும் இந்த நீரைப் பயன் படுத்துவராம். அபிஷேகத் தீர்த்த நீர் என்றும் கூறுவர்.

இவர்களுக்குச் சாதிக் குரு என்னும் தலைமைக் குரு கலசப்பாடி தேனாண்ட குரு உள்ளார்.

அவர் புனித நீரை மந்திரித்துத் தருகிறார். அவர் புனித நீரைத் தெளித்தால், சிறந்த புண்ணியம் என்கின்ற னர். ஜாகீர்தாரர்களும் இவரிடம், புனித நீரைத் தெளித்து ஆசிர்வதிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

தேனாண்ட குரு இக் கோயில் விழாவிற்கு முன் கூட்டியே வருவார். இவருக்கு நம்பிகள் உதவிகளைச் செய்கின்றனர்.

இவை தவிர, ஆலனூரில் பள்ளி கொண்ட ராமன் கோயிலும், கள்ளிப் பாறையில் ஆர்க்காட்டுராமன் கோயிலும் உள்ளன. இக்கோயில்களில் விழாவை ஊர் மக்களே செய்கின்றனர்.

விழாவின்போது, கோவிந்தா, 'கோவிந்தா' என்று உரக்கக் கூவி அழைக்கின்றனர்.

விஷ்ணு கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு சிவன் கோயிலும் இருக்கிறது. இக் கோயில் முழுவதும் சிதைந்து உள்ளது. அம்மன், காளி, பிள்ளையார் கற்சிலைகளும் இருக்கின்றன. இம் கோயில் சிவனுக்குப் பூசை வழிபாடு எதுவும் இல்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு பூசை வழிபாடு இருந்ததாம்; இப்போது இல்லை.

விஷ்ணு கோயில் விழாவின் போதும் இந்தச் சிவன் கோயிலுக்குப் பூசை செய்வதில்லையாம்,



# சின்ன திருப்பதித் திருவிழா

புரட்டாசி மாதம் முழுவதும் இங்குள்ள விஷ்ணு கோயில் இறைவனுக்குப் பூசை செய்வார்கள். சனிக்கிழமையில் சிறப்பான பூசை உண்டு. ஐந்தாம் சனிக்கிழமை இங்குத் தேர்த்திருவிழா நடத்துவார்கள். மலை மக்கள் தவிர நகர்ப் புற மக்களும் வந்து கலந்துகொள்வார்கள். 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடுவர்.

மலை மக்களும் ஏனைய மக்களும் வேண்டுதல்களை முடிக்கின்றனர்; மொட்டை அடித்துக் கொள்கிறார்கள்; பொங்கல் வைக்கிறார்கள்; காணிக்கைச் செலுத்துகிறார்கள்.

தேர் விழாவின்போது சிறிய கடைகள் கூடுகின்றன. வளையல் முதலியவைகளை இவ் விழாவின்போது மலை மக்கள் பெருமளவு வாங்கி மகிழ்கிறார்கள்.

## வன்னிக் குத்தல்

புரட்டாசி மாதம் ஐந்தாம் சனிக்கிழமை காலை முதலே தீபாராதனை செய்கிறார்கள். காலை 9 மணியளவில் வன்னிக் குத்தல் என்ற நிகழ்ச்சியை நடத்துகிறார்கள் இந்த நிகழ்ச்சியைக் காண மக்கள் திரளாகக் கூடுகிறார்கள்.

கோயிலுக்கு வடக்கே சற்றுத்தொலைவில் குலையுள்ள வாழை மரத்தை நடுகிறார்கள். அம்மரத்தோடு,

பலா, பால் மரக் கழிகள்,

அரச மரம், ஆல மரக் குச்சிகள்,

வெள்ளேரி மரக் (இலைகளோடு) குச்சிகளுடன் வாழை மரத்தோடு சேர்த்துக் கட்டுவார்கள். கோயிலிலிருந்து உற்சவமூர்த்தியை (விஷ்ணுவை) மேளத்தோடு வாழை மரம் கட்டியுள்ள இடத்திற்குக் கொண்டு வருவார்கள். பறை மேளத்தையும் அடிப்பார்கள்.

சடையக் கவுண்டன் ஜாகீர்தாரர் பட்டு வேட்டி, சிவப்புத் தலைப்பாகைக் கட்டிக்கொண்டு மேளம் முழங்க, உற்சவ மூர்த்திக்கு முன்பாக நடப்பார்; வாழை மரம் கட்டியுள்ள இடத்திற்கு அழைத்துவரப் படுகிறார்.

ஜாகீர்தாரரோடு அய்யர் (பிராமணர்) மந்திரங்களைக் கூறிக் கொண்டு வருகிறார்.

வாழை மரத்தின் அருகில் உட்கார வைத்து மூங்கில் குச்சியாலான வில்லையும் அம்பையும் கொடுக்கப்படும்; ஜாகீர்தாரர் அம்பை வில்லில் வைத்து வாழை மரத்தில் குத்துகிறார். மூன்று முறை அம்பைக் குத்தும்போது மேளம் முழங்கும்; மலையே அதிருமாம்! 'கோவிந்தா, 'கோவிந்தா' என்று மக்கள் முழக்கம் செய்வார்கள். இந்த நிகழ்ச்சியை முடித்ததும் உற்சவ மூர்த்தியோடு ஜாகீர் தாரர் கிழக்குப் பக்கமாக அழைத்துச் செல்லப்பட்டுக் கோயிலை அடைகிறார்.

ஜாகீர்தாரர் வாழை மரத்தை விட்டுச் சென்றதும் மக்கள் வாழை மரத்தின் பகுதிகளையும் குச்சிகளையும் எடுக்கப் போட்டிப் போடுகின்றனர். வன்னிக் குத்தும் போது விதைகள், தானியங்களை மக்கள் வீசி இறைக்கிறார்கள். அவற்றையும் மக்கள் ஓடி எடுக்கிறார்கள்.

அப்படி இறைப்பதால் அடுத்த விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று கூறுகிறார்கள்:

வன்னிகுத்திய வாழைமரத்தின் பகுதிகளைச் சமைத்து சாப்பிட்டால், கொண்டு சென்று வீட்டில் வைத்தால் நோய் தீரும்; பேய் பிசாசு வராது என்கிறார்கள். குச்சி களைக் கொண்டு சென்று அவரவர் நிலத்தில் நட்டால், காடு வளரும்; மலை பச்சையாய் இருக்கும் என்கிறார்கள்.

## திருமங்கை ஆழ்வார் கதை

வன்னிக்குத்தல் நிகழ்ச்சி முடிந்தவுடன் வந்திருக்கும் ஜாகீர்தாரர் கோயிலுக்குச் சென்று தீபாராதனை செய் கின்றார். பிறகு மேளத்தோடு ஜாகீர்தாரர் மூன்று முறை கோயிலைச் சுற்றி வருகிறார், ஜாகீர்தாரருக்குப் பின்னே உற்சவ மூர்த்தியைத் தூக்கி வருகின்றனர். ஒவ்வொரு முறையும் வேட்டு வெடிக்கின்றனர். மூன்றாவது முறை கோயிலின் மேற்குத் திசையில் கோயில் மேற்கு வாசலுக்கு எதிரில் ஜாகீர்தாரர் நிற்கிறார்.

இங்கு அய்யர், திருமங்கை ஆழ்வார் திருடனாக மாறிப் பெருமாளுக்குத் தொண்டு செய்த நிகழ்ச்சியைக் கூறு கிறார். அதற்கான பாசுரத்தையும் பாடுகிறார்.*

**கணி**யனிடம் திருமங்கை ஆழ்வார் சிலை இருக்கிறது. இச் சிலையை வேடன் சிலை என்று கூறுகிறார்கள். அதை ஒரு துணியால் மூடி இருக்கிறார்கள். அய்யர் மந்திரத்தையும் பாசுரத்தையும் சொல்லி முடித்த பிறகு கணியனிடம் இருக்கும் நகைகளை வாங்கி உற்சவ மூர்த்திமீது போட்டுத் தீபாராதனை செய்யப்படுகிறது. தீபாராதனை முடிந்ததும் ஜாகீர்தார், கணியனுக்கும் பூசாரிக்கும் வேட்டி பரிசளிக்கிறார் அவற்றை இவர்கள் ஜாகீர் காலில் விழுந்து வணங்கி வாங்கிக் கொள்வார்கள், திருமங்கை ஆழ்வார்

---

* 'வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்' எனத் தொடங்கும் பாசுரத்தையும்,
'வாலி மாவலத்து ஒருவனது' எனத் தொடங்கும் பாசுரத்தையும் பாடினார்.

சிலையை வைத்துள்ள கணியன், மேற்கு வாசல் வழியாகக் கோயிலுக்குள் செல்கிறார்.

இந் நிகழ்ச்சியைக் குறித்து இம்மக்களிடம் ஒரு கதை வழங்கி வருகிறது.

'ஆதியில் [பல ஆண்டுகளுக்கு முன்பு] ஒரு திருடன் இக் கோயிலில் சிலைகளைத் திருடிக்கொண்டு சென்று விட்டான். திருடனுக்குக் கண்கள் தெரியாமல் போயிற்று. கண்கள் குருடு ஆனதற்குக் காரணம் சிலை திருடியதுதான் என்று உணர்ந்து, சிலைகளைக் கொண்டு வந்து கோயிலில் வைத்து விட்டான். பிறகு கண்கள் பார்வை பெற்றதாம்.

இந்த நிகழ்ச்சியை விழாவில் சேர்த்துக் கொண்டதாக வும் கூறுகிறார்கள், சிலையை கொடுத்ததற்காகக் கணிய னுக்கு வேட்டியும், சிலை கிடைத்த பிறகு தண்டிக்கப்பட்ட பூசாரியின் மீது குற்றம் இல்லையெனவும் அறிந்து, அதற்குப் பரிகாரமாக அவருக்கு வேட்டியும் கொடுப் பதாகக் கூறுகிறார்கள்.

இந்தச் சடங்கு முடிந்த பிறகு, மேற்கு வாசலை விட்டுச் சாமியைக் கோயிலைச் சுற்றிக் கொண்டு சென்று உள்ளே வைத்து விடுகின்றனர்.

இந்த விழாவின்போது மக்கள் புதிய வேண்டுதல் களைச் செய்துகொள்வார்கள்.

## குழந்தைப் பேறும் வேண்டுதலும்

சின்ன திருப்பதி பெருமாளிடம் வேண்டிக் கொண் டால், வேண்டுதல் பயனளிக்கிறது என்று நம்புகிறார்கள்.

புரட்டாசிச் சனிக்கிழமை விழாவில் குழந்தை இல்லா தவர்கள் வேண்டிக் கொள்கிறார்கள். வேண்டுதலையும் முடிக்கிறார்கள்.*

கோயிலின்மேற்கு, மற்றும் வடக்குப்பகுதியில்குழந்தை வேண்டி வழிபடுவோர் ஒன்று கூடிப் பூசை செய்கின்றனர்.

மூன்று கல்லைக் கழுவிப் பொட்டும் பூவும் வைக்கிறார் கள். பொரி, பழம், வெற்றிலைப் பாக்கில் 5காசு முதல்25 காசு வரை வைத்துக் கற்பூரம் ஏற்றிக் கணவன்மனைவியர் விழுந்து வணங்குகிறார்கள். பிறகு ஒரு வெள்ளைத்துணி யில் ஒரு கல்லையும் காசையும் வைத்து, அருகில் உள்ள ஆலமரத்தில் கட்டித் தொங்கவிடுகிறார்கள். இதைஆணை [ஏணை] கட்டுதல் என்று கூறுகிறார்கள்.

இப்படி வேண்டிக் கொண்டவர்களுக்குக் குழந்தை பிறந்து விட்டால், பிறகுவந்து பொங்கல் வைக்கிறார்கள்.

## திருவிழாவில் தீட்டு

திருவிழா சமயத்தில் தீட்டு உண்டாகிவிட்டால்[சாவு, மாதவிடாய்] மலையாளிகள் கோயிலுக்குள்வருவதில்லை, பயப்படுகிறார்கள்.

உறவினர் குடும்பத்தில், ஊரில் சாவு ஏற்பட்டுவிட் டால், தங்கள் வேண்டுதலைக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் இருந்து முடித்துக் கொள்கிறார்கள்.

## திருவிழாவும் மேளக்காரர்களும்

கோயில் திருவிழாவுக்கு மேளம்,பறைமேளம்ஆகியவற் றைப் பயன்படுத்துவார்கள். இவர்கள் நகர்ப்புறத்தி

---

* 19. 10. 85 அன்று திருச்சி — பெரம்பலூர் வட்டம் நெய்க்குப்பை கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், குழந்தை வேண்டித் தன் கடனை முடித்தார்; தன் பெயர்சொல்ல மறுத்துவிட்டார்.

விருந்துதான் வருவார்கள்; விழா முடியும்வரை மலையில் தங்கியிருக்க வேண்டும். இவர்களுக்கு உணவும் கூலியும் கொடுப்பார்கள்.

மேளக்காரர்களில் பெரிய மேளக்காரர்களைத் 'தம்புருக்காரர்கள்' என்றும், சின்ன மேளக்காரர்களை 'விருதுகாரர்கள்' என்றும்குறிப்பிடுகின்றனர். இவர்களைத்தவிர, 'புள்ள குட்டி', 'அரசுவரி' என்பவர்களும் இருக்கிறார்கள். ஆக இவர்கள் ஒரு குழுவாகச் சுமார் 15 பேர்கள்* வருவர்.

இந்த 15 பேர்களுக்கும் ஜாகீர் காலத்தில் கோயில் வருமானத்தில் ஒரு பங்கு கொடுக்கப்பட்டது. முடியெடுக்கப்படும் காணிக்கைத் தொகையும் முடியும் கொடுப்பார்களாம். கோயில் வருமானம் என்பது முன்பு, வன்னிக்குத்தலுக்கு முன்பு சேர்ந்த வருமானத்தைக்கணக்கெடுத்து, அதில் ஒருபங்கும் கொடுக்கப்பட்டது; இப்போது நிறுத்தப்பட்டு உள்ளது.

### மேளக்காரர் காணிக்கை

புரட்டாசி மாதத்தில் மேளம் அடிக்கப் போகும்போது ஜாகீருக்கு விறகுக் கட்டு கொண்டு வந்து கொடுத்துத் தங்களின் வருகையைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ஜாகீர் அரிசி, பருப்பு கொடுப்பார். அவைகளைக்கொண்டு மேளக்காரர்கள் மலையில் சமைத்துச் சாப்பிடுவர் இப்படி மூன்று வாரம் செய்வர்.

நான்காவது சனிக்கிழமைக்கு முதல் நாள் வெள்ளிக்கிழமை, சில மண்பானைகளோடு ஜாகீரை வந்து சந்திக்

---

| | | | |
|---|---|---|---|
| * விருதுகாரர்கள் | 9பேர் | கூலி | ரூ. 35. |
| தம்புருக்காரர்கள் | 3பேர் | கூலி | ரூ. 35. |
| புள்ள குட்டி | ஒருவர் | கூலி | ரூ. 7. |
| அரசுவரி | 2பேர் | கூலி | ரூ. 7. |

கின்றனர். அப்போது, அரிசி, பருப்பு கொடுப்பார்;மேளக்காரர்கள் பெற்றுக் கொள்வர். அன்று மாலை ஜாகீரை ஊர் எல்லை வரைக்கும் மேளத்தோடு அழைத்துச் செல்வர். கோயிலுக்கு முன்பு சற்றுத் தொலைவில் மேளத்தோடு. கோயிலுக்கு அழைத்துச் செல்வர் இரவு கோயிலில் தங்குவர். அங்கு இவர்கள் சமைத்துச் சாப்பிடுவர்.

மறுநாள் நான்காவது சனிக்கிழமை அதிகாலையில் கொடியேற்றுவர். பூசை செய்துவிட்டு ஜாகீர்தாரரை வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டுச் செல்வர்.

ஐந்தாம் வெள்ளிக்கிழமை மேளத்தோடு சென்று ஜாகீர்தாரரைச் சந்திக்கின்றனர். அவரோடு அன்று மாலை, மலைக்கு (சின்ன திருப்பதி) வந்து சேர்கின்றனர். முன்பு கோயில் பகுதியில் ஜாகீருக்கு எனத் தனியான குடிசை அமைக்கப்பட்டு அங்குத் தங்குவார். முன்பு யாரும் அக் குடிசையில் செல்ல முடியாது.

மறுநாள் சனிக்கிழமை திருவிழா நிகழ்ச்சியின் போது மேளம் அடிக்கின்றனர்.

வன்னிக் குத்தலுக்குப் பிறகு தேர்! தேருக்கும் மேளம் அடிக்கிறார்கள். அன்று இரவு நிகழ்ச்சியில் ஒரு சிலசமயம் மட்டும் அடிக்கின்றனர்.

மறுநாள் கொடியை இறக்கித் தேரைப் பிரித்து விட்டு மேளக்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது; மலையிலிருந்து ஜாகீர்தாரரை அழைத்து வந்து வீட்டில் விட்டுச் செல்கின்றனர்.

## சின்ன திருப்பதி தேர்

வன்னிக் குத்தல் நிகழ்ச்சி முடிந்த பிறகு, தேர் தயாரிக்கிறார்கள். தேரின் சில முக்கிய பாகங்கள் ஜாகீர்தாரர் வீட்டிலிருந்து கொண்டு வரப்படுகிறது.

தேர் தயாரிக்க ஆரம்பிக்கும்போது தீபாராதனை காட்டுகிறார்கள். உற்சவ மூர்த்தியைக் கோயிலில்தீபாராதனை செய்து தேருக்குத் தூக்கி வருகின்றனர். அய்யர் சில மந்திரங்களைக் கூறுகிறார். அய்யர் உற்சவ மூர்த்தியைத் தேரில் வைத்த பிறகு, தேங்காய், பழத்தைஜாகீர் தாரரிடம் மூன்று முறை கொடுத்து, மூன்று முறை வாங்கிக் கொள்கிறார். இதற்குக் காரணத்தைச் சொல்ல மறுத்தனர்.

தேர் சுமார் 20 அடி உயரம் வரை இருக்கிறது. அய்யர் மந்திரம் கூறித் தேங்காய் உடைத்து தீபாராதனை செய்த பிறகே தேரை இழுக்கின்றனர். தேர் சங்கிலியை ஜாகீரே முதலில் இழுத்துவிடுகிறார்* அது சமயம் மூன்று வேட்டுகள் ஒன்றாக வெடிக்கச் செய்கின்றனர்

தேர் புறப்படும்போது விதைகளையும் தானியங்களையும் வீசுகின்றனர். காசுகளையும் இறைக்கின்றனர். விதை, தானியங்களைக்கொண்டு சென்று விதைகளோடு சேர்த்து விதைத்தால் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

தேர் மூன்று முறை கோயிலைச் சுற்றி வருகிறது. மூன்றாம் முறை மேற்குப் பக்கம் வாசலுக்கு எதிரில் தேர் வந்த பிறகு உற்சவமூர்த்தியைக் கொண்டு சென்றுதீபாராதனை காட்டி வைக்கின்றனர்.

மூன்று முறையும் ஜாகீர்தாரர் தேருக்கு முன்பே போகிறார்; சாமியை வைத்த பிறகு அவர் தனிக் குடிசைக்குச் சென்று உணவை முடிக்கிறார்.

தேர் விழாவின்போது கோயிலுக்குக்காளைமாடுகளை விடுகின்றனர்; பிறகு இம்மாடுகள்ஜாகீர் தாரர்பொறுப்பில் இருக்கும்; சில சமயம் ஏலம் விடப்பட்டு, ஒரு தொகை கொடுத்து அதை ஜாகீர் பெற்றுக் கொள்கிறாராம்.

---

* குறும்பக் கவுண்டன் ஜாகீர், பூட்டை விழாவில்முதலில் தேர் இழுக்கிறார்.

## மற்ற கோயில்கள்

சின்ன திருப்பதியில் விஷ்ணு கோயிலுக்கு வடக்கில் அலர்மேலு மங்கை கோயிலும் செண்டுராயர் பெருமாள் எனும் கோயிலும் இருக்கின்றன.

இக் கோயில்கள் காட்டுத் தழைகளால் ஆனவை. இக் கோயில் பூசாரி வள்ளுவர்

*19. 10. 85* இல் முனிசாமிபூசாரியார் தன்னை அய்யர் என்று கூறிக் கொண்டார்; மது அருந்தி இருந்தார்; புரட்டாசி மாதத்தில் தன் ஊரிலிருந்து (அகரம் நெடு மானூர்) வந்து 10 நாள் இம்மலையில் தங்குகிறார். இக் கோயிலைக் கவனித்துக் கொள்ளச் சடையக் கவுண்டன் ஜாகீர் தாரர் 10 நாட்களுக்கு 16 படி அரிசி, 16 தேங்காய், எண்ணெய் (படி அரிசி எண்ணெய் என்கின்றனர்) கொடுக்கிறார்.

இக் கோயில் வருமானத்தை இவர் எடுத்துக் கொள்கிறார். இக் கோயிலுக்குச் சுமார் 4 ஏக்கர் நிலம் இருப்பதாகவும் கூறினார். இவர் 33 ஆண்டுகளாக விழா நாளில் மட்டும் இக் கோயிலில் வந்து பூசாரி பணி செய்துள்ளாராம்.

இவர் மூதாதையருக்கு இக் கோயில் பணிக்காக உரிமை கொடுக்கப்பட்டதாம். இந்த உரிமைக்கான பட்டயமும் இருப்பதாகக் கூறினார். அப்பட்டயத்தில்;

> 'பெரிய திருப்பதி பாளையத்தார். திருப்பதி தேவஸ் தானம் மடாதிபதியாகிய 8 வீட்டில் ஒருவர் கொடி யறுத்த கோமள நல்லூர் அய்யர் சின்ன திருப்பதி தேவஸ்தானம் அலமேலு மங்காபுரம் பரம்பரை யாகச் சேவிக்கப் பட்டார் முடி காணிக்கையாக, கம்பத்து காணிக்கையாக.........'

என்று தொடர்வதாக முனிசாமி வள்ளுவர் (19. 10. 85) கூறினார்.

அலர்மேலு மங்கைக் கோயிலுக்குச் சற்று (20மீ.) தொலைவில் பூ மரங்கள் நிறைந்த பகுதியில் **சென்டுராயன் பெருமாள்** கோயில் இருக்கிறது இதுவும் தழைகளால் ஆன குடிசைக் கோயிலே இங்கு விஷ்ணு சிலையும், தாயார் சிலையும் உள்ளன. இதனை இளைய பெருமாள் (இலக்குவன்) என்றும் கூறுகின்றனர்.

இக் கோயில் பூசாரி, **அருந்ததியார்** வகுப்பைச் சேர்ந்தவர் * இவருக்கு ஜாகீர்தாரர் படி அரிசியும் எண்ணெயும் கொடுக்கிறார். 10 நாள் தங்கி இம் மலை விழா முடிந்த பிறகு ஊர் திரும்புகிறார்.

இக் கோயில் பகுதியில் தான் முன்பு பொங்கல் வைத்து. வழிபாடு செய்து விஷ்ணு கோயிலுக்குக் கொண்டு செல்வார்களாம். இப்போது இல்லை.

இக் கோயில் பூசாரி, விஷ்ணு கோயிலுக்குள் செல்ல அனுமதி இல்லை. கடைசி நாளில் கோயிலுக்கு முன்பு வழிபாடு செய்துவருகிறார்.

## மஞ்சள் நீர் ஆடுதல்

ஐந்தாவது சனிக் கிழமையன்று, தேர் விழா முடிந்த பிறகு. அன்று இரவு மஞ்சள் நீர் ஆடுதல் நிகழ்ச்சி நடக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு மலையாளிகள் குடும்பத்தோடு வருகின்றனர். உற்சவ மூர்த்தியை ஊஞ்சலில் வைத்து ஆட்டுகின்றனர். 'மலையாள' ஆண்களும் பெண்களும் பாட்டுப் பாடுகின்றனர். பாட்டுப்பாடுதலில் வேண்டுதலும் உண்டு. வேண்டுதல்காரர்கள் பாட்டில் நெஞ்சில் உள்ளதைத் தெரிவிப்பதும் உண்டு சிலர் நடு இரவுக்கு மேலும் பாடுகின்றனர் பின்னர் மஞ்சள் கலந்த நீரைச் சாமிமீதும் இருப்பவர்கள் மீதும் தெளிக்கிறார்கள். நிகழ்ச்சி காலை 4 அல்லது 5மணிக்குப் பிறகுதான் முடிகிறது

* கல்லா நத்தம் ஊரைச் சேர்ந்த அருந்ததியாரிடமிருந்து இக்கோயில் பணியை விலைக்கு வாங்கிக்கொண்டு, மூன்று தலை முறைகளாகத் **தலைவாசலுக்கு** அருகில் இருக்கும் **புத்தூர்** கிராமத்தார் தற்போது பூசாரியாய் இருக்கிறார்.

# மலையில் பிற கோயில்கள்

## கற்சிலைகள்

சேராப்பட்டியிலிருந்து **களாக்காடு** பாதையில் மேற்கே சுமார் 1 கி. மீ. தொலைவில் சிதைந்த ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இங்குச் சிவலிங்கம், நந்தி, துர்க்கையுடன் உடைந்த இரண்டு பெண் தெய்வச் சிலைகளும் உள்ளன.

இக் கோயில் தெய்வத்தை ஆண்டி என்றும், ஆண்டிக் கோயில் என்றும் குறிப்பிடுகின்றனர். இங்குள்ள சிலைகள் சோழர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப் பகுதி மக்கள் இக் கோயிலுக்குப் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர்; பூசாரியும் இருக்கிறார்.

இக் கோயிலில் இருந்த சிலையை மலைப் பாதை போடும் ஊழியரில் ஒருவர் எடுத்துச் சென்று விட்டாராம். **ஏங்கப்பனூர்** கிராமத்தைச் சேர்ந்த வண்ணாத்திப் பெண்ணுக்கு **மருவு** வந்து சிலை திருடியவனைப் பற்றிக் கூற, அவனிடமிருந்து சிலை கைப்பற்றப் பட்டதாம்.

**மேல்பதிகத்**தில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இக் கோயிலுக்கு 4 நம்பியார்கள் (பூசாரிகள்) இருக்கிறார்கள் இக் கோயில் மலையாளிக்குச் சிறப்பானதாகக் கருதுவார்கள். சடையக் கவுண்டன் ஜாகீர்தாரர்கள் இக் கோயிலுக்கு உதவிகளைச் செய்து வருவார்கள். ஊர் மக்கள் பூசைக்கு

உதவி செய்கிறார்கள். தினமும் விளக்கேற்றி வைக்கப் படும் கோயிலாக இது உள்ளது.

நம்பியான் பூசை செய்யும்போது வாயைக் கட்டிக் கொண்டுதான் செய்கிறார். விழா, முக்கியமான பூசைகள் ஆகிய நாட்களில் மட்டும் நம்பியான் மாமிசம் (அசைவ உணவு) உண்பதில்லை.

## சில கடவுள்கள்

ஊர்தோறும் தனித் தனி ஊர்த் தெய்வங்களுக்குக் கோயில்கள் உள்ளன. இவை திறந்த வெளியில் உள்ளன. ஊர்த் தெய்வங்களுக்கு ஊர் மக்கள் எப்போது வேண்டு மானாலும் பூசையும் வழிபாடும் செய்கிறார்கள். இத் தெய்வங்களுக்குப் பூசாரி என்பவர் தனியாக இருக்கிறார். இவர் மலையாளியே! இந்தப் பூசாரி ஊர் விழாவில் கலந்து கொள்ளும்போது அவர் நிலத்து வேலைகளை ஊர்க்காரர் கள் பார்த்துக் கொள்வார்கள்.

பிள்ளையார், தெத்துக் கறுப்பு, தனித்துக் கறுப்பு, காணா முனியப்பன், வேடியப்பன், கோம்பய்யன், கறுப் பன், உண்டகல் கறுப்பு, வீரன் என்னும் ஆண் தெய்வங் களை வணங்குகிறார்கள்.

மாரியம்மன், துரோபதி, பாஞ்சாலி, தொம்பன் கறுப்பு, சாமக்கன்னி, கங்கை அம்மன், காவேரி அம்மன், சோலையம்மன், உண்ணாமலை அம்மன் என்னும் பெண் தெய்வங்களையும் வழிபடுகிறார்கள்.

மாரியம்மன் மட்டும் எல்லா ஊர்களிலும் உள்ள பொதுவான தெய்வம். இவ்வம்மனுக்குத் தனியான கோயில் உள்ளது. இக் கோயில் ஊருக்குச் சற்றுத் தொலை வில் அடர்த்தியான மரங்களின் கீழ் அமைந்துள்ளது. மக்கள் இக் கோயிலுக்கு வரும்போது சுத்தமாகவும் பயத் தோடும் வருகிறார்கள். சற்றுத் தூரத்தில் இருந்தே வணங்குகிறார்கள்.

## கல்லெல்லாம் கடவுள்கள்

மாரியம்மன் கோயிலுக்கு முன்பு இயற்கையான கற்களைப் புதைத்தும் நட்டும் வைத்துள்ளனர். இக்கற்கள் ஒழுங்கற்றவையாகவும் கூம்பு போன்றும், சதுரமாகவும், வட்டமானதாகவும் உள்ளன.

கூம்பாக உள்ள கல்லை 'விஷ்ணு' என்றும், வட்டமாக உள்ள கல்லைச் 'சிவன்' என்றும், சதுரமாக உள்ள கல்லை 'அம்மன்' (சக்தி) என்றும் கூறுகிறார்கள். இதற்கு ஏற்றாற் போலக் கூம்புக் கல்லுக்கு நாமத்தையும் வட்டமான கல்லுக்கு விபூதிப் பட்டையையும், சதுரமான கல்லுக்கு குங்குமப் பொட்டையும் வைத்துள்ளனர். மேலும் சிவப்பு, சந்தனம், மஞ்சள் ஆகியவற்றாலும் பொட்டு வைக்கப்படுகிறது.

இத் தெய்வங்களுக்குச் சித்திரை, ஆடி, தை ஆகிய மாதங்களில் விழா எடுக்கின்றனர், காட்டு வேலைகள் (அறுவடை, விதைப்பு) இல்லாத மாதங்களில்தான் விழாவை நடத்துகின்றனர்.

திருவிழாவுக்கு முன்பு ஊர்க்கோயில் பகுதியைச்சுத்தம் செய்கின்றனர். தீட்டு உடையவர்களை நீக்கி வைக்கின்றனர். விழா தொடக்கதை மூப்பன், நாட்டான் ஆகியோருக்குத் தெரியப்படுத்துகின்றனர். இவர்கள்வந்து தான் விழாவுக்குத் தலைமை வகிக்கின்றனர்.

விழா தொடக்கமாக, சக்தியை அழைக்கின்றனர். கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள மலை, அல்லது பெரிய மரத்தின் கீழே, இயற்கையான கற்களை நட்டுப் பூசை செய்கிறார்கள். ஒரு பெரிய காட்டு இலையில்பொரி கடலை, தேங்காய், பழம், பூ போன்ற பல பொருள்களை வைத்துப் படைக்கின்றனர். இப் பூசையைச் 'சக்தியை அழைத்தல்' என்றும், 'பச்சைப் பரப்புதல்' என்றும் கூறுகிறார்கள்.

**'மருவு'—சாமியாடி**

பச்சைப் பரப்புதலின்போது நடத்தப்படும் பூசையில் பூசாரிக்காவது, கூடி இருப்பவர்களில் யாருக்காவது மருவு வந்தால், இலையில் இருப்பவற்றை எல்லாம் எடுத்து ஒரு கூடையில் வைத்து, மருவு வந்தவர் தலையில் வைத்துக் கோயிலுக்கு மேளத்துடன் அழைத்து வருகின்றனர். கூடையைத் தலையில் வைக்கும்போது 'கோவிந்தா' என்று குரல் எழுப்புகின்றனர்.

மருவு வந்தவரைச் சக்தியாகக் கருதுகின்றனர்.

மருவு வந்தவர் கோயிலுக்கு வந்ததும் கூடையை இறக்கிவிட்டு, மழை, விளைச்சல், நோய் பற்றிக் கேள்விகள் கேட்க, மருவு வந்தவர் சொல்லும் பதிலைச் சக்தியே சொல்லுவதாக ஏற்றுக் கொள்கின்றார்கள்.

**தற்காலிகமான கோயில்** காட்டுக் கழிகளை நட்டு, காட்டுத் தழைகளை மேலே பரப்புகிறார்கள். வேப்பிலை, மாவிலையைப் பந்தலுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

இத் திருவிழாவின்போது கரியராமன், சோலையம்மன் உண்ணாமலையம்மன் என்னும் தெய்வங்களுக்குத் தனித் தனி இருப்பிடம் அமைத்துப் பூசை செய்கிறார்கள்.

ஊர்த் தெய்வ வழிபாட்டின்போது ஊர் மக்கள் கலந்து கொள்கிறார்கள்; பலியிடுகிறார்கள். பலி இல்லாத பூசையைஎந்தத் தெய்வமும் ஏற்றுக் கொள்வதில்லையாம்.

கரியராமன் தெய்வத்திற்குப் பக்கத்தில் ஒரு குச்சியை நட்டு, அதில் வளையல்களைப் போடுகிறார்கள். கரியராமன், மாரியம்மன் தெய்வங்களுக்கு மட்டும் சிலைகள் உள்ளன. பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்திருந்து விழாவின்போது மட்டும் எடுத்துப் பூசை செய்கிறார்கள்.

பெரும்பாலும் மாரியம்மனை மண் உருவச் சிலையாக வைத்து வழிபடுகின்றனர். மாரியம்மனுக்கு வெள்ளிக்

இழமை நாளில் மட்டும் விழா எடுக்கிறார்கள். விழாவின் போது மாரியம்மனுக்குக் கரகம் எடுக்கிறார்கள்.

**கரகம்**

கரகம்[1] மண்ணால் செய்யப்பட்டது. இதில்பெண்முகம் (மாரியம்மன்) ஏழும் சூலம்ஏழும்பதியும்படி உருவம்செய்து பயன்படுத்துகிறார்கள்.[2]



விழா நாளன்று, புனித (ஆற்று நீர்) நீரில் கரகத்தைச் சுத்தம் செய்து, நீரை நிரப்பிப் பூ மாலையால் அழகுப்படுத்திப் பொட்டு வைத்துப் பூசை செய்கின்றனர். அழகுபடுத்துவதைக் **'கரகம் கட்டுதல்'** என்று கூறுகிறார்கள் பூசாரிக்கு மருவு வந்தவுடன் கரகத்தை எடுத்து அவர் தலையில் வைத்துப் பம்பை, உடுக்கை அடித்துக் கொண்டு கோயிலுக்கு வருகின்றனர். கோயிலில் கரகத்தை இறக்கிப் பூசை முடித்தவுடன் மக்கள் ஊர் திரும்புகின்றனர்.

1 12 6-85 தும்பராம்பட்டு மாரியம்மன் கோயிலில் வைக்கப்பட்டிருந்த கரகம். [படம்]

2 குடத்தில் [கரகத்தில்] உள்ள 7 முகங்களைக் கன்னித் தெய்வங்கள் என்று கூறுகின்றனர்.

அன்று இரவு கூத்து வைக்கின்றனர். கூத்து, பாஞ்சாலி வரலாறு பற்றியதாக இருக்கிறது.

**காராளர்**

கரிய ராமனுக்குச் செய்யும் பூசை காராளவமிசத்தினர் கரியராமனுக்குச் செய்யும்பூசை இது சற்றுவித்தியாசமான தாக இருக்கிறது.

காராளன் என்பது ஜாகிர்தாரர்களை மட்டும் குறிப்ப தாக உள்ளது.

இவர்கள் பூசை, விழா செய்ய இருக்கும் நாளைக் கங்காணி மூலம், நாட்டான் மூலம் ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றனர்.

பூசை, விழா அன்று கோயில்முழுவதும் சுத்தம்செய்யப் படுகிறது. கோயிலுக்கு முன்பு சற்றுத் தொலைவில்விபூதி அல்லது சாம்பலினால் ஒரு கோடு போடுகிறார்கள் கோடு போடுதலை **எல்லைக் கட்டுதல்** என்று கூறுகிறார்கள்.

இந்தக் கோட்டைப் பார்த்து, அதைத் தாண்டி யாரும் வரமாட்டார்கள்.

தோட்டி, பறையன், காராளன் தவிரவேறு சாதியினர், முகமதியர் ஆகியோர் பூசையைப்பார்க்க அனுமதியில்லை. கோட்டைத் தாண்டியும் வரக் கூடாது.

கரியராமன் மிகவும்கோபமுள்ளதெய்வமாம். அவரிடம் மிகவும் சுத்தமாகவும் பயபக்தியுடனும் செல்லவேண்டும். அவருக்கு வேண்டியபூசையைஒழுங்காகச்செய்யவேண்டும்; ஏதேனும் தவறு உண்டாகிவிட்டால் அவருடைய கோபத் திற்கு ஆளாக நேரிடும்என்றுயாரையும்அனுமதிப்பதில்லை என்று காரணம் கூறுகின்றனர்.

திருவிழாவிற்கு முன்பு மலையமக்கள் தவிர எந்தஇனத் தாரும் அனுமதிக்காமல்இருந்துஇப்போது அனுமதிக்கிறார் களாம். சின்ன திருப்பதி விழாவிலும சில ஆண்டுகளாகத் தான் ஏனையோர் கலந்து கொள்கிறார்கள் என்பதுகுறிப் பிடத்தக்கது.

# பொங்கல் திருவிழா

கல்வராயன் மலை மக்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடுவார்கள்.[1] மாட்டுப் பொங்கல் அன்று பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். பட்டி விழா என்று அதைக் குறிப்பிடுவார்கள்.

## போகி விழா

போகி விழா, பொங்கலுக்கு முதல்நாள் என்றாலும் மூன்று நாட்களுக்கு முன்பே இவர்களுக்கு வந்துவிடுமாம். போகியன்று தங்கள் குலதெய்வத்திற்குப் பூசைசெய்வார்கள். அன்று இறந்தவர்கள் நினைவாக, சுடலைக்குச் (சுடுகாடு) சென்று, தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றி வழிபாடு செய்வார்கள். பொங்கல் வரை சுடலைக் காட்டில் விளக்கேற்றி வைப்பார்கள்.

## பொங்கல்

பொங்கல் (பெரும் பொங்கல்) அன்றைக்கு வீடு சுத்தம் செய்து கோலம் போடுவார்கள். சூரியனை நோக்கித் தெருவில் பொங்கல் வைப்பார்கள். மாலை ஆறு மணிக்கு மேலும் படைப்பார்கள்

இந்தப் பொங்கலை 'வாசப் பொங்கல் என்று கூறுவர்.'

---

[1], 15-1-66 வஞ்சிக் குழி. உதவி: இராசன்; விழுப்புரம் கலைக்கல்லூரி

## மாட்டுப் பொங்கல்

மாட்டுப் பொங்கல் அன்று தென்னை மரத்திற்கு மாவிலைகளைக் கொண்டு தோரணம் கட்டுவர். இதனைக் காப்பு கட்டுதல்' என்பார்கள். இக் காப்பு—ஊர், மரங்கள் மீது உள்ள பீடை கழிக்கக் கட்டப்படுவதாம். மாவிலைத் தோரணம் வீட்டின் முன்பும் கட்டுவார்கள். வீட்டைச் சாணம் கொண்டு மெழுகிச் சுத்தப்படுத்துவர்.

## பொங்கல் பானை

மாட்டுப் பொங்கல் அன்று நண்பகலுக்கு மேல் புதுப் பானையில் நெல் அரிசி, தினை அரிசி போட்டுத் தண்ணீர் ஊற்றிக், காட்டுத் தழையால் சிம்மாடு, என்னும் சும்மாடு செய்து தலையில் வைத்து அதன்மீதுபொங்கல் பானையை வைத்துக் கொள்வார்கள்.

கணவனும் மனைவியும் அதை வீட்டுக்குள்ளிருந்து வெளியே கொண்டுவந்தாலும்,கணவன் தான் மனைவியின் தலையில் பொங்கல் பானையைத் தூக்கி வைப்பான். பொங்கல் பானையில் ஊது வத்தியைக் கொளுத்தி வைப்பார்கள். பானைக்கு நாமம் கண்டிப்பாகப்போடுவார்கள்.

ஒரு வீட்டிலிருந்து பொங்கல் பானையை உள்ளிருந்து கொண்டு வரும் வரை வீட்டின் முன் பறை மேளம் அடிக்கிறார்கள். மீண்டும் அடுத்த வீடு இரண்டாவது வீட்டிலிருந்து பொங்கல் பானை வரும் வரை மேளம் அடிக்கிறார்கள். இப்படி அந்தத் தெரு முழுவதும் உள்ள வீடுகளிலிருந்து பொங்கல் பானை வெளியில் வந்து சேர்ந்த பிறகு கூட்டமாகச் செல்கிறார்கள்.

பொங்கல் பானையோடு தண்ணீர் உள்ள மற்றொரு குடமும் எடுத்துச் செல்கிறார்கள்.

பொங்கல் பானைக்கு மஞ்சள். பூ முதலியனவும் கட்டுகிறார்கள்.

ஒவ்வொரு வீட்டின் முன்பு மேளம் அடித்ததற்கு வீட்டுக்காரர் ஒரு ரூபாய் காணிக்கைக் கொடுக்கிறார்.

ஊர் முழுவதும் பொங்கல் பானை சேர்ந்த பிறகு ஊருக்குவெளியேசற்று தூரத்தில் மாடுகளை அடைத்துள்ள வயலுக்குச் செல்கிறார்கள். இந்த இடத்தைப் 'பொங்கல் பட்டி' அல்லது 'மாட்டுப் பட்டி' என்று கூறுகின்றனர். இந்தப் பொதுவான பட்டியில் ஊர் மாடுகள் [கன்றும் சேர்த்து] முழுவதையும் அடைக்கின்றனர்.

இதற்கு, மூன்று நாட்களுக்கு முன்பே பட்டிஅமைக்கப்பட்டு, மாடுகளை அடைத்துப் பழக்குவார்களாம்.

இரவில் பட்டியைச் சுற்றி மாட்டுக்கு உரியவர்கள் படுத்துக் கொள்வார்கள்.

ஊரிலிருந்து பொங்கல் பானைகள் வந்து சேர்ந்ததும் பட்டிக்கு முன்பாக (பட்டியைச் சுற்றி)ப் பொங்கல் வைக்கிறார்கள்.

## பொங்கல் கும்மி

பொங்கல் அடுப்பை ஆண்கள்தான் பார்த்துக் கொள்கிறார்கள்.

பெண்கள் கூட்டமாக வட்டமாய் நின்று கும்மி அடித்துப் பாடுகிறார்கள். இந்தக் கும்மியைப் **பொங்கல் கும்மி** என்று கூறுகிறார்கள். பொங்கல் கும்மியின் போது அந்த ஊரில் உள்ள எல்லா [வயது பார்க்காமல்] வயதுப் பெண்களும் சேர்ந்து கொள்கிறார்கள். பெண்கள் தங்களைப் பலவாறு அழகு படுத்திக் கொள்வார்கள்.

கார்த்திகைத் தீப விழா அன்று ஆண்கள் வட்டமாக நின்று கும்மி அடித்துப் பாடுவார்கள். அப்போது அவர்கள் தங்கள் ஊர்ப் பெண்களைப்பலவாறு கிண்டல்செய்துபாடுவார்கள். பொங்கலன்று பெண்கள் பாடும் கும்மிப் பாட்டில் ஆண்களைக்கிண்டல் செய்து பாடிப்பழியைத்தீர்த்துக் கொள்வார்கள்.

இந்தப் பாட்டில் பெண்கள் தங்கள் வேதனை, வாழ்க்கைத் துன்பம், வருத்தம், குடும்பநிலை, தங்களைப் (பெண்கள்) பற்றிய நிலை, ஆண்கள் செய்யும் கொடுமை, ஜாகீர் பற்றியும் பொருள் சேரப் பாடுவார்கள். காதுகொடுத்துக் கேட்க முடியாத வகைச்சொற்களும் இக் கும்மிப் பாட்டில் இடம் பெறுகின்றன. இப்படிப் பாடப்படுவதை ஊர் மக்கள் ஆர்வத்தோடு கேட்பார்கள்.

## பொங்கல் அடுப்பு

பொங்கல் அடுப்பு மூன்று கற்கள் வைத்து அமைக்கப் படுகிறது. பொங்கல் வைப்பதற்கு முன்பு, அடுப்பில் பானையை வைத்துத் தீபாராதனை காட்டி நெருப்பை உண்டாக்குகிறார்கள்.

அடுப்பு எரிவதற்கு வாயினால் ஊதுவது இல்லை. விசிறி கொண்டு நெருப்பை எரியச்செய்கிறார்கள். ஊதுவதால் வாய்எச்சில் அடுப்பில்பட்டுவிடும்; இது தீட்டுஎன்றும் கூறுகிறார்கள். எச்சில் சாமிக்கு ஆகாதாம்.

## பொங்கல் படையல்

பொங்கல் வைப்பவர்கள் தங்கள் பொங்கலில் இருந்து ஒரு கரண்டி சோற்றைக் கொடுக்கிறார்கள். இந்தச் சோற்றை எல்லாம் சேர்த்துப் பட்டிக்கு முன்பு பெரிய வாழை இலையில் கொண்டு வந்து சேர்ப்பார்கள். இப்படி ஒவ்வொருவரிடமிருந்து பெறப்பட்ட பொங்கல் சேர்த்த படையலை, 'ஊர்ப் பொதுப்படையல்' அல்லது 'ஊர்ப் பொங்கல் இலை' என்று கூறுகிறார்கள். இந்தப் படையலில் பால், நெய் ஊற்றுகிறார்கள். பொங்கல் பானையில் பால் ஊற்றுவது இல்லை.

பால் பொங்கி அடுப்பிலும் தரையிலும் படும். இது தீட்டு என்றும் பாவம் என்றும் பானையில் பால் ஊற்றுவதில்லை.

பட்டிக்கு வைக்கும் ஊர்ப் பொதுப் படையல் மூலம் மாட்டுக்குத் திருஷ்டி கழியும்; மாடுகள் வளரும் என்று கூறுகிறார்கள்.

பொங்கல் படையல் வைக்குமிடத்தில் மூங்கில் கிளை களை நட்டுக் கிளைகளில் தேங்காய் நாருக்கு வண்ணம் தீட்டிக் குஞ்சம் போல் கட்டி அழகுபடுத்துவார்கள்.

பொங்கல் வைக்கும்போது பட்டாசு, வாணவெடிகள் வெடிக்கிறார்கள்.

பொங்கல் படையலை (சோற்றை)ப் பல்லயம் என்றும் கூறுவார்கள். படைப்பதற்கு முன்பு எல்லோரும்கூடிநின்று 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கூவி வணங்குவார்கள்.

படைத்த பிறகு சுண்ணாம்பு மஞ்சள்கலந்த நீரைப் பட்டிக்குள் இருக்கும் மாடுகளின் மீது தெளிப்பார்கள். அப்போது நான்கு பக்கங்களிலும் பறை மேளம் அடிப் பார்கள். மூன்று முறை பட்டியைச் சுற்றி வந்து மாடு களுக்கு நீரைத் தெளிப்பார்கள்

படையல் இலை வைக்கும் இடத்தைச் சாணம் கொண்டு வீடுகள் சுத்தம் செய்து கோலம் போட்டுச் சுத்தம் செய்வர். சாணி கொண்டு பிள்ளையார் செய்து நிறைய பண்ணைப் பூக்களையும் சுக்கான் காயையும் வைத்து அதன்மீது மல்லிகைப் பூவை வைத்துப் படைப் பார்கள்.

பொங்கலுக்கு உப்பு, காரம்சேர்ப்பதில்லை. பொங்கல் இலையைச் சுற்றிப் பூசணிக் காயைத் துண்டாக்கி நிறைய வைத்திருப்பார்கள்.

படைத்த பிறகு ஒரு மாட்டுக் கன்றின் காதை அறுத்து விடுவார்கள். காளைக் கன்றுக்கு அறுப்பதில்லை. படையல் சோற்றை மாட்டுக்கும் கன்றுக்கும் தின்னக் கொடுப்பார்கள்.

## மாடு முடுக்குதல்

படையல் முடிந்ததும்மாட்டுக்குப் பொங்கல்கொடுத்த பிறகு மேளம் அடித்து மாட்டை விரட்டுவார்கள், மாடு விரட்டுதலை 'மாடு முடுக்குதல்' என்று கூறுவார்கள்.

மாடு விரட்டுதல் நல்ல நேரமாய் இருந்தால் விரட்டச் செய்வார்கள். இல்லாவிட்டால் மறுநாளைக்கு ஒத்தி வைப்பார்கள். மறுநாள் மாடு விரட்டும்போது பலி யிட்டுப் படைத்த பிறகே விரட்டுவார்கள்.

## வீடு திரும்பல்

பொங்கல் படைத்து மாடு விரட்டிய பிறகு, பொங்கல் வைத்தவர் அனைவரும் ஒன்று கூடுவார்கள். பொங்கல் பானையுள்ள கூடையுடன் வீடு செல்வர்கள். இதனை வீடு திரும்பல் என்பார்கள்.

வீடு திரும்பலில், கூடி ஒன்றாகவே செல்வார்கள். வீடு திரும்புதல் இரவு சுமார் 11 மணி ஆகும். மேளம் அடித்துக் கொண்டு பொங்கல் பானையுடன் வீடு சேர் வார்கள்.

மாடு இல்லாதவர்கள் பொங்கல் வைப்பதில்லை. அதே சமயம் மாடு அதிகம் வைத்திருப்பவர் அரிசி கொடுத்துப் பொங்கல் வைக்கச் செய்வதும் உண்டு.

பொங்கல் வைத்தவர் பொங்கல் சோற்றை மாடு இல் லாதவர்களுக்கும் பொங்கல் வைக்காதவர்களுக்கும் கொடுப்பார்கள். பொரும்பான்மையோர் பொங்கல் சோற்றைச் சாப்பிடுவது இல்லை. பொங்கல் சாப்பாடு

---

1 நகர், கிராமப் பகுதிகளில் காது குத்தல், பொங்கல் வைத்தலில் மேளம் அடித்துச் சென்றும், பொங்கல் முடிந்ததும் அங்கிருந்து மேளம் அடித்துக் கொண்டு வீடு வரை வருவதும் வழக்கமாக இருக்கிறது.

திகழும்போது சாப்பிட்ட இலையைச் சாப்பிட்டவர் எடுக்கக் கூடாது என்று தடுப்பார்கள். சாப்பாடு போட்டவர்களே சாப்பிட்டவர் இலையை எடுப்பார்கள். இதனால் புண்ணியம் உண்டாகும் என்கிறார்கள்.

## வேறு சில குறிப்புகள்

மலைவாழ் மக்கள் பொங்கல் பானையைத் தரைக்குச் சென்று வாங்கி வருவார்கள். சில சமயம் காட்டில் வந்து விற்பனை செய்வதும் உண்டாம்.

நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பொங்கல் அடுப்பே முதலில் பற்ற வைக்கப்படுகிறது. பிறகே ஊரினர் அடுப்பைப் பற்ற வைப்பார்கள்.

படைத்த படையல் சோற்றிலிருந்து எல்லா பொங்கல் பானைக்கும் கொஞ்சம் கொஞ்சம் போடுகிறார்கள்.

பொங்கல் அன்று மருமகன், மருமகள் ஆகியோருக்கு விருந்தும் பரிசும் கொடுப்பார்கள்; புது ஆடையையும் கொடுப்பார்கள்.

இரவு சாப்பிட்ட பிறகு ஊரினர் கூத்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வார்கள். இரவு முழுதும் கூத்தும் பாட்டும் நிகழ்த்தி மகிழ்வார்கள்.

அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி

# திருமணமும் வாழ்க்கையும்

கல்வராயன் மலை மக்களின் திருமண முறைகளுக்கும் (சடங்குகள்) ஏனைய பழங்குடி மக்களின் திருமண முறைக்கும் நிறைய மாறுபாடுகள் உள்ளன. அதே சமயம் இவர்கள் தாங்கள் கூறிக் கொள்ளும் இனத்தாரின் திருமண முறைக்கும் சில தொடர்புகள் இருப்பதை அறிய முடிகிறது.

## பெண்ணின் விருப்பம்

கல்வராயன் மக்கள், திருமணத்திற்குப் பெண்ணின் விருப்பத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர் ஒரு பெண்ணுக்கு அவள் விரும்பும் ஆணைத்தான் திருமணம் செய்து வைக்கின்றனர் பெண்ணின் விருப்பம் இல்லாமல் எந்தத் திருமணமும் நிச்சயிக்கப்படவில்லை; ஆணுக்கும் அப்படியே.

ஒரு பெண், ஒருவனை மணக்கச் சம்மதம் இல்லையென்றால், நிச்சயமாகத் திருமணம் நடக்காது. திருமண ஏற்பாட்டின்போதே பெண்ணின் விருப்பத்தை நன்கு அறிந்த பின்னரே திருமணப் பேச்சும் ஏற்பாடும் தொடங்கும்.

பெண்ணின் விருப்பத்தை மீறிக் கட்டாயத் திருமணம் செய்து வைக்கும் முறையை வெறுக்கிறார்கள்

சில சமயம் உறவு முறையினர் கட்டாயப் படுத்தித் திருமணத்தை முடித்து விடுவார்கள். இதற்குப் பெண்ணின்

பெற்றோர்களின் சம்மதம் முக்கியமாகப் பெற்றிருக்க வேண்டும். பின்னர் பெற்றோர்களுக்குள் பேசி முடிவு செய்வார்கள் மீறி நடந்தால் பெண் பஞ்சாயத்து மூலம் விவாகரத்து செய்து கொள்ளலாம்.

## இரண்டாம் திருமணம்

முதல்திருமணம் என்றால், ஊரார், பெற்றோர், மூப்பன் முதலானோர் கலந்து பேசி முறையாகச் செய்கின்றனர்.

இரண்டாவது திருமணம் என்றால், ஊரார் அல்லது குடும்பத்தார் மட்டும் கலந்து கொள்வர். முதல் மனைவி இருக்க, அவள் சம்மதம் இல்லாமல் இரண்டாவது திருமணம் இருக்காது.

## விவாகரத்து

திருமணம் ஆகிக் கணவன் மனைவிக்குள் மனக்கசப்பு ஏற்பட்டால் தனித்து வாழ்கின்றனர். அதாவது முதலில் பிரிந்து வாழ்கின்றனர். பிரிந்து வாழும்போது ஊரினர், பெற்றோர் முதலியோர் இணைந்து முயற்சிகளை மேற்கொள்வார்கள். இதில் தோல்வியும் அடைவது உண்டு. தோல்வியின்போது பெற்றோர், ஊரினர் பேசி, மூப்பன் தலைமையில் விவாக ரத்து செய்து விடுகின்றனர். மூப்பன் கடைசியாகவே பங்கு பெறுகிறான். மூப்பனின் முடிவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## தண்டனை உண்டு

விவாகரத்து ஆகும்போது, ஆணின் குற்றமாக இருந்தால், பெண்ணுக்குத் திருமணச் செலவை ஆண் கொடுக்க வேண்டும். பெண்ணின் குற்றமாக இருந்தால் ஆணுக்கும் பெண் திருமணச் செலவு கொடுக்க வேண்டும்.

## யார் வளர்ப்பது?

விவாக ரத்து செய்யும்போது, கணவன் மனைவிக்குள் பிறந்த குழந்தைகள் பற்றியும் முடிவு எடுக்கின்றனர். பெரும்பாலும் கணவன் பராமரிப்பில்தான் விடுகின்றனர். குழந்தை சிறியதாகவோ, பால் குடிக்கும் குழந்தை யாகவோ இருந்தால் தாயின் பராமரிப்பில் விடப் படுகிறது. ஆனாலும் முடிவில் தந்தையின் பொறுப்புக்கு வந்துவிடுகிறது.

முதல் மனைவிக்குப் பிறந்த பிள்ளைகள் தந்தையின் சொத்தில் உரிமை பெறும் அதிகாரத்தை அடைகின்றனர். அதாவது தாய் எத்தனை திருமணம் செய்து கொண்டா லும் அவளின் பிள்ளைகள் முதல் கணவனின் சொத்தில் உரிமைபெற முடியும்.

## பிள்ளைகள் பார்க்க முடியாது

முதல் மனைவி இறந்து போனாலும், அல்லது விவாக ரத்து செய்தாலும் ஒருவனுக்கு இரண்டாம் திருமணம் செய்யப்படுகிறது. அப்போது, முதல் மனைவி யின் குழந்தைகளைத் (எந்த வயதில் இருந்தாலும்) திருமணப் பந்தலுக்கு அழைத்து வருவதில்லை. குறிப் பாகத் திருமண வீட்டிற்கு அனுமதிப்பதில்லை. குழந்தை கள் தந்தைக்கு வேண்டிய உறவினர் வீட்டில் பாதுகாப் பாக விடப்படுவார்கள். பெரிய வயதுடைய பிள்ளை களாக இருந்தால், திருமணச் சடங்கின்போது கண்டிப் பாகப் போகச் செய்வார்கள்-

## குழந்தைகள் பாதிக்கப்படுகின்றன

இவர்கள் திருமணங்களில் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல்,பல திருமணங்கள் செய்து கொள்ளலாம் என்ப தால், குழந்தைகளை வளர்ப்பதில் சிரமங்கள் உள்ளன. இதனால் குழந்தைகள் மீது அதிகக் கவனம் செலுத்துவது

இல்லை. கணவன், மனைவிக்கு மாறி மாறித் திருமணம் நிகழும்போது குழந்தைகளின் வளர்ச்சி, ஒழுக்க முறைகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் குழந்தைகள் பொறுப்பற்ற தன்மையில் வளர்கிற சூழ்நிலை உண்டாகிறது.

பலதாரத் திருமண முறையால் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையில் உறவில் குழப்பங்கள் உண்டாகின்றன. அதே போல முதல் மனைவி, மூன்றாம் கணவன் ஆகியோருக்குப் பிறக்கும் குழந்தைகளின் பிற்காலத் திருமண முறைகளில் குழப்பம் உண்டாகியுள்ளது.

## மணக்கலாம்

கணவன் இறந்தாலோ. கைவிட்டாலே கணவனின் தம்பியை மணந்து கொள்ளலாம். இந்தத் திருமணம் பெண்ணின் விருப்பத்தின் பேரில்தான் நடக்கிறது கணவனின் தம்பியுடன் நடக்கும் திருமணம், பஞ்சாயத்தார் மூலமே நடத்தி வைக்கப்படுகிறது. இத் திருமணத்தைச் சாதாரணமாகவே நடத்துவார்கள்; சடங்குகள் அதிகம் இல்லை

## வைப்பாட்டியோ!

கணவன் மனைவிக்குள் மனக்கசப்பு உண்டாகும் போது கணவனோ, மனைவியோ ஓடிப் போய்விடுவதும் உண்டு. அப்படிப் போய்விட்டால் வேறு திருமணம் செய்து கொள்வார்கள். பெண் திருமணம் செய்து கொள்ளாமல் விரும்புபவனோடு வாழலாம்.

பெண் ஓடிப் போனால் ஆண் வேறு திருமணம் செய்து கொள்ளலாம்.[1]

1. 12. 6. 85 - தும்பராம்பட்டு - 45 வயதுபெண் அழுது கொண்டு இருந்தாள். விசாரித்ததில் அவள் கணவன் 9 மாதங்களுக்கு முன்பு விட்டு விட்டுப் போய்விட்டானாம். வேறு திருமணம் செய்து கொள்ளவில்லை.

தும்பராம்பட்டு— தீர்த்தம் என்பாரின் மனைவி மான் கொம்புக்குச் சென்று ஒருவனுடன் வாழ்கிறாள். தீர்த்தம் முத்து என்பவளை மணந்து கொண்டார்.

இப்படி ஓடிப் போகும் நபர் மீது பஞ்சாயத்தோ ஊரினரோ, பெற்றோரோ அதிக அக்கறை எடுத்துக் கொள்வது இல்லை. ஆனால் தங்கள் இனத்துக்குள் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள், வேறு இனத்தில் வாழ்ந்த பெண்ணைத் தங்கள் இனத்தில் சேர்த்துக் கொள்வது கடினம்.

ஓடிப் போனவள் மீண்டும் இனத்துக்குள் வாழவிரும்பி வந்தால், பஞ்சாயத்தார் மூலம் தண்டனையும் அபராதமும் விதித்து, பெற்றோர்களோடு, அல்லது விரும்பும் ஆணோடு அல்லது அவளை விரும்பும் ஆணோடு வாழ அனுமதிக்கப்படுவாள். இப்படி ஒருவனோடு வாழ அனுமதிக்கப்படுபவள் திருமணம் செய்து கொண்டு வாழ அனுமதிக்கப்படுவதில்லை. அவள் வைப்பாட்டியாகவே இருக்க வேண்டும்;* தாலி உண்டு.

## வளையல் அணிய மாட்டாள்

ஓர் ஆண் பல திருமணங்களைச் செய்து கொள்ளலாம். என்றாலும் முதல் மனைவியின் அனுமதி பெற வேண்டும். ஆயினும், பெண்ணுக்கு அப்படி இல்லை.

பெண் விவாக ரத்து செய்யப்பட்ட பிறகே வேறு கணவனோடு வாழ அனுமதிக்கின்றனர். வேறு ஆணோடு வாழ விவாக ரத்து முடியும்வரை பெண் காத்திருக்க வேண்டும்.

ஒரு பெண் கணவனோடு வாழ விரும்பவில்லை என்றால். தன் கையில் உள்ள வளையல்களைக் கழற்றி விடுகிறாள். கணவனோடு மனம் இணைந்து வாழும்வரை அல்லது வேறு திருமணம் நடக்கும் வரை வளையல்களை

---

* இப் பழக்கம் காடர்களிடம் உள்ளது. 'மேற்கு மலை வாசிகள்' - பக். 33

அணிய மாட்டாள்.* இதுவே அவள் தன் கணவனோடு வாழ விரும்பாததைச் சொல்லாமல் சொல்லும் செய்தியாக இருக்கிறது.

## குழந்தை மணம்

பல ஆண்டுகளுக்கு முன்பு குழந்தையிலேயே திருமணம் செய்யப்பட்டு வந்துள்ளது. இப்போது 10 வயது முதல் 15 வயதுக்குள்ளும் திருமணத்தைச் செய்து வைக்கின்றனர். அத் திருமணம் பெற்றோர்களுக்காக நடத்தப்பட்டுள்ளது. சிறுவயது திருமணங்கள் யாவும் வேறு திருமணத்தில் முடிகிறது. இந்தத் திருமணத்தில் முதல் திருமணம் பற்றிய பேச்சுக்கு இடமில்லை.

பெண்கள், வயதுக்கு வராததற்கு முன்பும் திருமணம் செய்து வைக்கின்றனர். வயது வந்த பிறகும் கணவனோடு வாழலாம். விரும்பா விட்டால் வேறு திருமணம் செய்து கொள்ளலாம்.

## தழைச் சாறு ஊற்றல்

திருமணத் தன்று இரு வீட்டாரும் விருந்துக்குப் பிறகு மஞ்சள் பொடி கரைத்த நீரை ஒருவர் மீது ஒருவர் ஊற்றிக் கொண்டு மகிழ்கிறார்கள்.

சில சமயங்களில் காட்டுத் தழைகளை அரைத்து, அச்சாறோடு சுண்ணாம்பு, சிவப்பு, மஞ்சள் பொடிகள் கலந்து பல நிறங்களாக்கி அந்த நீரையும் ஊற்றிக் கொள்கின்றனர்.

அந்த நீரைத் திருமணவீட்டினர் மீது மட்டுமன்றித் திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் மீதும் ஊற்றி மகிழ்கிறார்கள். இந்த நிகழ்ச்சியைத் திருமணத்தில் முக்கியமாகச் செய்கின்றனர்.

---

* 12. 9. 85 வஞ்சிக் குழியில் அறிந்தது.

## விதவையின் வாழ்க்கை

கணவனை இழந்தவள்விதவையாகக்கருதப்படுகிறாள் விதவையாய் இருப்பவள் வளையல் அணிவதில்லை. பொட்டு வைப்பதில்லை. பூ வைப்பதில்லை. தாலி கட்டிக் கொள்வதில்லை. இவை மறுமணம் நடக்கும் வரைக்குமே. விதவை மறுமணம் செய்து கொள்ளும்போது தாலிமுக்கிய மாகக் கருதப்படவில்லை.

விதவையை மணக்கும்போது தாலியும் கட்டுவது உண்டு. பெரும்பாலும் கருமணி மாலையைக் கட்டுகின்ற னர். இவை இல்லாமல்இருப்பதும் உண்டு. எதுவும் இல்லா மல் இருக்கப்பெண்களை நீண்ட நாட்களுக்குவிடுவதில்லை.

விதவையாக இருக்கும்போது, பெண்கள் வெள்ளைப் புடவையைக் கட்டிக் கொண்டிருப்பதில்லை; கட்டாயமும் இல்லை. விதவைகள் விரும்பியபடி புடவையைக் கட்டிக் கொள்கின்றனர். எந்தப் பெண்ணும் வெள்ளை நிறத்தை விரும்பிக் கட்டிக் கொள்வதில்லை.¶

விதவை விரும்பினால், கணவன் இறந்தமூன்றாம்நாளி லேயே மறுமணம் செய்து கொள்ளலாம். சில மாதங்கள், வருடங்கள் வரைகூடத் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கலாம்; வாழலாம். ஆனால் பின்னர் திருமணம்என்ற சடங்கு நடந்தே ஆகவேண்டும்.

விதவைகள், முன்பு ஜாகீர்களின்இன்பத்திற்குஇணங்கி வாழவேண்டி இருந்ததாம். பின்னர், சில காரணங்களால் பலருக்கு இன்பத்தைக்கொடுக்கவேண்டியவர்களாகவாழ்ந் திருக்கிறார்கள்.* இதனால்தான் இப்போது உடனுக்கு உடன் திருமணம் செய்கின்றனரோ?

---

* 20. 6. 85—S.செங்குட்டுவன்-40 V. மருதூர், விழுப்புரம் (கள்ளக்குறிச்சியில் பிறப்பு, படிப்பு, வளர்ப்பு)

விதவை என்றவார்த்தைக்கு இப்போதுஇம்மக்களிடம் பொருளில்லாமல் உள்ளது. விதவையாகஎந்தப்பெண்ணும் இறப்பதில்லை. அப்படி இறந்து போனால் பிணத்திற்குத் தாலிகட்டிப் புதைக்கின்றனர். தாலிகட்டியவர் விதவையின் சொத்தைப் பெறலாம்.

60 வயதுக்கு மேல் கணவன் இறந்து போனாலும் திருமணம் நடக்கும். அந்தப் பாட்டிக்குச்சிறியவரே கணவனாக இருக்க முடியும்.

## பெண்களும் தாலியும்

பெண்கள் தாலியை அதிகம் மதிப்பதில்லை. அதனால் அதற்குப் பாதுகாப்பு இல்லை. சிலர் ஓரளவு மதிக்கிறார்கள், பாதுகாக்கிறார்கள்

தாலிகள் பித்தளையால் செய்யப்பட்டவையே. எங்கோ சிலர் வெள்ளியால் செய்துள்ளனர். இவை யாவும் நகர்ப்புறத்தில் வாங்கப்படுவதாகும்.

தாலி பித்தளையால் இருந்தால் 'தாலி' என்றும், தாலி வெள்ளியால் இருந்தால் 'வெள்ளித் தாலி' என்றும் கூறுவார்கள்.



வெள்ளித் தாலி
வெள்ளிக் குண்டு



பித்தளைத் தாலி
பித்தளைக் குண்டு

தாலிக்கு இரண்டு பக்கமும் ஒவ்வொரு கருப்பு மணியைக் கண்டிப்பாகக் கோத்துக் கொள்கிறார்கள். அதே சமயம் பித்தளையால் குண்டு செய்தும் கோத்துக் கொள்வர்.

தாலிக் கயிற்றைத் **தாலிச் சரடு** என்பார்கள்.

பலர் பெரும்பாலும் 25 பைசா நாணயத்திற்குக் (முன்பு நாலணாவைப் பயன்படுத்தினார்கள்) காது வைத்து அதைத் தாலிக் கயிற்றில் கோத்துக் கொண்டுள்ளனர்.

இதைக் காசுத் தாலி என்கிறார்கள்*. இருபதுக்கும் மேற்பட்ட காசுகளைக் கோர்த்துக்கொண்டுள்ளனர்.

குழந்தைக்கும் இந்தக் காசுகள் சேர்த்த கயிற்றைக் கட்டியுள்ளனர். 'காசுக்கயிறு' என்று அதைக் கூறுவர்.

கல்வராயன்மலை பெண்களுக்குத் தாலி வேலியாக இல்லை.

பொட்டுத் தாலியும் உண்டு என்கிறார்கள். நான் கள ஆய்வின்போது பொட்டுத் தாலி உள்ள பெண்களைப் பார்க்க முடியவில்லை.

---

* திருப்பாவை வியாக்கியானத்தில் காசு என்பது அச்சுத் தாலி என்று கூறப்பட்டுள்ளது.

'காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிர ரவம் கேட்டிலையோ'
— ஆண்டாள் திருப்பாவை

முன் பக்கப் படம்.1:
12. 6 85 - தும்பராம்பட்டு ஜோதி (25) தாலியைப் பார்த்து வரையப் பட்ட து. இது புத்தளை. வெள்ளித் தாலி இந்த வகையில்தான் இருக்குமாம்.

படம் 2: 11. 6. 85 கிரிப்புலி — மொட்டை(50)தாலியைப் பார்த்து வரையப்பட்டது.

தாலி இல்லாமல் இருந்தாலும் கறுப்பு மணி மாலையைக் கட்டிக் கொள்வதுண்டு.

திருமணம் ஆன பெண்கள் தாலி இல்லாமல் இருந்தாலும், வளையல் இல்லாமல் இருக்க விரும்புவதில்லை; வளையல் சுமங்கலிப் பெண் என்பதைத் தெரிந்து கொள்ளும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

தாலி சில சமயம் காணாமல் போய் விடுவதும் உண்டு. வயலில் (காட்டில்) வேலை செய்யும் பொழுது விழுந்து விடுவதும் உண்டாம். காணாமல் போய் விட்டது என்று பயந்து விடுவதில்லை. சில சமயம் குழந்தைக்கு விளையாடத் தாலிகயிற்றையும் கொடுப்பார்கள். அதனாலும் தாலியை இழக்க வேண்டி நேரிடுகிறது.*

தாலியைப் பிரித்துக் கட்டும் பழக்கம் இவர்களிடம் இல்லை. வேண்டுமானால் புதிய கயிற்றை வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள்.

இங்குத் தாலியும் கறுப்பு மணியும் இல்லாமல் இருந்தாலும், கணவன் இல்லாமல் வாழ முடியாதவாறு ஒருவித சமூக அமைப்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது.

'தாலி அறுத்தவள் ஏன் இருக்கிறாள்?
தாரம் தப்பினவனுக்குப் பொங்கியிட!'

என்னும் பழமொழி கல்வராயன் மலை மக்கள் போன்றவர்களிடம்தான் தோன்றியிருக்க வேண்டும்.

---

* 12-6-85 தும்பராம்பட்டு—தீர்த்தம் என்பவரின் மனைவி முத்து- (30) 3 மாதங்களுக்கு முன்பு தாலியைக் குழந்தைக்கு விளையாடக் கொடுத்துக் காணாமல் போய்விட. அதுவரை தாலி இல்லாமல் (கறுப்புமணியுடன்) இருந்தார்,

## கணவன் - மனைவி மதிப்பு

கணவன் மனைவியைப்'பெண்டாட்டி' என அறிமுகப் படுத்துகிறான். ஆனால் கணவன் மனைவியை 'வாபுள', 'புள்ளே' என்று கூப்பிடுகிறான்.

பெண்கள், கணவன் உட்பட எல்லா ஆண்களையும் 'பியா'* என்றே அழைக்கிறார்கள்.

குழந்தைகள் பிறக்காவிட்டால் குழந்தைகள் எடுத்து வளர்ப்பதில்லை. வேறு திருமணமே குழந்தை கிடைக்கச் செய்கிறது. இதனால் வளர்ப்புக்குழந்தைக்கான திருமணம் இல்லை.

இனி, இவைகளை ஒட்டிய செய்திகளைச் சற்று விரிவாகப் பின்னர் வரும் தலைப்புகளின் மூலம் இம் மலை மக்களின் திருமண வாழ்க்கை, திருமணமுறைகளைத்தெளிவாக அறிந்து கொள்வோம்.

---

* பியா — பையன். பயல் — என்பதே 'பியா' என ஆகியிருக்கலாம். பயல் — மகன். இந்தப் பொருளில் கடுவங் **துறை** (கல்வராயன் மலை) கல்வெட்டில் காணப்படுகிறது.

கல்வெட்டு:

'' கோவுரிச் சங்கன்
கருவந்துறையி
லே எருது விளை
யாடி பட்டான்
சங்கன் மக(ன்)பெ
ரிய பயலு நட்டக
ல்லு''

காலம்—15 ஆம் நூற்றாண்டு. நன்றி: 'கொங்கு' இதழ் (15-1-76)

# திருமண வாழ்க்கை

தமிழ் நாட்டுப் பழங் குடிகளின் திருமணங்கள் சற்று வித்தியாசமான முறைகளில் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பழங்குடியிலும் திருமணமுறை ஒவ்வொரு விதமாகவே நடைபெறுகிறது. அந்த வகையில் கல்வராயன் மலையில் வாழும் மலையாளிகளின் திருமணத்தைப் பார்க்கும்போது, தனிச் சிறப்பு உடையதாக இருக்கிறது எனலாம்.

பழங்குடி மக்களின் திருமண முறைகள் யாவும் ஒரு பொதுத்தன்மை வாய்ந்தவையாக உள்ளன. எனினும், இத் திருமணங்கள் யாவும் பழமையின் எச்சங்களாய் இருக்கின்றன என்றும் கூறலாம்.

அந்த வகையில் இம் மலை மக்களின் திருமணமும் அமைந்து இருக்கிறது.

பழங்குடி மக்களின் திருமணங்கள் ஆண் பெண் உறவுகளைப்பொறுத்தே இருக்கின்றன. அதே சமயம் எவ்விதக் கடுமையான வரைமுறைகளும் இல்லை; ஆனால், திருமணச் சடங்கில் இருக்கிறது.

பெண்களின் கற்பு என்பதைப் பிரதானமாகக் கருதவில்லை. மிகச் சாதாரணமாகவே கொள்கிறார்கள். ஆண், பெண் விருப்பங்களைப் பொறுத்துத் திருமணம்

அமைகிறது. கர்ப்பமாக உள்ள பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளலாம் என்பன போன்ற பொதுவான சில முறைகள் உள்ளன. இப்பொதுவான தன்மைகள் மலையாளிகளின் திருமண முறைகளில் உள்ளன. அவை சற்று மாறுபட்டு அமைந்துள்ளது தான் இவர்களின் திருமண முறைக்குச் சிறப்பைத் தருகிறது.

இந்த மலையாளிகளின் திருமணச் சடங்குமுறைகளைக் காண்போம்.

## திருமணத் தேவை

பழங்குடி மக்களாக இருந்தாலும் நாகரிக மக்களாக இருந்தாலும் வாழ்க்கை முறைக்குத் திருமணம் தேவையான ஒன்றாக இருக்கிறது. திருமண முறைகள் வேண்டுமானால் பல விதமாக இருக்கலாம்; ஆனால், ஆண் பெண் இணைப்பு தேவையாக, அவசியமானதாக இருக்கிறது. இத் தேவையைத் திருமணம் தொடங்கி வைக்கிறது. எனலாம்.

கல்வராயன் மக்களின் திருமணமும் ஒருவகைத் தேவையின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. பிள்ளை பெறுவதற்காக மட்டும் திருமணத்தை நடத்திக் கொள்ளவில்லை. திருமணச் சட்டம் இவர்களிடம் செல்லவில்லை. இவர்களுக்குள் பழகிப் போன முறையே சட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இச் சட்டம் ஊர்த் தலைவனைப் பொறுத்துத்தான் செயல்படுகிறது. இதற்கு மக்கள் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

இம் மக்களிடம், திருமணம் ஆன ஓர் ஆணோ ஒரு பெண்ணோதான் மதிக்கப் படுகிறார்கள். திருமணம் ஆகாதவரைக்கும் ஆண்டுதோறும் வரி கட்ட வேண்டும்; வரி கொடுக்கும் நபர் முழு மனிதனாக மதிக்கப்படுவ

தில்லை. கால்மனிதனாகவே மதிக்கப்படுகின்றனர். திருமணமே முழுமனிதனாக மதிக்கப் படும் தகுதியைக் கொடுக்கிறது. இதனால் திருமணம் மிகத் தேவையாக இருக்கிறது. 5 வயது முதல் இறக்கும் வரை திருமணம் தேவையாகிவிட்டது.

இம் மலையில் ஆண்கள் 10 வயது வரை சிறுவர்களாகவும், 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் திருமணம் ஆகாதவர்களாகவும் கொள்ளப்படுகின்றனர்.

திருமணம் ஆகாதவர்களைக் 'காவாலி' என்று அழைக்கின்றனர். 'காவாலி' என்பது கேவலமானவார்த்தையாகக் கருதப்படுகிறது. காவாலி என்றால் மலையாளிகள் கோபமும் ஆத்திரமும் கொள்கிறார்கள். எனவே 10 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் திருமணம் மிகத் தேவையாக அமைந்துள்ளது.

திருமணத் தேவைக்கு குடும்பம், வாழ்க்கை மனைவி என்பனவற்றை ஆணோ, பெண்ணோ தெரிந்திருக்க வேண்டும் என்று யாரும் எதிர்ப்பார்க்கவில்லை.

திருமணத்தை ஒரு சடங்காகவே எண்ணுகிறார்கள். சாதாரணமாகவும் கொஞ்சம் சிறப்பாகவும்கூடத் திருமணத்தைச் செய்கின்றனர். எப்படியோ, இவர்கள் சமூகத்திற்குக் 'காவாலி' என்று இல்லாமல் இருக்கவேண்டும்.

திருமணம் ஆகாத பெண்ணைக் 'கம்மணாட்டி' என்று கூறுகிறார்கள்.

எனவே, கல்வராயன் மலையாளிகளிடம் திருமணம் சமூகத் தேவைகளுக்காக நிகழ்த்தப்படும் நிகழ்ச்சியாகவும் சமூக அந்தஸ்தைப் பெற அது வேண்டிய ஒரு சடங்காகவும் இருக்கிறது.

# பெண் பார்த்தல்

திருமணத் தொடக்கம் பெண் பார்த்தலில் இருந்து வளர்கிறது.

ஆண் வீட்டார் பெண் வீட்டாருக்குப் பெண் பார்க்க வரும் நாள் பற்றித் தெரியப்படுத்துகின்றனர். ஆண்வீட்டினர் 5, 7, 9 என்னும் (ஒற்றை எண்ணிக்கையில்) வகையில் நபர்கள் செல்கின்றனர்.[1] இவர்கள் வயதானவர்களாக இருக்கின்றனர். இவர்களில் வயதானவர் என்றும் பெரியவர் என்றும் மதிக்கப்படுபவர் மட்டும் கையில் ஒரு கைத்தடியை (சிறிய கோல்) எடுத்துச் செல்கிறார்.

பெண் பார்க்க நேரம் பார்ப்பதில்லை. காலை, நண்பகல், மாலை, இரவு என்று பார்ப்பதில்லை; எந்த வேளையிலும் செல்கின்றனர்.[2]

இவர்கள் ஜாதகம் எழுதி வைப்பதில்லை. பொருத்தங்களைப் பார்க்கிறார்கள்.

பெண் பார்க்கச் செல்வதை முதலில் ஊருக்குத் தெரியப் படுத்துகின்றனர். இது பெண் பார்க்கச் செல்லும் போது யாரும் எதிர் வரக் கூடாது என்பதற்கே.

1: நாள் 10-6-85 வஞ்சிக் குழியில் காணல். 7 பேர் சொல்வதில் முக்கியத்துவம் தருகின்றனர்.

2: நாள் 11-6-85. சேராப்பட்டு இரவு 7.00 மணி பஸ்ஸில் ஏறிப் பெண் பார்க்கச் சென்றனர்.

பெண்ணின் ஊர் அதிகமான தூரமாக இருந்தால் இரவில் வேறு ஊரில் தங்கியும் செல்வர்.

கூடுமான வரைக்கும் இரவில் எந்த ஊரிலும் தங்காமல் பெண் வீட்டிற்கே சென்று விடவேண்டும் என்று எண்ணு வார்கள்.

## சகுனம் பார்த்தல்

பெண் பார்க்கச் செல்லும்போது சில நல்ல, கெட்ட சகுனங்களைப் பார்க்கின்றனர்.

சகுனப் பார்த்தல் என்பது எல்லாச் செயலுக்கும் உண்டு. என்றாலும், பெண் பார்த்தலில் அதிகக் கவனமும் முக்கியத்துவமும் காட்டப் படுகிறது.

பாம்பு எதிரில் குறுக்கே போகக் கூடாது; காக் கைக் கரைதல் கூடாது; கருடன் தலைக்கு மேலே பறக்கக் கூடாது; விதவை எதிரில் வரக் கூடாது; விறகு எடுத்துக் கொண்டு, எதிரில் வரக்கூடாது. மனைவியை இழந்தவன் வரக்கூடாது; நெருப்புக் கட்டை எடுத்துக் கொண்டு செல்லுவதைப் பார்க்கக் கூடாது வெறும் மண் பானை எடுத்துக் கொண்டு எதிரில் வருதல் கூடாது.

இச் சகுனங்களில் ஒன்று எதிர்பட்டாலும் பெண் பார்த்தல் ஒத்திப் போடப் படுகிறது.

## பெண் பார்த்தல்

சில சமயங்களில் பெண்ணை வேண்டாம் என்று விட்டு விடுவதும் உண்டு.

சகுனம் எதுவும் இல்லாமல் சொல்லுகின்ற ஆண்வீட்டி னர், பெண் வீட்டை அடைந்ததும் பெண் வீட்டார் எதிர் கொண்டு அழைக்கின்றனர். ஆண் வீட்டினர் வருவதை, வந்துள்ளதைமேளம்(பறை)கொட்டித்தெரியப்படுத் துவர்

யறை ஒலி கேட்டதும் பெண் பார்க்கும் செய்தியை ஊரினர் அறிந்து கொள்கின்றனர். இதனால் பெண் பார்த்து முடிந்து ஆண்வீட்டார் செல்லும்வரை, எவரும் பெண் வீட்டாரின் வீட்டுக்கு எதிரிலோ, வழியாகவோ செல்லுவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர்.

## எச்சரிக்கைக் கோல்

ஆண் வீட்டாரில் ஒருவர் பெண் பார்க்கச் செல்லும் போது, தான் கொண்டு வந்த கோலைப் பெண் வீட்டாரின் வீட்டின் முன் பகுதியில் செருகி விட்டுப் பெண்ணைப் பார்க்க உள்ளே செல்கின்றனர்.

செருகப்படும் கோல், அந்த வீட்டில் பெண் பார்த்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது என்பதைத் தெரியப்படுத்தும் எச்சரிக்கைக் கோலாக இருக்கிறது. கோல் செருகப்பட்டு இருந்தால், அந்த வீட்டின் எதிரில் யாரும் வரமாட்டார் கள்.

ஆண்வீட்டார் பெண் வீட்டிற்குச் சென்றதும், பெண் ணைக் கேட்டுப் பேச்சைத் தொடங்குகின்றனர். பெண் ணைப் பார்க்கிறார்கள்.

இரு வீட்டாரும் சம்மதம் எனத் தெரிவித்தவுடன் உணவு முடிகிறது. உணவு முடிந்த பிறகு பெண் வீட்டா ரிடம் பெண் நிச்சயத்தைப் பற்றி நாள் கேட்டுக் கொண்டு திரும்பிவிடுவர்.

பெண் பார்த்து முடித்து ஊருக்குத் திரும்பும்போது கூரையில் செருகி இருந்த கோலை எடுத்துக் கொண்டு செல்கின்றனர். பெண் வீட்டார் கொஞ்ச தூரம் வரை வந்து ஆண் வீட்டாரை வழி அனுப்புகின்றனர்.

## கோலை ஆட்டுதல்

பெண் பிடிக்கவில்லை என்றால், பெண் வீட்டில் உணவு இருக்காது. ஆண் வீட்டாரைக் கொஞ்ச தூரம் வந்து வழி அனுப்பி வைக்கமாட்டாகள்.

செருகியிருந்த கோலை எடுத்துக் கொண்டு அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டு செல்வர். கோலை ஆட்டிச் செல்வதைப் பார்த்தாலே, பெண் பிடிக்க வில்லை என்பதை மற்றவர் தெரிந்து கொள்கிறார்கள்.

பெண் பிடித்து விட்டது என்றால், கோலைத் தோள் மீது போட்டுக் கம்பீரமாகச் செல்வர். அதன் மூலம்அவர்கள் செய்தியைத் தெரிந்து கொள்வார்கள்.

பெண் பார்க்கச் சென்றதையோ, பெண் பார்க்க வந்ததையோ யாரும் கேட்க மாட்டார்கள். 'எந்த ஊர், எந்தப் பெண்' என்னும் விவரங்களைப் பெண் பார்க்கச் சென்றவர்களும் யாரிடமும் கூறுவது இல்லை. பெண் பிடித்து விட்டால், கூறுவார்கள். பிடிக்காத பெண்ணைப் பற்றிக் கூறினால், மீண்டும் அந்தப் பெண்ணை யாரும் பார்க்காமல் இருந்து விடுவார்கள்' என்பதற்காகவே இம் முறை என்கிறார்கள்.

## ஆண் வீட்டில் சகுனம் பார்த்தல்

பெண் பார்த்துவிட்டு ஆண் வீட்டார் தங்கள் வீட்டிற்கு வந்த அன்றைய இரவு சகுனம் பார்க்கின்றனர்.

அன்று இரவு மான் கத்தக் கூடாது என்று எதிர் பார்ப்பார்கள். மான் கத்தினால் நிச்சயம அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய மறுப்பார்கள். பெண் ணைப் பார்க்கும்போது மான் கத்தினாலும் திருமணத் தைக் கை விட்டு விடுகின்றனர்.

மான் கத்தினால் பெண் சரி யில்லை என்று தீர் மானித்து விடுவார்கள்.

பெண் வீட்டாரும் அன்று இரவு மான் கத்துதலைக் கேட்கக் கூடாதாம்; கேட்டால் அந்த ஆணை வேண்டா மென்று கூறித் திருமணத்தை நிறுத்திவிடுவார்கள்.

'மான் கத்தாதபோது கத்தியதாகக்கூறமாட்டார்கள் இப்படிப் பொய் சொல்லித் திருமணத்தை நிறுத்தி விட எண்ணமாட்டார்கள். ஆணோ, பெண்ணோ பிடிக்க வில்லை என்றால் திட்டவட்டமாகக் கூறிவிடுவார்கள். அவ்வாறு கூறுவதற்காகக் கோபமோ, ஆத்திரமோ, வருத்தமோ படமாட்டார்கள்.

கல்வராயன்மலையில் உள்ள மலையாளிகள் இம் மலையில் உள்ள எந்த ஊரிலும் கொடுக்கல் வாங்கலை வைத்துக்கொள்கின்றனர்; ஜாகீர் எந்தக் கட்டுப்பாட்டை யும் விதிப்பதில்லை.

சேலம் சேர்வராயன் மலையாளிகளிடமும் திருமணத் தொடர்பு கொள்கின்றனர்.

இப்போது போக்குவரத்து வசதிகள் உள்ளதால்,வேறு மலைகளில் உள்ள மலையாளியிடம் மண உறவு வைத்துக் கொள்ள அதிகம் விரும்புகிறார்கள்.

திருமணத்திற்குப் பொய் சொல்ல வேண்டும் என்று எண்ணுவதில்லை இவர்கள்.

## பெண் நிச்சயித்தல்

ஆண் வீட்டினர் பெண்ணைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்ட பிறகு நிச்சயம் செய்ய முடிவெடுப் பார்கள்.

பெண் நிச்சயித்தலை, பெண்வீட்டாருக்குத் தெரியப் படுத்துவார்கள். அப்போது ஆண் வீட்டினர் 7 பேரும் அல்லது அதற்கு மேலும் செல்வார்கள்.

பெண் நிச்சயம் செய்தலைப் பெண்வீட்டினர் மேளம் அடித்துக் தங்கள் ஊரினருக்குத் தெரியப்படுத்துவார்கள்.

மேளம் ஒலி கேட்டு ஊரினர் செய்தி அறிந்து, சகுனத்தடை இல்லாமல் இருப்பார்கள்.

பெண் நிச்சயித்தல் மாலை அல்லது இரவு நேரமாகத் தான் இருக்கும்; ஆடம்பரம் இல்லாமல் இருக்கும்.

பெண் நிச்சயிக்க வரும் ஆண் வீட்டினரை ஊருக்குச் சற்றுத் தொலைவிலேயே சென்று பெண் வீட்டினர் எதிர் கொண்டு அழைப்பார்கள். ஆண் வீட்டினரது காலில் விழுந்து வணங்கி அழைப்பார்கள்.

சில சமயம் இரு வீட்டினரும் கட்டித் தழுவிக் கொள் வதும் உண்டு.

வீட்டிற்கு அழைத்து வந்ததும் பெண்ணைப் பற்றிப் பேச்சு தொடங்கும். திருமணம் பற்றிப் பேச்சுஎழுகிறது. திருமணப் பேச்சு முடிந்ததும் ஆண் வீட்டினர் 7 மரக்கால் அளவு சாமை தானியத்தையும் ஏழு ரூபாய் பணத்தையும் பெண் வீட்டாருக்குக் கொடுக்கின்றனர். இவ்வாறு கொடுப்பதை '**நிகரம் செய்தல்**' என்கின்றனர். நிகரம் முடிந்ததும் சாப்பாடு நடைபெறும். சாப்பாடு முடிந்ததும் ஆண் வீட்டார் இரவே தங்கள் வீட்டிற்குத் திரும்புவர்.

பெண் நிச்சயித்தலின்போது சாமைக் கஞ்சி அல்லது வரகுக் கஞ்சியாகத்தான் இருக்கும்; கஞ்சியோடு சாராயம் இல்லாமல் இருக்காது பெண் நிச்சயித்தலின்போது பெண் வீட்டார்கள் வந்திருப்பவர்களுக்குச் சாப்பாடு போட்டே ஆக வேண்டும். சாப்பாடு கொடுத்து மகிழச் செய்து அனுப்புவதை நல்ல விருந்து கொடுத்ததாக எண்ணு கிறார்கள்.

## திருமணநாள் குறித்தல்

பெண்ணை நிச்சயம் செய்த பிறகு திருமணத் தேதி குறிக்கப்படுகிறது.

---

* நான் 10. 6.85 சேராப்பட்டில் நேரில் காணமுடிந்தது.

பெண்ணை நிச்சயம் செய்த பிறகு அந்த நாட்டு மூப்பனைச் சென்று பார்க்கிறார்கள். ஆண், பெண் வீட்டினர் திருமணத்தைப் பற்றிக் கூறி, மூப்பனிடம் அனுமதி கேட்கின்றனர். திருமணத்தைப் பற்றி மூப்பனே குறிப்பிடுகிறார்.

மூப்பன் குறிப்பிடும் தேதியில் திருமணம் வைத்துக் கொள்கின்றனர்.

திருமண நாள் பற்றிப் பார்ப்பதில்லை; வளர்பிறை, தேய்பிறை என்றும் பார்ப்பதில்லை. மாதமும் பார்ப்பதில்லை. எந்த மாதத்திலும் திருமணம் செய்யத் தேதி குறிப்பிடுகின்றனர்.

மூப்பன் வசதிக்கு ஏற்றபடி திருமண நாள் குறிக்கப்படுகிறது. திருமணம் இரவு, பகல், மாலைஎன்றுஎப்போதும் செய்ய முடிவு எடுக்கின்றனர்.

மூப்பன்கொடுக்கும்தேதியில்திருமணத்திற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பிக்கின்றனர்.

திருமணத் தேதி குறித்த பிறகு, திருமணத்திற்குமேளம் அடிப்பவர்களுக்குப்பாக்கு வைத்து நாள் குறித்துவருகின்றனர். பாக்கு வைக்கும்போது, காணிக்கையாக 5 ரூபாய் கொடுக்கின்றனர். மேளம் அடிப்பவர் சமவெளியிலிருந்து வருகின்றனர்.

மூப்பன் திருமணத் தேதி குறிப்பிடும்போது மூப்பனுக்குக் காணிக்கை கொடுக்கின்றனர்.

## நாரு அழைத்தல்
## நாரு உட்காருமிடம்

திருமணத்திற்கு முதல்நாள் மணமக்களை ஊர்வலமாக அழைத்து வர, ஊருக்கு வெளியே ஒரு மரத்தடியில் இரு வீட்டாரும் கூடி இருப்பர். அங்கு மூப்பன், நாட்டான்

கவுண்டன், கங்காணி, கார்பாரி ஆகியோர் வந்து சேர்ந்து விடுவர். இவர்கள் அனைவரும் சேர்ந்து இருக்கும் தனியிடத்தை, **'நாடு உட்காருமிடம்'** என்று கூறுகின்றனர்.

## நாடு அழைத்தல்

பெண்ணையும் மாப்பிள்ளையையும், அழைக்கத் திருமண வீட்டுக்காரர்கள் மேளத்தோடு நாடு உட்காருமிடத்திற்கு வருவர். அங்கு அனைவரையும் மேளத்தோடு அழைக்கச் செல்வதை, 'நாடு அழைக்கப் போதல்' என்று கூறுகிறார்கள்.

கங்காணி தோட்டியை அழைத்து, 'நாடு அழைக்க வேண்டும்; வாபோகலாம்' என்று கேட்க, கொட்டு மேளத்தோடு செல்கின்றனர். 'நாடு' கூடியிருக்கும் இடம் வந்ததும் தோட்டி 'நாடுகாண்கிறேன்' என்றுகூறுகிறார். அப்போது தோட்டி, மூப்பனுக்குக் காலில் விழுந்துவணக்கம்செலுத்துகிறார். மூப்பன், 'மகாராசனா இருப்ப; எழுந்திரு' என்று கூறுகிறார்.

பிறகு மேளத்தோடு மூப்பன், நாட்டான், கங்காணி, கவுண்டன், கார்பார் ஆகியோருடன் மணமக்களைத் திருமண வீட்டிற்கு உறவினர்கள் ஊர்வலமாக அழைத்து வருகிறார்கள். இவ்வாறு அழைத்து வருவதை 'நாடு அழைத்தல்' என்று கூறுகிறார்கள்.

ஒரே நாளில் ஒன்றுக்குமேற்பட்டுஎத்தனைத்திருமணம் இருந்தாலும் ஒவ்வொரு தடவையும் [திருமணத்திற்கும்] நாடு உட்காருமிடத்திற்கு மேளத்தோடு சென்று நாடு வணங்கி, நாடு அழைக்கின்றனர்.

நாடு கூடி இருக்கும் இடத்தில் திருமண வீட்டினர் விருந்து கொடுக்கின்றனர். விருந்துக்கு ஆடு வெட்டுவர்.

விருந்து கொடுக்க, நாடு அழைக்க, 'நட்டு வந்துஇருந்து விருந்து' என்றுகூறி விருந்துக்கு அனைவரையும் அழைத்து விருந்து கொடுக்கப்படுகிறது.

## திருமணத் தொடக்கம்

திருமணத் தேவை, திருமணச் சடங்கின் தொடக்கமாக இருக்கிறது.

திருமணம் முதலில் உறவு முறையில் நடத்த முயல்கின்றனர். மாமன், அத்தை, அக்கா முறையில் பெண்ணைத் தேடுகிறார்கள்; பெண் பிடித்துவிட்டால் திருமணம் நிகழும்; இல்லை யென்றால் வேறு பெண் தேடுவர்.

பெண் உள்ளூர், வெளியூர் என்று பார்க்கிறார்கள் பெண்ணின் வயது பார்க்கப்படுகிறது. ஆனால் அது பிரச்சினையாக இருப்பதில்லை; பெண்ணுக்கு அதிக வயது பற்றிய கவலையும் இல்லை.

அடுத்துப் பெண்ணின் நிறம்; நிறத்திற்குக் கவனம் செலுத்துகின்றனர். ஆனாலும் பெண்ணின் உழைக்கும் தன்மை, முதன்மையாகக் கொள்ளப்படுகிறது. காட்டு வேலைகளை நன்றாகச் செய்யும் பெண்ணாய் இருந்தால் அக்கறை காட்டுகிறார்கள் பெண்ணின் உழைக்கும் ஆற்றலைத் தெரிந்துகொண்டு திருமணத்தைப் பற்றித் தெரியப்படுத்துகிறார்கள்.

பெண் வீட்டார் பெண் கொடுக்க விருப்பம் தெரிவிக்க வேண்டும்; விருப்பத்தின் பேரில்தான் பெண்ணைப் பார்க்கச் செல்வர்.

பெண் வீட்டாரின் விருப்பம், பெற்றவர்களை மட்டும் சார்ந்ததாய் இல்லை; பெண்ணின் விருப்பத்தையும் பொறுத்துத் தான் ஒப்புதல் தெரியப்படுத்தப்படுகிறது.

பெண்ணின் விருப்பத்திற்காகப் பெற்றோர்கள் எவ்வித பலாத்காரமோ, கட்டுப்பாடுகளையோ விதிப்பதில்லை. பெண்ணின் முழு விருப்பமும் திருமண நிகழ்வுக்குத் தொடக்கமாக இருக்கிறது.

ஆண் வீட்டார் பெண் வீட்டாரின் விருப்பம் அறிந்து. பெண்ணைப் பார்க்கச் செல்கின்றனர்.



# திருமணப் பந்தல் அமைத்தல்

கல்வராயன் மலையாளிகளிடம் திருமணப் பந்தல் அமைக்கும் பழக்கம் ஏனைய பழங்குடிகளிலிருந்து மாறு பட்டுள்ளது.[1]

கல்வராயன் மலையாளிகள் திருமணத்திற்குப் பந்தல் அமைக்க, இத்தனைக் கால்கள் என்று வரையறுத்துக் கொள்ள வில்லை.[2]

கால்கள் நடும்போது தீபாராதனை காட்டுவார்கள்.

பந்தல் கால்கள், பால் உள்ள மரக்கிளையாகப் பார்த்து நடுவார்கள் இந்தக் கால்களை வீட்டிற்கு முன்பும் சுற்றியும் நடுவார்கள்.

1 காட்டு நாயக்கர் - (குறும்பர்) நான்கு கால்கள் நடுகின்றனர். நீலகிரி இருளர் பன்னிரண்டு கால்களை நடுகின்றனர். ஏர்க்காடு மலையாளிகள் பன்னிரண்டு கால்களை நடுகின்றனர்.

2 10. 6. 85. வஞ்சிக் குழியில் — திருமணப் பந்தல் ஒன்பது கால்கள் (கழிகள்), பன்னிரண்டு கால்கள் நடப்பட்டிருந்தன.

மணப் பந்தலில் கிழக்குப் பக்கமாக உள்ள காலின் கீழ் ஒரு கல்லைத் தெய்வமாகப் பாவித்து வைக்கின்றனர். அந்தக் கல்லைத் தங்கள் குலதெய்வமாக எண்ணி வைக்கின்றனர். அந்தக் கல் சற்றுப் பெரியதாவும், இயற்கையான கால்லாகவும் இருக்கிறது.

அந்தக் கல்லுக்கு நாமத்தைப் போடுகின்றனர். திருமணத்தின்போதும், கால் நடும்போதும் அங்கு விளக்கேற்றி வைக்கின்றனர்.

திருமணத்தின்போது அந்தக் கல்லைச் சுற்றி நிறைய (குறைந்தது 5) விளக்குகளை எரிய வைக்கின்றனர். மண் பானைகளில் வண்ணம் பூசியும் கோடுகள் வரைந்தும் வைக்கின்றனர்.

திருமணத்தின்போது கடவுள் கல்லுக்குச் சற்று முன்பாக மூப்பன் உட்கார்வதற்கு, ஓர் உயரமான இடத்தை அமைத்துக் கொடுக்கின்றனர். அவர் அங்கு அமர்ந்து திருமணத்தைப் பார்ப்பார்; மூப்பனோடு சில சமயம் இவர்களின் குருவும் வருவது உண்டு; குருவுக்கும் தனி இடம் கொடுக்கின்றனர்.

## பச்சை பரப்புதல்

மணப்பந்தலுக்கு வெள்ளரி மரத்தின் தழைகளையும் காட்டுத் தழைகளையும் கொண்டு வந்து பரப்புகின்றனர். இதற்குப் 'பச்சைப் பரப்புதல்' என்கின்றனர். இந்தப் பந்தலைப் பச்சை மணப் பந்தல் என்றும் கூறுகிறார்கள்.

மணப் பந்தல் காலுக்கு விளக்குப் பானைகளை ஒட்டிச் சாலும் கரகமும் என்னும் நீர் நிரம்பிய இரண்டு மண் குடங்களை வைப்பார்கள்.

மணப் பந்தலில் அம்மியை வைத்திருக்கின்றனர். ஆனால் அம்மி மிதித்தல் பழக்கம் இல்லை. ஏன் வைக்கிறார்கள்

என்று தெரியவில்லை. மணமக்கள் அம்மியும் குழவியும் போலப் பிரியாமல் இருக்கவேண்டும் என்பதைக் குறிப் பதற்காக இருக்கலாமோ!

திருமணத்திற்கு முன்பு மணமக்கள் பந்தலைச் சுற்றி வருகின்றனர். அப்போது விளக்கு, அம்மி, அரசாணிமரம் ஆகியவைகளைத் தொட்டு வணங்குகின்றனர். வணங்கும் முறை சற்று மாறுபட்டு இருக்கிறது.

வணங்கும்போது குனிந்து இடதுகையை வாயின்மேல் வைத்தும் வலது கையைப் பின் பக்கமாக வைத்தும் வணங்குகின்றனர். இப்படியே மணப்பந்தலைச் சுற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத் தகுந்தது. இது அடக்கத்தைக் காட்டுவதற்காக இருக்கலாம். இப்படிச் சுற்றி வந்த பிறகு தாலி கட்டுவதற்கான மற்றைய சடங்கு களைச் செய்கின்றனர்.

தாலி கட்டிய பிறகும் பந்தலை மூன்று முறை சுற்றி வந்து பெரியோர்கள் காலில் விழுந்து வணங்குகின்றனர். திருமணத்திற்கு வந்திருக்கும் அனைவரையும் மணமக்கள் வணங்குகின்றனர்; ஒவ்வொருவருக்கும் வணக்கம் செலுத்து கின்றனர். குழந்தையாய் இருந்தாலும் வணங்குவார்கள் இவ் வணக்கத்தைக் 'கூம்பிடரம்பா' என்று மணமக்கள் கூறி வணங்குவார்கள்.

## பெண் அழைப்பு

சில பழங்குடி இனங்களில் திருமணத்தின்போது பெண் அழைப்பு வைக்கிறார்கள். அந்த வகையில் மலையாளி களிடமும் அப் பழக்கம் இருக்கிறது.

## பெண்ணுக்குச் சன்மானம்

திருமணத்திற்கு முதல் நாள் மணமகன் வீட்டினர் பெண்வீட்டிற்குச் சென்று பெண்ணை அழைக்கின்றனர். மணமகனுடன் சென்று அழைத்து வருவதும் உண்டு.

சில சமயம், மணமகனும், மணமகன் பெற்றோர் அல்லது உறவினர்களும் சேர்ந்தே செல்வதும் உண்டு. பெண்வீட்டினர் மணமகன் வீட்டினரை வரவேற்று உணவு தருகின்றனர் பிறகு அவர்கள் பெண்ணுக்குக் கொஞ்சம் தானியத்தையும்; ஐந்து அல்லது ஏழு ரூபாயும் கொடுத்து அழைத்துவருவர். இவ்வாறு பெண் மணமகன் இடத்திற்கு வந்தபிறகு பணம் கொடுத்து அழைக்கிறார் கள். பெண் வீட்டாரை, திருமணம் நடத்தும் மணமகன் வீட்டார் கூட்டமாகச் சென்று அழைக்கின்றனர். அப் போது மணமகன் வீட்டினர் ஒரு விளக்கும், ஒரு புதுப் பாயும், 3 அல்லது 5 கட்டு வெற்றிலையும், ½படி பாக்கும் கொடுக்கின்றனர். இவற்றைப் பெண் வீட்டினர் மிகவும் பணிவோடும் மரியாதையோடும் பெற்றுக் கொள்வார்கள். பெண் வீட்டினர் அவற்றைத் தங்களுடன் வந்த உறவினர் களுக்குக் கொடுப்பார்கள். மணமகன் வீட்டினர் கொடுத்த வெற்றிலைப் பாக்கைக் கொடுக்காவிட்டால் உறவினர் கோபம் கொண்டு திருமணத்திற்கு வரவும் மறுத்துத் திரும்பி விடுவார்கள்.

மணமகன் வீட்டினர், மேளத்துடன் மணப்பெண்ணை அழைத்துச் செல்ல முனைவார்கள்.

மாப்பிள்ளையை முதலில்-அழைப்பார்கள். அடுத்துப் பெண்ணை அழைப்பர்.

இவ் அழைப்பு குதிரையின் மீதுதான் இருக்கும். அதாவது ஊருக்கு வெளியில் மணமகனையும், மணமகளை யும் தனித் தனியே இருக்கச் செய்வர். மாப்பிள்ளையை அழைத்துச் செல்லும்போது, மணமகனைக் குதிரையின் மீது உட்கார வைத்து ஊர்வலமாக அழைத்து வரு கின்றனர் மணமகன் திருமணம் நடைபெறும் இடத்திற்கு வந்ததும் இறக்கி விட்டு, அவனைக் குதிரையோடு பெண் இருக்கும் இடத்திற்கு அழைத்து வருவார்கள்.

## மாமனுக்குச் சன்மானம்

முறைமாமனே பெண்ணைத் தூக்கிக் குதிரைமீது உட்கார வைக்கவேண்டும்.*

பெண்ணைத்தூக்கி உட்கார வைக்கும்போது, 'மாடு, கொடு, பொன்கொடு' என்று பெண்ணின் பெற்றோரிடம் கேட்கிறார். கேட்கும்போது இத்தனை மாடு, இவ்வளவு பொன் என்று கேட்கிறார். பெண் அந்தச் சமயம் தன்னால் முடிந்ததை, மாமன் காலில் வைத்து, வேண்டுகிறாள். மாமன் மனம் மகிழ்ந்து மணப்பெண்ணைத் தூக்கிக் குதிரையின் மீது உட்கார வைக்கிறார். பிறகுதான் ஊர்வலம் தொடங்கும்.

ஊர்வலம், மணம் நிகழும் இடத்திற்கு வந்து சேர்ந்ததும் மாமனே பெண்ணைத் தொட்டுத் தூக்கி இறக்கி விடவேண்டும்.

## குதிரை இல்லா ஊர்வலம்!

முதல் திருமணமாக இருந்தால் மட்டுமே பெண்ணைக் குதிரையின் மீது உட்கார வைத்து ஊர்வலமாக அழைத்துச் செல்வர். இரண்டாம் திருமணமாக இருந்தால் பெண் அழைப்பு உண்டு; குதிரையில் அழைத்துச் செல்வது இல்லை. விதவைத் திருமணமாக இருந்தாலும் திருமணம்

---

* 17.7.85இல் கல்வெட்டு ஆய்வாளர் பாகூர் புலவர் திரு. சு. குப்புசாமி அவர்களுடன் உரையாடுகையில், குதிரை மீது கொண்டு வருவது அவர்கள் அரசர்கள் காலத்தில் ஒரு முக்கிய பதவியில் இருந்தவர்கள் என்பதைக் குறிப்பதாகலாம் என்றார்.

குதிரை : கல்வராயன் மலையில் சில ஊர்களில் வளர்க்கிறார்கள். அல்லது வெளியூர்களிலிருந்து வாடகைக்குக் கொண்டு வருகின்றனர்.

ஆக இருக்கும் மணப் பெண் கர்ப்பவதியாக இருந்தாலும் குதிரை ஏற்றம் இருக்காது.

கர்ப்பவதியாக உள்ள பெண்ணுக்கு முதல் திருமணம் என்றாலும் குதிரையில் ஊர்வலம் வைக்கமாட்டார்கள்.

கர்ப்பவதியைக் குதிரையின் மீது உட்கார வைத்து ஊர்வலம் கொண்டு சென்றால், பெண்ணோ, குதிரையோ இறந்துவிடுவர் என்று இம் மக்கள் நம்புகிறார்கள். அதனால் குதிரையில் அனுமதிப்பது இல்லை என் கிறார்கள்.

## ஆரத்தி எடுத்தல்

மணமகன், மணமகன் குதிரையில் ஊர்வலமாக வரும் போதும் ஊரினர், ஒவ்வொருவருக்கும் ஆரத்திஎடுக்கிறார் கள். இவ்வாறு ஊரினர் தம் வீடுதோறும் ஆரத்தி எடுக்கும் போது மணமக்களுக்கு தனித்தனியாகக் காணிக்கைக் கொடுக்கிறார்கள். அந்தக் காணிக்கை ஐந்து பைசாவி லிருந்து அதிகம் ஒரு ரூபாய் வரை இருக்கும்.

குதிரையை விட்டுத் திருமண வீட்டில் இறங்கியவுடன் பெண்கள் ஆரத்தி எடுத்துத் தேங்காய் உடைக்கிறார்கள். தேங்காய் உடைப்பதற்குத் 'திஷ்டிக் கழித்தல்' என்று கூறு வார்கள்.

## நலங்கு வைத்தல்

திருமணத்திற்கு முதல் நாள் மணமக்களுக்கு நலங்கு இடுவார்கள்.

நலங்கு வைத்தல் நிகழ்ச்சியை முக்கியமானதாகக் கருதுகிறார்கள்.

மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று பெண், மாப்பிள்ளைக்கு முதலில் நலங்கு வைக்க வேண்டும். நலங்கு வைக்கும் போது மாப்பிள்ளை

அடம் பிடிப்பார்; அப்போது பெண் ஒரு பாட்டைப்பாடுவாள். மாப்பிள்ளை மனம் மாறி நலங்கு வைத்துக் கொள்ளச் சம்மதிப்பார்.

மணமக்கள் ஒரே ஊரில் இருந்தால் இருவரையும் ஒரே இடத்தில் [ஆண் வீட்டிலோ. பெண் வீட்டிலோ திருமணம் நடைபெறும் இடத்தில்] சேர்த்து வைத்து உறவினர்களில் வயதானவர்கள் நலங்கு வைக்கிறார்கள்.

வேறு வேறு ஊரினராக இருந்தால் அவரவர் வீட்டில் நலங்கு வைக்கின்றனர் நலங்கு வைத்த பிறகு திருமணம் நிகழும் ஊருக்கு வருகின்றனர்.

நலங்கு வைக்கும்போது மணமக்கள் கிழக்கு நோக்கிப் பார்த்திருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். நலங்கு வைக்கும் முன்போ, பின்போ புதிய ஆடை கட்ட வேண்டுமென்பது இல்லை.

கொஞ்சம் வசதி உள்ளவர்கள் நலங்கு வைத்த பிறகு புதிய ஆடையைக் கட்டிக்கொள்வர்.

விளக்கெண்ணெயை எடுத்து மணமக்களது தலையில் தேய்க்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை ஒற்றையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எண்ணெய் வைத்த பிறகு பிண்ணாக்கை* [சீயக்காய்]யும், ஒருவகைச் சாறு கலந்தநீரையும் (ஆலம்நீர்என்கிறார்கள்] தேய்த்துக் குளிக்கச் செய்வார்கள்.

நலங்கு வைத்த பிறகு உறவினர்களில் வயதானவர் வெற்றிலையையும், அருகம்புல்லையும்ஆலம்நீரில்நனைத்து

---

* இக்காலத்தில் பிண்ணாக்கைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

நலங்கு வைத்துக் கொண்ட மணமக்களைச் சுற்றி வட்ட மாகக் கோடுபோல் போட்டு, மணமக்கள் மீது தடவி விடு வார்கள். இப்படித் தடவி விடும்போது பெரியவர்கட்கு வணக்கம் செய்து கொள்வார்கள்.

நலங்கு முடிந்ததும் உறவினர்களுக்கு விருந்து கொடுக் கின்றனர். விருந்து மிகச் சாதாரணமான வரகுக்கூழ். இந்தக் கூழோடு பன்றிக் கறியும் கொடுப்பார்கள். இதைச் சிறந்த உணவாக எண்ணுகிறார்கள்.



# திருமணச் சடங்குகள்

திருமணத்தைப் பெரும்பாலும் மணமகள் வீட்டில் தான் நடத்துவார்கள்.

## வழிபாடு இல்லை

திருமணத்திற்கு முன்பு, அவரவர் குல தெய்வங்களுக்கு வேண்டுதலோ வழிபாடு செய்வதோ இல்லை; அதே போல் பொங்கல் வைத்தும் வழிபாடு செய்வதில்லை; பலியும் பூசையும் செய்வதில்லை; திருமணத்திற்காக வேண்டிக் கொள்வதோ கூட இம் மலை மக்களிடம் இல்லை.

## திருமணத்தில் ஆடை

திருமணத்தன்று மணமக்களுக்குரிய ஆடைகள் மிகச் சிறப்பானவை என்று கூற முடியாது. சதாரண மான ஆடையாகவே இருக்கும். புதிய ஆடையை அணி விக்கிறார்கள்.

திருமணத்தன்று மணமகளுக்கு நான்கு முழம் துணியை மஞ்சளில் நனைத்து வேட்டி போலக் கட்டிக் கொள்ளச் செய்கிறார்கள். மற்றொரு துணியையும் மஞ்சளில் நனைத்துப் போர்வை போலப் போட்டுக் கொள்ளச் செய்வர். மேலே போட்டுக் கொள்ளும் துணி மார்பைப் போர்த்துக் கொண்டிருக்கும்.

மணப்பெண் முக்காடு போடுவது இல்லை.

இப்போது புடவையைக் கட்டிக் கொள்ளச் செல்கிறார்கள். எனினும் மஞ்சள் துணியைக் கட்டிக் கொள்ள வேண்டும்; ரவிக்கையையும் போட்டுக்கொள்கிறார்கள்.

சிலர், மஞ்சள் துணியைக் கட்டிக் கொண்டு திருமணம் முடிந்ததும் புதிய புடவையைக் கட்டிக் கொள்ளச் செய்கின்றனர்.

பெண்ணுக்குப் புதிய துணிகளை எடுக்க, நாள் கிழமையைப் பார்க்கிறார்கள். ஆனால் பெண் வீட்டாரைக் கேட்டுச் செய்வதில்லை. ஆண் வீட்டினரே பெண்ணுக்கும் புடவையை எடுக்கின்றனர். முதன் முதலாகப் பெண்ணுக்கு எடுக்கும் புதிய புடவைக்குச் சிறப்பாக எந்தப் பெயரையும் சொல்வதில்லை

மணமகனுக்குத் துணி எடுக்கும்போதும் நாள், கிழமையைப் பார்க்கிறார்கள். சிலர் இருவருக்கும் ஒரே சமயத்திலும், சிலர் தனித் தனியான நாள்களிலும் புதிய துணிகளை எடுக்கின்றனர். மணமகனுக்குச் சட்டை, வேட்டி, துண்டு எடுக்கிறார்கள். தலைப்பாகைக்காகத் தனியாக ஒரு துணியையும் எடுக்கிறார்கள்.

### மாப்பிள்ளை வருகை

தாலி கட்டும் நேரத்திற்கு முன்பு மாப்பிள்ளை மணவறைக்கு அழைக்கப்படுவார். மாப்பிள்ளை புதிய ஆடையைக் கட்டிக்கொண்டு வருவார். புத்தாடையோடு, தலைப் பாகை கட்டிக்கொண்டு, வலது கையில் நீளமான ஒரு கத்தியை (குத்துக் கத்தியாகவும் இருக்கலாம்) மார்புக்கு நேராகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஒரு வீரனாக நடந்து வருவார்.

மாப்பிள்ளையும் மணப் பெண்ணும் மணப்பந்தலைச் சுற்றி வந்து, சாலும் கரகமும் வைத்துள்ள இடத்திற்குப் பக்கத்தில், எதிரில் ஒரு பலகையின் மீது நிற்பார்.

மணமக்கள் பலகையின்மீது வந்து நின்ற பிறகு, திருமணத்தை நடத்தி வைக்க வந்துள்ள **கணியான்**[1] ஆரத்தி எடுக்கிறான்.

ஆரத்தி முடிந்ததும் தாலி கட்ட ஏற்பாடு நடக்கிறது.

தாலியைக் 'கணியான்' எடுத்து மணமகனிடம் கொடுக்கிறான். மணமகன் தாலியை மிக மரியாதையாக வாங்கிப் பெண்ணின் கழுத்தில் கட்டுகிறான்.

மணமகன் தாலியைக் கட்டும்போது மணப்பெண்,

'வேடனைச் சுட்டு விட்டுக்
காராளனைக் கைப் பிடித்தேன்'

என்று கூறுகிறாள். மணப்பெண் இதைக் கூறி முடிக்கும் போது மணமகன் தாலியைக் கட்டி விட வேண்டும்.

மணமகன் தாலியைக் கட்டும்போது ஒரு துப்பாக்கிக் குண்டு வானத்தில் வெடிக்கப் படுகிறது.[2] துப்பாக்கி இல்லா விட்டாலும், அதற்குப் பதிலாக வேறு ஒன்றை அடித்துச் சத்தத்தை உருவாக்குகிறார்கள்.

துப்பாக்கிக் குண்டு வெடிக்கும் சப்தத்தைத் தான் அதிகம் விரும்புகிறார்கள்.

மணமகன் தாலியைக் கட்டும்போதுகணியான் ஏதோ மந்திரத்தைச் சொல்லுவது போல முணுமுணுக்கிறான். மந்திரத்தை எனக்குக் கூற மறுத்ததால் தெரிந்துகொள்ள

---

1 கணியான் — நம்பியான் என்றும் அழைக்கின்றனர்.
2 வேடனைச் சுட்டுவிட்டுத் திருமணம் நடத்தியாக நினைவு கூர்வதாகும்.

முடியவில்லை. இந்த மந்திரம் (பாட்டு), சேலம் பகுதியில் உள்ள வேளாளர்கள் திருமணத்தில், மணமகன் தாலி கட்டியவுடன் பாடப்படும்மங்கள வாழ்த்துப் பாடலுடன் ஒத்து உள்ளது என்று கூறுகின்றனர்.

அது.

' புராண புராண வேதம்
வைய சாங்கியம்
காராள வேதருக்கும்
பாலா புளியாக்கா
ஈன தொரு மல்லி
இன மல்லி
நன்றாய் வேற்றம்
செம்பக மல்லி
நல் மாட்டுச் சாணம் கொண்டு
நல் சதுரம் வழிச்சு
சர்க்கரை குத்தி
சம்பா அரைத்து
வளமுள்ள தோட்டி
கொள மாளித்து
மாமன் கொடுக்கிற
வரிசையைக் கேளு
நாக மோதிரம்
புல்லை சரப்பளி
மேல் காது வாளி
வெள்ளை வைத்திலை
வீராணம் பாக்கு
பத்து விரலுக்கும்
பசியாணி மோதிரம்

எட்டு விரலுக்கும்
எணியான மோதிரம்
மூங்கில் போல் சுற்றம்
முசியாமல் வாழ்ந்து
ஆல்போல் தழைத்து
இரு பேரும் பிரியாமல்
காராள வமிசம்
சுகமாக வாழ'

என்பதாகும்.

மணமகன் தாலி கட்டி முடித்தவுடன் கணியான்கூறும் மந்திரத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் திரு மணத்திற்குப் பின்னர் பலரைச் சாட்சியாகவைத்துள்ளதா கவும், அவர்கள் வாழ்த்தியதாகவும், அறியமுடிகிறது.

## சாட்சிகள்

தாலி கட்டி முடித்தவுடன் கணியான் கற்பூரம் ஏற்றி மலை வரலாற்றை வருணிக்கிறான். மலையின் பெயர் ஊரின் பெயர் சிறப்பு முதலியவற்றைப் பற்றியும் கூறு கிறான்.

மலையின் மூன்று ஜாகீர்தாரர்களும் திருமணச் சாட்சி களாய் இருந்ததாகக் கூறுகிறான். ஜாகீர்களோடு, பெரிய கல்வராயன், சின்ன கல்வராயன் ஆகியோரும் சாட்சிக்கு வந்திருப்பதாகக் கூறுகிறான். மேலும் கணியான் கூறு வதில்,

'கொவிரி
குறும்பன்
ஆலடியான்
பீலன்

பெரிஞ்சி
தாதன்
பொடாரன்
குருவிலி'

என்னும் சில பெயர்களையும் கூறுகிறான்.

கொல்லி மலை
பச்சை மலை
சவ்வாது மலை
ஏலகிரி மலை
வத்தல் மலை
சேர்வராயன் மலை
சித்தேரி மலை

முதலான மலைகளின் பெயரையும் கூறுகிறான்.[1]

மேளக்காரன், சொட்டையான்[2]

ஆகியவர்கள் சாட்சியாக இத் திருமணம் நடந்ததுஎன்பது மந்திரத்தின் ஒரு கருத்தாம்.

கணியான் மந்திரத்தைச் சொல்லி முடித்த பிறகு எல்லோருக்கும் வெற்றிலை பாக்கைக் கொடுக்கிறான். கணியான் மந்திரத்தைச் சொல்லும்போது மேளக்காரர் வேகமாகத் தட்டுவார். மந்திரத்தில் வரும்பெயருக்குயாராவது ஒருவர் கணியானிடமிருந்து வெற்றிலைப்பாக்கைவாங்கிக் கொள்கிறார்.

---

1 இப்பெயர்கள் வரிசையாக இல்லை.
2 சொட்டையான்: மேளக்காரனுக்கு ஒத்து பாடுபவர். இவர்கள் பெண்ணுக்குப் பொட்டு வைப்பர். இது திருமணத்திற்குச் சாட்சியாக இருக்கிறது.

திருமணச் சாட்சியாக இருக்கும் தாலி, பித்தளையால் ஆனது. தாலியோடு கறுமணியையும் கட்டிக் கொள்கிறார்கள். கறுமணி மாலையைத்தான் இவர்கள் அதிகம் விரும்புகிறார்கள். சிலர் மஞ்சள் கயிற்றோடு கறுமணியை இரு பக்கமும் கோத்துக் கொள்கிறார்கள்.

தாலி கட்டிய பிறகு வரிசை வைக்கின்றனர். வரிசை வைப்பதை 'மொயி வைத்தல் என்று கூறுகிறார்கள். வரிசை ரூ. ஐந்துக்குள்தான் இருக்கிறது. மணமக்களுக்கு வேண்டியவர்கள் சிலர் துணிகளைப் பரிசுகளாய்க் கொடுக்கிறார்கள்.

## நரை மோதிரம் எடுத்தல்

தாலி கட்டிய பிறகு மணமக்கள் மணப்பந்தலைச் சுற்றி வருகின்றனர். அப்போது மணமகன் பெண்ணின் இடதுகைச் சுண்டு விரலில் நான்கு அணாவை (25 பைசா, அல்லது ஏதாவது ஒரு காசை) வைத்துத் தன் வலது கைச் சுண்டு விரலால், விழாமல் பிடித்துக் கொண்டு சுற்றி வருகின்றனர்.

பிறகு, மணப் பந்தலில் தண்ணீர்ப் பானைகள் இருக்கும்; அவற்றில் ஒரு குடத்தில் மோதிரத்தைப் போட்டு விடுவர். இம் மோதிரத்தை மணமக்கள் தங்கள் வலது கையை விட்டு, மோதிரத்தை வெளியே எடுக்காமல் ஆள்காட்டி விரலாலேயே எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும்.

ஆள் காட்டி விரலால் எடுத்து விரலில் போட்டுக் கொள்ளும் இச் சடங்கை, 'நரை மோதிரம் எடுத்தல்' என்று கூறுகிறார்கள்.

மணமக்களிடம் முயற்சியில், இருவரும் ஒருவரோடு ஒருவர் உராய்ந்து கொள்ளுதலினால் உறவையும் அன்பையும் உண்டாக்க முடிகிறது என்கிறார்கள்.

## மனை ஏறுதல்

மணமகன் தாலிகட்டும் சடங்கிற்கு முன்பு, மணமக்களின் பெற்றோர் மணமக்களுக்கு ஆரத்திஎடுக்கின்றனர்.

மணமகன் தாலி கட்டிய பிறகு மணமக்கள் மணப் பந்தலைச் சுற்றி வந்து வணங்குகின்றனர். பிறகு திருமணத்திற்கு வந்தவர்களையும் வணங்குகின்றனர். மணமக்கள் வணங்கிச் சென்ற பிறகு மணமக்களின், பெற்றோர்கள் மணப்பந்தலை வணங்கியபடிச் சுற்றி வருவர்.

அப்போது அரசாணிமரம், அம்மியை வணங்குவர். விளக்கை ஏற்றி வைத்து அதையும் வணங்குவர்.

பிறகு, மணமக்களுக்கு அவர்களது பெற்றோர் ஆரத்தி எடுக்கின்றனர். பந்தலில் ஆரத்தி எடுப்பதை 'மனை ஏறுதல்' என்று கூறுகின்றனர். அச்சமயம் மேளம் அடிக்கின்றனர்.

## ஆறு கட்டுதலுக்குச் செல்லுதல்

தாலி கட்டி முடிந்த பிறகு மணமகள் செய்யும் ஒரு வகைச் சடங்கினை 'ஆறு கட்டுதலுக்குச் செல்லுதல்' என்பார்கள்.

மணமகள் சில தோழிகளோடு மண் கலசத்தைத் தலையில் வைத்துக் கொண்டு ஆறு இருக்கும் இடத்திற்குச் செல்கிறாள். கலசத்தோடு கொஞ்சம் அரிசியைக் கொண்டு ஆற்றை அடைந்ததும் பெண்ணுக்குத் தோழிகள் பாது காப்பாய் இருப்பதாகப் பாவனை செய்கின்றனர்.[1]

---

1 பெண் வேடர்குலத்தவள். வேடனைக் காராளன் கொன்று மணந்து கொண்டதால், பெண் தன் உயிரைப் போக்கிக் கொள்வாளோ என்று பாதுகாப்பாக இருக்கிறார்களாம்.

மணப் பெண் ஆற்றில் மிகவும் வருத்தம் உள்ளவள் போல் இருக்கிறாள். அப்படி இருக்க வேண்டுமென்று தோழியர் கூறுகின்றனர். மணமகள் கொண்டு சென்ற அரிசியை ஆற்றில் எறிந்து விட்டு, மண் பாத்திரத்தில் நீரை நிரப்பிக் கொள்கிறாள்.*

**'வேடனைச் சுட்டு விட்டுக்**
**காராளனைக் கைப்பிடித்தேன்'**

என்று கூறிக்கொண்டு மணப்பெண் நீர் நிரம்பிய கலசத்தைத் தலையில் வைத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப் படுவாள்.

## ஏசக் கூட்டுதல்

ஆறுகட்டுதல் முடிந்து, மணமகள் தண்ணீர்க் கலசத்துடன் வீட்டிற்கு வருகிறார்கள்; வரும்போது துக்கம் தாளாமல் வருவது போன்ற பாவனையோடு வருகிறாள்.

மணமகளின் துக்கத்தைத் தாங்காமல் அவளுக்குப் பாதுகாப்புக்காகச் சென்ற தோழிகள் அழுவார்களாம். அதற்கு எய்...எய்...என்று துக்கத் தொனி தொனிக்க ஒரு வகையான சத்தத்தை எழுப்பிக்கொண்டே வருவார்கள். இது வேடனைச் சுட்டதற்காகவும் அவன் இறப்புக்காகவும் தாங்கள் அழுதுகொண்டு வருவதாகும் என்று கூறு வார்கள்.

இப்படிப் பெண்கள் குழுவாகக் கூடிக் சத்தத்தை உருவாக்குவதற்குத்தான் **'ஏசக்கூட்டுதல்'** என்று பெயர்.

இந் நிகழ்ச்சியைத் தெரு வழியாக வரும்போது அனைவரும் பார்க்க விரும்புகிறார்கள். ஆறு கட்டச் செல்லும் போதும், ஏசக் கூவி வரும்போதும் மேளம் அடித்துச் செல் கின்றனர்.

---

* இந்தச் சடங்கை வேடனுக்குப் புண்ணியாதானம் செய்வதாகக் கூறுகிறார்கள்.

# வேறு சில சடங்குகள்

## காறித் துப்புதல்

ஆறு கட்டுதலுக்கு மணப்பெண் ஆற்றுக்குச் சென்றதும், மணமகன் வீட்டிலேயே இருப்பான். வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலைப் பாக்கைப் போட்டுக்கொண்டு இருப்பான். மணமகள் ஏசக்கூட்டுதலோடு வீடு வருவாள். தண்ணீர்க் கலசத்தோடு வீட்டிற்கு வந்தவுடன், மணமகன் எழுந்து கலசத்தை வாங்க வேண்டும். அப்போது மணமகன் தன் வாயில் இருக்கும் வெற்றிலைப் பாக்கு எச்சிலை மணப்பெண்ணின் கால்களில் துப்புவான். பெண் எச்சிலைக் கழுவிக் கொள்ள வேண்டும். இதற்காக மணப்பெண். தான் கொண்டுவரும் கலசத்தில் உள்ள தண்ணீரை எடுத்துக் கழுவிக் கொள்வாள்.



நீர்க்கரகம் ஒரு பக்கம் சிறிய துவாரம் வைத்து இருக்கும் படியாகக் செய்யப்பட்ட மண் பாத்திரமாகஇருக்கும். துவாரத்தைச் சிறிய் குச்சியால் மூடித் தண்ணீர் ஒழுகாமல் செய்து மணமகள் கொண்டு வருவாள்.

மணமகள் நீர்க் கலசத்தில் இருக்கும் மூடியை எடுத்து மூன்று முறை நீரைக் கொஞ்சம்குடித்து மணமகள் எச்சில் பட்ட இடத்தில் நீரைத் துப்புவாள்.

நீர் துப்பிய பிறகு, பெண்ணை ஆரத்தி எடுத்து வீட்டிற்குள்ளே அழைத்துச் செல்வார்கள்.

## மெட்டிப் போடுதல்

ஆலம் சுற்றி, ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துக் சென்றதும், மணமகளுக்கு (சாதாரணமாக) மெட்டி அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

முன்பு ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் மெட்டியை அணிவிக்கும் நிகழ்ச்சிகள் நடந்ததாம். இப்போது இது போன்ற சடங்கு இல்லை. எப்போதும் ஆணும் பெண்ணும் மெட்டியைப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டுமாம். அப் பழக்கமும் இப்போது இல்லை.

இப்போது மெட்டியை அணிந்து கொண்டிருக்கும் ஆண்களைப் பார்க்க இயலவில்லை.

திருமணத்தன்று மட்டும் மெட்டியை மணமகன் போட்டுக் கொண்டு இருப்பான். அதே போல் பெண்களும் திருமணத்துற்குப் பிறகு மெட்டியைப் போட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை.

திருமணம் ஆகியும் மெட்டி போடாத பெண்கள் பெரும்பாலோர் உள்ளனர். பெண்ணுக்கு ஆணும் ஆணுக் குப் பெண்ணும் மெட்டியைப் திருமணததன்று மட்டும்

அணிவித்துக் கொள்வதோடு சரி; அதன் பிறகு மெட்டி யைத் தேடுவதில்லை.

## பால் பழம் இல்லை

திருமணம் முடிந்து சடங்குகள் எல்லாம் நடந் தேறிய பிறகு, முதல்இரவு நிகழ்ச்சியை மணமகன் வீட்டில் வைப்பர்.

அன்று மாலை மணமக்கள் ஊர்க் கோயிலுக்குச் செல் வார்கள். கோயிலுக்குச் சாதாரண முறையில் ஒரு அபிஷே கமோ, தீபாராதனையோ செய்வார்கள். பெரும்பாலா னோர் கோயிலுக்குப் போவதே இல்லை. வீட்டிலேயே வழிபாடு செய்வார்கள்.

முதலிரவு என்பது முக்கிய நிகழ்ச்சியாக இல்லை. திருமணத்திற்குப் பெண் வீட்டிலிருந்து கொண்டு வந்த பாய் தலையணையை முதன் முதலாக அன்று பயன்படுத் திக் கொள்ள வேண்டும்.

முதல் இரவில் பால் பழம் இல்லை; இருவரும் வரகு கஞ்சி, கறி உணவோடு சாராயத்தைக் குடித்து மகிழ்வர்.

## திருமண விருந்து

விருந்து மாப்பிள்ளை வீட்டில் நடக்கிறது. சாமை, வரகு ஆகியவற்றைக் கொண்டு சமைத்த உணவே விருந்து, விருந்துக்கு ஊரார் அனைவரையும் அழைப்பர், இந்த உணவுக்குப் பன்றிக்கறி அல்லது ஆட்டுக்கறி கண்டிப்பா யிருக்கும். சாராயமும் கொடுப்பார்கள். அனைவரும் குடித்து மகிழ்வார்கள்.

மணமக்களுக்கும் இந்த உணவையே கொடுப்பார்கள்.

சிலசமயம் அரிசிச் சோறு கொடுக்கப்படுவதும் உண்டு பெரும்பாலும் அரிசிஉணவு எந்த விருந்திற்கும் கொடுக்கப் படுவதில்லை.

## திருமணத்தில் பூ மாலைகள்

திருமணத்திற்கு மண மக்களுக்குத் தனித் தனியாக பூ மாலைகள் கட்டப்படும். மணப் பந்தலும் காட்டுப் பூக்களால் அலங்கரிக்கச் செய்வார்கள். காட்டுப் பூக்களைக் கொண்டு மணக்களுக்குப் பூ மாலை கட்டுவர்.

சில சமயங்களில் நகர்ப் புறத்திலிந்து பூமாலை வாங்கி வருவதும் உண்டு, முக்கியமானவர்கள் திருமணத்தில் கலந்து கொண்டால் அவர்களுக்கு இந்த மாலையைப் போடுவர்; மரியாதை செய்வார்கள்.

காட்டுப் பூக்களால் பூமாலை தொடுப்பதற் கென்று ஒவ்வொரு ஊருக்கும் ஒரு குடும்பம் உள்ளது. அவர்களும் மலையாளிகளே. திருமணம் போன்ற விசேஷ நாட்களில் முன் கூட்டியே சொல்ல வேண்டும். மாலை தயாராகிவிடும் மாலை கட்டிக் கொடுப்போர் வீட்டினை **மாலைக் காரர்வீடு** என்று அழைப்பார்கள். மாலை கட்டிக்கொடுப் பதற்குத் திருமணத்தின் போது ஒரு தொகையும் விருந்தும் கொடுப்பார்கள். இதுவே, மாலைக்காரர் பெறும் காணிக்கை.

## திருமணத்திற்கு வரி

திருமணத்தின்போது திருமண வீட்டினர் மூப்பனுக் குத் திருமண வரியாக ஒரு தொகையைக் கொடுப்பர். இவ் வரி அவ்வூர் திருவிழாவின் செலவிற்காக எடுத்துக் கொள்ளப் படுவதாகவும் தெரிகிறது.

ஜாகீர்தார்களின் செலவுக்காக இம் மலையாளிகளிட மிருந்து பல வரிகளை ஆண்டுதோறும் வசூல் செய்தார்கள் அவ் வரிகளில் திருமணம் ஆகாதவர்களுக்கு வரி என்றும் திருமணம் ஆனவர்களுக்கு வரி என்றும் வசூலிக்கப் பட்டுள்ளது.

திருமணம் ஆனவர்க்கு ஒரு நபர்க்கு இரண்டுருபாய் களும் திருமணம் ஆகாதவர்க்கு அரை ரூபாய் என்றும் திருமணவரி வசூலிக்கப்பட்டதாம். இது ஜாகீர்தாரர் வருமானம் பற்றிய குறிப்பின் (ஸ்டேட் மெண்டு) மூலம் தெரியவரும்.

## பொரணம் போதல்

திருமணம் முடிந்ததும் பெண் வீட்டார் விடைபெற்று ஊருக்குப் புறப்படுவார்கள். பெண் வீட்டாருக்கு மண மகன் வீட்டார், அரிசி, பருப்பு, ஆடு, சாராயம் கொடுப் பார்கள். பெண்வீட்டார் இவற்றைப் பெற்றுக் கொண்டு ஊருக்கு வெளியே வழியில் சமைத்துச் சாப்பிட்டுச் செல்வர்.

உள்ளூராய் இருந்தாலும் உணவுப் பொருள்களைக் கொடுப்பார்கள்.

பெண் வீட்டார் சென்ற பிறகு ஓரிரு நாட்கள் கழித்து (3, 5 நாள்) மண மக்கள், மணமகள் வீட்டிற்குச் செல்வர்.

மணமகன் மாமியார் வீட்டிற்கு முதல் முறை, இரண் டாம் முறை, மூன்றாம் முறை என்று மூன்று முறை, செல்ல வேண்டும். அப்படி மணமகன் தன் வீட்டுலிருந்து மூன்று முறை மாமியார் வீடு சென்று வருதலைப் **பொரணம் போதல்** என்று கூறுவார்கள்.

முதல் முறைபோவதற்கு **மறு மூச்சி**என்றும்இரண்டாம் முறை போவதற்கு **மல்லாக்கு** என்றும், மூன்றாம் முறை போவதற்குத் **திரும்பவும்** என்றும் கூறுவார்கள்.

மண்மக்கள் வாழ்க்கையின் தொடர்ச்சிக்குப் பொரணம் போதல் முக்கியமாம்.

திரும்ணத்தின் போது எந்தப் பெண்ணும் தன் கணவனை வ்வாகரத்து செய்துவிட முடியாது.

திருமணம் முடிந்ததும் சில நாட்கள் பெண்ணோ ஆணோ பொறுத்திருக்க வேண்டும். அதாவது **பொரணம்**

முடிந்த பிறகுதான் மணமானோர் விவாகரத்து செய்து கொள்ள முடியும்.

பொரணம் போதலின்போதே மண மக்களின் அன்பைப் புரிந்துகொள்ள முடிகிறது என்று கூறுகிறார்கள்.

## நம்பியானே அய்யர்

கல்வராயன் மலையாளிகள் தங்கள் திருமணத்திற்கு நம்பியான் என்பவரை வைத்துத் திருமணத்தை முடிக்கின்றனர். திருமணத்தை நம்பியான் நடத்தி வைக்கிறார். நம்பியான் இவர்களுக்கு அய்யரைப் போல் உதவுகிறார்.

திருமணத்தன்று நம்பியான் தலையில் முண்டாசு கட்டிக் கொள்கிறான் மூப்பன். நாட்டான், கவுண்டன், கங்காணி இருக்க, நம்பியான் கைகட்டி நிற்கிறான்.

## நாட்டுக்கு வணக்கம்

திருமணத்தை ஆரம்பித்து வைக்க நம்பியான் கைகட்டி நிற்கிறான். மூப்பன் நம்பியானைக் கூப்பிடுகிறான். அப்போது நம்பியான் மூப்பன் முதல் அனைவரையும் நோக்கி, 'வணக்கம்' என்று கூறித்தலை வணங்குகிறான் இவ் வணக்கத்தை **'நாட்டுக்கு வணக்கம்'** என்றுகூறுகிறான். பிறகு திருமணத்தை நடத்துகிறான். பிறகு முடிப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு எழுந்து நின்று, 'நாட்டுக்கே வணக்கம்' என்று கூறித்தலை வணங்குகிறான். 'சாமியைத் தொழுகிறேன். சாமியைத் தொழுது முகூர்த்தத்தை முடிக்கப்போறேன்' என்று (நம்பியான்) எல்லோருக்கும் கேட்கும்படியாய்க் கூறுகிறான்.

## சாமியின் சம்மதம்

மூப்பன் முதல் அனைவரும் முடிக்கச் சம்மதம் என்று கூறுகின்றனர். நம்பியான், 'நாட்டைக் கண்டுகிட்டேன்,

சாமியை வருந்த போறேன்' (அதாவது, அனைவரும் சம்மதம் தெரிவித்தனர், சாமியைக்கேட்கப்போகிறேன் என்பதாகும்) என்று பாடுகிறான். அந்தப் பாட்டில் கச்சிராரபாளையம் அம்மன், தாகப்படி அம்மன் முதலான தெய்வங்களின் சம்மதம் வேண்டப்படுகிறது. பாட்டு முடிந்ததும் இந்தத் தெய்வங்களின் சம்மதம் கிடைத்து விட்டதாகவும் கூறுகிறான்.

'பலபல மூப்பன், ஆண்டியப்பன்,[1] அரியப்பன்[2] இவர்களுக்கும் சம்மதம்' சாட்சியும் உள்ளனர்; முகூர்த்தத்தை முடிக்கப் போறேன்' என்று கூறுகிறான்,

மூப்பன் முகூர்த்தத்தை முடிக்கச் சம்மதம் தெரிவித்த பிறகு, நம்பியான் தாலியை எடுத்து மணமகனிடம் கொடுக்க மணமகன் தாலியை மணமகளுக்குக் கட்டுகிறான்.



1 ஆண்டியப்பன் — சிவன்
2 அரியப்பன் -- விஷ்ணு என்று கூறுகிறார்கள்.

# திருமண மேளக்காரர்கள்

## தெரியப் படுத்து

மலையாளிகள், திருமண நாள் குறித்தவுடன் முதலில் மேளக்காரருக்குத் திருமணத்தைப் பற்றித் தெரிவித்து திருமண நாளைக் கூறி அச்சாரம் கொடுக்கின்றனர். திருமணத்திற்கு முதல்நாள் மேளக்காரர்கள் மேளத்தோடு பெரிய மேளம் (தமுரு) பலகை மேளம், சட்டிமேளம்ஆகியவற்றோடு வருகின்றனர்.

மேளக்காரர்கள் வந்தவுடன் திருமண வீட்டின் முன்பு ஊராருக்குக் கேட்கும்படி அடிக்கின்றனர். மேளச்சத்தம் கேட்டவுடன் ஊரினர் திருமண இல்லத்திற்கு வந்து கூடுகின்றனர். இந்த முதல் மேளம் அடித்தலுக்கு 'நாடு கூடுவதற்கு அடிக்கப்படும் மேளம்' என்று கூறுகின்றனர்.

## மேளம் அடிக்கப் பிரித்து உள்ளனர்

மலையாளிகளின் முக்கியமான குடும்பநிகழ்ச்சிகளுக்கு மேளம் வைக்கின்றனர். மேளக்காரர்கள் சமவெளியிலிருந்துதான் வருகின்றனர். இவர்கள் நாட்டிற்கு நாடு தனித்தனிக் குழுவாக இருக்கின்றனர்.

சடையக் கவுண்டன் ஜாகீரில் உள்ள மலையாளிகள் கச்சிராபாளையத்திலும், குறும்பக் கவுண்டன் ஜாகீரில்

உள்ளவர்கள், பாலப்பட்டு, ரங்கப்பனூர் போன்ற ஊர்களிலும் மேளக்காரர்களை அமர்த்துகின்றனர்.

உப்பு நாடு, உழவுநாட்டில் — அக்கராபரத்து காலனி பிள்ளைக்குட்டித் தோட்டியையும்

சுண்டப்பநாடு, மதுநாட்டிற்கு—அரசு வரித் தோட்டியையும் அழைக்கின்றனர். 'இவ்வாறுஅழைப்பதுதிருமணத்திற்குத் தடங்கல் உண்டாகாமல்இருக்கவே' என்கிறார்கள்.

இந்த நாட்டிற்கு இந்தத் தோட்டியைத்தான் அழைக்க வேண்டுமென்று பிரித்து வைத்துள்ளனர்.

சில சமயம் தங்கள் நாட்டிற்கு வந்து மேளம் அடிக்க வேண்டியதோட்டிகள்வரமுடியாதுபோனால், அவர்களின் சம்மதத்தைப் பெற்றுவேறு தோட்டியை அமர்த்திக்கொள்கிறார்கள்.

## மேளக்காரருக்கு ஊதியம்

மேளக்காரர்கள் **நாடு** அழைக்கவும் திருமணத்திற்கும் தனித் தனியாகக் கூலி வாங்குகிறார்கள்.

நாடு அழைக்கப் போகும்போது ஒவ்வொருதடவையும் ரூபாய் பத்துக்குக் குறையாமலும் ரூ. 15.க்குள்ளும் பெறுகிறார்கள்.

திருமணத்திற்கு ரூ 50. முதல் ரூ 60. வரையும் வாங்குகிறார்கள்.

**ஏசக் கூட்டுதல்** சமயம்மேளம் அடிக்கும்போது திருமண வீட்டினர் குளக்கரையில் வெல்லம் கலந்த அரிசி, தேங்காய், வேட்டி, துண்டுகளைமணப்பெண் படைக்கிறாள். படைத்தவற்றை மேளக்காரர்களும் தோட்டியும் வாங்கிக் கொள்கின்றனர்.

## சேவை செய்தல்

மேளம் அடிப்பவர்கள், சமவெளிப் பகுதியில் வாழும் ஆதித்திராவிட இனத்வைச் சேர்ந்தவர்கள்.

மேளம் அடிக்கும் நாட்களில் திருமண வீட்டினர் உணவு தருகின்றனர். அவர்கள் கொடுக்கும் விருந்திலும் கலந்து கொள்கிறனர்.

மேளம் அடிப்பவர்கள் ஒரு குழுவாகவே வந்து செல்வர். குறைந்தது அந்த மேளக் குழுவில் 10 பேர்களாவது இருப்பார்கள்.

மேளம் அடிக்க, மலையாளிகள் இருப்பிடத்திற்குச் செல்வதை 'சேவை செய்தல்' (சேஸ்வ செய்யப்போகிறேன்) என்று கூறுகின்றனர்.

## திருமணத்திற்குப் பிறகு பெண்கள்

திருமணம் ஆன பெண் உடனே புகுந்த குடும்பத்தின் பணிகளில் பங்கெடுத்துக் கொள்வாள்.

திருமணம் ஆன மறு நாளே மணப் பெண் கணவனின் காட்டுப் பணிகளுக்கு உதவியாக இருப்பாள்.

கணவனுக்குச் சாப்பாடு கொண்டு செல்வது, வயல் வேலை செய்வது, கணவனின் பெற்றோர்களுக்கு உதவி களைச் செய்து ஆடு மாடுகளைப் பராமரிப்பது போன்ற பணிகள் முக்கியமானவை.

## சொத்துக்காகப் பயப்படவேண்டும்

திருமணம் ஆன பெண்கள் வயதான மாமியார் மாமனார் ஆகியோர்க்கு எல்லாப் பணிவிடைகளையும் செய்ய வேண்டும்.

மிக்கியமாக மாமனார் மாமியாருக்கு உடல்நிலை முடி யாமல் இருந்தால், மருமகளே எல்லா வேலைகளையும் செய்யவேண்டும். தன்னால் செய்ய முடியாது என்று கூற முடியாது; மறுத்தால், மாமனார் சொத்தில் பாகம் கிடைக்காமல் போய்விடும்; இதற்காகப் பயந்தே ஆக வேண்டும்; செய்தே தீர வேண்டும்.

## மாமனாருக்கு உரிமை

மணமகளுக்கு வயது அதிகமாகவும், மணமகனுக்கு வயது குறைவாகவும் மண வாழ்க்கையைப் பற்றித் தெரியாமலும் இருந்தால், மாமனாரே அந்தப் பெண்ணுக்குக் கணவனாக இருப்பார். அவளது எல்லா நலனிலும் மாமனாரே கவனம் செலுத்துவார். இவர்களுக்குக் குழந்தை பிறந்தால், அக்குழந்தைக்குப் பெண்ணின் கணவனே தந்தையாக இருப்பான்.

இந்த நடவடிக்கைகளை மாமியார் எதுவும் கேட்ப தில்லை; தந்தையை மகனும் கேட்பதில்லை. இத்தகைய நிலையை இப்போது மாறிவிட்டதாகவும் கூறினார்கள்.

இத்தகையவர்களைக் கேட்டபோது கூற மறுத்தனர். இத்தகைய முறை இருந்ததாகவும், தன் தந்தை இப்படி இருந்ததாகவும் ஓரிருவர் கூறியதைக் கேட்டேன்.

பெண்ணின் கணவன், குடும்ப வாழ்க்கையை நன்கு அறிந்துகொண்ட பிறகுதான் கட்டிய மனைவியோடு வாழ்க்கை நடத்தலாம். தந்தையின் குறுக்கீடு இருக்காது.

கணவன் (மகன்) மனக் கோளாறு, உடல் நிலைக் கோளாறு முதலியவற்றால் பாதிக்கப்பட்டுப் போனாலும் மாமனாரே மருமகளுக்குக் கணவனாய் இருந்திருக்கிறார்.

இது அப்பெண்ணின் சம்மதத்தின் பேரில்தான் முடியும் அவள் விரும்பவில்லை என்றால் திருமணம் ஆன முதல் நாளோ, பிறகோகூட அவள் வேறு கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

முன்பு மாமனாருக்கு மருமகள் உடன்பட வில்லையென்றால், மருமகள் பல கொடுமையான வேதனைகளைப் பெற வேண்டியிருந்ததாம். இன்னலுக்குப்பயந்தே பெண்கள் மாமனாருக்கு உடன்பட்டு இருந்தார்களாம்.

இந்த நிலைமை இப்போது மிகவும் குறைந்து விட்டது என்று கூறினார்கள்.



# தாய்மைப் பேறு

## தெரியப்படுத்தல்

கல்வராயன் மக்களிடம், திருமணம் ஆன பெண், தான் கருவுற்று இருப்பதை மற்றவர்கள் மூலமாகத் தங்கள் குடும்பத்தாருக்குத் தெரியப்படுத்துவாள்.

சில சமயங்களில் மருத்துவச்சி மூலமாகத் தெரிந்து கொள்கிறார்கள்.

கர்ப்பமாகி இருப்பதைப் பெண் நன்றாகத் தெரிந்த பிறகே மற்றவர்க்குத் தெரியப்படுத்துவாள்.

## சடங்கு இல்லை

கரு தரித்து உள்ளத்தைத் தெரிந்த பிறகு உறவினர்களும் பெற்றோர்களும் வந்து விசாரிப்பார்கள். பெற்றோர் இரண்டு மூன்று நாள் அழைத்துச் செல்வார்கள்.

கர்ப்பமடைந்த நாள் முதல் பேறுகாலம் வரை கர்ப்பவதிக்கு எந்தச் சடங்கும் செய்வதில்லை. வளைகாப்பு என்னும் சடங்கு இங்கு இல்லை.

ஆனால், உணவு முறையில் மாற்றம் செய்கின்றனர் இனிப்பு, காரம் கலந்த உணவுகளைக் கொடுக்கின்றனர். இவற்றை வாங்கியும் செய்தும் கொடுக்கின்றனர்.

## தாய் வீடு செல்லல்

கர்ப்பமாகி உள்ளவளை, அவளின் பெற்றோர் தங்கள் வீட்டிற்கு மகப்பேறுக்காக அழைத்துச்செல்கின்றனர் இது ஐந்தாம் மாதம் முதல் ஒன்பதாம் மாதம் வரை, எப்போது வேண்டுமானாலும் அழைத்துச் செல்லலாம்; கணவன் வீட்டுச் சம்மதம் அவசியம் தேவை.

தாய்வீடு செல்பவள், தாய்வீட்டின் வசதி, பாதுகாப்பு முதலியனவகளைப்பொறுத்துத்தான்செல்ல முடியும்; வசதி இல்லாவிட்டால் கணவன் வீட்டிலேயே இருந்துவிடலாம். முக்கியமாக அவளுக்கு உதவிக்கான ஆள் பற்றியே சிந்திக்கிறார்கள்.

தாய்வீட்டிற்கு அழைத்துச் செல்ல வரும் பெண்ணின் பெற்றோர் இனிப்பு காரம்வாங்கிவந்துகொடுக்கின்றனர். அழைத்துச் செல்ல வந்ததை ஊராருக்குத் தெரியப்படுத்துகின்றனர். இனிப்பு கொண்டுவந்தஅன்றோ, ஓரிருநாட்கள் கழித்தோ பெண்ணைக் கூட்டிச்செல்கின்றனர். இது வளர் பிறை நாளாக இருக்கும்.

## கணவன் தாடி வளர்க்கிறான்

மனைவி கர்ப்பவதியாக இருக்கிறாள் என்பதைத் தெரிந்தது முதல் கணவன் தலைமுடி, தாடி வளர்க்கிறான். பிள்ளை பெற்ற பிறகு, நல்ல நாளில், தீட்டுக்கழித்த பிறகு முடியை வெட்டிக்கொள்கிறான். சிலசமயம் கோயிலுக்குச் சென்றும் முடியை மழித்துக் கொள்கிறான்.

## பிள்ளை பெறத் தனிக் குடிசை

கணவன் வீட்டிலோ, தாய்வீட்டிலோ இருக்கும் கர்ப்பவதி, பிள்ளையைப் பெற்றெடுக்க, வீட்டிற்கு (ஊருக்கு) வெளிப்புறத்தில் தனியாகஒருகுடிசையைஅமைக்கின்றனர்.

கர்ப்பவதிக்கு வயிற்றுவலி, இடுப்புவலி வந்தால், பிள்ளை பிறக்கும் நேரம் என அறிந்து கொண்டு, அமைத்துள்ள குடிசைக்கு அழைத்துச் சென்று விடுகின்றனர்.

தனிக் குடிசையில் விடப்பட்டவளுக்கு உறவினர்களோ, மருத்துவச்சியோ துணையாக இருக்கின்றனர்.

பெண்ணை அழைத்து வருவதற்கு முன்பும் பிள்ளை பிறந்தபிறகும் அந்தக் குடிசையை மாட்டுச் சாணத்தால் மெழுகுகிறார்கள். பிறகு அந்தக் குடிசையைக் கொளுத்தி விடுவார்கள்; இவ் வழக்கம் இப்போது இல்லையாம்.

குடிசை மண் சுவரால் ஆனது. சிலநாட்களுக்கு முன்பு கட்டிமுடித்துவிடுவார்கள். கதவுகளுக்குப் பதிலாகமூங்கில் தட்டி அல்லதுகாட்டுக் கழிகளால் படல் செய்து மூடுவார்கள். பிள்ளை பெற்று வரும் வரை இந்தக் குடிசை நன்கு பாதுகாப்பாய் இருக்கிறது.

## பிள்ளை பெற்றெடுக்கிறாள்

பிள்ளை ஈன்றெடுக்கக்குடிசைக்குவந்ததும், சிலசமயம் அவளே பெற்றெடுத்து விடுவதும் உண்டு. அதன்பிறகுமற்றவர்கள் உதவியாகஇருப்பர். அந்தச்சமயத்தில்யாரும்உதவி இல்லாதபோது, குழந்தையை அவளே எடுக்க வேண்டும்; தன்னையும் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

முன்பு, பிள்ளைகள் பெற்றெடுத்த முறையைக் கேட்டபோது வியப்பாகவே இருந்தது.

கர்ப்பவதி, பிள்ளை பெற உள்ள சமயத்தில், இரண்டு பக்கமும் இருவர் தாங்கிப்பிடித்துக்கொள்ள, முக்கிமுனகிப் பிள்ளையைப் பெற்றெடுப்பாள்.

உட்கார்ந்த நிலையில் பிள்ளையைப் பெற்றெடுக்கச் செய்வார்களாம்.

கர்ப்பவதியைப் படுக்கச் செய்து கை கால்களை அகலப் படுத்திக் கொள்ளச் செய்வர்; அகலப்படுத்திய காலையும் கையையும் இருவர் பலமாகப் பிடித்துக் கொள்வர். அந்த வேதனையிலேயே அவள் மகவைப் பெற்றெடுப்பாள்.

கர்ப்பவதியை ஒரு மரத்தில் நிற்க வைத்துக்கட்டி விடுவார்கள். பிள்ளையைப் பெற்றெடுத்த பிறகு கட்டுகளை அவிழ்த்து விட்டு. உதவிகளைச் செய்வார்கள். பிள்ளை பெறும் வரை, உதவிக்கு வந்தவர்கள் மறைவாக இருப்பார்களாம்.

பிள்ளை பெறக் கஷ்டப்படும்போது சூடு போட்டுப் பிள்ளை பெறச் செய்வார்களாம்.

குடிசையில் பிள்ளை பிறக்கும் முன்பும் பிறந்த பிறகும் அவளே தனக்கு உணவைத் தயாரித்துக் கொள்வதும் உண்டு. வீட்டிலிருந்து கொண்டுவந்து கொடுப்பதும் உண்டு.

## வீட்டிற்கு அழைத்தல்

பிள்ளையைப் பெற்றெடுத்தவளை உடனே வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவது இல்லை. 7 நாட்கள், 9 நாட்கள், 15 நாட்கள், ஒரு மாதம் எனக் கணக்கிட்டு, ஏதேனும் ஒரு நாளில் அழைத்துச் செல்கின்றனர்.

வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வரை குடிசையில் தான் இருக்கவேண்டும். திட்டுக் கழித்து வீட்டிற்குப் போகும்வரை மாமிச உணவைக் கொடுப்பதில்லை. கருவாடு கலந்த உணவை மட்டும் கொடுக்கிறார்கள்.

## தாய்க்குப் பத்தியம் உண்டு

குழந்தை பிறந்த பிறகு, தாய்க்கு மளிகைப் பொருட்களை வாங்கி வந்து குழம்பு வைத்துக் கொடுக்கிறார்கள். பெண்கள் சாதாரண பத்தியமே இருக்கிறார்கள். பத்திய

உணவாகப், பூண்டு, சீரகம், மிளகு கலந்த உணவை 5 முதல் அல்லது 9 நாட்கள் வரையிலும் கொடுக்கிறார் கள்; பத்தியம் முடிந்த பிறகே பெரும்பாலும் வீட்டிற்கு அழைத்து வருகிறார்கள்.

பத்திய உணவிற்குத் தினையை வறுத்துக் குத்திக் கஞ்சியாகக் கோடுக்கிறார்கள். வரகுக் கஞ்சியையும் கொடுக்கிறார்கள்; அரிசிச் சோறு அதிகம் இல்லை. வசதி உள்ளவர்கள் அரிசிச் சோறு கொடுக்கிறார்கள்.

வீட்டிற்கு அழைத்து வரும் வரை மனைவியை கணவன் குடிசைக்கு வெளியே இருந்து பார்த்து விட்டுப் போகலாம். உள்ளே வந்து பார்க்க அனுமதிப்பதில்லை.

## குளிக்கிறார்கள்

குழந்தை பிறந்த உடன் ஒரு சில மணி நேரம் கழித்து வெந்நீரில் தாயைக் குளிக்கச் செய்கிறார்கள். குழந்தைக் கும் தண்ணீர் ஊற்றுவார்கள். இருவருக்கும் இடுப்புவரை தான் தண்ணீர் ஊற்றுவார்கள்.

பிறந்த சில மணி நேரத்திற்குள் குழந்தைக்குப் பால் கொடுக்கச் சொல்கிறார்கள். குழந்தைக்குப் பால் முக்கிய உணவாக இருக்கிறது. கழுதைப் பால் கொடுப்பதில்லை; கிடைப்பதில்லை என்கிறார்கள். குழந்தைக்குப் பால் அதிக மாகவே கிடைக்கிறது.

குழந்தை பிறந்த சில மாதங்கள் வரை சிலரை எந்த வேலையையும் செய்ய அனுமதிப்பதில்லை. அப் பெண்டிர் காட்டு வேலைகளைச் செய்வதில்லை.

## தீட்டுக் கழிக்கிறார்கள்

குழந்தை பிறந்த பிறகு, தனியான குடிசையிலிருந்து வீட்டுக்கு அழைக்க நல்லநாளைப் பார்க்கிறார்கள். திங்கள் புதன், வெள்ளி முதலிய நாட்களில் தாயை வீட்டுக்கு

அழைத்து வருகிறார்கள், அந்த நாளில் தாயை அழைத்து வருவதைத்தான் 'தீட்டுக் கழித்தல்' என்று கூறுகின்றனர்.

அழைத்து வரும் அன்று வீட்டைச் சாணத்தால் மெழுகிக் கோமியம் தெளிக்கிறார்கள்: வீட்டில் விளக்கு ஏற்றி வைக்கிறார்கள்.

வீட்டிற்கு வந்தபோது, வீட்டில் உள்ளவர்கள் ஆலம் கரைத்து, கற்பூரம் காட்டி, தாய்க்கும் குழந்தைக்கும் ஆலம் நீரைப் பெட்டு வைத்து உள்ளே அழைப்பார்கள்.

வீட்டிற்கு வருவதற்கு முன்பு, தாய் சிலவற்றைப் பார்க்கத் தடை செய்யப்படுகிறாள். இல்லத்திற்கு அழைத்து வரும்போது சகுனம் பார்க்கிறார்கள்.

வீட்டிற்கு வரும்போது தாய் இதைப் பார்க்கலாம், இதைப் பார்க்கக் கூடாது என்று எதுவும் இல்லை.



# திருமணமும் வழக்கும்

திருமணம் ஆனவன், வேறு திருமணத்திற்கு மனைவியின் சம்மதம் பெற வேண்டுமென்று இருந்தாலும், பெண் சம்மதிக்கவில்லை யென்றால், மூப்பனிடம் கூறி விட்டு வேறு திருமணம் செய்து கொள்ளலாம்.

இத் திருமணத்தின் மீது முதல் மனைவி பஞ்சாயத்தார் மூலம் வழக்கிடலாம். இவ் வழக்கை முதலில் ஊராருக்குத் தெரியப்படுத்துவர். பஞ்சாயத்து கூடி இருவரையும் விசாரிப்பார்கள். பஞ்சாயத்தாருக்கு வழக்கு கட்டுப்படாமல் போனால், வழக்கு நாட்டாண்மைக்குச் சென்று பின்னர் மூப்பனுக்குச் செல்லும்.

நாட்டாண்மை அளவில் வழக்கு கண்டிப்பாய்த் தீர்ந்து போய்விடும். முடியாமல் போனால் மூப்பனுக்குத் தெரியப்படுத்தி, மூப்பன் மூலம் வழக்கைத் தீர்த்து விடுவார்கள்.

## தண்டனையும் அபராதமும்

திருமண வழக்கில் குற்றம் ஆண் பக்கம் இருந்தால் சிறிய தண்டனையாக அபராதம் விதித்து, இருவரையும் வாழச் சொல்வதும் உண்டு. அதற்கு முதல் மனைவி வாழச்

சம்மதம் இல்லையென்றால். மனைவிக்கு மூப்பன் சொல்லும் தொகையைக் கணவன் அபராதமாகச் கட்டிவிட வேண்டும்.

பெண்ணின் மீது தவறு இருந்தால் ஆணுக்கு அபராதத்தைப் பெண் கொடுக்க வேண்டும். வழக்கில், பெண் வேறு ஒருவனைத் திருமணம் செய்வதாக இருந்தால், அவனே பெண்ணின் சார்பாக அபராதத்தைக் கட்ட வேண்டும். அல்லது பெண்ணின் பெற்றோர் அல்லது உறவினர் அபராதத்தைக் கட்டவேண்டும். பெண்ணின் அபராதத் தொகையை மணக்கிற ஆணே கட்ட வேண்டியிருக்கிறது.

அபராதம் என்பது, முன்னர் நடைபெற்ற திருமணச் செலவுத் தொகையைப் பொறுத்து வாங்கிக் கொடுக்கப்படும். அபராதமாக வாங்கப்படும் பணத்தைப் **'பரிசம் திருப்பிக் கொடுத்தல்'** என்று கூறுகிறார்கள்.

பணம் கட்டமுடியாமல் போனால் அதற்காக மூப்பனது வீட்டிலோ, நிலத்திலோ குறிக்கப்படும் காலம் வரை கூலி பெறாமல் (சாப்பாடு உண்டு) வேலை செய்ய வேண்டும். பெண் அடிமையாக வேலை செய்ய வேண்டும்.

## தம்பியைத் திருமணம் செய்தல்

அண்ணன் இறந்து போனால் அவன் மனைவி, கணவனின் தம்பியைத் திருமணம் செய்து கொள்ளலாம். இது பெண்ணின் விருப்பமே. சில சமயம் சொத்துக்காக கணவனின் தம்பியை மணக்க முடியாது என்று தெரிவித்தால், இறந்த கணவனின் குடும்பத்தினர் பெண்ணின் மீது வழக்குத் தொடுத்து அபராதம் வாங்குவதும் உண்டு.

## அபராதம் கட்டினால் இனத்தில் சேரலாம்

ஒரு மலையாளப் பெண் மலையாளியைத் தவிர வேறு இனத்து ஆடவனுடன் குடும்ப வாழ்க்கை நடத்திப்

பின்னர் திரும்பி வந்தால், அவளைத் தம் இனத்தில் சேர்த்துக் கொள்கின்றனர் ஆனால் அதற்குப் பஞ்சாயத்தார் தீர்மானம் செய்ய வேண்டும்.

அந்தப் பெண் பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரிக்கப்படுகிறாள். பஞ்சாயத்தாரின் முடிவுகளை அந்தப் பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்தார் முடிவுகள் சில சமயம் மிகக் கோடூரமாக இருக்குமாம். அதற்காகப் பெண்கள் திரும்பி வருவதே இல்லை* என்று அறிந்தேன்.

தண்டனையாக அபராதமும் விதிக்கப்படும். அபராதம் கட்டியவள், இனத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவாள்.

வேறு இனத்து ஆடவனுடன் சென்று வாழ்ந்து கொண்டிருப்பவளைப் பற்றியோ, அவள் மீதோ விசாரணை எதுவும் இராதாம். அவள் சார்பாக யாரும் அபராதம் கட்டுதலோ தண்டனை பெறுதலோ இல்லை.

---

★ கச்சிராபாளையம் என்னும் ஊரில் ஒரு முகமதியர் ஒரு மலையாளப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவர் இறந்து போன பிறகு, அவள் தனித்தே வாழவேண்டி, வேறு ஊருக்குச் சென்று விட்டாள். இவ்வூரில் சிலர் மலையாளிப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ்கிறார்கள்.

தகவல் : 5-10-86 R. உமாபதி. LEE, தமிழ் நாடு மின்சார வாரியம் வளவனூர்.

## மறுமணமும் காரணமும்

மறுமணம் இம் மக்களிடம் இருந்தாலும்பழங்குடிகளிடம் ஒரு வித்தியாசமான முறையில் இருக்கிறது.

திருமணம் ஆன ஒருவாரத்திற்குள் விவாகரத்துசெய்து கொள்ளலாம். கல்வராயன் மலை மக்களிடம் மறுமணம் என்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது.

ஒருவன் முதல் மனைவியின் சம்மதம் கிடைத்து விட்டால் தினமும் ஒரு திருமணம் செய்து கொள்ளலாம். சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டால் இவர்கள் குற்றமாகக் கருதுகிறார்கள். மறுமணத்திற்காக ஆண்கள் பெண்களைப் பல இன்னல்கள் கொடுத்துச் சம்மதிக்க வைத்து விடுகிறார்கள். சம்மதிக்காவிட்டால் பெண்ணின் நிலமை திண்டாட்டம்தான்.

திருமணத்தில் முதல் மனைவிக்கு விருப்பம்இல்லாவிட்டால், அவள்கணவனைவிவாகரத்துசெய்துவிட்டு,அவளும் வேறு ஒருவனை மறுமணம் செய்து கொள்ளலாம்.

ஆணுக்கு ஒரு சட்டம் பெண்ணுக்கு ஒரு சட்டம் என்று இவர்களிடம் திருமணத்தில் பாகுபாடு இல்லை.

## சொத்து வேண்டி மறுமணம்

முதல் மனைவிக்குக் குழந்தைகள் பிறக்க வில்லை என்றால் வேறு குழந்தையை எடுத்து வளர்ப்பதில்லை. அதற்குப் பதிலாக மறுமணம் செய்து கொள்கிறார்கள்.

குழந்தை இல்லாமல் போனால் சொத்து சகோதரர்களுக்குச் சென்றுவிடும். சொத்து வேண்டும் என்பதற்காக மறுமணம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

## முதல் மனைவியின் இறப்பு

திருமணம் செய்த பிறகு மனைவியோ, கணவனோ இறந்து போனால், மறுமணம் அனுமதிக்கப்படுகிறது. மறு மணம் இவர்கள் இனத்திலேயே செய்து கொள்ள வேண்டும். வேறு இனத்தில் திருமணம் செய்து கொள்ள அனுமதி இல்லை.

மனைவி இறந்து போனாலும், விவாகரத்து செய்து கொண்டாலும் மறுமணம் செய்து கொள்ளலாம். இந்த மறுமணத்திற்குப் பெற்றோர், ஊரார் உடன் இருந்து செய்து வைக்கின்றனர்.

இந்த மறுமணம் முதல் திருமணத்தைப் போல் ஆடம்பரமாக இருக்காது. மிகச் சாதாரணமாகவே இருக்கும்.

ஒரு பெண், தன் கணவனைப் பிடிக்கவில்லை என்று கூறி விட்டு, வேறு ஒருவனுடன் சென்று வாழலாம்; திருமணமும் செய்து கொள்ளலாம்; செய்யாமலும் வாழலாம். தான் ஒருவனோடு வாழப் போவதை முன் கூட்டிப் பஞ்சாயத்தாரிடம் சொல்லிவிட வேண்டும்.

வேறு ஒருவனுடன் வாழ விரும்புபவள், தாலி கட்டிக் கொள்ள வேண்டும் என்ற முக்கியமில்லை. தாலி இல்லாமல் மனைவியாக இருக்கலாம். பெண் விரும்பினால் தாலியைத்தானே போட்டுக் கொள்ளலாம்.

மறுமணத்தைப் பொறுத்த மட்டில் தாலி முக்கியமான தாகக் கருதப்படவில்லை.

விதவைத் திருமணத்திற்கும் மறுமணத்திற்கும்சடங்குகளும் பரிசப் பணமும் உண்டு. ஆனால் சடங்குகள் குறைவாக இருக்கும். பரிசப் பணம் சொற்பமாக வசூலிக்கப் படுகிறது என்று தெரிவித்தனர்.

## குழந்தைச் சடங்குகள்

கல்வராயன் மலை மக்களிடம் குழந்தைகளுக்குச் செய்யும் சடங்கு முறைகள் விசித்திரமானவையாக இருக்கின்றன.

குழந்தை பிறந்து, முதல் அழுகை தொடங்கியவுடன் தாய், பால் கொடுக்கத் தொடங்கி விடுகிறாள்.

குழந்தை பிறந்த பிறகு, தொப்புள் கொடியை மருத்துவச்சியோ, பிள்ளை பெற்ற முதிய வயதுடைய தாயோ அறுத்து எடுக்கிறாள். அந்தத் தொப்புள் கொடியை யாருக்கும் தெரியாமல் புதைத்துவிடுகிறார்கள். புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு கல்லையும் வைத்து விடுகிறார்கள்.

## குழந்தைகள் தோஷம்

குழந்தைக்குப் பிறந்த மூன்றாம் நாள் ஐந்தாம் நாள் என்று ஒற்றை நாளில் உடலுக்கு நீர் ஊற்றுகிறார்கள்.

குழந்தை மருந்து என்று சில தழைச் சாறுகளைக் கொடுக்கிறார்கள். அத் தழைகளின் பெயரைக் கூற மறுத்தார்கள். அப்படிப் பெயரைக் கூறினால் குழந்தைக்கு ஆகாதாம்.*

குழந்தைக்குச் செம்பு, பித்தளை ஆகியவற்றால் செய்த காப்புகளைக் கையிலும் காலிலும் போடுகிறார்கள்.

எருக்கஞ் செடியின் நாரைச் சிறிய கயிறாக முறுக்கி அரைஞாண் கயிறு கட்டுகிறார்கள். இந்தக் கயிறு கட்டினால் குழந்தையைப் பேய், பிசாகு அண்டாது என்கிறார்கள்; தோஷத்திலிருந்தும் குழந்தையைக் காப்பாற்றும் என்று கூறுகிறார்கள்.

---

★ இருளர் குழந்தையை முதன்முதல் படுக்க வைக்கும் இரகசியத்தைக் கூறமாட்டார்கள்.

'பாலமணி' எனும் ஒருவகை மணியைக் கடையில் வாங்கி எந்தக் குழந்தையாய் இருந்தாலும் அதற்குக் கட்டு கிறார்கள். இந்த மணியைக் கட்டுவதால் குழந்தை 'பால் எடுக்காது' (பால் கக்காது) என்கிறார்கள். குழந்தைக்குக் 'கிரேப் வாட்டரும்' கொடுக்கிறார்கள். தாய்ப்பால் இல்லாதபோது ஆட்டுப்பால், மாட்டுப் பாலைக் கொடுக் கிறார்கள்.

## திருஷ்டிக் கழித்தல்

பெண் குழந்தையாய் இருந்தால் கறுப்பு வளையலைச் சிறப்பாக அணிவிக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் உடலுக்குத் தண்ணீர் ஊற்றும்போதும் ஒவ்வொரு வளையலாக உடைத்து விடுகிறார்கள்.

கறுப்பு வளையல் 'காற்று, கறுப்புகள்' இடமிருந்து காப்பாற்றவே அணிவிக்கிறார்களாம். பெரும்பாலும் திருஷ்டிக் கழிக்க அணிவிக்கப் படுவதாகக் கூறுகிறார்கள், கறுப்பு வளையலை உடைக்க உடைக்கத், திருஷ்டிக் கழிந்துபோய்விடுவதாகவும் நம்புகிறார்கள்.

## குழந்தைக்குப் பெயர் வைத்தல்

குழந்தை பிறந்த உடனே பெயர் வைப்பது இல்லை. இம் மக்கள் ஓராண்டு வரையிலும் கூடப் பெயர் வைக்கா மல் இருக்கிறார்கள்.[1]

குழந்தைக்குப் பெயரிடுவதற்காக எந்த விழாவும் சடங்கும் செய்வதில்லை; ஊராருக்கும் தெரியப்படுத்துவ தில்லை. முதல் குழந்தையாய் இருந்தால் உறவினர்களை வரவழைத்து விருந்து படைக்கிறார்கள்; அன்று பெயர் வைப்பதும் உண்டு.

---

1 12-6-85 தும்பராம்பட்டு.

ஆண் குழந்தையாய் இருந்தால் பாட்டன் மடியிலும், பெண் குழந்தையாய் இருந்தால் பாட்டியின் மடியிலும் வைத்துப் பெயரிடும் பழக்கம் உள்ளது.[1]

சிலர் பெற்றோர் மடியில் வைத்துப் பெயரிடுகின்றனர்.

பொதுவாக முழுநிலாவுக்குப் பிறகு பெயர் வைக்கிறார்கள். அன்று உறவினர் அல்லது குடும்பத்தினர்க்குப் பன்றிக் கறி சமைத்து விருந்து கொடுக்கிறார்கள்.

குழந்தை பிறந்து தனிக் குடிசையில் இருக்கும்போதே குழந்தைக்குத் தொட்டில் கட்டி விடுகிறார்கள்.

## என்ன பெயர் வைக்கலாம்?

ஆண் குழந்தைக்கு இவர்கள் வணங்கும் ஆண் தெய்வத்தின் பெயரையும், குடும்பத்தில் வயதானவர் (பாட்டன்) பெயரையும் வைப்பதுண்டு. ஆண்டி ராமன், பிச்சன், பிச்சாண்டி, கோவிந்தன், வெள்ளையன், கருப்பன், தீர்த்தகிரி, மூக்கன், தொப்பையன், மொட்டையன், குப்புசாமி, சின்னய்யன் என்பன போன்ற பெயர்களை வைக்கிறார்கள்.

பெண் குழந்தையாய் இருந்தால், பெண் தெய்வத்தின் பெயரை வைக்கிறார்கள். குடும்பத்தில் வயதான பெண்கள், (பாட்டி) பெயரையும் வைப்பதுண்டு.

கரியா, கருப்பாயி, ஜோதி, மண்ணாங்கட்டி, மொட்டை, சிவப்பாயி, முத்து, மல்லிகா, ராமாயி, உண்ணா முலை, சின்னம்மா, பீச்சு என்பன போன்ற பெயர்களை வைக்கின்றனர்.

இப்போதுள்ளவர்களது, பெற்றோர்களின் பெயர்களை அறியும்போது, அவர்கள் பெயர்கள் தெய்வத்தின் பெயர்களாகவே அதிக அளவில் இருக்கின்றன.

---

1 இப் பழக்கம் நீலகிரிமலை இருளர்களிடம் உள்ளது.

## கேட்ட கதை

ஒரு முறை பிள்ளைப் பேற்றுக்காக ஒருத்தி தாய் வீட்டுக்குச் சென்றார். அவள் துணைக்கு யாரும் போகவில்லை. தனியாகக் காட்டு வழியில் செல்லும்போது பிள்ளையைப் பெற்றாள். தானே நச்சுக் கொடியைத் அறுத்துப் புதைத்தாள்; தன் உடலைச் சுத்தம் செய்து கொண்டாள். குழந்தையை எடுத்துக் கொண்டு தன் தாய் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

அவள் பெற்ற குழந்தை, ஆண்குழந்தை. காட்டில் பிறந்த தன் ஆண் குழந்தைக்குக் 'காட்டாளி' என்று பெயரிட்டாள். இவளைப்பற்றி இன்னமும் அரியக் கவுண்டன் நாட்டில் சிறப்பாகப் பேசப்பட்டு வருகிறது.*



* 18-7-85 பாலப்பட்டியில் அரியக் கவுண்டன் ஜாகீர் தாரர் சொல்ல, அறிந்தது.

# குழந்தைப் பருவச் சடங்கு

கல்வராயன் மலை மக்கள் குழந்தைகளுக்கான சில சடங்குகளைச் செய்கின்றனர். மொட்டை அடித்தல், காது குத்துதல் முக்கிய சடங்குகளாக உள்ளன.

## மொட்டை அடித்தல்

குழந்தைக்கு முதல், மூன்றாண்டு ஐந்தாமாண்டு என்று ஒற்றை ஆண்டுகளில் மொட்டை அடிக்கின்றனர். குறிப்பாகச் சித்திரை, ஆடி, தை ஆகிய மாதங்களில் மொட்டை அடிக்கின்றனர்.

மொட்டை அடிக்கப்போவதை மூப்பனிடம்தெரிவித்து நாள் கேட்டுக் கொண்டு, ஊரினருக்கும் உறவினருக்கும் தெரிவிக்கின்றனர்.

சிலர் தங்கள் குழந்தைகளுக்கு மொட்டை அடிக்க திருப்பதி, திருவண்ணாமலை ஆகிய ஊர்க் கோயிலுக்குச் செல்கின்றனர். இவ்விடங்களில்மொட்டைஅடிக்கும்போது பெற்றோரும்உறவினரும்மொட்டைஅடித்துக்கொள்கின்றனர். வெளியூர் கோயிலுக்குச் செல்வது அதிகம் இல்லை; ஊர்க் கோயிலுக்குச் சென்று மொட்டை அடிக்கின்றனர்.

ஊரில் மொட்டை அடிக்கும்போது, நகரத்திலிருந்து மேளம்கொண்டு வருகின்றனர் பெரும்பாலும்பறைமேளத்தைப் பயன்படுத்துகின்றனர். மேளம் அடிப்பவர்க்குச்சிறு தொகையும், விருந்தும், சாராயமும் கொடுக்கின்றனர்.

மொட்டை அடிக்கும்போதே சிலர் குழந்தைக்கு காது குத்துகின்றனர். மொட்டை அடிக்கவும் காதுகுத்தவும் மாலை நேரத்தையே விரும்பிச் செய்கின்றனர்.

மொட்டை அடிக்கும்போதும், காது குத்தும் போதும் மூப்பன் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த நாளில் குழந்தைக்குப் பெயர் வைக்கின்றனர். பெயர் வைக்குமாறு மூப்பனை வேண்டுகின்றனர்.

## காது குத்தல்

குழந்தைக்குப்பெயர் வைக்கும்போது காதுகுத்துதலையும் செய்கின்றனர். பிறகு மொட்டை அடிப்பதும் உண்டு. மொட்டை அடிக்கும்போது காது குத்துவதும் உண்டு. மொட்டை அடித்த பிறகு காது குத்துவதும் உண்டு.

தனியாகக் காது குத்துவதாக இருந்தால் மூப்பனிடம் நாளைக் கேட்டுச் செய்கின்றனர்.

காது குத்தும் அன்று உறவினர்கள் வருகின்றனர். காலை, அல்லது மாலையில் காது குத்துவர். காது குத்துவதற்கு முன்பு கோவிலிலோ, அல்லது வீட்டிலோ ஒரு பூசை செய்வர்.

காது குத்துவதற்குக் காட்டு முள்ளைப் பயன்படுத்துவார்கள். 'களாமுள்', 'காரைமுள்' என்னும் முள்களைப் பயன்படுத்துவர்.

பித்தளைக் கம்பி, வெள்ளிக் கம்பிகளைக்காதில் வளையங்களாக மாட்டுவர். இந்தக் கம்பி வளையம் குறைந்தது ஓராண்டுவரை இருக்கும். பெண் குழந்தையாய் இருந்தால் பித்தளைக் கடுக்கன், கம்மலைப்போட்டு வைக்கின்றனர்,

## மூக்குக் குத்தல்

மூக்குக் குத்தவும் முள்ளையே பயன்படுத்துவர். பெண் குழந்தையாய் இருந்தால் காது குத்தும்போது மூக்கு குத்து வார்கள். பித்தளை மூக்குத்தியை அணிவிக்கின்றனர். இந்தப் பித்தளை மூக்குத்தி போடும் வரை மூக்குக்கு ஒரு குச்சியைச் செருகி வைப்பார்கள்

குழந்தையின் மூக்கு குத்தியிருந்தாலும் பெண் குழந்தைக்குப் பத்து வயதில் மீண்டும் ஒருமுறை காது குத்துவார்.

சிலர் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் போது மூக்குத்தியை அளிக்கின்றனர். மூக்குக் குத்தப்பட்ட பிறகே பெண்ணைத் திருமணம் செய்வார்கள். மூக்கு குத்தப் பட்டால், அந்த வயதைத் திருமண வயதாக எடுத்துக் கொள்வார்கள்.

மூக்குக் குத்தாத எந்தப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்வதில்லை.

வயதுக்கு வராத முன்பு திருமணம் செய்யும் இவர்கள் மூக்குக் குத்தாமல் செய்வதில்லை.

மொட்டை யடிக்கும் போதும், காது — மூக்குக் குத்தும் போதும் புதிய ஆடைகளைக் குழந்தைக்கு அணிவிப்பர்.

குழந்தைகளின் எந்தச் சடங்காய் இருந்தாலும் விருந்து கொடுக்கின்றனர். விருத்தின் போது பன்றி, ஆட்டுக் கறி முக்கியமாக இருக்கும். சாராயம் குடித்தும் மகிழ்வர்.

## பெண்கள் பருவச் சடங்கு

### தனிக் குடிசை

கல்வராயன் மலையில் பெண்கள், முதல் மாதவிடாய் (ருது) ஆனால், அந்தப் பெண்ணை முதலில் வீட்டை விட்டு வெளியேற்றுவார்கள். ஊருக்கு வெளியில் தனிக் குடிசை அமைத்து அதில் தங்கச் செய்வார்கள்.

குடிசை புதியதாகவும் அமைக்கப்படும். குடிசை பெரும் பாலும் அனைவர்க்கும் பொதுவாகவே இருக்கிறது. அந்தக் குடிசையில் சில சமயம் இரண்டு மூன்று பெண்களும் வருவது உண்டு.

## பருவப் பெண் தனியாகவே இருக்க வேண்டும்

குடிசையில் தங்க வைத்த பிறகு பருவமடைந்த பெண் வெளியில் எங்கும் போகக் கூடாது. ஆண்கள் கண்ணில் படாமல் இருக்க வேண்டும். குடிசையில் பலகை அல்லது பாய்களில் படுக்க, உட்காரவேண்டும். மாற்று உடையை வண்ணான் வந்து துவைத்துக் கொடுப்பான். சில சமயம் அவளே யாரும் பார்க்காத நேரத்தில் துவைத்துப் பயன் படுத்திக் கொள்வாள்.

குடிசையில், 7 நாள் முதல் ஒரு மாதம் வரையும் கூடத் தனித்து இருக்கவேண்டி இருக்கும். எந்த (கடினமான) வேலையையும் செய்யக் கூடாது. வீட்டிலிருந்துதான் சாப்பாடு கொண்டு சென்று கொடுப்பார்கள்.

இப்போது, சிலர் தாமே சமைத்துக் கொள்கின்றனர்.

தோழிகளும், பெற்றோர்களும் சென்று பேசலாம். இரவில் அவளோடு தங்கமுடியாது. அக் குடிசையில்ஒருத்தி மட்டுமே தனித்து இருக்க வேண்டிய சூழ்நிலையில், அவளது உறவினர் பெண் துணைக்கு இருக்கலாம். ஆனால் இவள் சற்று தூரத்தில் தான் இருக்கவேண்டும். பெரும் பாலும் தனித்தே இருக்கச் செய்கின்றனர்.

## வீட்டிற்கு அழைத்தல்

குடிசையில் இருக்கும் பருவப் பெண்ணை 7, 9, 15 என்று ஒற்றை நாட்களாகப் பார்த்து, வீட்டிற்கு அழைக்கின்றனர். வீட்டிற்கு அழைக்க முறை மாமன் வந்து தூக்கிக் கொண்டு செல்கிறார். அல்லது நடத்திக் கூட்டி

விரத்துணையாக இருக்கிறார். அடுத்தடுத்து வரும் மாத விடாயிக்கும்மாமன் அழைத்து வருவது உண்டாம்.

வீட்டிற்கு வந்ததும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வைக்கின்றனர். பிறகு வெளிப்புறம் உள்ள திண்ணையில் தங்கச் செய்து உணவு கொடுக்கின்றனர்.* இந்தச் சமயம் சிலசிறிய வீட்டு வேலைகளைச் செய்யக் கொடுக்கின்றனர். திண்ணையில் தங்கிக் கொள்ளத் தனியாக ஒரு பாய் கொடுக்கின்றனர்.

நான்கு அல்லது அய்ந்து நாட்கள் கழித்து வீட்டிற்குள் அழைப்பார்கள்.

## புனித நீரும் விளக்கும்

வீட்டிற்குள் அழைக்கும் அன்று வீட்டைச் சாணத் தால் மெழுகிச் சுத்தம்செய்வார்கள். பெண்ணை உள்ளே அழைத்த பிறகு, கோமியம் தெளிப்பார்கள். மீண்டும் மெழுகி, கோமியம் தெளிப்பார்கள். பிறகு பெண்ணுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் செய்வார்கள். குளித்த பிறகு தீர்த்த (சின்ன திருப்பதி) மலையிலிருந்து கொண்டு வந்த புனித நீரைப் பெண்ணின் மீது தெளிப்பார்கள். வீட்டினுள் நடு வீட்டில் விளக்கேற்றி வைப்பர். அந்த விளக்கை பெண் வணங்கி ஒரு பக்கமாகப் பாயில் உட்கார அவளுக்கு உணவு கொடுப்பார்கள். இதோ, தீட்டுக் கழிந்தது. உணவுக்கு முன்போ, உணவுக்குப் பிறகோ தீர்த்த நீரைக் குடிக்கவும் கொடுப்பர்.

## தூய்மைச் சடங்கு உண்டு

சிலர் மாதவிடாய் ஆன பெண்ணை வீட்டிற்குள் அழைக்கும் நாளன்று, நகர்ப்புறத்திலிருந்து அய்யரை (பிராமணரை) அழைத்துவந்து புண்ணியாவாசனம் என் கிற தூய்மைச் சடங்கைச் செய்வர். அவர் கூறும் மந்திரங் கள் மூலம் தீட்டுப்போகும் என்று கூறுவர். செலவு செய்ய

* 20-7-85 பொட்டியம் கிராமத்தில் நேரில் கண்டது.

இயலாதவர்கள் அய்யர் வீடு சென்று அய்யர் வீட்டில் தூய்மைச் சடங்கைச் செய்து அய்யரிடம் புண்ணிய நீரை வாங்கி வந்து வீடு முழுவதிலும், பெண்ணின் மீதும் தெளித்துத் தீட்டைக் கழிப்பார்கள். இந்த நீரைக் குடிக்கவும் கொடுப்பார்கள்.

## விருந்து

பெண்ணை வீட்டிற்குள் அழைக்கும் போது ஊர்த் தலைவன், கங்காணி நாட்டான் ஆகியோரை அழைப்பர். மூப்பனுக்குத் தெரியப்படுத்துவர். இவர்கள் பெண்ணை வாழ்த்துவர். பின்னர் விருந்து கொடுப்பர்.

மாதவிடாய் ஆன பெண், ஊர்த்தலைவன் அல்லது மூப்பன் வீட்டிற்குச் சென்று பணிவிடைகள் செய்ய வேண்டும். இது நீண்ட காலமாக வழக்கமாய் இருந்து வந்திருக்கிறது; இப்போது இல்லையாம்.

மாதவிடாய் ஆனவளையும், திருமணமான அன்று மணப் பெண்ணையும் மூப்பன்வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும். திருமணம் ஆகாத பெண்ணாய் இருந்தால் பெற்றோரும் திருமணம் ஆன பெண்ணை அவள் கணவனும் அழைத்துச் சென்று விட்டு, மறு நாளோ அல்லது சிலநாள் கழித்தோ கூட்டி வரும் பழக்கம் இருந்துள்ளது.

## சிறிய திருமணம்

முதல் மாதவிடாய் ஆன பெண்ணை வீட்டிற்கு அழைக்கும் போது, பெண்ணுக்கு நாமத்தைப் போடுவார்கள்; விபூதியையும் பூசுவார்கள்.

அதே சமயம் ஒரு சிறிய பையனுக்குத் திருமணம் செய்து விட்டது போல் பாவனை செய்து, திருமண ஊர் வலம் அழைத்து வருவதுபோல அழைத்து வருவர். சில சமயம் உண்மையாக ஒரு சிறுவனைக் கணவனாக்கி இருவரையும் கூட்டி வருவதும் உண்டு. பிறகு விருந்து நடைபெறும்.

## குடிசையை எரித்தல்

முதல் மாதவிடாய் காலம் முடிந்து வீட்டிற்கு அழைத்துச் சென்ற பிறகு,பெண் தங்கியிருந்த குடிசையை எரித்து விடுகின்றனர். இந்தச் சமயம் அவள் பயன்படுத்தியிருந்த பாய் முதலியவற்றையும் எரித்து விடுகிறார்கள்.

பருவம் வந்த பெண் குடிசையில் இருக்கிறாள் என்பதை உணர்த்தக் குடிசையின் கூரையில் வேப்பில்லைக் கொத்தைச் செருகி வைப்பார்கள். வீட்டில் இருக்கும் போது வீட்டின் கூரையிலும் வேப்பிலைக் கொத்தைச் செருகி விடுவர். அவளுக்கு வீட்டில் மறைப்பும் கட்டுவர்.

திருமணம் ஆனவள் மாதவிடாய் ஆகித் தனிக் குடிசையில் இருக்கும்போது கணவன் உதவிசெய்வது உண்டு. மனைவிக்கு உணவை கொண்டுவந்து கொடுக்கிறான்.

குழந்தை உள்ள பெண் மாதவிடாய் ஆனால், தனிக்குடிசையில் இருக்கும்போது குழந்தைக்கும் பால் கொடுக்கிறாள். குழந்தையை வீட்டிலிருந்து கொண்டுவந்து,பால் கொடுத்தபிறகு வீட்டிற்குக் கொண்டு சென்று விடுகின்றனர்: இது குழந்தை, தாயின் உடல்நிலையைப் பொறுத்துச் செய்கின்றனர்.

இப்படி மாதவிடாய் ஆன பெண்களைத் தனித்து இருக்கச் செய்வதும், அவள் இருந்த குடிசையைக் கொளுத்தி விடுவதும் பெண்ணைக் கெட்ட ஆவிகள் வந்து பிடித்துக் கொள்ளாமல் இருக்கவே! ஒரு பெண் மாதவிடாய் (பருவ மடைதலும்) ஆவது கெட்ட காற்று, ஆவிகளின் செயலே என்று நம்புகிறார்கள்.

கெட்ட காற்று குடிசையிலிருந்து பெண்ணுடன் ஊருக்கும் வீட்டிற்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காகப் புனித நீர் தெளிப்பதுடன் அவள் குடிக்கவும் தருகிறார்கள். சில சமயம் ஊர்த் தெய்வங்களுக்கு (முதல் மாதவிடாய்க்கு மட்டும்) பலியும் பூசையும் செய்கின்றனர்.

முதல் மாதவிடாய் வந்த பெண், குடிசையில் தனித்து இருக்கும்போது ஒரு கத்தியுடன் இருக்கிறாள். குடிசையில் எப்போதும் 'தீயகாற்று' சுற்றிக் கொண்டே இருக்கிறதாம். அது குடிசைக்குள் வராமல் இருக்கவும், தன்னை வந்து தாக்காமல் இருக்கவும் பெண் கத்தியுடன் இருக்கிறாள்.

சில சமயம் முதல் மாதவிடாய் ஆன பெண், ஏதோ காரணத்தால் இறந்து விட நேர்ந்தால், தெய்வக்குற்றம் என்றும், தீயக்காற்று ஆவிகளின் கோபத்தால் உண்டானது என்றும் நம்புகிறார்கள். இப்படி இறந்தவள் பிணத்தை ஊருக்குக் கொண்டு வருவதே இல்லை.

இந்த வழக்கங்கள் காலப் போக்கில் சில மாற்றங்கள் அடைந்துள்ளன. இருளர்களிடம் இருக்கும் பழக்க வழங்கங்களோடு இவர்களின் வழக்கங்களும் ஒத்துள்ளது நினைவு கூரத் தக்கதாகும்.

யார், யாரிடமிருந்து கற்றுக்கொண்டார்களோ? இவர்கள் ஒருகாலத்தில் ஒன்றாக வாழ்ந்து பிரிந்ததால் பழக்க வழக்கங்கள் மாறியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.*

---

* 13.6.85. புதுவை வரலாற்றுச் சங்கம்- திரு.F.சிரில் அந்தோணி — உரையாடல்.

# சாவும் சடங்குகளும்

**'பிறந்தவன் இறப்பது உறுதி**
**இறந்தவன் பிறப்பான் என்பது நம்பிக்கை'**

கல்வராயன் மலைவாழ் மக்களிடம்சாவும் அதுபற்றிய சடங்குகள் யாவும், ஒருவகைநம்பிக்கையை ஒட்டியேஇருக்கின்றன.

## செய்தி அறிவித்தல்

ஒருவர் இறந்து போனால் நபர்களின் மூலம் உறவினர்களுக்கு உடனுக்கு உடன் தெரிவிக்கின்றனர். ஒப்பாரியால் ஊர் முழுவதும் தெரிந்துவிடுகிறது. பறை அடித்துச் சாவை ஊரினர் அறிந்து கொள்ளச் செய்கின்றனர்.

ஒருவர் இறந்தவுடன், தேங்காய் உடைத்து, எண்ணெய் விளக்கு ஏற்றி வைக்கின்றனர். விளக்கைக் காரியம்முடியும் வரை எரிய வைக்கின்றனர்.

## மாலையில் ஊர்வலம்

ஒருவர் காலையில் இறந்து போனால், அவர் உடலை அன்றுமாலையே அடக்கம் செய்து விடுகின்றனர். மதியத்திற்கு மேல், இறந்து போனால், இறந்தவர் உடலை இரவு

வீட்டில் வைத்திருக்கின்றனர். உடல் அடக்கம் மாலை 4 மணிக்குள் நடந்துவிடும். இரவில் பிணம் இருக்குமே யானால், உறவினர்கள் இரவில் வந்து சேர்கின்றனர்.

## சாவுக் காணிக்கை

உறவினர்கள் சாவில் கலந்துகொள்ள வரும்போது ஒரு மரக்கால்திணைஅல்லது வரகும், ஒரு வேட்டியும் கொண்டு வந்து கொடுக்கின்றனர். சிலர் நெல்லும் கொடுப்பர். வேட்டியை, இறந்தவர், உடல் மீது போர்த்துகின்றனர். தானியத்தை வீட்டின் ஒரு பக்கத்தில் கொட்டி வைக்கின்றனர். பிறகு இறந்தவர் குடும்பத்தாரோடு சேர்ந்துஒப்பாரி வைத்து அழுகின்றனர்.

## பாடையும் ஊர்வலமும்

இறந்தவரைத் தூக்கிச் செல்ல மூங்கில், காட்டுக் கழிகளை அப்போது வெட்டி வருகின்றனர்.

பச்சைக் கழிகளை ஊருக்கு வெளியில் வைத்து அங்கே தான் பாடையை அமைக்கின்றனர்.

பிணத்தை எடுப்பதற்கு கொஞ்சம் நேரத்திற்கு முன்பு ஊருக்கு வெளியே கொண்டுவந்து, பிணத்திற்குத்தண்ணீர் ஊற்றிச் சுத்தம் செய்கின்றனர்.

பிணத்தைக் கழுவுதலுக்கு* முன்பு பறை அடித்துவந்து கோடி போடுகின்றனர் கோடியைதாய்வீட்டினர்கொண்டு வருகின்றனர்.

பிணத்தைக் கழுவி விட்டதும் உடனே பாடைக்கு கொண்டு வருகின்றனர். இறந்தவரின் உறவினர் பாடையைத் தூக்கிச் செல்கின்றனர்; உறவினர்கள் இல்லாத போது ஊரினர் தூக்கிச் செல்வர். இதற்குமூப்பன் அல்லது நாட்டான் சொல்ல வேண்டும்.

---

* கழுவுதல் என்றே கூறுகின்றனர்.

கணவன் இறந்து போனால் மனைவி, குளிக்க வைக்கும் வரை அழுகிறாள். பிணத்தோடு மனைவியையும் குளிக்கச் செய்கின்றனர். கணவன் பிணத்தைக் கொண்டு செல்லும் போது மனைவி சுடுகாடு செல்வதற்கு அனுமதிப்பதில்லை ஊருக்கு வெளியில் வந்து நின்று விடுகிறாள்.

## பிண அடக்கம்

சுடுகாடு ஊருக்கு கிழக்கில் அல்லது வடக்கில் பெரும்பாலும் இருக்கிறது; அதுவும் ஆற்றுக்கு மேல் பகுதியில். கொஞ்சம் அருகில், சிறு குன்றுகள் இருக்குமிடத்திலும் அமைத்துள்ளனர்.

இடுகாட்டிற்கு வந்த பிணத்தை உட்கார வைத்தும், படுக்க வைத்தும் புதைக்கின்றனர். தலையைத் தெற்குத் திசையில் இருக்கும்படியும் கிழக்குப் பக்கம் சாய்த்தும் புதைக்கின்றனர்.

பிணத்திற்குப் போட்ட துணியோடு புதைக்கின்றனர். ஒரே ஒரு துணிமட்டும் இருக்கவேண்டும்.

பிறக்கும்போது ஒன்றுமில்லாமல் பிறந்தாலும் சாகும் போதாவது துணியோடு போகட்டும் என்று கூறுகிறார்கள்.*

துணி இல்லாமல் புதைத்து விட்டால், இறந்தவரின் ஆவி துணிக்காக அலையும் என்றும் கூறுகிறார்கள்.

சாவுக்கு, மூப்பன், நாட்டான், கங்காணி வந்து கலந்து கொள்வர்.

இறந்த உடன் நாற்ற மடிக்காமல் இருக்க சந்தனத்தைப் பூசுகின்றனர் சந்தனக் குச்சிகளை எரிய் வைக்கின்றனர். சந்தனத்தோடு ஒருவகைத் தழைச் சாற்றையும் பூசுகின்றனர்.

---

* அடுத்து பிறக்கும்போது நல்ல இடத்தில் பிறந்து ஆடையோடு, செல்வத்தோடு வாழட்டும் என்பதற்காகவாம்.

உறவினர் வரவில்லை என்று இரவில் பிணத்தை வைத்திருப்பதில்லை. ஆனால் உறவினரை எதிர்பார்கின்றனர்.

இடுகாடு ஊருக்கு வெளியில் 1 கி. மீ தூரத்திற்குள் தான் இருக்கிறது.

திடீரென்று இறந்தவர் உடலைப் புதைக்கின்றனர். நோய், விஷம் ஆகியவற்றால் இறந்தவர் உடலை எரிக்கின்றனர் வயது வந்து, சாதாரணமாக இறந்தவர்களையும் புதைக்கின்றனர்.

பிணத்தைத் தூக்கிச் செல்லும்போது வெடி வெடிக்கின்றனர். பிணத்தை எரிக்கும் போதும் புதைக்கும் போதும் முக்கியமானவர்கள் சவரம் செய்து கொள்கின்றனர். சவரம் செய்பவனை **நாசவன்*** என்று கூறுகிறார்கள். இவனுக்கு இங்கு கால் ரூபாய் கொடுக்கின்றனர்.

பிணத்தைப் புதைத்தோ, எரித்தோ வீடு திரும்பும் போது ஆற்றில் தலை மூழ்கிக் குளித்துச் செல்கின்றனர். சிலர் வீட்டிற்கு வந்தும் குளிக்கின்றனர். குளிக்காமல் வீட்டிற்குள் போவதில்லை.

சவரம்செய்து கொண்ட குடும்பத்தில் முக்கியமானவர் பிணத்திற்குத் தீ வைக்கிறார். தந்தைக்கு மகன், அண்ணனுக்குத் தம்பி, தம்பிக்கு அண்ணன் ஆகியோர் வைக்கின்றனர்.

தீ வைப்பதற்கு முன்பும், புதைப்பதற்குமுன்பும்மூன்று முறை சுற்றி வந்து தண்ணீர்க்குடத்தை உடைக்கின்றனர். குடம் உடைத்த பிறகு கற்பூரம் ஏற்றுகின்றனர்.

---

★ நாவிதன்

சுடுகாட்டிலிருந்து வீட்டிற்கு வரும்போது திரும்பிப் பார்க்காமல் வரவேண்டுமாம்.

திரும்பிப் பார்த்தால், இறந்தவர் ஆவி பார்ப்பவரின் மூலம் ஊருக்குள் வந்து விடுமாம். பார்த்தவர், ஆவியால் நோய்கண்டு இறந்து போவார் என்று நம்புகின்றனர்.

அடக்கம் செய்து விட்டு வந்தவுடன் விருந்து; வரகு, தினை கஞ்சியே! பிறகு சாராயமும் இருக்கும்.

## சாவுக்கான பிற சடங்குகள்

கணவன் இறந்து போனால், மனைவி வெள்ளைப் புடவை கட்டிக் கொள்ள கட்டாயப்படுத்தப்படுவதில்லை. கலர்ப்புடவை கட்டிக் கொள்ளலாம்.

பெற்றோர் (அம்மா, அப்பா) இறந்தால் மகன் காரியம் செய்யும் வரை முடி வளர்க்க வேண்டும்.

பெண்டாட்டி (மனைவி) இறந்தால், கணவன் முடி வளர்க்க வேண்டியதில்லை மகன் தான் வளர்க்கவேண்டும்.

காரியத்து அன்று சவரம் செய்து கொள்கின்றனர்.

குழந்தை, இறந்து போனால் யாரும் முடி வளர்ப்பதில்லை; காரியமும் செய்வதில்லை.

மனைவி பூ, நகைகளை அணியக் கூடாது. இது காரியம் வரை கட்டாயம் மேற்கொள்ளப்படும். (வேறு திருமணம் செய்யாதிருந்தால்) மறு மணம் செய்யும் வரை பூவும் நகையும் அணிய அனுமதியில்லை.

விதை விதைக்கும் நாளில் குடும்பத்தில் யாராவது இறந்து போனால், மறுநாள்தான் விதைக்கப்படும். அதே சமயம், காட்டில் விதை, அறுவடை முடியாமல் இருந்தால் இறந்தவர் மனைவி, தந்தை, மகன் எவராய் இருந்தாலும் காட்டு வேலை முடியும் வரை ஊருக்குள் வரமாட்டார்கள்

பிணத்தைத் தூரத்திலிருந்தே பார்த்து விட்டுப் போய்விடுவர். அப்படிச் சாவில் கலந்து கொண்டால் மீண்டும்காட்டு வேலைக்குச் செல்ல முடியாது. 16 நாள் கழித்துச் செல்ல வேண்டும். முக்கியமாக அறுவடை நாளில் இந்த முறையைக் கண்டிப்பாகக் கொள்கிறார்கள்.

அதே போல் உறவினர் குடும்பத்தில் அறுவடை இருந்தால், உறவினர் ஊருக்கு வெளியில் இருந்து தாங்கள் வந்ததைத் தெரியப்படுத்துகின்றனர். சாவு வீட்டினர் தூரத்தில் நின்று கண்டு கொண்ட பிறகு, திரும்பிச் சென்று விடுகின்றனர்.

## சாவு, தெரியப்படுத்தாமல் இருந்தார்கள்

முன்பு யார் இறந்து போனாலும் தெரியப்படுத்தாமல் இருந்தார்கள்; பறை அடிப்பதில்லை. உறவினர்களுக்குத் தெரியப்படுத்துவம் இல்லை;இறந்த சில நாட்கள் கழித்தே செய்தியைத் தெரியப்படுத்தினார்களாம்,

இதற்கான தெளிவான செய்தியைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஜாகீர் முறையின்போது, (சுதந்திரம் வாங்குவதற்கு முன்பு) மலையாளிகள் துன்புறுத்தப் பட்டால், இறந்து போக நேர்ந்தால், இதை அறிந்த அரசு ஜாகீர் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்குமாம். அதற்கு ஜாகீர் எந்தச் சாவையும் தெரியாதவாறு கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்களாம். மீறித் தெரிய வந்தால் கடுமையாகத் தண்டிக்கப் பட்டார்களாம். இதனால், மலையாளிகள் எந்த இறப்பையும் தெரியப் படுத்தாமல்இருந்தார்கள். பல ஆண்டுகள் இறந்தவர்க்கும் (உயிரோடு இருப்பதாக) வரியைக் கொடுத்துள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது.

## பால் தெளித்தல்

புதைத்த மறுநாள் பால் தெளித்தல்· 'பால்' என்றே இரண்டாம் நாளைத் தெரியப்படுத்துகின்றனர்* பாலுக்கு ஆட்டுப்பால் மாட்டுப் பாலைப் பயன்படுத்துகின்றார்கள்.

பால்தெளித்தல் அன்று வீட்டைச் சுத்தம் செய்கிறார்கள். கோமியம் தெளிக்கிறார்கள். பால் தெளித்தலுக்குச் சுடுகாட்டிற்குச் செல்லும்போது கோமியம், அரிசிச்சோறு வதக்கிய முருங்கைக்கீரை, வெற்றிலைபாக்கு. சுற்பூரம், தேங்காய் முதலியவைகளைக் கொண்டு செல்கிறார்கள். இறந்தவர்க்கு நெருங்கிய உறவினர் (சவரம் செய்து கொண்டவர்) அவற்றைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்கிறார்.

சவக்குழியைச் சுத்தம் செய்து கோமியம் தெளிக்கின்றனர். கொண்டு சென்ற பொருள்களை வைத்துப் படைக்கின்றனர்.

சுடுகாட்டிற்குச் சென்றவர்கள் கொண்டு சென்ற சோற்றைச் சாப்பிட்டு வெறும் தட்டுகளோடு திரும்புகின்றனர் எதையும் மீதும் எடுத்து வரக் கூடாதாம்.

சுடுகாட்டுக்குச் சென்றவர்கள் வீட்டிற்கு வந்த பிறகே வீட்டில் அனைவரும் சாப்பிடுகிறார்கள். இந்தச்சாப்பாட்டிற்கு முன்பு சாவின்போது உறவினர் கொண்டு வந்து கொடுத்த நெல் அல்லது தானியங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

பால் தெளிக்கச் செல்பவர்கள் மேலே உள்ளபடி சுற்றிலும் ஒவ்வொரு கல்லை எடுத்து வைக்கின்றனர். தலைப் பகுதியில் ஒரு சதுரமான அல்லது கூம்பான ஒரு கல்லை

வைத்து, அதன் மீது நீர் ஊற்றிப் பொட்டு வைத்துக் கொண்டு சென்றதை, வடக்குப் பக்கம் வைத்துப் படைக்கின்றனர். படைத்த பிறகு தலைபக்கம் ஒருமண் பாத்திரத்தில் நிறைய தண்ணீர் ஊற்றி வைத்துவிட்டு வீடு திரும்புகின்றனர்.

இறந்தவர் தாகத்தோடு இருந்தால் அந்தத் தண்ணீரைக் குடிப்பாராம். அப்படி அவர் வரும்போது ஆவியாக வருவார் என்றும் கூறுகின்றனர்.




இவர்கள், புதைகுழி அமைக்குகின்ற பாங்கு கற்கால வரலாற்று முறையினை நினைவூட்டுகிறது.

## கரும காரியம்

இம் மலைமக்கள் இறந்தவர்க்கு 16 ஆம் நாள் கரும காரியம் செய்கின்றனர்.

இறந்தவர் கணவனாய் இருந்தால், மனைவியும், மனைவியாய் இருந்தால்கணவனும் காரியம் முடியும் வரை ஊரை விட்டுச் செல்வதில்லை. வேறு எந்த நிகழ்ச்சிகளி லும் கலந்து கொள்வதில்லை.

இறந்தவரை வீட்டில் வைத்திருந்த இடத்தில், கிழக்கு நோக்கி 16 ஆம்நாள் வரையில் காலை,இரவு வேளைகளில் விளக்கு வைக்கின்றனர். சிறிது உணவைவைத்தும் படைக் கின்றனர்.

காரியம் செய்யப்போகும் நாளை உறவினர் ஊரினருக் குத் தெரியப்படுத்துகின்றனர். காரியத்தன்று, இறப்பன்று உறவினர் கொண்டு வந்து கொடுத்த நெல், தானியங்களை உணவுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

காரியத்தன்று வீட்டில் சமைத்த உணவைச் சுடுகாட் டிற்கு எடுத்துச்சென்று படைத்து, அங்கேயே உண்டுவிட்டு வருகின்றனர்.

மாமன், மச்சான் உறவு முறையினர் சவரம் செய்து கொண்டவருக்குத்தலைக்கட்டுசெய்கின்றனர். தலைக்கட்டு முடிந்தவுடன் விருந்து நடக்கிறது. இந்த விருந்தைக்'காரிய விருந்து' என்றுகூறுகிறார்கள். இந்தவிருந்தின்போது ஆடு, பன்றிக்கறியையும் கொடுக்கின்றனர். இங்கும்கண்டிப்பாய் சாராயம் உண்டு. கறியும்சாராயமும்இல்லாதது ஒருகாரிய விருந்து ஆகாது என்று கூறுகின்றனர்.

கணவன் இறந்துவிட்டால், காரியத்திற்கு முதல் நாள் இரவு தாலி அறுப்பு நிகழ்ச்சியை நடத்துகின்றனர். தாலி அறுப்பு நிகழ்ச்சியைத் திருமணமான பெண்கள் பார்க்க விரும்புகிறார்கள்.

காரியம் முடிந்தபிறகு சொத்து பற்றியபேச்சு உண்டா கிறது. சொத்துப்பிரித்தல் என்றுகூறுகின்றனர். கணவனை இழந்தவளிடம் வேறு திருமணம்பற்றிக் கேட்கிறார்கள்.

திவசம் ஓராண்டு கழித்து வரும் 'திவச'த்தைச் சிலர் செய்கின்றனர். அதற்கு அய்யரிடம் சென்று நாள் கேட்டு வருகின்றனர். சில சமயம் அய்யர் வீட்டிலேயே திவசத்தை நடத்தி விடுகின்றனர்.

அய்யர் மலைக்கு வந்ததும் திவசம் செய்கிறார்.

திவசம் செய்வதற்குக் காய்கறி, வேட்டியுடன் பணம் ரூபாய் பத்துக்கு மேலும் கொடுக்கிறார்கள்.

திவசத்தன்று எச்சில்படாமல் சமைத்துச் சுடுகாட்டிற்குக் கொண்டு சென்று படைத்து, அங்கேயே சாப்பிட்டு விட்டுத் திரும்புகின்றனர்.

## கர்ப்பவதியைப் புதைத்தல்

கர்ப்பவதி இறந்து விட்டால் சவக்குழியை மிகஆழமாகத் தோண்டுவார்கள்; குறைந்தது 5 அடிக்குமேல் இருக்குமாம்.

பிணத்தைப் புதைக்கும்போது அனைவரையும் போகச் செய்து விட்டு வயிற்றைக்கிழித்துக் குழந்தையை எடுத்துத் தனியான இடத்திலோ, தாய்க்குப் பக்கத்திலோ வைத்துப் புதைக்கும் பழக்கம் உள்ளது.

முதல் குழந்தை இறந்து போனால், அதைப் புதைக்குமிடத்தை யாருக்கும் தெரியப்படுத்துவதில்லை.

## பழைய முறை

புதைப்பதும் எரிப்பதும் ஆகிய பழக்கம் தற்போது சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகுதான் ஏற்பட்டுள்ளதாம். முன்பு பிணத்தைப்பாறைக்கு இடைப்பகுதி,மலைப் பகுதி, குகைப் பகுதி ஆகிய இடங்களில் போட்டுவிட்டு வந்து விடுவார்களாம். பிணத்தின் மேல் முள், பச்சைத் தழைகளைப்போட்டு விடுகிறார்கள். இப்போதும் சிலர் செய்கிறார்களாம்; சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

இந்த மலைப் பகுதிகளில் எலும்பு, மண்டை ஓடு களைப் பல இடங்களில் காணமுடிந்தது.

சவக்குழியில் நடப்பட்ட கல்லைக் கொண்டுதான் அடையாளம் காணமுடிந்தது.

இவர்கள், புதைக்கும்போது பிணத்தின்வாயில் துளசி வெற்றிலையை வைக்கின்றனர், ஆடை, அரிசியைப் போடுவது, துணி, சாப்பாட்டிற்குப் பஞ்சமில்லாமல் அடுத்த பிறவியில் இருக்கவேண்டும் என்பதற்காகவே என்று விளக்கம் கூறுகிறார்கள்.

மரண வேளையில் அவர் வாயில் தேன், பால், அல்லது தண்ணீரை ஊற்றுகின்றனர். அவற்றை விடும்போது விடுபவர் பெயரைச் சொல்லுகின்றனர். அதைப் புண்ணிய மாகக் கருதுகிறார்கள்.

பிணத்தைப் புதைத்தால் இறந்தவரின் ஆவி அங்கேயே இருக்குமென்று பிணத்தைப் புதைக்காமல் இருந்தார்கள். இதனால் மிருகங்களின் மூலம் தொல்லையும் துன்பமும் உண்டாகவே பின்பு புதைக்க ஆரம்பித்தார்களாம்.

முன்பு, பிணத்தை யாருக்கும் தெரியாமல் (பார்க் காமல் இருக்கச் செய்து) கொண்டு சென்று புதைப்பார் களாம் பிணத்தைப் புதைத்துவிட்டுவரும்போது வளைந்து வளைந்து வருவார்களாம். நேரே வந்தால் ஆவி தொடர்ந்து ஊருக்குள் வந்துவிடும் என்பதற்காகஅப்படிச் செய்திருக்கிறார்கள்.

கணவன் இறந்த ஒருசில நாட்களில் மனைவி இறந்து போனால், அவள் வேறு திருமணம் செய்யாமல் இருக்கும் போது கணவன் புதைகுழிக்குப் பக்கத்திலேயே புதைக் கின்றனர். முன்பு ஒரே குழியில் புதைத்துள்ளார்கள்.

கல்வராயன் மலை வாழ் மக்களிடம் உள்ள பழக்கங் களில் பல தமிழ் நாட்டு மக்களிடம் உள்ள தென்பதை இந் நூலைப் படிக்கையில் உணரலாம்.

★

'கல்வராயன் மலை மக்கள்'



அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி

## கல்வராயன் மலையில்

# அரசு வளர்ச்சிப் பணிகள்

தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் கல்வராயன் மலைப்பகுதி மலைவாழ் மக்களுக்காக நமது அரசு செயல்படுத்திவரும் வளர்ச்சிப் பணிகள் பலவாகும்,

தென்னார்காடு மாவட்டம் கள்ளக் குறிச்சி வட்டத்தில் மேல் பகுதியில் சேலம் தருமபுரி மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களை எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. கல்வராயன் மலைப் பகுதியின் முன்னாள் ஜாகீர்தாரர்கள்.

1 அரியக் கவுண்டன் ஜாகீர்

2 குறும்பக் கவுண்டன் ஜாகீர்

3 சடையக் கவுண்டன் ஜாகீர்

ஆகிய ஜாகீர்தாரர்களிடமிருந்து 17-8-1976 இல் அரசால் ஏற்கப்பட்டு, நிலவரித்திட்டம் பணிகள் கிராம அமைப்புகள் உருவாக்கப்பட்டப் பின், 7-2-1965 அன்று அரசாணை 70 (ஊ.வ) மூலமாகக் கல்வராயன் மலை வளர்ச்சி வட்டாரம், வெள்ளிமலையைத் தலைமை யிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டது.

ஜாகீர்தாரர்கள் வசம் சில நூற்றாண்டுகளாக் கொத்தடிமைகளாகச் சிக்கித் தவித்த 5, 628 குடும்பங்களைச் சார்ந்த 24, 945 மலைவாழ் மக்கள் கொத்தடிமையிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட்டனர். அவர்களது

வாழ்வுமேம்பாட்டுக்காக, இதுகாறும் அரசினால் ஆற்றப் பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகளின் விவரங்களைப் பல்வேறு துறைவாரியாகக் கீழே தரப்படுகிறது.

மலை வாசிகளின் மேம்பாட்டினில் முன்னுரிமையளித்து கல்வி, சமூக நலம், மருத்துவ வசதி, கால்நடை பராமரிப்பு சாலை வசதி தோட்டக்கலை, கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், கிராமக் குடிநீர் வசதி, மின்வசதி.வன வளர்ப்புத் திட்டம். பட்டுப் பூச்சி வளர்ப்பு, கிராமத் தொழில் வளர்ச்சி, மண்வளப் பாதுகாப்புத் திட்டம்,சமுதாய வளர்ச்சித் திட்டம், கூட்டுறவுத் துறை, வருவாய்த்துறை முதலான அரசின் பல்வேறு துறையினர் இந்த மலைவாழ் மக்களின் முன்னேற்றத்துக்காக ஆர்வத்துடன் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்கள். இன்றுவரை நடந்துள்ள குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பணிகளின் விவரங்களையும் காண்போம்.

## 1. கல்வி

அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மலையில் 33 ஊர்களில் செயல் புரிகின்றனர். இங்கு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்திச் சிறந்த கல்விப் பணி ஆற்றி வருகின்றனர்.

முறை சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத் தின் கீழ் 1991-92 இல் முறைசாரா கல்வியில் 400 பேர் களும், வயது வந்தோர். கல்வித்திட்டத்தில் ரு. 1.44 இலட் சம் செலவில் மேற் கொள்ளப்பட்டு, இம் மலை மக்கள் 400 பேர்களும் பயன் பெற்றுள்ளனர்.

## 2. சமூக நலம்

சமூக நலத்துறை மூலமாக இம் மலை வாழ் மக்களுக் காக 59 அங்கன்வாடி பாலர் பள்ளிகள் நடத்தப்படுகின் றன.மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்குச் சத்து மாவு, சத் துணவு மற்றும்பேறுகால உதவிகளும்வழங்கப்படுகின்றன.

மலை வாழ் மகளிருக்காகத் தையல் பயிற்சி அளிக்கப்படு கிறது. இலவசத் தையல் இயந்திரம் வழங்கி பெண்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள், 101ம் மலைவாழ் உறைவிடப் பள்ளி சத்துணவு மையமும் செயல்பட்டு வருகின்றன. மொத்தம் 4759 குழந்தைகளும் 978 முதியோர்களும் பயன்பெற்று வருகிறார்கள்.

1991—92 -ஆம் ஆண்டில் பாலாப்பட்டு கிராமத்தில் 20 நபர்களுக்கு ரூ. 38 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

தையல் கலைக்காக 14 நபர்களுக்கு ரூ. 0. 50 இலட்சம் செலவில் தையல் தொழில் கற்றுத்தரப் பட்டுப் பயன் பெற்றுள்ளனர்.

## 3. மருந்து வசதி

மலைவாழ் மக்களுக்காக 5 அரசு மருந்தகங்களும் ஒரு 'டோனிடா' மருந்தகமும் இயங்கி வருகின்றன. மருத்துவத் துறையினரால் சிறப்பு இலவச மருத்துவ முகாம்கள் நடத் தப்பட்டு வருகின்றன.

1991 - 92 ஆம் ஆண்டில் 10 துணை சுகாதார நிலையங்கள் ரூ. 3.62 இலட்சத்தில் கீழ்க்கண்ட ஊர்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

எழுத்தூர், மாத்தூர், புதுப் பாலப்பட்டு, தும்பை, நொச்சிமேடு, ஆலம் பூண்டி, பரங்கிநத்தம், கிலாக்காடு, தும்பராம்பட்டு, இருப்பிடம், வஞ்சிக்குழி—வண்டக்க பாடி (இருப்பிடம்) தொரடிப்பட்டு.

மேலும், பெண்கள் சுகாதாரச் செவிலியர் இருப்பிடங் கள் நான்கும் ரூ. 1.29 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.

## 4. கால்நடைப் பராமரிப்பு

மலைவாழ் மக்களுக்கென்று இம்மலையில் இரண்டு கால் நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

கால் நடை வளர்ச்சிக்கு 1991-92 ஆம் ஆண்டில்கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மலைவாழ் மக்களுக்குக் கடன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வெள்ளிமலையில் 215 நபர்களுக்கு ரூ 2.975 இலட்சத்தில் கறவை மாடுகள்,செம்மறி ஆடுகள், தீவனம் வளர்ப்பு மற்றும் தோட்டக் கலையில் பயன்பெறும் கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.

மோட்டாம்பட்டி லேம்ப் சொஸைட்டி மூலம் 5 நபர்களுக்கு செம்மறி ஆடுகள் ரூ 0.40 இலட்சத்தில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிளாக்காடு லேம்ப் சொஸைட்டி மூலம் 263 நபர்களுக்கு ரூ. 6. 48 இலட்சத்திற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 5. சாலை வசதி

கல்வராயன் மலைப் பகுதியில் 75. 8 கி மீ. நீளமுள்ள 4 தார்ச் சாலைகளும் 30 கி.மீ நீளமுள்ள 2 மண்சாலைகளும், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 13 சாலைகளும் போடப் பட்டுப் பராமரிக்கப் பட்டு வருகின்றன. தேசிய நெடுஞ்சாலைத் துறைக்காகக் கரியாலூர் முதல் கிளாக்காடு வரையிலும் சாலை அமைக்க, வருவாய்த் துறையினரால் நிலஎடுப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

கல்வராயன் மலையில் இணைப்புச் சாலைகள் 45கி. மீட்டரும் முக்கிய சாலைகள் 5 மொத்தம் 103கி. மீட்டர் தூரம் உள்ளது. மொத்தம் ரூ 303.00 இலட்சத்தில் கச்சிராப் பாளையம் முதல் பொட்டியம் வரை 8.80கி.மீ சாலையும், வெள்ளிமலையிலிருந்து சேராப்பட்டு. வரை 29.480கி.மீட்டரும், கருமாந்துறையிலிருந்து மணியார் பாளையம் வரையில் 11கி.மீட்டரும் சாலைகள் போடத் திட்டங்கள் மேற்கொண்டு சாலை போடும் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

## 6. தோட்டக் கலை

மலைவாழ் மக்களுக்கென்று தோட்டக்கலைத் துறையினரால் தென்னை மா, கொய்யா, மாதுளை, சில்வர் ஓக் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப் பட்டு வருகிறது.

1991 - 92 இல் தோட்டச் கலையில் ரூ4.00 இலட்சம் ஒதுக்கீட்டில் 400 நபர்களுக்குக் தனிநபர் தோட்டக்கலைப் பராமரிக்கும் பொருட்டுச் செலவினம் மேற்கொண்டதுடன் இதற்கு முன் பராமரிக்கப்பட்ட நபர்களுக்கு 2 ஆவது வருட கண்காணிப்பிற்கு ரூ.0.40 இலட்சம 400 நபர்களுக்கு வழங்கப்பட்டு தனிநபர் தோட்டக்கலை பராமரிக்கப் பட்டது இவை தவிரவும் தோட்டக்கலைத் தொடர்பான செடிகளை வளர்க்கவும் தேவையான உபகரணங்கள், பயிற்சி சுற்றுலா, விளம்பரம் செய்தல் போன்றவற்றிற்காக ரூ.0.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டு அப் பணிகளில் செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## 7. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

மலைவாழ் மக்களுக்கென்று கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 90-91 ஆண்டுவரை 1094 வீடுகள் இலவசமாகக் கட்டித்தரப்பட்டுள்ளன. இதற்கு ரூ 202.390 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதன் விவரம் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் 921வீடுகள் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் மூலம் 80 வீடுகள், ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 93 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளது.

திட்டங்களின் மூலம் 1991 92 இல் மேலும் 15 வீடுகள் ரூ.2.40 இலட்சத்தில் தாட்கோ நிறுவனத்தாரிடமிருந்து தாள் வாளப்பாடியில் கட்டப் பட்டு வருகிறது. 1992 - 93 ஆம் ஆண்டிற்காகக் கிளியானூரில் 6 வீடுகள் ரூ 0.96 இலட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது.

இப்போது கட்டப்பட்டு வரும் வீடுகளையும் சேர்த்தால் மொத்தம் 115 வீடுகள் மலைவாழ் மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 8. கிராமக் குடிநீர் வசதி

மலைவாழ் மக்களுக்கென 118 குடிநீர்க் கிணறுகள், 14 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், 143 கைப் பம்புகள் குடி நீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன.

1991—92 ஆம் ஆண்டில் இம்மலை வாழ் மக்களுக்கென 6 கைப்பம்புகளும் 5 திறந்தவெளி கிணறுகளும் முறையே ரூ 2. 46 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் ரூ 3. 50 இலட்சம் மதிப்பீட்டில் 11 ஊர்களில் குடிநீர் வசதிக்கான பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளன.

## 9. மின்வசதி

கல்வராயன் மலைப்பகுதியில் 91 கிராமங்களுக்கு மின்சாரத் துறையினரால் மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது. 8 கிராமங்களில் டீஸல் ஜெனரேட்டர் மூலமும் 32கிராமங்களில் சூரிய சக்தி மூலமும் மக்களுக்குக் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளன.

164 குடியிருப்புகளில் 134 குடியிருப்புகளுக்குத் தெரு விளக்கள் போடப்பட்டுள்ளன.

## 10. வனவள்ளர்ப்புத் திட்டம்

இம் மலைப் பகுதிக்கென்று வனக் கோட்டம் அமைக்கப்பட்டு, கோட்டவன அலுவலர் தலைமையில், அலுவலர்கள் பணிபுரிகின்றனர். வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள், வழங்குதல் மரம் வளர்க்கத் தகுதியாக நிலங்களைப் பயன்படுத்துதல் நிழலுக்காக மரங்கள் அமைத்தல்,மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றனர்.

**1991 - 92** இல் காடு வளர்ப்புக்கு ரூ. 15. 99 இலட்சம் ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட விவரப்படியான இனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ. 15-9 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இத் திட்டங்களின் விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | மூங்கில் கன்றுகள் வளர்ப்பு | —200 ஹெக்டேர் |
| 2 | புளியங் கன்றுகள் வளர்ப்பு | — 50 ,, |
| 3 | சந்தனமரக் கன்றுகள் வளர்ப்பு | —120 ,, |
| 4 | சாலை ஓர மரக்கன்றுகள் வளர்ப்பு | —5 கி. மீ. |
| 5 | விவசாயக் காடுகளுக்கான கன்றுகள் | —25,000 |
| 6 | பழைய கன்றுகள் பராமரிப்பு | —740 |

## 11. பட்டுப் பூச்சி வளர்ப்பு

இத் துறையினரால் தகுதி வாய்ந்த நபர்களுக்கு மல் பெர்ரி செடிகள் வழங்கப்பட்டு வளர்ப்புக்காக மான்ய உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. பட்டுப்பூச்சிவளர்ப் புக்காகப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ் 60 நபர்களுக்கு ரூ.4.36 இலட்சம் ஒதுக்கீட்டில் ரூ. 4-35 இலட்சம் செலவிடப்பட்டு, பட்டு வளர்ப்புத்துறை மூலம் பட்டுப் பூச்சி வளர்ப்பு மூலம் இம் மலைவாழ் மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

## 12. கிராமத் தொழில் வளர்ச்சி

கல்வராயன் மலைப்பகுதி வாழ்மக்களுக்கெனப்பிரம்பு மற்றும் மூங்கிலைக் கொண்டு கூடைமுடையும் பயிற்சி, தச்சுக் கருமாரத் தொழில் பயிற்சி ஆகியவை வழங்கப் படுகின்றன.

தொழில் தொடங்கிட மான்ய உதவிகளும் வழங்கப் படுகின்றன.

## 13. மண் வளப் பாதுகாப்புத் திட்டம்

இம் மலைப் பகுதியில் தடுப்பணைகள் ஏற்படுத்துதல் நிலங்களைச் சமன் செய்தல், தேவையான இடங்களில் கரைகள் அமைத்தல், மண் அரிப்பினைத் தடுத்திடத் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் ஆகியவற்றை வேளாண் பொறியியல் துறையினர் செயல்படுத்தி வருகின்றனர்.

வேளாண்மைப்பொறியியல் துறையின் மூலம் 1991-92ம் ஆண்டிற்கு ரூ 3.54 இலட்சத்தில் கீழ்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | கிணறுகள் சீரமைத்தல் | = 22 | |
| 2 | சிறு அணை மூலம் பாசனம் பெற்ற நிலப்பரப்பு | = 50.380 | ஹெக்டேர் |
| 3 | நிலம் சமன் செய்தல் | = 10.195 | ,, |
| 4 | பாசனக்குழாய் பதித்தல் | = 5.090 | ,, |
| 5 | டிஸ்கி உழவு | = 63.990 | ,, |
| 6 | சொட்டுநீர்ப் பாசனம் | = 4.215 | ,, |
| 7 | கிணற்று நீர்ப்பாசனம் | = 1.060 | ,, |

## 14. பாசன வசதி

ரூ. 5-00 இலட்சம் செலவில் 22-30 ஹெக்டர் பாசன வசதி பெறும் வகையில் இரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. 1991—92 இல் வளையம் பாடி ஓடையில் சிறு அணை ஒன்று 4.00 இலட்சம் ஒதுக்கீட்டில் ரூ 1. 215 இலட்சம் செலவு செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்த அணையில் 7. 28 ஹெக்டர் நிலம் பயன்பெற வாய்ப்பு உள்ளது. மேலும் ஒரு சிறு அணை கீழக்காடு கிராமத்தில் மாரியம்மன் கோயில் ஓடையில் கட்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## 15. சமுதாய வளர்ச்சித்திட்டம்

கல்வராயன் மலைப்பகுதியில் இயங்கி வரும் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கென்று மதிய உணவு வழங்கப்

பட்டுவருவகிறது. இங்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்களுக்கென வானொலிப்பெட்டிகள் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன. மக்கள் படிப்பதற்கு வாசகசாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தகுதியுள்ள மலைவாழ் மக்களுக்காகப் பெட்டிக்கடைகள் வைக்கவும், உழவு மாடுகள் மற்றும் பால் மாடுகள் வாங்கவும், ஆடுகள் வாங்கவும், டயர் வண்டிகள் வாங்கவும் சிறு தொழில்கள் செய்யவும் மான்யத்துடன் கூடிய கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 16. கூட்டுறவுத் துறை

மூன்று பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் மக்களுக்கென அமைக்கப் பட்டு, இதன் மூலம் பயிர்க்கடன், கால் நடைப் பராமரிப்புக் கடன் முதலானவற்றுக்குத் தொகைகளுடன் கூடிய கடன்கள் வழங்கப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்கள்வழங்குவதற்காக 23 நியாய விலைக் கடைகள் அமைக்கபட்டுக் குடும்ப அட்டைகள் முறையின் கீழ் மான்ய விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இம் மலையில் விளையும் கடுக்காய், புளி போன்ற பொருட்களை மலைவாழ் மக்களிடமிருந்து இந்தச் சங்கங்கள் கொள் முதல் செய்து வருகின்றன.

## 17. வருவாய் துறை

தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொர்கை, விபத்து நிவாரணத் திட்டம், நலிந்தோர் குடும்ப நலத் திட்டம், தீ விபத்து நிவாரணம் உட்பட பல வேறு பணிகள் இத் துறையினரால் செய்யப் பட்டு வருகின்றன.

## 18. பொருளாதார மேம்பாடுள்ள வசதி

பொருளாதார மேம்பாடு செய்யக் கீழ்க்கண்ட திட்டங்களை 1990-91-இல் செயல் படுத்தப் பட்டுள்ளன-

1) ரூ 3. 86 இலட்சம் செலவில் நபருக்கு 2 கறவை மாடுகள் வீதம் 25 நபருக்கு 50 கறவை மாடுகள் வழங்கப் பட்டன.

2) 20 நபருக்கு ரூ. 1-64 இலட்சத்தில் 20 மந்தை செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டது.

3) ரூ 4. 4 இலட்சம் செலவில் 400 குடும்பங்களுக்கு, தலா ஒரு ஏக்கர் நிலப்பரப்பிற்குத் தேவையான மா, தென்னை, கொய்யா, வாழை சீமைச் சவுக்குச் செடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது 1991- 92 ஆம் ஆண்டில் 10 நபர்களுக்கு 2 கறவை மாடுகள் வீதம் 20 கறவை மாடு கள் ரூ. 1. 154 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

20 நபர்களுக்கு செம்மறி ஆடுகள் ரூ 1- 378 இலட்சம் செலவில் வழங்கப் பட்டது.

10 நபர்களுக்கு 10 சென்ட் நிலத்தில் கால்நடைத் தீவனங்கள் வளர்க்க ரூ. 0. 045 இலட்சத்திற்கு செலவிடப் பட்டுள்ளது.

## 19. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி

1991—92ஆம் ஆண்டில் 295 நபருக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிபெற பதியப்பட்டுள்ளார்கள் என்றும் பயிற்சிகளுக்கான ரூ. 2 97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டு, அதில் ரூ 2. 90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இவ் வகையில் கல்வராயன் மலை மக்கள் வாழ்வு மலர்ச்சி பெற்று வருவதைக் கண்டு மகிழலாம்.

★

# பழமையான ஓர் அரசு ஆணை

நெ. 1385.

## மூத்தியாக் குறும்பக் கவுண்டருக்குக் கொடுக்கும் டைடில் டீட்.

தென்னார் காடு டிஸ்டிரிக்ட்டு கல்லக்குரிச்சி தாலுக்காவில் ஆதியில் உமக்கு ஊழியத்திற்காக இனாமாய் விடப்பட்ட வாழப்பாடி மதுரா தும்பை1 பாச்சேரி2 கூடலூர் உள்பட மோட்டாம்பட்டி3 அரசப்பட்டு உள்பட பனப்பாடி4 அத்திப்பாடி5 மொட்டயனூர் 6 எடப்பட்டு 7 எறுக்கம்பட்டு 8 பொரசாம்பூண்டி9 இறும்பலப்பூண்டி10 விலாரிக் காடு 11 மூணாமதுரை 12 துறூர் 13 முத்தனம் பெலாப்பூண்டி 14 சின்னபெலாபூண்டி15 இன்னாடு 16 வெதூர் 17 பொர்ம்பநத்தம் 18 முருக்கணாம் பட்டு19 குழிப்புளி20 ஏறிக்கறை 21 தும்பராம்பட்டி 22 ஆத்தூர் 23 வஞ்சிக்குழி 24 எடப்பட்டு 25 பல்லாறு 26 மான்கொம்பு 27 செருக்களூர்28 பொரசம்பட்டு29 விளநெல்லி30 பூதரனம்பாக்கணம் 31 வாழகுழி 32 பெரும்பலூர் 33 பறிக்கஞ்சேறி34

ஆளனூர்35 தேக்கம்பட்டு 36 ஆனைமடுவு 37 மூலக்காடு 38 பாபாத்திமூலை 39 கீறியுள்ளி 40 கள்ளிப்பட்டு 41 பாலப்பட்டு42

1. இந்த எல்லா மலைக்கிராமங்களின் சர்க்கார் தீர்வை வசூல் செய்துகொள்ளும் பாத்தியம் உமக்கு இருக்கிறதென்பதை ஆலோசனை சபையிலுள்ள இந்திய செக்ரிடெரி ஆப் ஸ்டேட் அவர்களின் பிரதி நிதியாகிய சென்னம்பட்டணம் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களின் உத்திரவுபடி நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

2. இந்த மானியமானது இப்பொழுது விட்டுப்போன காவல் ஊழியத்திற்காக விடப்பட்டதால் இதற்காக வருஷவாரி குயிட்ரெண்டு ரூ 154—0—0 செலுத்தவேண்டியது. இந்த குயிட்ரெண்டானது நிறுத்திவிடப்பட்ட ஊழியத்திற்கும் ஷை இனாம் சர்க்காருக்கு மறுபடியும் சேரவேண்டிய பாத்தியதைக்கும் பதிலாக விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த இனாமுக்குள்ள குயிட்ரெண்டை நீர் செலுத்திவிட்டு உம்மிஷ்டப்படிக்கு அதை வைத்துக்கொள்ளவாவது விக்கிரயம் செய்து விடவாவது உரிமையுள்ள காணியாட்சியாக இப்பொழுது ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

3. ஷை இனாம் குயிட்ரெண்டுக்கு பதிலாய் இருபது வருஷத்திற்குள்ள குயிட்ரெண்டின் சமமான தொகையை ஒருமிக்கச் செலுத்த இஷ்டமிருந்தால் அந்தப்படி செய்யலாம்.

4. ஆதலால் உம்முடைய சாசனத்தில் 2வது பாராவில் கண்டிருக்கிற ஏற்பாட்டின்படி உம்முடைய உரிமையுள்ள காணியாட்சிக்குள்ள ஆதரவைத் திருப்ப சம்மதித்து இனாமில் சார்ஜு செய்யக்கூடிய முழு குயிட்ரெண்டையும் ஊர்ச்சிதமான விலக்கில் ரூபா.

கவர்மெண்ட் கஜானாவில் செலுத்திருக்கிக்கிறீர்.

5. ஆலோசனை சபையிலுள்ள இந்தியா செக்ரிடெரி ஆப் ஸ்டேட் அவர்களின் பிரதிநிதியாகிய சென்னப்பட்டணம் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களின் உத்திரவுப்படி நான் உம்முடைய இனாமை உரிமையுள்ள காணியாட்சியாக அதாவது கவர்ன்மெண்டின் எல்லாவித வரிகளின்றும் விலக்கும்படி நான் இதனால் நீடூழிகலாம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறேன்.

ஷை மானியத்தின் குயிட்ரெண்டுக்குப் பதிலாய் 20 இத்துக்குள்ள குயிட்ரெண்டுக்கு சமமான தொகையை ஒருமிக்கச் செலுத்த இஷ்டமிருந்தால் அந்தப்படி செய்யலாம்.

1870 லு மார்ச்சு மீ 4 ௳ } (Sd) ராபின்ஸன்,
சென்னப்பட்டணம் } இனாம் கமிஷனர்,



# இவர்களுக்கு நன்றி

| | | | |
|---|---|---|---|
| 1 | கொட்டா புளி (எ) கிருஷ்ண கவுண்டர் | | ரங்கப்பனூர் |
| 2 | குட். கோவிந்தசாமி | | கள்ளக்குறிச்சி |
| 3 | பானுமதி w/o முனிசாமி | | வஞ்சிக்குழி, கல்வராயன்மலை |
| 4 | பவுணம்மாள் | | ,, |
| 5 | நீலாவதி | | ,, |
| 6 | கருப்பால | தும்பராம்பட்டு | ,, |
| 7 | குப்பம்மா | வஞ்சிக்குழி | ,, |
| 8 | அம்மாச்சி | ,, | ,, |
| 9 | சின்னா | ,, | ,, |
| 10 | சின்னக் கண்ணு | ,, | ,, |
| 11 | முருகேசன் விற்பனையாளர் கூட்டுறவு விற்பனைச்சங்கம் | சேராப்பட்டு | ,, |
| 12 | ஆண்டி | பெருக்கஞ் செடி | ,, |
| 13 | குப்புசாமி | கீரிப்புலி | ,, |
| 14 | தொப்பையன் | ,, | ,, |
| 15 | மொட்டை | ,, | ,, |
| 16 | முத்து (பெண்) | தும்பராம்பட்டு | ,, |
| 17 | சிவப்பாயி | ,, | ,, |
| 18 | மல்லிகா | ,, | ,, |
| 19 | ஜோதி | ,, | ,, |

20 சின்னய்யன் தும்பரம்பட்டு கல்வராயன்மலை
21 தீர்த்தம் (பெண்) ,, ,,
22 மக்கு கவுண்டர் ,, ,,
23 கருப்பன் ,, ,,
24 A. அருகக்கீர்த்தி (48)
இளநிலை பொறியாளர்
கள்ளக் குறிச்சி ,,
25 பூ. ச. மரிய புஷ்பநாதன்
தலைமை எழுத்தர் கள்ளக்குறிச்சி
26 P. C. முத்துசாமி குறும்பக்கவுண்டர் பழைய பாலப்பட்டு
27 சின்னம்மா
உமைத்துரை குறும்பக் கவுண்டர் ,,
28 பவுன்னா (எ) உண்ணாமலை ,,
29 ராஜு கவுண்டர் ,,
30 குப்புசாமி நாயுடு ,,
31 P. R. இராமப்பா அரியக்கவுண்டர் ,,
32 R. லஷ்மணப்பா சடையக்கவுண்டர் பொட்டியம்
33 கோவிந்தன் ,,
34 S. செங்குட்டுவன் மருதூர் விழுப்புரம்
35 க.ப. பன்னீர்செல்வம்
செய்தி, மக்கள் தொடர்பு அதிகாரி கடலூர்
36 S. சிவலிங்கம் மருந்தாளுநர் செஞ்சி
37 ராமலிங்கம் பாச்சேரி
38 குப்புசாமி பட்டாச்சாரியார் கச்சிராபாளையம்
39 முனிசாமி அகரம் நெடுமானூர்
40 புலவர். து. கந்தசாமி
தமிழாசிரியர் [ஓய்வு] சின்ன சேலம்
41 திரு. அடிகளாசிரியன்
பேராசிரியர் [ஓய்வு] குகையூர்

42 சிவபாக்கியம்மாள் — சின்ன சேலம்
43 P G. தாகம் தீர்த்த நயினார் — ,,
44. P. C. முத்துசாமி — ,,
45 K. நாரயணசாமி — ,,
46 P. M செல்வராஜ் — ,,
47 K. மூர்த்தி — ,,
48 P. சுலோசனா மேனன் — ,,
49 டாக்டர் பரசுராமன் — ,,
50 P. C. இராமசாமி
ரயில்வே போக்குவரத்து — பாலப்பட்டு
மதுரை
51 R. குமார் டெலிபோன் துறை — ,,
52 சரோஜா — ,,
53 லட்சுமி — பாச்சேரி
54 கோபால் — வடக்கனந்தல்
55 V. ரவிச்சந்திரன் — விக்கிரவாண்டி
56 F. சிரில் அந்தோணி
உரையாடல், வரலாற்றுச் சங்கம், — புதுவை





## பயன்பட்ட நூல்கள்

1 மேற்குமலை வாசிகள், பிலோ இருதயநாத் -
இரண்டாம் பதிப்பு1984 முத்துப்பதிப்பகம்விழுப்புரம்

2 பிலோ இருதயநாத் கட்டுரைகள்
"

3 மலையமான்கள் பாகூர் புலவர் சு. குப்புசாமி,
சேகர் பதிப்பகம் சென்னை. 1978

4 வன்னியர் வரலாறு பல்லவ நாடு தோற்றம்
சு. சண்முக சுந்தரன் - திருமறைப்பள்ளி, சென்னை1971

5 மொழி வரலாறு — ஞா. தேவநேயப் பாவாணர்

6 பாரதப் பழங்குடிகள் — எஸ்,ஆர். வேங்கடராமன்
தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம், சென்னை —5

7 கொங்குநாட்டில் உடலில்வரைதல்கலை—குறிப்பாகப்
பச்சை குத்தல்—கா. மீனாட்சி சுந்தரம் —தமிழ்க்
கலை; தஞ்சைத் தமிழ்பல்கலைக் கழகம்—
தமிழ் 2; கலை. 2 — 3 1984.

8 சேலம் செழியதரையர்கள்—ஒரு சிற்றாய்வு—பா-வெ.
நாகராசன் தமிழ்க்கலை தமிழ் 1 - கலை - 3

9 'ஜூனியர் விகடன்' — இதழ் : 3 — 34; 21-8-85

10 தமிழ் நாட்டுப் பழங்குடி மக்கள்வாழ்வும் வரலாறும்
டாக்டர் சு. சக்திவேல் —மணிவாசகர் நூலகம்
சிதம்பரம் — 1980

11 பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்: பதிப்பாசிரியர்—
அரு. ராமநாதன்; பிரேமா பிரசுரம் சென்னை 24
12 தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலைகோடை-
விழா சிறப்பு மலர் 1984; மற்றும் 1985
13 Madras District Gazetters South Arcot — 1962
Dr: B. S Balliga B. A. Hons Phd
14 Stone Age In India of tde Tamils. - P. T. Srinivasa Iyyangar
15 Historg- The Popular Religions and folklore of northern India. p-6 Crooke
16 தமிழர் பண்பாடும் தத்துவமும் நா. வானமாமலை
பக். 65, 1978
17 யாவரும் கேளிர் — டாக்டர். R. நாகசாமி, பக். 189
18 செங்கம் நடுகற்கள் - தமிழ்நாடுஅரசுத் தொல்பொருள்
ஆய்வுத் துறை.
19 சங்க காலச் சிறப்புப் பெயர்கள்
டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி- பக். 203
20 அரிச்சந்திர மயாபுராணம்.
21 'கொங்கு' இதழ்கள்
22 உரையாடல்: பேராசிரியர் த. பழமலை, விழுப்புரம்.
4-9-85.
23 'ஆரிய மாயையர் திராவிட மாயையா - விடுதலைப்
போரும் விடுதலை இயக்கமும்'—பி.ராமமூர்த்திஎம்.பி.
பக் 18—19—பழனியப்பா பிரதர்ஸ்-1983
24 Castes and Tribes of southern India - Vol. iv Thurston
25 தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்
26 The surnames of the Cankam Age literary and tribal, M. A. Dorai Rangasamy p. p, - 117 158
27 பல்லவர் வரலாறு—டாக்டர் இராசமாணிக்கனார்
28 பெரியபுராண ஆராய்ச்சி - டாக்டர்—
இராசமாணிக்கனார்

29 A R E 1913 of 461, 404
30 S.I.I. vol VIII
31 பிற்காலச் சோழர் வரலாறு தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்

சங்க இலக்கியங்கள்.

32 நற்றிணை
33 குறுந்தொகை
34 அகநானூறு
35 புறநானூறு
36 பதிற்றுப்பத்து





# ஊர்கள்


அத்திக்குழி 23
அத்திப் பாடி 29 149
அரவங்காடு 22
ஆத்தூர் 148 149
ஆரம் பூண்டி 30 152
ஆலத்தி 39 152
ஆலானூர் 27
ஆவாலூர் 27
ஆளனூர் 150
ஆனைமடுவு 37 150
இணத்தூர் 151
இரும்பலப் பூண்டி 149
இன்னாடு 34 149
ஈச்சங்காடு 22 148
உண்டக்கல் வளவு 35
உப்பூர் 27 151
ஊத்துக்காடு 152
எடப்பட்டு 28 149
எட்டறைப் பட்டி 151
எருக்கம்பட்டு 28 149
எருக்கம்பட்டு 151
எழுத்தூர் 27 151
ஏரிக்கரை 25 149
கண்ணூர் 26
கரியாலூர் 27 152
கருநெல்லி 34 151
கருவேலம்பாடி 29
கர்ணாம்பட்டு 28
கல்கொடை 152
கல்படை 39
கவியம் 39 151
கள்ளிப்பட்டு 28 150
கள்ளிப் பாறை 23
கறுமாத்தூர் வளைவு 152
கன்னானூர் 148
கிடார் 38 151
கிணத்தூர் 27
கிள(ா)க்காடு 22 148
கிரிப்புலி 37 150
கீழ்த்தகுளி 148

கீழ்த்துக்ளி 35
கீழ்நிலவூர் 26
குரும்பலூர் 27
குழிப்புளி 149
கூடலூர் 26
கூடாரம் 66 148
கெங்கம் (ப்)பாடி 30 152
கொடமாதி (சி) 32 151
கொடுந்துறை 34 152
கொட்டப் புத்தூர் 152
கொட்டப் பூண்டி 30
கொண்டிக்கல் 34
கொண்டிய நத்தம் 32 152
கொறத்திக் குன்னு ,,
கோணக்காடு ,,
கோயில் வளைவு ,,
சாத்தனூர் 27 ,,
சிறுக்கலூர் 26
சின்னதிருப்பதி 33 151
சின்ன பெலாப்பூண்டி 149
சுண்டபாடி 29 152
சேத்தூர் 151
சேம்பிப் பட்டு 148
சேராப் பட்டு 29
சேனாபுரம் 151
சோத்தூர் 151
தடுத்தா பாளையம் 32
தாள் கருலாம்பாடி 152
தாள் கெண்டிக்கல் 152
தாள் தேவனூர் 152
தாள் தோடிப்பட்டு 151
தாள் பாச்சேரி 151
,, மதூர் 152
,, மொரண்டியூர் 151
,, மொழிப்பட்டு 152
,, வன்னியூர் 152
,, வாழப்பாடி 152
,, வெள்ளார் 152
தும்பராம்பட்டு 29 149
தும்பை 38 149
துரூர் 28
தூறூர் 149
தெத்துப்பட்டு 151
தேக்கம்பட்டு 29 150
தேர் புளி 151
தேவனூர் 27
தொரங்கர் 37
தொரங்கூர் 151
தொரடிப்பட்டு 64
நக்க வளவு 35
நடு தோடிப்பட்டு 151
நடு மதூர் 152
நடு வெள்ளார் 152
நத்தம் புளியூர் 151
நாரணம்பட்டி 36 151
நெக்கரியச்சாம் பாளையம் 148
நெலியூர் 148
நொச்சிமேடு 24 64 152
பட்டி வளைவு 151
பணப்பாடி 30
பானப்பாடி 148

பரங்கி நத்தம் 32 152
பருவா நத்தம் 148
பல்லாறு 149
பழைய பாலப்பட்டு 28
பறிக்கஞ்சேரி 150
பாக்கணம் 38
பாச்சேரி 31 149
பாப்பாத்திமலை 23
பாப்பாத்திமூலை 150
பலாப்பட்டு 150
புதுப் பாலப்பட்டு 28
புது வளைவு 152
புதூர் 151
புதூர் 26 148
புளியாந்துறை 151
புலுவப்பாடி 152
பூதாணம்பாக்கணம் 150
பெருக்கஞ்சேரி 31
பெருமாநல்லூர் 26
பெரும் பறூலூர் 150
பெரும்பூர் 26
பெலாப் பூண்டி 30
பொட்டியம் 151
பொரசம் பட்டு 29 149
பொரசாம் பூண்டி 149
பொர்ம்பநத்தம் 149
பொறுப்பம் 38
மட்டப்பட்டு 151
மட்டப் பாறை 23 152
மணப் பாச்சி 151
மணியார்பாளையம் 32 148
மலை அரசம்பட்டு 28
மல்லிய பாடி 29 152
மாதூர் 27
மாம்பாடி 148
மாயம்பாடி 30 151
மாவடி(டு)ப்பட்டு 29 152
மான்கொம்பு 37
முண்டி 28
முத்தனம்பெலாப் பூண்டி 30
முருக்கணாம்பட்டு 149
மூணாமதுரை 149
மூலக்காடு 22 150
மேலத் தகுளி 148
மேல நிலலூர் 26
மேல் கருலாம்பாடி 152
மேல் கெண்டிக்கல் 152
மேல் துக்ளி 35
மேல் தேவனூர் 152
மேல் தோடிப்பட்டு 151
மேல் பரிகம் 152
மேல் பாச்சேரி 151
மேல் மதூர் 152
மேல் முருவம் 39 151
மேல் மொண்ட்டியூர் 151
மேல் மொழிப்பட்டு 152
மேல் வன்னியூர் 152
மேல் வாழப்பாடி ,,
மேல் வெள்ளார் ,,
மொட்டையனூர் 28 149
மொழிப்பட்டு 29
மோட்டாம்பட்டி 36 149
வஞ்சிக்குழி 23 149
வண்டக்கப் பாடி 30 151
வன்னிப்பாடி 151
வன்னியூர் 27

| | |
|---|---|
| வாரம் | 37 151 |
| வாழக்குழி | 23 150 |
| வாழப் பூண்டி | 152 |
| வாழைப்பாடி | 29 |
| விலாரிக்காடு | 149 |
| வில்வதி | 133 |
| விளா[னா]நெல்லி | 149 |
| வெங்களூர் | 26 |
| வெங்கோடு | 24 |
| வெதுரர் | 26 149 |
| வெளா நல்லி | 38 |
| வொளாப் பூண்டி | 151 |
| வெள்ளரிக்காடு | 22 |
| வெள்ளார் | 37 |
| வெள்ளிமலை | 23 152 |
| வேலம்பட்டிப் புதூர் | 27 |
| வைலம்பாடி | 29 |
| வையலாம்பாடி | 152 |

# சொற்களஞ்சியம்

## உயர்திணை


அகமுடையார் 56
அச்சுததேவராயர் 56 7
அச்சுதராயன் 275
அதியமான் 45 6
அம்மாச்சி 215
அரச இனம் 41
அரசர் 41
'அரசுவரி' 284
அரியக்கவுண்டன் 145 7 8
அரியக்கவுண்டன் ஜாகிர் 22
அய்யர் 281 6 315 6 88
ஆடிமாதப் பிச்சைக் காரர் 41
ஆதிதிராவிடர் 392
ஆதி வாசிகள் 41 77 8
ஆர்க்காடு நவாபு 147
இந்திய ஜனாதிபதி 84
இரண்டாம் இராச கம்பீரச் சேதிராயன் 51
இரண்டாம் இராசராசக் கோவலராசன் 51
இரண்டாம் இராசராசச் சேதிராயன் 51
இராசராச மகதை நாடாழ்வான் 52
இராசராச வாண கோவரையன் 52 3
இராசேந்திரச் சோழச் சேதிராயன் 50
இருளர் 32
உழைப்பாளி 202
ஊரான் 105

ஊர்க்கவுண்டன் 107 10 127
ஊர்ப்பூசாரி 172 3 202
எக்தேல், பேராசிரியர் 83
எயினி 83
ஏலகிரி மலையாளிகள் 113
ஓடிப் போனவள் 307
ஓரி 42 6 9 83
கங்காணி 142 3 56 7 165 8 9 70 171 8 294 324 49 53, 6 81
கங்காதர செழியன் 58
கணியன் 281 23 37 8 9
கண்டர் 69
கண்டன் 70 1
'கம்மனாட்டி' 316
கரிய கவுண்டர் 275
கர்நாடக நவாபு 146
கர்ப்பவதி 111 332 56 57 8 9
கர்ப்பிணிப் பெண்கள் 392
கர்மேகவர் 49
கலசப்பாடி தேனாண்ட குரு 277
கல்வராயன் 275
கவணினர் 71
கவணையர் 71
கவுண்டர்கள் 67 82 8 90
கவுண்டன் 69 7 6 93 113 143 56 7 169 8 9 324 49
கவுரியர் 72 3
கற்கடக மாராயன் 55
காங்குண்டி வேடர் 100
காஞ்சிபுரம் வேளாளர் 67
'காட்டாளி' 370
காணியாளர் 45
காமிண்டன் 72 4
காமுண்டன் 75
காராளர் 76 145 202 94
காராளன் 67 9 77
காரி 46
காரைக்காட்டி வெள்ளாளர் 100
கால்மனிதன் 316
காவல்காரர் 42
காவாலி 202 316
காவுட 70
குண்டர்படை 83
குப்புசாமி, புலவர் சு. 47
குரு 110 37 140 202 9 272
குழந்தைகள் 253
குலோத்துங்க சோழச் சேதிராயன் 50
குலோத்துங்கன் 51 3 4

குறவர் 261 2
குறுநில மன்னர் 153
குறும்பக் கவுண்டன் 145 7 150 61 2 273
குறும்பக் கவுண்டன் ஜாகிர் 22
கொங்க அரசர் 44
கொங்கர் 120
கொங்கர் படை 43
கொங்களாயி 123
கொங்காயி 123
கொங்குராயன் 43
கொங்கு வேளாளர் 44 5 67 97 103
கொத்தடிமைகள் 391
கொல்லிமலை மலையாளிகள் 92 3
கொல்லி வெற்பன் 45
கோத்தர் 83
கோப்பெருஞ்சிங்கன் 54 5
கோவலராயன் 52
கைக்கோளர் 91
கைநாட்டு இடுபவர் 241
சடையக் கவுண்டன் ஜாகிர் 22 145 7 164 275 6 80 7 9
சடையவர்மன் சுந்தர பாண்டியன் 57
சாதிக்குரு 171 202 75
சாமியாடி 258 9 292
சிம்ம விஷ்ணு 49
சின்ன மலையாளிகள் 90
சின்னா 215
சுடர்மான் 56
சுந்தர சோழன் 42
சுமங்கலிப் பெண் 312
செழியதரையர்கள் 58 9 60
சேக்கிழார் 50
சேதிராயர் 50 1
சேரர் 45 7
சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையன் 46
சேர்வராயன்மலை மலையாளி 214 321
சேவகன் 169
சொட்டையான் 340
தமிழ்நாட்டில் பழங்குடிகள் 84 6
தம்புருக்காரர்கள் 284
தர்ஸன் 88 101
தாலுக்தார் 79
திப்புசுல்தான் 57 77
திருமங்கை ஆழ்வார் 281
திருமுடிக்காரி 45 6
திருவள்ளுவர் 206
துடவர் 83
தேவ இந்திர பள்ளன் 91

தொட்டியன் 91 121
தொண்டைமான் 72
தோடர் 88
தோட்டக் கலைத்
துறையினர் 395
தோட்டி 269 94 324 52
நத்தமர் 56
நந்திக்கண்டன் 69
நந்தி வர்மன் 69
நம்பிகள் 277
நம்பியார் 276
நம்பியான் 290 349 50
'நயினார்' 60
நன்னன் 102 3
நாசவன் 382
நாச்சி 123
நாட்டாண்மை 165 362
நாட்டான் 110 140 156 7 8
167 8 170 3 198 208 91
4 323 49 50 76 80 1
நாட்டுக்கவுண்டன் 8 16
நாடோடிப்பிச்சைக்
காரர் 41
நாயக்கர் 42
பச்சைகுத்துவோர் 261
பச்சைமலை
மலையாளிகள் 91 2 4 5
பச்சை வெள்ளாளர் 103 8
பஞ்சாயத்தார் 306 7
படைவீரர் 31
பட்டக்காரன் 94 118 22
43
பருவப்பெண் 374
பல மனைவிகள் 20 37
பழங்குடிகள் 82 3 8 2 3 84
314 92
பழங்குடிகள் 42வகை—84
பறையர் 269 94
பாணர்கள் 52 3
பாரி 83
பாளையக்காரர் 31 60 79
பாளையத்தார் 76
பியா 313
பிராமணர் 105 276 80
பிலோ இருதயநாத் 41 78
புண்ணியவாட்டி
(இளவரசி) 52
புத்தரர்கள் 235
புத்தரன் 254
'புள்ள குட்டி' 284
பூசாரி 107 111 115 33 4
82 202 58 9 281 90 2 3

பெண்டாட்டி 313
பெரியகவுண்டன் 64 121
பெரிய நாட்டான் 105
பெரிய மலையாளிகள் 90 143
பேகார் 79 80
பேய் பிடித்தவன் 124
பேரன் 254
பொட்டியம் ஜாகீர் 201
போசளர் 61
போர் வீரர் 42
மச்சான் 121
மணியக்காரன் 143
மராட்டிய மன்னர் 146
மருத்துவச்சி 365 8 67
மருத்துவப்பணியாளர் 264
மருமகள் 114
மலாடர் 49
மலைநாய்க்கன் 143
மலையமான் 45 50 56 61
மலையாளிகள் 47 69 72 8 87 9 90 1 2 9 '04 5 16 8 137 8 9 160 7 8 9 177 8397 200 2 3 43 49 50 321
மலையாளிக்கவுண்டர் 120 145

மலைவாணர்கள் 103
மலைவாசிகள் 41 391
மழவர் 46
மாக்காபீர் 57
மாவள்ளோரி 49
மாறவர்வன் சுந்தர பாண்டியன் 53 45
மிண்டன் 74
முகமதியர் 42 294
முஸ்லீம்கள் 269
முதலாம் இராசகெம்பீரச் சேதிராயர் 51
முதலாம் இராசராச் சேதிராயன் 50
முதலாம் இராசராச சோழன் 49
முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் 55
முழுமனிதன் 316
முறைமாமன் 331 74
முனிசாமி பூசாரி (வள்ளுவர்) 287
மூப்பன் 76 93 121 156 7 8 164 5 6 7 8 9 170 1 2 3 198 208 42 91 304 23 45 47 962 3 71 6 80 1

மூவர்ராயகண்டன் 70
மூன்றாம் இராசராசன் 545
மூன்றாம் இராசேந்திரன் 306
மூன்றாம் குலோத்துங்கன் 51 2
மூன்று வட்டாட்சியர் 65
மேளக்காரர் 284 5 340 51 2
மேளக்குழு 353
ராயர்கள் 44
வட ஆர்க்காடு மலையாளிகள் 99 104
வண்ணாத்திப் பெண் 289
வண்ணார் 102
வலப்பூர்பட்டக்காரன் 122
வல்லாளன் 57
வல்வில் ஓரி 1 19
வன்னியர் 27
வாண கோவரையர் 51 24
விக்கிரமசோழச் சேதிராயன் 50
விஜயநகர அரசர் 31 42 145 160 57[illegible]
விதவைகள் 68 101 7 118 66 279 3 309 10 11
வியாபாரிகள் 203
விருதுகாரர்கள் 284
வில்லிபுத்தூரார் 53
வீர சோமேசுவரன் 55
வீரநரசிம்மன் 55
வீர ராசேந்திரச் சேதிராயன் 51
வெள்ளாளர் 103 8 11 202
வெள்ளாளன் 14[illegible]
வேடர் 23 44 69 9 2 101 121 146
வேட்டுவர் 42 3 4 74
வேளாளர் 43 4 59 59 72 90 117 145
ஹரிதாசர்கள் 126
ஹைதர் அலி 57 77
ஹொய்சளர் 57
ஜமீன்தாரர் 61
ஜாகிர்தாரர் 261 5 6

## அஃறிணை


ஆடு 154 8 62 91 204 49
ஆந்தை 126 272
ஈசல் 205
எருமை மாடு 250
கரடி 200 148
கருங்குரங்கு 114
கழுதை 250
கறவைமாடுகள் 394 400
காட்டுப்பன்றி 191 200 4
காளை மாடு 286
கிளி 252
குதிரை 140 153 67 250
குரைக்கும் மான்கள் 251
கோட்டான் 126 272
கோழி 185 91 249
சிறுத்தை 200 1 51
செந்நாய்கள் 251
செம்மறி ஆடுகள் 394 400
நரி 201 248
நல்லபாம்பு 252
நாய் 249 50
பறவை 191
பன்றி 201 4 50 185
பாம்பு 201 70
புள்ளிமான்கள் 251
புறா 252 200
பொதிமாடு 27
மலைப்பாம்பு 252
மாடுகள் 154 191 205248 275
மான் 37 158 200 204 52
மீன் 191
முயல் 158 204
முள்ளம் பன்றி 200
யானை 26 37 152 251
வேட்டைநாய் 249 51 2

## நீர் நிலைகள்


அணைகள் 398
காவிரி 43
கிணறு 27
கீழக்காடு-அணை(திட்டம்) 398
குடிநீர்க்கிணறுகள் 396
குட்டாறு (சரபங்குஆறு) 63
குளம் 27
கோமுகி 64
சுவேதநதி 64
திறந்தவெளிக்கிணறு 396
நீர் வீழ்ச்சிகள் 64
நொய்யல் 43
பவானி 43
பாப்பாக்கல் ஓடை 64
பாலாறு 1 மு
பெரியாறு 63
பெருகட்டி ஓடை 64
போளூர் ஏரி 104
மஞ்சள் ஆறு ,,
மணிமுத்தாறு 63
மயூரா ,,
மேகம் அருவி 64
மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 396
வசிட்டர் நதி 64
வசிட்டா நதி ,,
வளையம்பாடி ஓடை அணை 398
வெள்ளாறு 37 64

# மரஞ் செடி கொடிகள்


அத்தி 23 9 39
அரசமரம் 27 8 36 9 280
ஆலமரக்குச்சி 280
ஆலமரம் 27
இலைக்கள்ளி மரம் 34
எருக்கஞ்செடி 28
கடுக்காய் 156 203 399
கள்ளிச்செடி 23 8
கறிவேப்பிலை 203
காச்சான்மரம் ,,
காணாங்குப் புல் 144
கிடார் மரம் 38
கீரை 28
கொய்யா 395
சந்தனம் 30 156
சாமை 322
சில்வர் லுக் 395
சுக்கான்காய் 299
தினை 188 90 360
தென்னை 156 38 395
தேக்குமரம் 29
நெல்லிமரம் 34
நொச்சிமரம் 24
பலாமரம் 280
பனை 30
பண்ணைப் பூக்கள் 299
கம்பு 188
கேழ்வரகு 187 90
சோளம் 190
பலா 192
பிரப்பஞ் செடி 29
புளி 31 156 83 399
பூசனிக்காய் 299
பெரு மரம் 30
பேய்ச்சுரை 27
மஞ்சப்புல் 184
மல்பெர்ரிசெடி 397
மல்லிகைப் பூ 299
மா 156 192 395

மாதுளை 395
முருங்கைக் கீரை 385
மூங்கில் 26 9 156 203 85
மூலிகைச் செடிகள் 104
வஞ்சி 23
வரகு 190 250
வாழை 239 279 80 1
வில்வமரம் 29
விழல் 184
வெள்ளேரி மரக்குச்சி 280
வேலமரம் 27 9


## வரிகள்


உலுப்பை 56 7 60
கால்நடை வரி 154
காவாலி வரி 155 68
குடிவரி 154
குடிவாரம் 147
கூட்டுவரி 155
கொடுவாள் வரி 154
திருமணவரி 155 348
நாட்டுவரி 155
நிலவரி 147
புல்வரி 155
புனல்காடு வரி 155
பெரும்பாடி காவல் 52
மேல்வாரம் 147
வரிகள் 153 4 6 160 8 193 315 347
வரி வசூல் 94 147 165
வீட்டு வரி 154
வெள்ளாட்டு வரி ,,


## சடங்குகள்


அடக்கம் 379 80
அரசாணிமரம் 329 42
அரிசிச் சோறு 346 60 85
அவப் பெயர் 254
அழுதல் வேண்டும்! 117
ஆரத்தி 332 7 42 5
ஆலத்தி 256
ஆலம் நீர் 333 61
ஆறுகட்டுதலுக்குச் செல்லுதல் 342
'ஆணை கட்டுதல்' 283
இறுதிச் சடங்கு 101 11
ஈமச் சடங்கு 255
ஊர்வலம்' 331
எச்சரிக்கைக் கோல் 319
எண்ணெய்க் குளியல் 171 2
எண்ணெய் தேய்த்தல் 178
எண்ணெய் விளக்கு 379
எரித்தல் 382
எல்லை கட்டுதல் 294

ஏசக் கூட்டுதல் 343 52
ஒப்பாரி 379 80
கத்தி 336
கருமகாரியம் 386 7
கருமணி மாலை 309 41
கருமாதி 142
கர்ப்பவதி மரணம் 388
கலசம் 342 3 4
கறுப்பு மணி 312
கறுப்புவளையல் 368
கற்பூரம் 171 339 82
காசுக் கயிறு 311
காசுத் தாலி ,,
காணிக்கை 94 140 297 332
காதுகுத்தல் 371 2 3
காரியம் 383
காரிய விருந்து 387
காறித்துப்புதல் 344
கீறு சந்தனம் 159
குடிசையை எரித்தல் 377
குதிரை 330 1 2
குழந்தைகள் தோஷம் 367
குழந்தைக்குச் சடங்குகள் 367 71
குழந்தைக்குப்பால் 360
கூம்பிடரம்பபா 329
கெட்ட சகுனம் 253 70 1
கொல்லி மலை மக்கள் திருமணமுறை 127
கோலம் 188
கோலை ஆட்டுதல் 320
கைத்தடி 317
சகுனம் 97 209 70
சகுனம்பார்த்தல் 318 9 61
சடங்கு 197 254 316
சடங்கு இல்லை 356 68
சடங்குமுறை 87
சத்தியம் 171
சந்தனம் 381
சவக்குழி 385 8 9
சாதிப் பஞ்சாயத்து 105
சாமைக் கஞ்சி 322
சாராயம் 387
சாலும் கரகமும் 336
சாவு 208
சாவுச் சடங்கு 129
சாவு வீட்டினர் 384
ஜாதகம் 317
சுடுகாடு 381 2 3 5 7 8
சூடுபோடுதல் 171
செய்தி அறிவித்தல் 379

சேவை செய்தல் 353
தத்து எடுத்தல் 117
தலைக்கட்டு 387
தலைப்பாகை 336
தழைச்சாறு 381
தனிக்குடிசை 138 9
தாடி வளர்த்தல் 357
தாயின்பால் 162
தாய்க்குப் பத்தியம் 359 60
தாய்மைப்பேறு 356
தாய்வீடு செல்லல் 357
தாலி 194 309 10 1 2 41 50
தாலி அறுப்பு 387
தாலி கட்டுதல் 329 36 7 8 42 66
தாலிச்சரடு 181 311
திருமண ஊர்வலம் 376
திருமணச்சடங்கு 314 5 35
திருமணச் சாட்சி 339
திருமணச் செலவு 304
திருமண நாள் 323
திருமணப் பந்தல் 327 8 47
திருமண முறை 303
திருமணம் 167 8 208 303 30 40 351 62 73 88
திரும்பவும் 348
திருஷ்டிக் கழித்தல் 332 68
திவசம் 388
திட்டு 376
திட்டுக்கழித்தல் 361
திபாராதனை 327 49
தீவைத்தல் 382
துப்பாக்கிக் குண்டு வெடித்தல் 337
தூய்மைச் சடங்கு 375
தேங்காய் 385
நலங்கு 108 9 355 322 3 4
நலங்குமோதிரம் எடுத்தல் 341
நிகரம் செய்தல் 322
நிச்சயம் 96
நாட்டு அழைத்தல் 324 52
நாடுக்கு வணக்கம் 349
நாட்டைக் கண்டுக் கிட்டேன் 349
பச்சை குத்திக் கொள்ளல் 141 4
பச்சை குத்துதல் 211 6 60 1 2 3
படையல் 185
பணிவிடை செய்தல் 353
பத்தியம் 111
பந்தக்கால்கள் 327
பருவச்சடங்கு 373 4
பரிசப்பணம் 106
பரிசம் திருப்பிக் கொடுத்தல் 363

பலதாரத்திருமணம் 306
பலி 249
பழைய முறை 388
பறை அடித்தல் 379 80
பறை ஒலி 319
பாக்கு 330
பாடை 142 380
பாட்டன்மடி 369
பாட்டி மடி ,,
பாய் 330
பாலமணி 368
பால் தெளித்தல் 385
பிண அடக்கம் 381
பிணம் 380 1 2 4 9
பிண்ணாக்கு 333
பிள்ளைப் பெறுதல் 358
பிள்ளைப் பேறு 370
புடவை 336
புண்ணியம் 339
புண்ணியாவசனம் 375
புதிய ஆடை 335 73
புதைக்குமிடம் 388
புதைகுழி 386 8 9
புதைத்தல் 142 388 9
புனித நீர் 135
புனிதம் 110
பூமாலை 347
பெண் அழைப்பு 329
பெண் நிச்சயித்தல் 321 2 3
பெண்பார்த்தல் 318 9
பெண்ணின் விருப்பம் 303 68
பெயர் வைத்தல் 368 9
பெற்றோர் சம்மதம் 304
பொட்டுத்தாலி 311
பொரணம் போதல் 348
பொருத்தம் 317
மஞ்சள் துணி 326
மஞ்சள் நீர் 308
மஞ்சள் பூசுதல் 181
மணப்பந்தல் 107 328 36 41
மண் பாத்திரம் 385
மந்திரத் தண்ணீர் 171
மரக்கால் 322
மரணவேதனை 389
மருவு 292
மறுமணம் 365 6
மறு மூச்சி 348
மனை ஏறுதல் 342
மாதவிடாய் 163 260 73 373 5 6 7 8
மான் சுத்துதல் 320 1
முடியெடுத்தல் 284
முடியை மழித்தல் 357
முதல் இரவு நிகழ்ச்சி 346
மூக்குக் குத்தல் 373
மெட்டி அணிவித்தல் 345 6
மேளக்காரருக்கு ஊதியம் 352 3
மொட்டை அடித்தல் 371 3

ருதுச்சடங்கு 110 38 9
வணக்கம் 334
வரகுக் கஞ்சி 346 60 83
வரகுக்கூழ் 334
வளர்பிறைநாள் 357
வளையல்கழற்றி 307
வாழ்த்துப் பாடல் 338
விதவைத் திருமணம் 141 366
விருந்து 325 34 46 83
விருப்பம் 325 6
விளக்கு வைத்தல் 387
விளக்கெண்ணெய் 333
வீட்டிற்கு அழைத்தல் 359 74 5
வெள்ளிக்கிழமை 188
வெள்ளித்தாலி 310
வெற்றிலை 180 191 6
பாக்கு 191 6
வெற்றிலைப் பாக்கு எச்சில் 344

## சான்றுகள்

ஒப்பந்தம் 149
ஓலைச் சுவடிகள் 60
கதை 282
கல்வெட்டு 42 49 55 70 75
செப்பேடுகள் 57 275
திருவண்ணாமலைக் கல்வெட்டு 54
'நக்கல்' 81
நடுகல் 76
பட்டயம் 287
பல்லவர் நாணயம் 69
பழமொழி 76 312
பழமையான ஓர் அரசாணை 401
பாசுரம் 281
புகழ்மங்கலம் நடுகல் 43
மெய்க்கீர்த்தி 53
வரலாறுகள் 42 146 339
வரலாற்றுச்சான்று 146
'வெள்ளம்' 44

# தெய்வங்கள்

அம்மன் 278
அறப்பளீசுவரர் 119 122
ஆண் தெய்வங்கள் 290
இளைய பெருமாள் 288
உண்ணாமலையம்மன் 292
கங்கை அம்மன் 268 90
கடவுள் 171 207 68
கடவுள் கல் 328
கரியராமன் 255 6 67 974 5 292 4
கன்னித் தெய்வம் 139
காட்டுத் தெய்வம் 115
காளி 105 278
காவேரி அம்மன் 135 267 8 90
கிராமத் தெய்வம் 274
குலதெய்வம் 127 295
கொல்லிப்பாவை 119 123
சாணிப்பிள்ளையார் 136
சாமிக்கல் 140
சில கடவுள்கள் 290
சிலைகள் 133
சிவபெருமான் 71
சிவலிங்கம் 289
சிவன் 133 274 5
சிறு தெய்வங்கள் 133
ஸ்ரீரங்கத்துப் பெருமாள் 122
கோலை அம்மன் 267 92
தாயார் சிலை 288
திராவிடரின் தெய்வங்கள் 274
திருப்பதி வெங்கடாசலபதி 115
திருமங்கை ஆழ்வார் சிலை 281
திருமஞ்சனப் பாட்டன் 124
திருவண்ணாமலைசிவன் 115
திரௌபதி 115 267 90
துர்க்கை 289
தெய்வம் 27 273 4 5 335
தெய்வத்தின் பெயர் 369
தேவதைகள் 115
நந்தி 289
பருவதவர்த்தினி 103
பிடாரி 95 125

பிள்ளையார் 115 128 34 278
பெண் தெய்வங்கள் 290
பெண் தெய்வச்சிலைகள் 286
பெருமாள் 105 282
பேய், பிசாசு 367
மாரியம்மன் 115 25 267 901
'மிரல்' 134
விஷ்ணு 126 32 3 274 5 8 9 287
விஷ்ணுசிலை' 288
வெள்ளாடி சாமி 106

## கோயில்கள்

அண்ணாமலைக் கோயில் 53
அலர்மேலுமங்கை கோயில் 287 8
ஆண்டிக் கோயில் 289
ஆர்க்காட்டு ராமன் கோயில் 277
எலவானாசூர் கோயில் 56
கோயில் 171 95 280 1 2 5 9 7 346
சிவன் கோயில் 257 89
சின்ன திருப்பதி 57
ஸ்ரீரங்கம் கோயில் 135
செண்டுராயர் பெருமாள் 287 7
திட்டக்குடி கோயில் 52
திருப்பதி 257
திரௌபதி அம்மன் கோயில்132 3
பள்ளிகொண்டராமன் கோயில் 277
வடதிருமுல்லைவாயில் 72
விஷ்ணுகோயில் 147 62 275 87 8

# பக்தி

ஆரத்தி 158
ஆவி 124 5 211 58 9 61 269 72 377 8 383 6
இசைக்கருவிகள் 123
இறைவழிபாட்டுக் குறியீடுகள் 220
எருக்குழி 136
எருது ஆட்டம் 129 136 8
ஐந்தாம் சனிக்கிழமை 279 88
ஐந்தாம் வெள்ளிகிழமை 285
கரகம் 293
காணிக்கை 135 42
கார்த்திகை தீபவிழா 297
காளித்திருவிழா 106
காளி வழிபாடு 125
கிருஷ்ண ஜெயந்தி 133
குரவைக் கூத்து 214
கூத்து 137 213 4 223 76 294 301
சமயச்சடங்கு 211
சாணி உருண்டை 136
சாமரம் 135
சிவராத்திரி 133
சேர்வையாடுதல் 106
தலைப்பாகை 134 41
திருவிழா 106 57 134 187 216 67 8 75 6 83 94 143
தீபாராதனை 286 98
தீர்த்த நீர் 137 209 72 7
தெய்வநம்பிக்கை 209
தெய்வங்களின் சம்மதம் 350
தெய்வத்தின் சிற்றம் 207
தேர் 133 6 285 6 8
தேர் சங்கிலி 286
தேர் திருவிழா 279
நடனம் 137 223 4
நம்பிக்கை 268 71
நரகம் 253 72
நான்காவது சனிக்கிழமை 284 5
'பச்சைப்பரப்புதல்' 291 2 323
பம்பை, உடுக்கை 293
பலி 124 5 7 207 67 74 2 92
பாஞ்சாலி வரலாறு 294
பாம்பு நடனம் 136
புண்ணியம் 272
புரட்டாசிச் சனி 133

புரட்டாசி மாதம் 162 3 276 7 9 83 4 7
புனிதநீர் 259 72 7 375 7
பூசை 157
பெண் தெய்வ வழிபாடு 94
பேய் பிசாசு 211 53
பொங்கல் விழா 138 214
மஞ்சள் நீராடுதல் 288
மஞ்சள் பொடி 133
மந்திரக் கயிறு 273
மந்திரம் 337 8 40 75
முடி காணிக்கை 124
வழிபாடு 114 5 123 4 157 267 74 8 346
வழிபாடு இல்லை 335
வன்னிக் குத்தல் 162 257 79 80 1 5
விந்தையான பழக்கம் 128
விரதம் 254 77
விழா 291
விழாச் சடங்கு 207
வேட்டு 286
வேண்டுதல் 123 279 83


## நூல்கள்


அகநானூறு 30 73
ஒன்பதாம் திருமுறை 51
குன்றுடையான் கதை 43
கொங்குதேச இராசாக்கள் 44
சங்க இலக்கியம் 30 71 103
சங்க நூல்கள் 45 9 119
சர்க்கரைக் கவுண்டர் வம்சாவளி 44
சிலப்பதிகாரம் 71
செழிய தரையன் கோவை 60
,, ,, திருவாணிவாது ,,
,, ,, நன்னெறி ,,
,, ,, பஞ்சதந்திரம் ,,
,, ,, வண்ணம் ,,
சோழன் பூர்வபட்டயம் 44
தமிழ் மொழியகராதி 23 35
தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத் தமிழ் 60
தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி 60
திருவாணி தூது 58
தொல்காப்பியம் 22 32
நற்றிணை 49
பாரதம் 53
பிங்கல நிகண்டு 28
புறநானூறு 73
பெரும்பாணாற்றுப்படை 103
மலைபடுகடாம் 103
விக்கிரம சோழன் உலா 50

## மரம், செடி, பயிர்கள்


உளுந்து 113
எலுமிச்சை 64
கடுக்காய் 64 132
கம்பு 113
கரி மருது 103
கருங்காலி ,,
கருவேப்பிலை 64
கல் மூங்கில் 103
காப்பி 113 132
காய்ச்சான் 64
குச்சி வள்ளிக்கிழங்கு 115
கேழ்வரகு 115
கொள்ளு 113
சந்தனம் 64 103 132
சாமை 64 113
சோளம் 64 113
தினை 64
தேக்கு 103
நுணா 64
நெல் 64 113
நொச்சி மரம் 24
பலா 64
புங்கன் 64
புளி 64
மா 64
முத்துக்கொட்டை 64
மூங்கில் 64 103
வரகு 64
வேங்கை 103
வேலம் 64


## பெயர்கள்


இடுகுறிப் பெயர்கள் 19
இயற்கை அமைப்பு 20 1 6
34 5 7 9
ஊர் 26
ஏரி 25
ஏரிக்கரை 25
ஒப்புமைக் கூறு 36
கரை 25
காடு 22
குடியிருப்பு அமைப்பு
20 5 33
குழி 22
கோடு 23
சிறப்புக் கூறுகள் 19 20 35

சிறப்புப் பெயர்கள் 35
செயற்கை அமைப்பு 20 35
தொடர்புண்மைகளைச் சுட்டும் அமைப்பு 20
நில அமைப்பு 33
நீர்நிலை அமைப்பு 20 5 34 8
நொச்சிமேடு 24
பட்டு 28 9
பாடி 29
பாறை 23
பூண்டி 39
பூண்டு 30 8
பொதுக் கூறுகள் 19 20 5 8 9 31 3 34
மருத நிலம் 29
மலை 23
முன் ஒட்டு 29 30 39
மேடு 24
விகுதிப்பெயர் 20 1 5 30 5
விலங்கினம் 34 6 7
வெங்கோடு 24

## இடங்கள் ஊர்கள்

அமராவதி 43
அரண்மனை 6 7 8 162
அருவா நாடு 48
அரூர் வட்டம் 63
ஆதிபத்திநாடு 149
ஆத்திநாடு 97
ஆத்தூர் 89
ஆத்தூர்வட்டம் 48 9 63 4
ஆலங்காயம் 104
ஆலம் பூண்டி 393
ஆலனூர் 277
ஆறகளூர் 49 51 2
ஆனைமலை 83
இணைப்புச் சாலைகள் 394
இராசராச விண்ணகர் 52
இராசிபுரம் 120
இருகரைநாடு 148
இருப்பிடம் 393
இன்னாடு 214 65
உடையா நத்தம் 222
உப்புநாடு 150 1
உயரமான சிகரங்கள் 131
உழவு நாடு 150 1
உறைவிடப்பள்ளி 393
ஊர்கள் 152
எல்லை 391

எழுத்தூர் 393
ஏர்க்காடுமலை 116 32
ஏலகிரி 99
ஏலமலை 83
ஓமலூர் 63
கச்சிராப்பாளையம் 351 94
கடியநாடு 149
கணமலை நாடு 104
கண்டப்ப நாடு 15) 1
கண்ணனூர் 55
கரடிக்குகை 136
கரியாலூர் 391
கருமாந்துறை 394
கர்நாடகக் கிரி 102
கல் 34
கல்வரிசை 39
களக்காடு 289 394
களிப்பாறை நாடு 148
கள்ளக்குறிச்சி 158 63 252
கள்ளக்குறிச்சி வட்டம் 45
51 391
கள்ளிப்பாறை 277
கன்னடநாடு 73
காஞ்சிபுரம் 43 12 67 8
70 87 90 10) 1 145
245 74
கால்நடைமருந்தகங்கள்
393
காவேரிப்பட்டி 63
கிராமங்கள் 14 148
கிளக்காடு 65 393
கிளியானூர் 395
குகையூர் 51
குடான் 1,4
குடியிருப்புகள் 151 3
குதிரை மலை 83
குழந்தை வளர்ச்சித்
திட்ட மையங்கள் 393
கூட்டுறவுச் சங்கம் 394
கொங்கு நாடு 42,3 74 119
கொல்லிமலை 42 6 83 90
3 119 20 125 8 9
கோயம்புத்தூர் 117
சங்கங்கள் 392
சங்கராபுரம் 252
சத்துணவு மையம் 393
சம்பத்கிரி 103
சவ்வாது மலை 99 100 1 2
3 4 113 6 260
ஜனநாத வளநாடு 49
சிற்றம்பலம் 93
சின்ன சேலம் 58 60
சின்ன திருப்பதி 33 147 62
251 7 75 7 94
செங்கம் வட்டம் 102
செங்கல்பட்டு 77

சேதிநாடு 50
சேந்த மங்கலம் 54 5 126
சேராப்பட்டு 199 252 65 89 394
சேரி 30 1
சேர்வராயன் மலை 83 90 118 131 5 6 7 89 140 1 2
சேலத்துக் காஷ்மீர் 132
சேலம் 89 119
சேலம் மாவட்டம் 89 131 260
சோழநாடு 43
ஜோலார்ப்பேட்டை 113
'டேனிடாு' மருந்தகம் 393
தகடூர் 46
தண்டம்பட்டுக் கணவாய் 103
தருமபுரி 46 89 118
தார்ச்சாலைகள் 394
திருக்கோயிலூர் 46
திருக்கோயிலூர் வட்டம் 48
திருச்சி 119
திருச்சிராப்பள்ளி மாவட்டம் 260
திருச்சி வட்டம் 89
திருப்பதி 115 371
திருவண்ணாமலை 38 53 115 257 371
திருவண்ணாமலை வட்டம் 48 36
தீர்த்தமலை 55
துக்ளி 35
துணை சுகாதார நிலையங்கள் 393
தும்பராம்பட்டு 220 393
தும்பை 393
தும்பைநாடு 148
துறை 34
தென்மலைநாடு 149
தென்னார்க்காடு 77 146 260 391
தொண்டைநாடு 43 74
தெசுப்பர நாடு 79
தொரடிப்பட்டு 265 393
நத்தம் 32
நாடு 33 104
நாடு உட்காருமிடம் 324
நாமக்கல் 120
நாமக்கல் வட்டம் 72 126
நாற்பத்திரஸ்டு ஊர்கள் 149
நீலமலை 83
நைனாமலை 126

நெல்லி 34
நெல்லி நாடு 104
நொச்சிமேடு 393
பச்சைமலை 90 1 2
படைவீடு 29
பட்டி 36
பதி 32 3
பரங்கி நத்தம் 393
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 399
பழனிமலை 83
பள்ளம் 37
பாடி 143
பாட்டம் 122
பாலப்பட்டு 150 352
பாலை நிலம் 28
பாளையம் 31 2
புதுப்பாலப்பட்டு 393
புதூர் 148
புதூர் நாடு 104
புறமலை நாடு 55
பெட்டிக் கடைகள் 399
பெரிய கோம்பை 120
பொட்டியம் 150 200 251 394
மகதநாடு 52 5 6 7 8
மகத மண்டலம் 58
மணியார் பாளையம் 394
மண் சாலைகள் ,,
மதுநாடு 150 1
மருத்துவ மனைகள் 265
மருத்துவ முகாம் 393
மருந்தகங்கள் 393
மலாடு 48 9 50
மலைகள் 37
மலையமான் நாடு 48 50
மாத்தூர் 393
மாலைக்காரர் வீடு 347
மான்கொம்பு 252
மூலக் குறிஞ்சி 120
மூன்று ஜாகீர்கள் 145 6
மேல் பரிகம் 289
மைலம் 34
மோட்டாம் பட்டி 65 265 394
ரங்கப்பனூர் 289 352
லேம்ப் சொஸைட்டி 394
வ. ஆ. மாவட்டம் 89 146 260
வஞ்சிக்குழி 215 43 393
வண்ணாடு 97
வண்டகப்பாடி 393
வடகூர் கோம்பை 120
வளப்பூர் நாடு 42
வளைவு 35
வாசகசாலை 399
வாகூர் மலை 103
வாணியம்பாடி 113
வாழைக்கோம்பை 120
விழுப்புரம் 38
வெள்ளிமலை 65 265 391 4
வேட்டைக்காரன் மலை 83 120

# பொருள்

அடிமை வேலை 169
அணிகள் 104
அபராதம் 105 10 42 69 72 254 76 362 3 4
அம்பு 42 144 97 280
அரசாங்கம் 156
அரசுமுறை 223
அரிசி 190
அரிவாள் 178 97
அருந்ததியார் வகுப்பு 288
அரைஞாண் 144
அரைஞாண் கயிறு 178 94
அலங்காரம் 195
அறுவடை 203 383 4
அன்னதானம் 276
ஆங்கிலேயர் ஆட்சி 42 146 7
ஆடிமாதம் 115
ஆடுகள் மான்யக் கடன் 399
ஆடைகள் 193
ஆட்டுப்பால் 191 249 368 35
ஆதிதிராவிட இனம் 353
ஆயுதங்கள் 157 62 97 8
இந்து மதம் 160
இலவசமரக் கன்றுகள் 396
இரண்டு பல்லம் 169
இரும்புத்தாது 64
இளநீர் 243
இனாம் 80
ஈசல் 192
ஈசல் பிடித்தல் 205
ஈட்டி 144 97 8
உணவு 190
உரிமை 122 47 9
உழவுமாடுமான்யக் கடன் 399
உழைப்பு 199
உறவுமுறை 209
எருக்கஞ் செடியின் நார் 267
எச்சங்கள் 223
எட்டாம் நூற்றாண்டு 49
எண்ணெய் 181
எழுபதுகோடியாண்டு 83
ஏர் உழுதல் 248
ஒப்பனை 212 3
ஓயில் 223
கங்காணிகாணிக்கை 168
கசை அடி 172

கஞ்சா 191 6
கடப்பாரை 178 98
கடல்மட்டம் 63
கடன் வசதிகள் 394
கடிகாரம் 178
கடைச்சங்க காலம் 42
கட்டுப்படுதல் 207
கணவன்பராமரிப்பு 35
கண்டர் சாதி 72
கண்ணாடி 195
கதை 67 90 100
கத்தி 92 115 97 8
கத்திமுனை 165
கயிறு தயாரித்தல் 205
கருமாரத் தொழில் பயிற்சி 397
கரை அமைத்தல் 398
கலைகள் 210 22 3 4
கல்வி 241 2
கல்விப் பணி 392
கல்வியறிவு 241 4
கவுண்டன் காணிக்கை 168
களைக்கட்டு 198
கறுப்புமணி 194
கறுப்பு வைரம் 177
கற்காலக் கருவிகள் 83
கற்பு 314
கன்னடம் 245
காசுமாலை 195
காடு வளர்ப்பு 397
'காட்டுப்பூச்சி' 242
காட்டுப் பொருள்கள் 156
காணிக்கை 158 69 87 256 7 9 323
காண்ட்ராக்ட் 153
காலக் கணக்கீடு 241
காலணி 179
காலரா 129
கால்நடைத் தீவனம் வளர்த்தல் 400
கால் நடைப் பராமரிப்புக்கடன் 399
காளைச் சண்டை 112
கிழக்கிந்தியக் கம்பெனி 79
கிணறுகள் சீரமைத்தல் 398
கிணற்று நீர்ப்பாசனம் 398
கிளி 200 1
குடிசைகள் 183 4 5 6
குடிப்பழக்கம் 624
குடும்ப அட்டைகள் 399
கும்மி 214 23
கும்மிப்பாட்டுகள் 297 8
குலமரபு 255
குழு நடனம் 223
குழு வாழ்க்கை 223
கூடை முடையும்பயிற்சி 397
கூட்டுறவுச் சங்கம் 192
கூத்து 195
கூத்துக்கலை 212 3

கொடுமைகள் 159 60
கொல்லிமலை மக்கள் பேச்சு 130
கொள் முதல் 399
கோடு 23
கோமியம் 385
கோலம்144 216 7 8 9 262 295
கோலாட்டம் 214
கைத்தடி 114 41
கைப் பம்புகள் 396
சங்ககாலம் 223
சட்டம் 315
சட்டை 178
சண்டை 180
சத்துணவு 181 392
சந்தனப் பொட்டு 179
சந்தனமரக் கன்றுகள் வளர்ப்பு 397
சமுதாயவளர்ச்சித் திட்டம் 398
சமூகநலத்துறை 392
ஜவஹர்வேலை வாய்ப்புத் திட்டம் 395
ஜாக்கெட் 193 4
சாட்சியங்கள் 173
சாட்டை அடி 105
சாதிப் பஞ்சாயத்து 165
சாராயம் 191 201 12 322 46
சாலைத்திட்டங்கள் 394
சாலைமரக் கன்றுகள் வளர்ப்பு 397
சிக்கனம் 183
சிக்கிமுக்கிக் கல் 189
சித்திரங்கள் 216 20 2
சித்திரக் கோலங்கள் 222
சிறுதொழில் செய்யக் கடன் 399
சிறை 159
சீப்பு 92 139
சுதந்தரம் 160
சுருக்குப் பை 196 8
சுருட்டு 141
சும்மாடு 296
சுரைக்குடுவை 141 89
சுவர்க்கோலம் 216
சுவர்ச்சித்திரம் 220 1 2
சுற்றுலா 395
சூரியசக்தி 396
சூரியன் 24
சூலம் 115
செடிகள் இலவசம் 400
செருப்பு 196
செவிவழிச் செய்தி 101
சேர் [குதிர்] 186
சொட்டுநீர்ப் பாசனம் 398
சொத்தில் உரிமை 305
சொத்தில் பாகம் 354
சொத்துப் பிரித்தல் 387

சோழப் பேரரசு 46
டயர்வண்டிகள் வாங்கக் கடன் 399
டாலர் 196
டிஸ்கி உழவு 398
டீஸல் ஜெனரேட்டர் 396
டேனிடா திட்டம் 262
தடுப்பணைகள் 398
தட்டி செய்தல் 205
தண்டனை 159 69 72 93 362 4
தலைப்பாகை 179 95 280
தலை முடி 177
தலைவலி 136
தனிக்குடிசை 359 69 73 77
தாட்கோ நிறுவனம் 395
தாயம் 196
தாயின் பராமரிப்பு 35
தானியங்கள் 385
திண்ணை 126 85 250 344 75
திருமண வழக்கு 262
தினைக் கஞ்சி 250
தினைமாவு 191
தீபாவளி 116
தீர்ப்பு 112 29
தீவட்டி 158
தீவனம் வளர்ப்பு 394
தீவிபத்து நிவாரணம் 399
துணைத் தொழில் 205
துப்பாக்கி78 107 29 44 67 97 8
தெரு விளக்குகள் 396
தெலுங்குமொழி 244 5
தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம் 395
தேன் 189 91
தேன் சேகரித்தல் 205
தேன் சேகரித்தல் 250
தையல் இயந்திரம் 393
தொட்டில் 369
தொப்புள் கொடி 257
தொம்பை 186 7
தொலைக் காட்சிப் பெட்டிகள் 399
தொழில் தொடங்க மான்ய உதவி 397
தொழு நோய் 129
தோட்டக்கலை பராமரிப்பு 395
தோப்பை 144 79
தோரணம் 157

தோல்சாட்டை 135
நலிந்தோர் குடும்ப நலத்திட்டம் 399
நவராத்திரி 156
நவராத்திரி கொலு விழா 162
நாட்டுப்பாடல்கள் 214 56
நாணயம் 194
நாகரிகம் 199
நாமம் 179
நான்கு திசைகள் 222
நில எடுப்புப்பணி 394
நிலவரித் திட்டப் பணிகள் 391
நீக்கம் 170 1
நிலங்களைப் பயன் படுத்தல் 396
நிலச்சமன் 398
நிழலுக்காக மரங்கள் 396
நோய்கள் 266 7 73
பஞ்சம் 77
பஞ்சாயத்து 142 68 9 70 2 362 4
படையல் 298 9 300 1
பட்டங்கள் 147
பட்டி 186 248 9
பட்டி விழா 295
பட்டுப்பூச்சி வளர்ப்பு 377
பட்டு வளர்ப்புப்பயிற்சி 397
பட்டு வேட்டி 280
பண்டமாற்று முறை 242
பண்பாடு 206 22
பண்பு 206 10
பதினொன்றாம் நூற்றாண்டு 50
பத்தாம் நூற்றாண்டு 42 76
பயம் 201
பயிர்க் கடன் 391
பயிற்சி பெறப் பதியப்பட்டது 400
பரண் 126 44 86 7
பரிசு 157 341
பல்லக்கு 152 7
'பல்லம்' 142
பல்லயம் 290
பல்லவர் ஆட்சி 42
பல்லா 144
பழமை 208
பழமையின் எச்சல் 314
பழைய கன்றுகள் பராமரிப்பு 397

பறைமேளம் 280. 3 99
பற்களைக்
கறுப்பாக்குதல் 144
பன்னிரண்டாம்
நூற்றாண்டு 52
பாசனக் குழாய்
பதித்தல் 398
பாடல் 214 5 6
பாடல் பதிவு 214 5
பாடல்பாடும் திறன் 215
பாத்திரங்கள் 189
பாய்கள் 19
பால் உறவு நோய் 263 4
பால்மாடு மான்யக்
கடன் 399
பாறை ஓவியங்கள் 211
பித்தளை 194
பித்தளை மணி 195
புங்கங்காய் 156
புடவை 193 4
புண்ணியம் 301
பூணூல் 132
பெயர்கள் 369
பெரிய அம்மை 129
பேச்சுமொழி 244 5 6 7
பேஷ்குஷ் [தொகை] 79
பேருந்து 199
பேறுகால உதவி 392
பொங்கல் 116-277
பொங்கல் அடுப்பு 297 8
பொங்கல் கும்மி 297
பொங்கல் நாள் 185
பொங்கல் படையல் 299
பொங்கல் பானை 296
7 301
பொங்கல் வழிபாடு 106
பொங்கல் விழா 138 295
பொய் 321
பொழுதுபோக்கு 212 3
போகி விழா 295
போலீஸ் துறை 197
பௌர்ணமி: 242
மணமகன் வீடு 344
மண் அரிப்பினைத்
தடுத்தல் 398
மண்வளைப் பாதுகாப்புத்
திட்டம் ,,
மதிய உணவு ,,
மர உரல் 188
மரஉலக்கை ,,
மரக் கன்று உற்பத்தி 396
மரடி, மலடி 256
மராட்டியர் ஆட்சி 102
மருத்துவம் 264 5

மருவு 185
மறுமணம் 309
மனைவியை ஏலம்
போடுதல் 159
மாட்டு வைத்தியம் 141
மாமனாருக்கு
உரிமை 354 5
மான்ய உதவித்
தொகை 397
மான் வேட்டை 37
முகமதியர் ஆட்சி 146 160
முண்டு 181
முதியோர் உதவித்
தொகை 399
முதியோர் கல்வி 244
முறைசாரா மற்றும் வயது
வந்தோர் கல்வி 392
மூங்கில் ஏணி 187
மூங்கில் கன்றுகள்
வளர்ப்பு 397
மூங்கில் குழாய் 189 205
மூங்கில் பட்டைகள் 126
மேல் ஆடை 178 9
மேளம் 280 3 318 21 4
30 43
மேற்கு வாசல் 281
மொழி 180 244
மோப்ப சக்தி 201
ரப்பர் பூ 196
ரவிக்கை 178
வழக்குகள் 136 157 67 9
170 1 2 3 20
வளையல் 196 279 309 12
வறுமை 209
வனக்கோட்டம் 396
வாசப் பொங்கல் 295
வாணவெடிகள் 299
வாத்தியார் 212
வாழைமரம் 162 92
வானொலி 189
வானொலிப்
பெட்டிகள் 399
விசாரணை 171 2
விண்மீன் 23
விதைத்தல் 383
விபத்து நிவாரணத்
திட்டம் 399
விபூதி 179
விருந்து 158 72 3 249 373
விலை கேட்டல் 243
வில் 33 144 97 280
விவசாயக் காடுகளுக்கான
கன்று வளர்ப்பு 397

விவாகரத்து 170 304 5 6 7 349 65
விழாக்கள் 212 49
விளக்கெண்ணெய் 178
விளம்பரம் செய்தல் 395
விளைபொருள்கள் 153
விளையாட்டுப் பொருள்கள் 196
விறகுவெட்டுதல் 203
விற்பனை 244
வீடு திரும்புதல் 300
வீடு மனைப்பட்டா 389
வீட்டமைப்பு 184
வீட்டு வசதித் திட்டம் 395
வெள்ளை உலோகம் 23
வேங்கை மரப்பால் 205
வேடர் பழக்கம் 92
வேட்டி, துண்டு 178 93
வேட்டை 67 116 22 8 191 8 200 2 4
வேலை வாய்ப்பு 400
வேளாண்மைப் பொறியியல் துறை 398



